SIVAN SITHTHAR

# அகஸ்தியர்

## வாத சௌமியம்

என்னும்

## சௌமிய சாகரம்-1200

தாமரை நூலகம், சென்னை-26.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

கடவுள் துணை

அகஸ்திய மகாமுனிவர் திருவாய் மலர்ந்தருவிய

# சௌமிய சாகரம் 1200

## பொருளடக்கம்


காப்பு 33
ஜீவாத்மா பரமாத்மா
தத்துவத்தின் வியா
பாரம் 38
மூலாதாரம் 46
சுவாதிஷ்டானம் 47
மணிபூரகம் 48
அனாகதம்
விசுத்தி 49
ஆக்கினை 50
ரவித்தியானம் 52
சுடர்த்தியானம்
சண்முகத் தியானம் 53
வைரவத் தியானம் 54
குருத் தியானம்
சரியை, கிரியை, யோகம்,
ஞானம் 55
ஆதியந்த விளக்கம் 60
உலகம் படைத்த
வரலாறு 62
யுகம் பதினெட்டுமரிய 68
ஒன்றான பொருள் 72
சாலோக சாமீப பதவி
சமாதியளவு 73
பிரணவ மகிமை 78
அவையடக்கம் 79
அகார தீக்ஷை 81
உகார தீக்ஷை 82
மகார தீக்ஷை
சிகார தீக்ஷை 83
வகார தீக்ஷை
பஞ்ச கண தீக்ஷை
முப்புச் சுன்னம் 84
முப்புச் செயநீர்பற்பம் 85
அஷ்டகர்ம விபரம் 86
வசிகரம் 87
மோகனம் 88
தம்பனம்
உச்சாடனம் 89
ஆக்கிருஷணம் 90
வித்துவேஷணம் 91
மாரணம்
பேதனம் 92
அஷ்டகணபதி
மூலமந்திரம் 93
அஷ்டாங்க யோகம் 94
நியமம் 95
ஆசன விபரம்
பிராணாயாமம் 96
பிரத்தியாகாரம்
தாரணை
தியானம் 97
சமாதி வகை
இயம வகை
பிரம்மம் 98
நியம வகை 100
ஆசனமொன்பது
விவரம் 103
பிரணாயாமம் 104
பிரத்தியாகார வகை 106
தாரணை விபரம் 108
தியான விபரம்
மால் தியானம் 109
சதாசிவத்தியானம் 110


Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

அத்தோயுதம்
சமாதி விபரம்
நாத விந்து 117
மயேஸ்வரி பூசை 118
தோத்திரம் 119
ஆறுவகை முத்திரை
விபரம் 123
மோகினி முத்திரை 125
திராவினி முத்திரை 126
யோனி முத்திரை
கரத்தின் விரல் மகிமை
முப்புச் சுன்னம் 127
முப்புச் செயநீர் 128
அறுவகை சரக்குக்
கட்டு 129
ஆதார பூசை 130
அகார பூசை 131
நாட்டம் 132
சூரியகிரி சோமகிரி
நிதானம் 134
மணிகெவுன குளிகை 136
கற்பம்
உகார தீக்ஷை 137
வாலை தீக்ஷை 138
பூரண மெழுகு 139
சத்தியுப்புத் தயிலம்
அமுர்த ரசங் கொள்ள
மாங்கனி 140
அமுர்தரசமுண்ண 141
முக்கிகாரண பூசை 142
மந்திரவான் தியானம்
நவகும்ப பூசை 143
நாற்பத்து
முக்கோணம் 144
புவனை பூஜை
மந்திரத் தியானம் 145
பஞ்சகண தீக்ஷை 147
அமாவாசி விபரம் 149
அரிதார யீயம் 151
தாமிர பற்பம்
கெந்தகத் தைலம் 152
ஆசாபாசம் 153
லிங்கக் கட்டு 154
கல்லுப்புக் கட்டு
தங்க யீயம் 155
செயநீர் 156
வெள்ளி பற்பம் 157
தங்க பற்பம்
நாகக் கட்டு
அரிதார யீயம் 158
நாகக்கட்டு 159
சாரக்கட்டு
வீர வைப்பு 160
பாஷாணக் கட்டு
எல்லாந் தான் தான் 161
ஞானம் 162
பாசம் 163
சூதமணி வேதை
சூதமணி செந்தூரம் 164
லிங்க வேதை 165
நாகரச மெழுகு 168
தீபம் பார்க்க 170
நாகரச வங்க பற்பம் 171
தாம்பூர பற்பம் 174
அரிதார ஈயம் 175
தங்க பற்பம்
வெடியுப்புக் கட்டு
அண்ட கவசம் 176
சாரக்கட்டு 177
உப்புக்கட்டு 178
சூதவேதை 179
திசைநாகக் கட்டு
செந்தூரம் 180
லோககாந்த ரசவங்கச்
செந்தூரம் 181
நவலோக பேதை
ஸாஸ்திர விபரம் 182
வாலை பூசை 183





யோகப் பெருமை 184
நிச்சயத்தின் பெருமை
நிலையறிய 185
மயக்கமறிய 186
சின்மயத்தின்பெருமை187
வசிஷ்டர் ஸ்ரீராமருக்குச்
சொன்ன கதை
ஆறுமுகக்களங்கு
செந்தூரம் 189
சின்மயத்தில்
சித்துண்டானது 191
அயச்செம்பு
செந்தூரம் 192
அயக்காந்த உபரசச்
செந்தூரம் 193
யோகக் குறிப்பு 195
பஞ்சகண தீக்ஷை உப்பு196
நூல் அறிய 197
நூல் தொகை நூல்
பார்க்க
வல்லாரை கற்பம்
கடுக்காம்க் கற்பம் 198
பவழ வைப்பு 199
முத்து வைப்பு
பச்சை வைப்பு 200
வயிர வைப்பு 201
சிவப்பு வைப்பு
கஸ்தூரி வைப்பு 202
மவுன மார்க்கம் 203
நன்மை தின்மை
பஞ்சமுகம் 204
சொரூப முத்தி பெருமை
மதுர ரச விஞ்சை 205
சின்மயத்தின்
பெருமை206
போதமயம்
இருதய தெரிசனம் 208
வெடியுப்புச் செயநீர் 210
திரிகோண பூசை 211
வாசல் திறக்க
நவகோண பூசை 212
மானத பூசை
செம்பு சுத்தி 213
தங்கச் செம்பு 215
அயக் களங்கு வேதை218
குடவன் சுத்தி 219
செபத்துக்கு மணி 220
முச்சுடர் நமக் கண் 221
அஷ்ட கர்மம் பற்றிய
ருத்திராக்ஷ விபரம் 222
பஞ்ச பூத சரக்கு 223
புடவரிசை 224
ஊத்து முறை 225
செந்தூர வகைச்
சரக்கு 226
வாத வகைச் சரக்கு 227
சத்தி சூட்சம்
பத்தாந் தீட்சை 233
மவுனம் 235
கோமுக ஆசனம் 236
முச்சுழி 237
பரம வெளி 238
சாதனை
பதவி காண 239
நாவசையா மவுனம் 240
ஏகாக்ஷரம் 243
யோக மார்க்கத்திலே244
பிராணாய மைந்து
நாத விந்து 246
பிராண வாயுவின் நிலை
சுவாச நிலை 247
சுவாசம் நிற்க
மூலத்தில் சாந்தி 248
நாத விந்து 250
சாரக்கட்டு 251
வீரக்கட்டு 252


Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

—நாகக்கட்டு
நாக குரு வேதை
இருந்து வாழ மவுனம் 253
நாகரச வங்க செந்தூரம்
தாம்பூர சுத்திக்கு 254
அறுவகைச் சுன்னம் 255
தாம்பூரச் சுத்தி 256
குடவன் சுத்தி
லிங்கக் கட்டு 257
லிங்க வேதை
அண்ட பிண்ட மறிய 258
அயச் செம்பு வேதை 264
அவயோகி 265
பரியங்க யோகம்
மவுனாதி யோகம்
மந்திராதி யோகம் 266
ராசாங்க யோகம்
அமுர்த ரசத்தால் 268
துருசு சுன்னம்
அமுர்த ரச வேதை
துருசுச் சுன்னம் 269
ஜயநீர் 270
குடவன் சுத்தி
சரக்கு வகை 274
சத்துரு மித்துரு
துருசு சத்துரு மித்துரு
சார சத்துரு மித்துரு 275
வெடியுப்பு சத்துரு மித்துரு
கல்லுப்பு சத்துரு மித்துரு 276
கார சத்துரு மித்துரு
தங்கத்தின் சத்துரு மித்துரு 277
ரசத்துக்கு சத்துரு மித்துரு 278
அயத்தின் சத்துரு மித்துரு
நாகத்தின் சத்துரு மித்துரு 279
காரிய சத்துரு மித்துரு
பூரண லேகியம் 281
ஆறுமுகக் களங்க வேதை 284
பஞ்சமுகக் களங்கு 285
செம்பியம்
அரிதாரக்கட்டு 286
செம்புக் குடவன்
வெள்வங்க குரு 287
தெரிசனம் பதினாறு 288
ஆதார தெரிசனம் 289
அறிவு தெரிசனம் 289
மனோ தெரிசனம் 290
உள்ளமென்ற தெரிசனம் 292
பூரண தெரிசனம் 292
நாசி நுனி தெரிசனம் 292
புருவமய்ய தெரிசனம் 293
பிர்மவெளி தெரிசனம் 294
ஒளி தெரிசனம் 294
விந்து தெரிசனம் 294
நாத தெரிசனம் 295
உருவ தெரிசனம் 295
அருவ தெரிசனம் 296
சாயுச்சிய தெரிசனம் 297
வாசி தாரணை 299
ஒடுக்கம் தோற்றம் 301
மேலாதார தெரிசனம் 301
சித்தி மூலம் 303
குமரி கற்பம் 309
கரிசாலை நெய் 320
லிங்க மெழுகு 326
யோகத்தினால்... 380
அகஸ்தியர் ஞானம் 333




# அணிந்துரை

## சிவமயம்

அகத்திய மகாமுனிவர் திருவாய் மலர்ந்தருளிய
சௌமிய சாகரம்

இந்த நூலின் பெருமை அளவிடற்கரியதாகும். அதை ஓரளவாவது வாசகர்களுக்கு உணர்த்தும் பொருட்டாக சம்பந்தப்பட்ட சில உண்மைகளைத் தொகுத்துக் கூறுகிறோம்.

சமயங்கள் மலிந்த இந்நாட்டில், அவதார புருஷர்களும், ஆசாரியர்களும் பல நூற்றாண்டுகளாக உபதேசித்து வந்துள்ள உண்மைகள் உபநிடதங்களையே ஆதாரமாகக் கொண்டவைகளாக இருக்கின்றன.

தற்போது, வழக்கில் உள்ள உபநிடதங்கள் முத்திகோப நிடதத்தில் கூறப்பட்டுள்ள 108 உபநிடதங்களைத் தவிர வேறில்லை. இந்த 108 உபநிடதங்களையும் இராமபிரான் அவர்கள் அனுமாருக்கு உபதேசித்தருளியதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த 108 உபநிடதங்களில், 64வது உபநிடதம் "யோக சிகா உபநிடதம்" என்பதாகும். இது கிருஷ்ண யஜுர் வேதத்தைச்சார்ந்தது. சிவபெருமானால் பிரம்மதேவருக்கு உபதேசித்தருளப்பட்டது.

"எல்லா ஜீவர்களும் சுகதுக்கங்களால் சூழப்பட்டிருக்கின்றனர். சங்கர பகவானே! தேவ தேவரே! அவர்கள் முத்தி எய்துவது எங்ஙனம்? கிருபை கூர்ந்து கூறியருளுங்கள்" என்று பிரம்மதேவர் கேட்க, சங்கர பகவான் பின் வருமாறு கூறினார்.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

"இதற்கு உபாயம் ஞானம் ஒன்றே என்று சிலர் கூறுகின்றனர். சித்தி எய்த அது மட்டும் போதாது. யோகம் இல்லாத ஞானம் மட்டும் எப்படி மோட்சத்தை அளிக்கும்? ஐயனே! யோகமும், ஞானம் இல்லாமல் மோட்சகர்மாவில் பயன் அளிக்காது. ஆகையால் யோகத்தையும் ஞானத்தையும் முத்தியை நாடுபவன் திடமாக அப்பியசிக்க வேண்டும்."

"எல்லா ஜீவர்களிடமும் மனமானது ஒரு கயிற்றில் கட்டப்பட்ட பறவையைப் போல் கட்டப்பட்டுள்ளது. பல வகைப்பட்ட விசாரணைகளால் மனதின் கட்டு பாதிக்கப்படுவதில்லை. ஆகையால், மனதை ஜயிக்க வழி பிராண ஜயத்தின் மூலந்தான், வேறு வழி இல்லை. பிராணன் வசப்படுவதும் சித்தர்கள் காட்டிய வழியில் அல்லாமல் வேறு வகையில் இல்லை" அதனால் யோக்சிகையாகிய யோக ஞானத்தைக் கூறுகிறேன். அது எல்லா ஞானத்திலும் உத்தமமானது."

மேற்கண்டவாறு சங்கர பகவான் கூறியருளியதிலிருந்து ஜீவர்கள் மோட்சம் அடைவதற்குச் சித்தர்கள் காட்டிய வழியைத் தவிர வேறு வழியே இல்லை என்பது நிச்சயம் ஆகிறது

மோட்சம் அடைவதற்கு வழி, சித்தர்கள் காட்டியருளிய வழியில் யோகத்தையும் ஞானத்தையும் திடமாக அப்பியாசம் செய்ய வேண்டும் என்பதே ஆகும். இதைத் தவிர வேறு வழியே இல்லை என்பது யோக சிகா உபநிடதத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் உண்மை ஆகும்.

தாயுமானவர் பெருமான் கீழ்வரும் பாடலில் இந்த "சித்த யோக நிலை பெற்று அடையும் ஞான நெறி"யைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.



நியம லக்ஷணமும் இயமலக்ஷணம்  
ஆசனாதிவித பேதமும்  
நெடிது உணர்ந்து இதய பத்ம பீடம்மிசை  
நின்றுஇலங்கும்அஜ பாநலத்து  
இயல்அறிந்துவளர் மூலகுண்டலியை  
இனிதுஇறைஞ்சி அவள் அருளினால்  
எல்லை அற்றுவளர் ஜோதி மூலஅனல்  
எங்கள் மோனமனு முறையிலே  
வயம்மிகுத்துவரும் அமிர்த மண்டல  
மதிக்குளே மதியை வைத்து நான்  
வாய் மடுத்து அமிர்த வாரியைப்பருகி  
மன்னும் ஆர் அமிர்த வடிவமாய்  
ஜெயம்மிகுந்துவரு சித்த யோகநிலை  
பெற்று ஞானநெறி அடைவனோ  
தெரிவதற்குஅரிய பிரமமே அமல  
சிற்சுகோதய விலாசமே.

ஆதலால், மோட்சம் அடைவதற்குச் சித்தர்கள் இயற்றிய நூல்களைக் கற்றுணர்ந்து, தகுதி வாய்ந்த குரு பிரானின் துணை பெற்று, அவர்கள் காட்டியருளும் ஞான நெறியை அடைய வேண்டும்.

அகத்திய மகா முனிவரால் இயற்றப்பட்ட இந்த சௌமிய சாகரம் என்ற நூல், புலத்திய மகாமுனிவருக்கு உபதேசிக்கப்பட்ட நூலாகும்.

இந்த நூலின் பெருமையைத் தெரிந்து கொள்வதற்கு முன், அகத்திய மகா முனிவரைப் பற்றிய சில உண்மைகளை வாசகர்களுக்குக் கூற விரும்புகிறோம்.

பதினென் சித்தர்கள் என்று கூறப்படும் சித்தர்களுக்குள் அகத்திய மகா முனிவர் முதன்மையானவர். அவர் முருகப் பெருமானின் சீடர். அவருடைய காலம் முருகப் பெருமானுடைய காலம் ஆகும்.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

முருகப் பெருமானின் காலம் இருக்கு வேதத்திற்கும் முற்பட்டது என்று பல சான்றுகளைக் கொண்டு தெரிய வருகிறது.

காகபுசுண்டர் பிரான், இராமபிரானின் குருவாகிய வசிஷ்ட மகா முனிவருக்கு உபதேசித்தருளிய பெருநூல் காவியம் (1000) என்ற நூலில் கீழ்க்கண்ட பாடல்களில் அகத்தியரின் பெருமையைப் பாடியருளி இருக்கிறார்.

பாடல்—142

"அகத்தியரே பெரும் பேற்றை அடைந்தோராவார்
அம்மம்மா வெகுதெளிவு அவர்வாக்குத்தான்
அகத்திலுறை பொருளெல்லாம் வெளியாய்ச் சொல்வர்
அவர்வாக்குச் செவி கேட்க அருமை யாகும்
அகத்தியரின் பொதிகையே மேருவாகும்
அம்மலையும் அகத்தியரின் மலையுமாகும்
அகத்தியரினடையாளம் பொதிகை மேரு
அவர் மனது மலவரைப் போற் பெரியோருண்டோ"

பாடல் 772

கூறுமே யாம்நினைத்த சங்கற்பத்தை
குருவானாற் சொல்லிடுமே அடியாராவோம்
யாருமே எட்டு ரெண்டும் பத்தென்றார்கள்
யார் சொன்னார் அகத்தியரே விரித்துச் சொன்னார்
தாருமே மாந்தர்களும் மயங்கினார்கள்
தமர் சித்த ரானாக்காற் சொல்லுவார்கள்
கோருமே நீர் கேட்கச் சொல்லி வாரேன்
குரு வாகு மந்திரங்க ளிதுதானே.

மேலும்,புசுண்டர் பிரான் அவர்கள் 783வது பாடலில் "வல்லபங்கள் செய்த வள்ளுவ நாதன்றானே" என்று திருவள்ளுவரைப் பற்றி பாராட்டிப் பாடி



யருளியுள்ளார்கள். திருவள்ளுவர் பெருமானின் பெருமை உலகறிந்த ஒன்றாகும்.

அத்தகைய பெருமை மிக்க திருவள்ளுவர் பெருமான் அகத்திய மகா முனிவரின் சீடர் என்பது பலருக்குத் தெரியாது.

"ஞானவெட்டி" என்ற நூலில், திருவள்ளுவர் பெருமான் அகத்தியர் தனக்கு மெய்ஞ்ஞானம் அருளிச் செய்த குரு பிரான் என்று கூறியுள்ளதைக் கீழ்க் கண்ட பாடல்களில் காணலாம்.

பாடல்—542

மருவுயர்ந்த கமலமல ராயிரத் தெட்
டிதழில் வளர் மதியை வேண்டித்
திரு வுயர்ந்த வம்பிகைப் பெண் சீர்பாத
பங்கயத்தில் தெரிசித்தேதான்
கரு வுயர்ந்த வளநாடு தில்லைநதிக்
கரையோரங் கருதி வாழ்ந்தேன்
அருவுருவாய் மெய்ஞ்ஞான மருளி அக
த்தியரெனக் கருள் செய்தாரே.

பாடல் 170

இச்சை மூன்றானவித மினியுரைக்கும் வகைகா
ணிதுவே புத்திர விச்சை லோக விச்சையுமாகும்
பட்சமாமர்த்த விச்சையுமிதன் கூறறிய வெந்தன்
பரிபூரண வம்பிகை பாதமலர் பணிந்தேன்
அஷ்டதிக்கும் புகழ மகத் தீசாருள் போற்றியடி
யன் திருவள்ளுவன் அவனி மீதிலிந் நூல்
நிஷ்டை யோகத்தின் ஞான நிகழ்த்த மூன்றுவகை
நிகழுமிச்சையதின் சுகத்தைக் கண்டவனாண்டே.

இதே போல, அருணகிரிநாதர் பெருமான் அவர்கள் அகத்திய மகா முனிவர் அவர்களின் பெருமையைப் பாடியருளியிருப்பதைக் கீழ்வரும் பாடல்களில் காணலாம் :

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

திருப்புகழ்—திருச்செந்தூர்
பாடல் 18

அறிவழிய மயல்பெருக வுரையுமற விழிசுழல
அனலவிய மலமொழுக—அகலாதே
அனையுமனை யருகிலுற வெருவியழ வுறவு மழ
அழலிவிகர் மறலியெனை —அழையாதே
செறியுமிரு வினைகரண மருவுபுல னொழிய வுயர்
திருவடியி லணுகவர—மருள்வாயே
சிவனை நிகர்பொதியவரை முனிவ னகமகிழ இரு
செவிகுளிர இனிய தமிழ்—பகர்வோனே"

முருகப்பெருமானுக்குச் சூட்டிய பாமாலையில் அருணகிரிநாதர் பெருமான், அகத்திய மகா முனிவரை சிவபெருமானுக்கு நிகரான பொதியவரை முனிவன் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

திருப்புகழ்—திருச்செங்கோடு பாடல் 169

காலனிடத் தணுகாதே காசினியிற் பிறவாதே
சீல அகத்திய ஞான தேனமுதை தருவாயே
மாலயனுக்கரியானே மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே நாககிரிப் பெருமானே.

இந்தப் பாடலில், "சீல அகத்திய ஞானத்தேனமுது" காலனிடத் தணு காதிருக்கவும் காசினியிற் பிறவா திருக்கவும் செய்ய வல்லது என அருணை முனிவர் கூறி யருளியிருக்கிறார்கள்.

தொல்காப்பியம் சிறப்புப் பாயிரத்தில் (சொல்லதி காரம்—இளம்பூரணம்) அடியார்க்கு நல்லார் விளக்கி யுள்ளபடி, "முதல் ஊழி இறுதிக் கண் தென்மதுரை யகத்துத் தலைச்சங்கத்து அகத்தியனாரும் இறை யனாரும், குமரவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின் கிழவனும் என்றிவருள்ளிட்ட நாலாயிரத்து



நானூற்று நாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முது நாரையும் முதுகுருகும் களரியா விரையும் உள்ளிட்டவற்றைப் "புனைந்து மேற்படி சங்கத்திற் பங்கேற்றனர்" எனத் தெரிய வருகிறது.

மேலும், பாண்டியன் மாகீர்த்தி என்பவன் தென் மதுரையில் தலைச்சங்கத்தைத் தோற்றுவித்து அதனைப் பாதுகாத்த பாண்டிய மன்னர்களில் இறுதியாக இருந்த வன். "இவன் காலத்தில் பாண்டிய நாட்டின் தென்பகுதி யாகிய பஃறுளியாறு முதல், குமரிமலை வரை கடல் கோளால் அழிந்து விட, அதனை ஈடு செய்யும் பொருட்டு வட இமயம் வரை சென்று பொருது வெற்றி பெற்று அதனைத் தன்னகப் படுத்திக் கொண்டான்" ஆதலின் இவனை 'நிலந்தரு திருவிற்பாண்டியன் என்றும் கூறுவர். இப்பாண்டியனின் அவைக்களத்தே தான் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது," என்ற வரலாறும் தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரை யினின்றும் தெரிகிறது.

தமிழ் மொழிக்கு முதன் முதலில் இலக்கணம் இயற்றியவர் அகத்திய மாமுனிவரே என்பதும், அந் நூலின் பெயர் அகத்தியம் என்றும், அந்த முதல் நூலின் வழி நூலே தொல்காப்பியம் என்றும், தொல்காப் பியரும் அகத்தியர் மரபில் வந்த சீடர்களில் ஒருவர் என்றும் தெரிகிறது.

இந்த வரலாறுகளிலிருந்து, அகத்திய மகாமுனிவரின் பெருமையையும், அவருடைய தமிழ்ப் புலமை யையும், அவருடைய காலத்தின் தொன்மையையும், அவர் காலத்தில் தமிழகம் அடைந்திருந்த நாகரீகத்தின் சிறப்பும் உயர்வும் ஒருவாறு அறிந்து கொள்ள முடி கிறது.

சித்தர்கள் சாதி சமயச் சழக்கை விட்டு அருட் சோதியைக் கண்டவர்கள், சாதி சமய வேறுபாடுகள்

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

அவர்கட்கு இல்லை. ''எல்லாம் தானாகி' நிற்கும் ஞான நிலை பெற்றவர்கள். எனினும், போக மகா முனிவர் சத்த காண்டம் என்ற நூலில், ஆறாவது காண்டம் 5702, 5703ம் பாடல்களிலிருந்து திருமூலர், அகத்தியர் பெருமான் ஆகியோரின் குலமும், தலை முறையும் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

### பாடல் 5702

தாமான புலிப்பாணி மைந்தா கேளு
    தகமையுள்ள மூலத்து ஈசனப்பா
சாமானியமானதொரு ஜாதி பேதம்
    சாங்கமுடன் வேளாளன் என்னலாகும்
கோமானாந் தலை முறைகள் இருபத்தேழாம்
    கொற்றவனே நூற்படியே சொல்லலாச்சு
பூமான்கள் சித்தவர்க்க நூல்கள் தன்னில்
    புகட்டவில்லை ஜாதி பேதம் புகலார் தாமே.

### பாடல் 5703

தானான சிலநூலில் சொன்னாரப்பா
    தன்மையுள்ள சில நூலில் சொல்லவில்லை
கோனான அகத்தீசா ஜாதிபேதம்
    கொற்றவனே வேளாளன் என்னலாகும்
பானான தலைமுறைகள் எது என்றாக் கால்
    பதமுடனே நாற்பத்தி எட்டேயாகும்
மானான நூல்தனிலே கண்டாற் போல
    மகத்தான போகரிஷி வகுத்திட்டேனே.

மேற்கண்ட பாடல்களிலிருந்து அகத்தியர் பெருமான் வேளாள குலத்தைச் சேர்ந்தவர் என்பது யாதொரு ஐயப்பாட்டிற்கும் இடமின்றித் தெரிய வருகிறது.

மேலும், அகத்தியர் பெருமான் மரணமிலாப் பெருவாழ்வு பெற்றுக் காலாதீதமானவர் அதாவது காலங் கடந்த ஒளி வெளி நிலை பெற்ற சிரஞ்சீவி

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)



மகான் என்று கீழ்வரும் பாடல்களில் போகமகா முனிவர் கூறியருளியுள்ளதைக் காணலாம்.

### பாடல் [illegible]

தானான இன்னமொரு மார்க்கம் கேளு
    தயவான புலிப்பாணி மைந்தா பாரு
கோனான எனதையர் காலாங்கி நாதர்
    கொற்றவனார் எந்தனுக்குச் சொன்ன நீதி
தேனான மனோன்மணியாள் கடாட்சத்தாலே
    தேஜொளி வின் மயங் கொண்ட கும்பயோனி
பானான பராபரத்துக்கு ஒப்பதான
    பாருலகில் அகஸ்தியரைப் பகருவேனே.

### பாடல் 5757

பகருவேன் அகஸ்தியர்க்கு வயது ஏதென்றால்
    பட்சமுடன் துகை கணக்குக் கூறொண்ணாது
நிகரமுடன் சொல்வதற்கு யாராலாகும்
    நீதியுடன் நூல்களிலே உரைத்த மார்க்கம்
அரெமென்ற அட்சரமும் அவரால் ஆச்சு
    அப்பனே நாலுயுகம் கடந்த சித்து
சகரமெலாம் தான் துதிக்கும் கும்பயோனி
    சதுரான அகத்தியர் என்று அறையலாமே.

### பாடல் 5758

அறையலாம் வெகுகோடி காலமப்பா
    அப்பனே சமாதிமுகம் இருபத்தொன்று
நிறையவே சமாதிமுகம் வையகத்தில்
    நேர்மையுடன் தானிருந்த சித்துமாகும்
குறையவே வயததுதான் சொல்வதற்கு
    குவலயத்தில் முடியாது ஒருவராலும்
மறையவே நூல்தனிலே காண்பதற்கு
    மகத்தான வயததுவும் இல்லை தானே.

### பாடல் 5882

பிறந்ததொரு இன்னமொரு மார்க்கம் சொல்வேன்
பேரான புலிப்பாணி மைந்தா பாரு
சிறந்ததொரு அகத்தீசர் உதித்த நேர்மை
சிறப்பான தனுர்மாதம் என்னலாகும்
துறந்ததொரு ஆயிலியம் மூன்றாம் பாதம்
துப்புறவாய் அவர் பிறந்த நாளுமாச்சு
கறந்ததொரு பால்பசுவும் கன்னு மாகி
காசினியில் பிறந்ததொரு சித்துமாச்சே.

### பாடல் 5883

ஆச்சப்பா அகத்தியரின் பிறப்பு நேர்மை
அவனிதனில் யாராலும் முடியாதப்பா
மூச்சடங்கி மலையின் மேல் நின்ற சித்து
முனையான கமலமதில் பிறந்த சித்து
மாச்சலுடன் தேவரிஷி வரத்தினாலே
மகாதேவர் வந்துதித்த குருவுமாகும்
ஏச்சலது தாராத கும்பயோனி
எழிலான அகத்தியர் என்று அறையலாமே.

காகபுசண்டர் திருவள்ளுவர், அருணகிரிநாதர், போகர். ஆகியோர் அருளிச் செய்த சில பாடல்களை எடுத்துக் காட்டி, அகத்திய மாமுனிவர் பெருமையைக் கூறினோம்.

தொல்காப்பியச் சிறப்பாயிரத்தின் மூலம் தலைச் சங்கத்தில் அகத்தியர் பங்கேற்ற விபரமும், பண்டைத் தமிழகச் சிறப்பும் கூறினோம். இந்த விவரங்கள் சாதாரணமாக மக்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்று எண்ணியே இவற்றைச் சான்றுகளோடு எடுத்துக் கூறினோம்.

அகத்தியரைப் பற்றி மக்களிடையே புராணக் கதைகளே வழக்கில் இருந்து வருகின்றன. உதாரணமாக, ஒரு கதையைக் கூறுகிறோம். அதாவது, சிவபெருமானுக்கும் பார்வதி அம்மையாருக்கும் நடந்த திருமணம். கயிலாயத்தில் நடந்த அந்த மகா வைபவத்தில், தேவர்களும், மகரிஷிகளும் பிறரும் குழுமியிருந்தார்கள். அகத்திய முனிவரும் வந்திருந்தார்.



திடீரென பூமியின் வடக்குப்பக்கம் தாழ்ந்தது. தெற்குப்புறம் உயர்ந்தது. அதாவது, ஒரு மாட்டுவண்டி பின்பாரம் அதிகமாகப் போய்க் குடை சாய்வதுபோல் என்று வைத்துக் கொள்வோம். இதைத் தடுத்துநிறுத்தி பூமியைச் சமநிலையில் நிறுத்தி வைக்க அகத்தியமுனிவரைத் தென்திசையில் உள்ள பொதிகை மலைக்கு அனுப்பி வைக்குமாறு தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட அதற்கிணங்கி, அவர் அகத்தியரைத் தென் திசையில் உள்ள பொதிகை மலைக்கு அனுப்பி, பூமி குடை சாயமால் காப்பாற்றியருளினார். இவ்வளவு பாரத்தையும் அகத்தியர் ஒருவர் சமன் செய்தார். அவர் கட்டைவிரல் பரிமாணம் உடையவர்தான். ஆனால், அவ்வளவு தேவர்களின் பாரத்தையும் சமாளிக்கும் அளவு பாரம் கொண்டவர் அவர். இது புராணக் கதைதானே. எவ்வளவு அற்புதமானகற்பனை சிந்தித்துப் பாருங்கள்.

அகத்தியர் பெருமானுக்குக் குருமுனி என்ற பெயரும் உண்டு. இதைக் குறுமுனி என்று இடையினகாரத்தை வல்லினமாக்கி, அவர் குட்டையானவர் என்றும், அதனால், அவருக்குக் குறுமுனி என்ற பெயர் ஏற்பட்டது என்றும் யாரோ கதை கட்டிவிட்டு, அது இன்று மக்களிடையே பரவியுள்ளதைக் காண்கிறோம்.

முருகப்பெருமான் திருவாய் மலர்ந்தருளியகீழ்வரும் பாடல்களில் அகத்தியரைக் குருமுனி என்று குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். (ஞான விஞ்சை 3)

### பாடல்—2

சீர்மேதும் வாலையபி ராமிசூலி
திரிபுரைசங் காரி கௌமாரிவாமி
தார்மேவும் மகிடசங்காரி துர்க்கை
சாமுண்டி கங்காளி தந்தமைந்தன்

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

கார்மேவும் அந்திமுக னொற்றைக்கொம்பன்
கருணைதிரு நயனமிரு கமலபாதம்
பார்மேவும் அறுமுகவன் குருமுனிக்குப்
பகர்சர்வ விஞ்சைக்கு ஆதியாமே.

பாடல்—3

பாரப்பா அகஸதியனே சொல்லக்கேளு
அருமையா யுந்தனுட குருவின் மூலம்
தாமப்பா அறுகோணம் முக்கோணத்தைச்
சார்ந்திடமேல் விந்துவிட்டு நடுவேகேளு
நாமப்பா ஐயுமென்று கிலியும்போடு
நலமாமுக்கோண மூன்றிதழும்போடு
தோமப்பா அறுகோணந் தன்னிற்றானும்
சுகமாக சரவணபவா வென்றுசாத்தே.

இதுபோலவே, இன்னுமொரு கதை என்னவென்றால், மேருமலைக்கும், விந்தியமலைக்கும், சூரியனுக்கும் இடையே நடந்த ஒரு விவகாரத்தால் விந்தியமலை வானைத் தொடும்படி வளர்ந்துநின்று சூரியன் மேற்கே போகாமல் தடுத்து நிறுத்திவிட்டபடியால் உலகம் இருளால் தவித்தது.

பின்னர் தேவர்கள் முறையிட்டபடியால், அகத்தியர் அவசர வேலையாகத் தென்திசை செல்வதாகச் சொல்ல விந்தியமலை பணிந்தது.

அகத்தியர் கையால் விந்தியமலையை அமுக்கி. திரும்பி வரும்வரை அப்படியே இருக்கச் சொல்லிப் பொதிகைக்கு வந்தவர் திரும்பாமல் தெற்கிலே தங்கிவிட்டார். ஆதலால் தான் விந்தியமலை இதுவரை அப்படியே இருக்கிறது.

இதுபோலவே, தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, அகஸ்தியர் கடல்நீர் முழுவதையும் ஒரு உளுந்தளவாக்கி உள்ளங்கையில் வைத்துக் கொள்ள,



அங்கே ஒளிந்திருந்த அரக்கர்களை தேவர்களை அழித்தனர்.

இது மாதிரி அறிவிற்குப் பொருந்தாத கற்பனைக் கதைகள் அநேகம் உண்டு. இவற்றில் ஏதாவது தத்துவ உண்மை உண்டா அல்லது மக்களை மிரளச் செய்யப் புனைந்தகதைகளா என்று யாருக்கும் தெரியாதென்றே நினைக்கிறோம்.

அமுதகலைக்ஞானம் என்ற நூலில் அகத்திய மகா முனிவர் பாடியருளிய பாடல்களைக் கீழே தருகிறோம். படித்துப் பாருங்கள்—

பாடல்—213

குளிகைதனை அனைவோரும் வாயில்போட்டு
கும்பித்துப் பாய்ந்தார்கள் போதகிரி தன்னில்
பலிதமுள்ள போதகிரி என்ன சொல்வேன்
பாய்ந்த தொரு சித்தரெல்லாம் போத
மயமானார்
அழியாத போதமயமாகி நின்று
அனைவரும் லிங்கமயமாகிப் போனார்
தெளியாத போதையிலே நிலையில் நின்று
நேரான பொதிகை கிரிப் பேரானேனே.

பாடல்—214

பேரான போதகிரி என்றும் பேரு
பெருமையுள்ள பொதிகைகிரி என்றும் பேரு
வாரான சதுரகிரி என்றும் பேரு
வளமான சூரியகிரி என்றும் பேரு
கூரான மயேந்திரகிரி என்றும் பேரு
குருவான கும்பகிரி என்றும் பேரு
பாரான பரமகிரி என்றும் பேரு
பரம கைலாசமென்று பேருமாச்சே.

திருஅருட்பா 6-வது திருமுறை 45. குரு தரிசனம் என்ற தலைப்பில் வடலூர் வள்ளற்பிரான், தனது

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

குருபிரானாகிய தணிகை வள்ளல் அவர்களை, குரு மாமலையைப் பழமலையில் குலவி ஓங்கக் கண்டேனே என்றும், ஞானமலையைப் பழமலைமேல் நண்ணி விளங்கக் கண்டேனே என்றும்,

சோதிமலையைப் பழமலையிற் சூழ்ந்து வணங்கிக் கண்டேனே என்றும்,

(6-வது திமு) 168, ஆனந்த மேலீடு என்ற அதிகாரத்தில், மேருமலை உச்சியில் விளங்குகம்ப நீட்சி" எனவும் துரியமலை மேலுளதோர் சோதிவள நாடு" என்வும், குருபிரானை மலையாக உருவகப் படுத்திப் பாடியருளியுள்ளதைக் காணலாம்.

ஞான நூல்களில் வர்ணிக்கப்படும் கைலாயம், வைகுண்டம், பரமபதம், சத்திய லோகம், மகம்மேரு கிரி, மயேந்திரகிரி, பொதிகை மலை முதலியன புற உலகில் உள்ள மலைகளைக் குறிப்பன அல்ல. அவை யாவும் நமது தேகத்தில் அகத்தில் உள்ளனவே, இதை மெய்ப் பொருள் உணர்ந்தோர் அறிவார்கள்.

உதாரணமாக, ஓங்காரம் என்ற பிரணவம் நம் ஊனுடம்பாகிய ஆலயத்திலும், உள்ளமாகிய பெருங் கோயிலின் கண்ணும் உள்ளதுவே. ஓம் என்ற ஓங்காரம் ஐந்து பாகங்கள் அடங்கியது. அவைகள் அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம் என்பன அகாரம்பிரம் மாவையும், உகாரம் திருமாலையும், மகாரம் சிவத் தையும் குறிக்கும். இந்தத் திரிமூர்த்திகளின் வாச ஸ்தலங்களே பிரம்மலோகம், வைகுண்டம், கைலாசம் அல்லது மகமேரு கிரி என்பனவாகும்.

இந்த வேதரகசியம் தெரியாதவ களுக்கு எல்லாம் குழப்பமாகத்தான் இருக்கும்.

அகத்தியர் அங்குஷ்டப் பிரமாணம் உடையவர் அதாவது கட்டைவிரல் அளவுடையவர் என்பதின்



மறை பொருள் அறியாதவர்களுக்கு எல்லாம் குழப்பமே. பொதிகைமலை என்பதும் கைலாசம் என் பதும் மயேந்திரகிரி என்பதும் எல்லாம் தானே தான் என்று அகத்தியர் பெருமான் தனது பாடல்களில் பாடி யருளியுள்ளதை மேற்குறித்துள்ள பாடல்களில் தெளி வாகக் காணலாம்.

ஆகவே, ஆதாரமில்லாத, அறிவுக்குப் பொருந்தாத கற்பனைகளும், பொய்க் கூற்றுகளுமே மக்களிடையே பரவி வழக்கில் உள்ளதைக் காண்கிறோம் அகத்தியர் பெருமானைப் பற்றி இன்னும் அநேக அறிவுக்குப் பொருந்தாத புராண கதைகள் வழங்கி வருகின்றன. அவற்றை நாம் இங்கே விவரிக்க விரும்பவில்லை.

அகத்தியர் பெருமானின் உன்னதத்தையும், பெருமையையும், தொன்மையையும், தமிழ்ப் புலமை யையும், பிறப்பின் வரலாற்றையும், முருகப் பெரு மானின் சீடர் என்பதையும், சித்தர்களின் மரபுக்கே தலைமையானவர் என்பதையும், எடுத்துக் கூறி வாசகர் களுக்கு உணர்த்தும் பொருட்டே மேலே குறிப்பிட்ட உண்மைகளைச் சான்றுகளோடு விளக்கினோம்,

இனி, அவர் புலத்திய மகாமுனிவருக்கு உபதேசித் தருளிய இந்த நூலின் அளவிடற்கரிய சிறப்பையும், இந்த நூலில் புதைந்து கிடக்கும் அளவில்லாத யோக ஞானச் செல்வத்தையும், யோகசிகா உபநிடதத்தில் குறிப்பிடப்பட்ட எல்லா ஞானத்திலும் உத்தமமான யோக சிகை என்ற யோக ஞானத்தின் விரிவையும் வாசகர்களுக்கு விளக்கிக் கூறும் பொருட்டுச் சிலவிபரங் களை இங்கே குறிப்பிடுகிறோம்—

யோகசிகா உப நிடதத்தில் சங்கர பகவான் பிரம்ம தேவருக்குக் கூறியுள்ள வாசகத்தை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். அதாவது,

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

"முத்தியை நாடுபவன் யோகத்தையும் ஞானத்தையும் அப்பியாசம் செய்யவேண்டும்" என்பதே ஆகையால், நூல்களைப் படிப்பதால் மட்டும் பயன் கிட்டாது என்ற உண்மையை மறந்துவிடக்கூடாது.

சித்தர்கள் அருளிய நூல்களில் யோக ஞான இரகசியங்களைப் பரிபாஷையில் கூறி வைத்துள்ளார்கள். இந்தப் பரிபாஷை தெரியாதவர்கள் யோகமும் ஞானமும் அறியாதவர்கள் என்று மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். போலி யோகீஸ்வரர்களிடமும் போலி ஞானிகளிடமும் போலி குருமார்களிடமும் மக்கள் ஏமாந்து போகக் கூடாது என்பதே சித்தர்களுடைய நோக்கம் ஆகும். முருகப்பெருமான், அகத்தியர் ஆகியோருடைய பரம்பரையில் வந்தவர்களே சித்தர்கள் எல்லாரும், பரிபாஷைச் சொற்களிலிருந்து ஒருவர் மெய்யான ஞானியா அல்லவா என்பதைக் கண்டுபிடித்து விடலாம். அகத்திய மகாமுனிவர் கீழ்வரும் பாடலில்,

"ஏகமெனும் ஓரெழுத்தின் பயனைப் பார்த்தே
எடுத்துரைத்தும் இவ்வுலகில் எவருமில்லை
ஆகமங்கள் நூல்கள் பல கற்றுக் கொண்டே
அறிந்தமென்பார் மவுனத்தை அவனை நீயும்
வேகாக்கால் சாகாத் தலை விரைந்து கோளாய்
விடுத்ததனை உரைப்பவனே ஆசானாகும்
தேகமதில் ஓரெழுத்தைக் காண்போன் ஞானி
திரு நடனம் காண முத்தி சித்தியாமே.

என்று கூறி, ஒருவர் சற்குரு பெருமானா அல்லவா என்பதைக் கண்டுபிடிக்க வழி வகுத்துள்ளார்கள்.

இதேபோல, சட்டை முனி நாயனார் கீழ்வரும் பாடலில்,



"உன்னி நின்ற மூல முதல் ஆறும்பார்த்தே
உருகிநின்ற சுழிமுனையை அறிந்த பின்பு
மன்னி நின்ற மதிமேல் சாம்பவியைக் கண்டு
மருவி நின்று மனமுறைந்து தேர்ந்த பின்பு
பன்னிநின்ற இவ்வளவும் யோகமார்க்கம்
பகலிரவு மற்ற இடம் ஞானமார்க்கம்
கன்னி நின்ற இடங்கண்டால் அவனே ஞானி
காட்டுவான் கேசரியைக் காட்டுவானே.

என்று சொல்லி,

ஞானி என்றால் யார் என்பதைக் கண்டுபிடிக்க வழி கூறியுள்ளார்கள்.

முருகப் பெருமான் கீழ்வரும் பாடல்களில் வாய் மதங்கள் பேசிப்பேசி மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் ஜெக ஜாலப் போலி ஞானிகளைக் கண்டு பிடிக்கும் வழிகளைக் கூறியுள்ளார்கள்.

தானென்று வாய் மதங்கள் பேசிப் பேசித்
தமர் வாசற்குள்ளிருக்காச் சவங்கள் தன்னை
ஏனென்று கேளாதே எதிர் நில்லாதே
ஈஸ்வரியாள் பாதமதை மறந்திடாதே
வானென்றவையகத்தைப் பழித்திடாதே
வாய் மதங்கள் பேசியடா அழிந்திடாதே
கோன் என்ற குருஅருளை மறந்திடாதே
குவலயத்தில் அலையாதே கூர்ந்துபாரு.

பாரப்பா ஜெகஜால ஞானியோர்கள்
பசிபொறுக்க மாட்டாமல் புரட்டுப் பேசி
ஆரப்பா வேடங்கள் தரித்துக் கொண்டு
அவன்காலில் குறடிட்டே அலைவான் பாவி
நேரப்பா நேர்நிலையும் அறியாத்தோசி
நிலையான பராசக்தி பூசைக் கென்று
தேரப்பா சத்தியமாய்ப் புரட்டுப் பேசி
தெரிவான சித்தன்போற் றிரிவான்காணே.



Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

கா்ணடா வாசிநிலை காட்டச் சொல்லு
கங்குல் மதிரவியுடைய கருணை கேளு
தானடா கற்பநிலை காட்டச் சொல்லு
சாரணையுந் தாரணையுஞ் சாற்றச்சொல்லு
சாரணையுந் தாரணையுந் தெரியக்கேளு
கோனடா குருநிலையைத் தெரியக்கேளு
குலதெய்வமெஃதென்று குறித்துக் கேளு
நானடா நானிருக்கு மிடந்தான்கேளு
நவிலாட்டாற் பல்லுதிற அடித்துத்தள்ளே.

என்று போலிக் குருமார்களை இவ்வளவு வன்மையாகக் கண்டித்துள்ளதைக் காணலாம்.

சித்தர்களின் நூற்களில் கையாளப்பட்டிருக்கும் சில பரிபாஷைச் சொற்களைத் தொகுத்துக் கீழே தருகிறோம்.

1. ஐயுங் கிலியும் சௌவும்
2. முப்பாழ்
3. முப்பால்
4. எட்டிரண்டு
5. முக்கோணம்
6. அறுகோணம்
7. எண் கோணம்
8. நாற்பத்து முக்கோணம்
9. ஏகாக்ஷரம்
10. பஞ்சாக்ஷரம்
11. சடாக்ஷரம்
12. அஷ்டாக்ஷரம்
13. ஐம்பத்தோரக்ஷரம்
14. சந்திரபுஷ்கரணி
15. பிரம்மரந்திரம்
16. ரவிமதிசுடர்
17. மும்மூலம்
18. குண்டலி
19. அகார உகார மகார சிகாரம்
20. காயகற்பம்
21. கவனக்குளிகை
22. சோதி — ஆதி — நீதி
23. மூல அனல்
24. புகையாத கனல்
25. போகாத புனல்
26. சாகாத்தலை
27. வேகாக்கால்
28. நெருப்பாறு
29. மயிர்ப்பாலம்
30 அறுத்தடைத்தவாசல்
31. வெண்சாரை
32. கருஞ்சாரை



33. கருநெல்லி
34. கைலாசம்
35. வைகுண்டம்
36. மேருகிரி—மகமேரு
37. மயேந்திரகிரி
38. பொதிகைமலை
39. பரமபதம்
40. நெற்றிக் கண்
41. பிடரிக் கண்
42. சிற்சபை
43. திருச்சிற்றம்பலம்
44. சுழிமுனை இடகலை பிங்கலை
45. முச்சந்தி
46. விந்து
47. நாதம்
48. குமரிகற்பம்
49. வெட்டாத சக்கரம்
50. பேசாதமந்திரம்
51. கேசரி
52. வாசி (பேசரியவாசி)
53. அசபை (அஜாநலம்)
54. புருவமத்தி
55. அண்ணாக்கு
56. உண்ணாக்கு
57. முப்பூ
58. கல்லாலடி ஆசனம்
59. அன்னம்
60. மயில்-வாசி-குதிரை
61. இருதயம் முதலியன.

இப்பரிபாஷைச் சொற்கள் உணர்த்தும் பொருளை மெய்க்குருபிரான் துணை கொண்டு அறிந்து கொள்ள வேண்டும். இவைகள் பல தீட்சைகளாக அறிவிக்கப் படும். பின்னர், இந்த நூலில் விளக்கப்பட்டுள்ள இரகசியங்களை ஒருவாறு புரிந்து கொள்ள முடியும்.

இதன் பின்னர், யோகத்தைப் பற்றியும் அதனால் அடையும் ஞானநிலையைப் பற்றியும் இந்த நூலில் கூறிய விரிவான நுட்பங்களும், செயல்களும், உண்மைகளும் வேறு எந்த ஒரு நூலிலிருந்தும் பெறமுடியாதவை ான உணரலாம்.

தற்காலத்தில், உலகில் யோகத்தைப் பற்றிய டண்மை யாருக்கும் தெரியாதென்றே சொல்லக் கூடிய அளவில், யோகத்தைப் பற்றிய தப்பான எண்ணம் ரவி விட்டது.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

யோகம் என்று சொன்னவுடன், யோகாசனப் பயிற்சிதான் எல்லாருடைய நினைவிற்கும் வரும். அதன் பின், பிராணாயாமம் என்றால் பத்மாசனத்தில் அமர்ந்து மூச்சுக் காற்றைக் கொண்டு பூரக, கும்பக ரேசகம் செய்வது என்ற எண்ணம் உலகம் முழுவதும் ஊடுருவிப் பாய்ந்து பரவி விட்ட நிலையை இன்று காண்கிறோம். யோகப் பயிற்சிப் பள்ளிகளைப் பற்றி—அவை வெளிநாடுகளிலும் பரவியுள்ள நிலையைக் காண்கின்றோம்.

ஆனால், இவற்றிற்கெல்லாம் மூலநூற்களாகிய சித்தர்கள் இயற்றிய நூல்களே ஆதாரம் என்பதை மறந்து விடக் கூடாது. அவற்றிற்கெல்லாம் தலையாய நூல் இந்த சவுமிய சாகரம் என்பதையும் நினைவில் வைத்துக் கொண்டு பார்க்கும் பொழுது, உண்மையான யோக நெறியிற்கும், இன்று உலகில் யோகாப்பியாசம் என்ற பெயரில் நிலவி வரும் செயலுக்கும் யாதொரு தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்தப் பரிதாபகரமான நிலையை இன்னும் சற்று கூர்ந்து பார்ப்போம். தாயுமானவர் "இதய பத்ம பீட மிசை" என ஆசனத்தை வர்ணித்திருக்கிறார். இது "இருதய தாமரைமலராகிய பீடத்தின் கண்" என்று பொருள் படுகிறது.

இதை ஆசனமாகக் கொண்டு மனதை அதில் அமரச் செய்ய வேண்டும். இது யோகத்திற்கு முதற்படி. இந்த நூலில், அகத்தியர் பெருமான் கோமுக ஆசனம் எனக் கூறியுள்ளார். அது மேல்மூலம் எனவும் சுழிமுனை எனவும் விளக்கியிருக்கிறார். மெய்ப் பொருள் அறிந்தால் இவை இரண்டும் ஒரே இடம் என விளங்கும் இவர்கள் குறிப்பிட்ட ஆசனம் நாம் இதுவரைக்கும் உலக வழக்கத்தில் பழகி வரும் ஆசனம் அல்ல என்பது நிச்சயமாகத் தெரிந்து கொள்ளலாம்.



இதுபோல், பிராணாயமம் என்றால் இன்று நாம் நினைத்துக் கொண்டிருக்கும் மூச்சுயாமம் அல்ல. பிராணன் என்றால் மூச்சு அல்ல. இதை விவேகானந்தர் தனது நூலில் விரிவாக விளக்கியுள்ளார்கள். பிராணன் மூச்சுக்குக் காரணமாயிருக்கும் மூல அசைவு. அது மூச்சு அல்ல. அது சுவாசித்தலைத் தூண்டுவது. பிராணன் என்பது ஒரு சத்தியாகப் பரிணமிக்கிறது. இயக்கத்தை—அசைவை உண்டாக்குவது பிராணன்.

இந்த நூலில், அகத்திய மகா முனிவர் மூச்சை அடக்கும் செயலை வன்மையாகக் கண்டித்திருப்பதைக் கீழ்வரும் பாடலில் காணலாம்.

பாடல் 928

பாரப்பா தன் மயத்தை அறியாமல்தான்
    பத்தியுடன் அடயோகம் செய்வான் பாவி
வீறப்பா மூச்சடக்கி செவி வாய் மூடி
    வேகமுடன் பூரிக்கில் மேனி தன்னில்
சாரப்பா மூலமதில் சொருகிக் கொண்டு
    தலைவலித்து காதடைத்து முகமுங்கோணி
நேரப்பா கண் தெரித்து மதி கலங்கும்
    நேர்மை கெட்ட அடயோகம் தள்ளு தள்ளே.

முருகப் பெருமான் பிராணாயம் என்றால் என்ன என்பதைப் பற்றிப் பாடியருளியுள்ள சில பாடல்களைக் கீழே தருகிறோம். படித்துப் பாருங்கள்.

பாடல் 312

பேராகி விந்து வல்லோ பேசலாச்சு
    பிராணாய மென்றதுவு மிதற்குப் பேரு
கூறாகிச் சந்திரனிற் கலை தான் நாலு
    குடிப்பதுவும் பிடிப்பதுவும் அதுதான் கற்பம்
வேறாகித் திரியாதே யிந்த ஞானம்
    விட்டகுறைப் படியாலே தொடர வேணும்
நாராகிப் பூவாகி வாசமாச்சு
    நலமான விந்து வட்ட மகிமை கேளே.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

### பாடல் 313

தானென்ற விந்து வட்டத் தாலே யல்லோ
சாகாமல் இருந்தவர்கள் அநேகம் சித்தர்
ஊனாகி விந்து வல்லோ ஆதி பீடம்
உடல் உயிரும் ஒன்றாக இருத்தி வைக்கும்
தானானே னென்றதுவு மதுதான் மைந்தா
சகலசித்தும் பேரின்பம் தானே கூடும்
வாணாளை வதைப்பதற்கு இயமன் வந்தால்
வாய் திறந்து வீழ்ந்திடவே கொல்லும் பாரே.

### பாடல் 314

பாரப்பா விந்துவினா லாண்பெண்ணாச்சு
பஞ்ச சத்தி மாயையெல்லாம் பறக்கலாச்சு
ஆரப்பா விந்து வென்றாற் சொல்லக் கேளாய்
ஆதாரம் ஆறின் அடிப்படையுமாகி
நேரப்பா ஏகமென்ற கற்பம் ஆகி
நீ என்றும் நான் என்றும் மனதுண்டாகி
ஏரப்பா வாசியின் மேல் சாரியாகி
இரு கலையும் சுழி முனையும் இது வாங்காணே.

### பாடல் 315

காணடா இடகலையின் சுழினை யாகிக்
கலந்த குலதெய்வ மல்லால் வேறேயுண்டோ
தானடா குலை யான தெய்வத் தாலே
சதுர் முகனும் சகலமுமே வந்தவாறும்
வானடா வாணாளு முதித்த வாறும்
வங்கு சிங்கு வாசலென்றே உரைத்தபேரும்
வீணடா வீணருக்குத் தெரியாது இந்த
வெட்டவெளி விந்து வட்ட விபரம் பாரே.

### பாடல் 316

பாரப்பா கயிலாய கிரியு மாகிப்
பன்னிருகை யடைந்த பரமிதுவு மாச்சு



ஆரப்பா சுணங்க வென்ற பாலுண்டாகி
அரகரா வென்ற சத்த மதிலுண்டாகி
நேரப்பா கனைபெருமைப் பாலுண்டாச்சு
நீங்காமல் மனதறிவை உணர்ந்த பேர்க்கு
வேரப்பா வெறும் பொய்யும் சொல்லப் போமோ
விந்துவட்ட மறிந்த பெரியோர்களாமே.

### பாடல் 317

ஆமடா சௌவு மென்று மிதற்குப் பேரு
அட்டமா சித்தி யெல்லா மிதற்குள்ளாட்டம்
ஓமடா வோமுடிந்த விடமிதாச்சு
ஓங்கார வாங்கார மிதுவே யாச்சு
நாமடா விரண்டெழுத்து மிதுவே யாச்சு
நல்மான வைந்தெழுத்து மிதுவே யாச்சு
வாமடா வெட்டெழுத்து மிதுவே யாச்சு
வஸ்து வென்று பெயருண்டாம் வந்த வாறே.

பதஞ்சலி யோக சூத்திரம்—சமாதி பாதம்—25,26, 27வது சூத்திரங்கள் கீழ் வருமாறு:

25. "தத்ர நிர திசயம் சர்வஜ் ஞத்வ பீஜம்" [உரை] உயிர்களிடம் வித்து போன்றுள்ள எல்லாம் அறியும் தன்மை ஈசுவரனிடம் எல்லையற்றதாய் உள்ளது.

26. "ஸ பூர்வேஷாமபி குரு: காலேனானவச்சேதாத்" (உரை] ஈசுவரன் காலத்தால் கட்டுப்படாததால் மிகப் பழைய குருவுக்கும் அவரே குரு.

27. "தஸ்ய வாசக:ப்ரணவ" (உரை) அவரது வாக்ய ரூபமே பிரணவம். ஓங்காரம் ஆகிய பிரணவத்தின் ஐந்து பாகங்கள் அகர உகர மகர விந்து நாதம் என்பனவாகும்.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

குருபரன் என்பவர் தெய்வமறை முடிவான பிரணவ சொரூபி. அவரே சிவன். "குருவே சிவன் எனக் கூறினன் நந்தி" என்று திருமூலர் பிரான் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். அவர் அருட் பெருஞ் ஜோதி வடிவானவர். அவருடைய மெய்ஞான தீப ஒளியே விந்துவாகும். அதிலிருந்து பிறந்து வரும் வாக்காகிய நாதம்—வாக்கியம்—பிரணவ சொருபமானது. கேட்டு உணர்வோரைப் பிரணவ சொருபம் ஆக்க வல்லது. அதைச் செவிக்கு உணவாக உண்பதுவே யோக உணவு எனப்படும். அதுவே நம் பிராணனை வசப்படுத்தி அடக்கி மனோலயம் பெற்று சமாதி அடைவதற்குச் சித்தர்கள் கூறியுள்ள வழி. வேறு வழியே இல்லை.

யோகாப்பியாசத்தைப் பற்றிய விளக்கத்தை இந்த நூலில் வெகு விரிவாகக் காணலாம். அட்டாங்க யோகத்தின் எட்டு அங்கங்களாகிய இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகியவற்றைப் பற்றியும், அவற்றின் ஒவ்வொரு அங்கத்தில் உள்ள பல பிரிவு விபரங்களைப் பற்றியும் இந்த நூலில் கூறப்பட்டுள்ளது போல் வேறு எந்த நூலிலும் காண முடியாது.

இந்த நூலில், பிராணாயாமம், யோகம் என்ற பெயரால் நடந்து வரும் தவறான முறைகளையும் கீழ்க் கண்ட பாடல்களில் அகத்தியர் பெருமான் எடுத்துக் காட்டியருளியுள்ளதைக் காணலாம்.

அவயோகி பாடல்—926

பாரப்பா பிராணாய யோகஞ்செய்ய
பதிவான தசதீகைஷக் குள்ளே நின்று
னேரப்பா சமாதியிலே மனதுபூண்டு
நின்றாக்கால் காயசித்தி யோகம் எய்தும்



னரப்பா இருக்கிரவன் பிராணாய மென்று
உருசெவிப்பான் மணியெடுத்து மூக்கைத்
தொட்டு
பேறப்பா இதினாலே ஒன்றுமில்லை
பூமியிலே பிரந்தவர் கள்கோடி தானே.

பாடல்—927

கோடியடா உலகத்தில் பிராணாயஞ் செய்ய
குறையாம லொருபோது பிச்சைக் கொண்டு
வாடியல்லோ உடம்பெல்லாம் வெளுத்துச் சோம்பி
மகத்தான சற்குருவை காணவென்று
தேடியல்லோ மலைதோறுஞ் சென்றுபுக்கி
தசதீகைஷ யரியாமல் செனித்தோர் கோடி
நாடியல்லோ குருவரிந்து தசதீகைஷ பெற்றால்
நன்மையுட னிருந்து அஷ்டசித்தி பாரே.

பாடல் 928 (மேலே காண்க) நேர்மை கெட்ட அட யோகம். தள்ளுதன்னே,

பரியங்க யோகம் பாடல் காண்க. 929

தள்ளடா பரியங்க யோகந்தானும்
சாதகமாய் சலந்தனிலே தானே சென்று
மெள்ளடா தானிருந்து அபானத்தாலே
விரும்பியே பூரித்து ரேசிப்பான் பார்
உள்ளடா மூலமென்ற ஆகாரத்தில்
ஒதுங்கி நீர் தங்கியது குன்மமாகும்
அல்லாடா இதினாலே ஒன்றுமில்லை
ஆதியென்ற மவுனாதியோகம் பாரே.

தள்ள வேண்டிய தவறான யோக நெறிகளைத் தள்ளிவிடச் சொன்னபின், கொள்ள வேண்டிய யோக நெறிகளைக் கீழ்க் காணும் பாடல்களில் விளக்கியுள்ளார்கள்.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## மவுனாதியோகம்—930

பாரப்பா மவுனாதி யோகஞ் செய்ய
பாழான தத்துவத்தை அடக்கி மைந்தா
னேரப்பா குருபதத்தில் நின்றாயானால்
நிசமான லயயோக மென்றும் பேரு
சாரப்பா தத்துவலய யோகத்தாலே
சங்கையுடன் தானவனாய் தன்னைக் கண்டு
சாரப்பா சற்குருவின் கிடாக்ஷத்தாலே.
கருணையுடன் மந்திராதி யோகங்கேளே.

## மந்திராதி யோகம் —931

கேளடா வங்கென்று மூலத்தில் பூரி.
கெணிதமுடன் சிங்கென்று மேலே ரேசி
ஆளடா மங்கென்று சுழினைக்கெட்டி
அண்டவழி தனையரிந்து வாசியேத்து
சூளடா துருவநிலை கண்டு தேற
சுத்தமுடன் சிங்கு வங்கு தன்னைக் காரு
மேரடா தனையரிந்து காத்தாயானால்
விசையாதி மந்திர மாயோகமாச்சே,

## ராஜாங்க யோகம்—பாடல் 932

ஆச்சப்பா யிது மேலே றாசாங்க யோகம்
ஆதியென்ற யோகமடா மவுனயோகம்
மூச்சப்பா தானிரைந்த மவுனயோகம்
முறையரிந்து கைபாகம் முத்தி பெற்றால்
நீச்சப்பா அண்டவெளி சாகரத்தில்
நின்று நிலையரிந்து பிராணாய வழியே சென்று
பாச்சப்பா வாசிசரம் சுழினைக்கேரில்
பளீரெனவே கண்டதெல்லாம் வெளியாய்ப் போச்சே



## பாடல்—933

வெளியான வெளியரிய ஒளியைத் தாண்டி
வேத ஒளிதன்னாலே வெளியைக் கண்டு
ஒளியான வாசி சரம் உசரயேத்த
ஓமென்ற பிரணவத் தாலுறுதி கொண்டு
வழியான துரையரிந்து மணினாவுன்னி
மகத்தான அண்டவெளிக் குன்ளேசென்று
அழியாத பேரின்ப வீட்டில் சென்றால்
அமுர்தரச போத மானந்தாமே

## பாடல்—934

ஆமப்பா ஆனந்த போதமான
அகாரமுடன் உகாரமது மகாரம் கூட்டி
நாமப்பா யென்ற மொழிதனையகத்தி
னடுவான சுழினையிலே னாட்டங்கண்டால்
சோமப்பால் கசிந்து வெகு பூரணமாய்க் காணும்
துலங்கு திரு வாசியென்ற குகையைக்காரு
காமப்பால் கசிந்தொழுகும் குகையைக் கார்க்க
கருணை வளர் சற்குருவை அடுத்துக்காரே.

## பாடல்—935

அடுத்து மிகப் பொருளீய்ந்து தொண்டு பண்ணி
அனுசரித்துக் கேட்டாக்கால் அருளிச் செய்வார்
தொடுத்து மிகக் கேட்டுடனே சொல்லவில்லை யென்று
சுகமரியாக் குறங்கதுபோல் கெட்டோர் கோடி
கடுத்து மிக அலையாதே மோக்ஷம் வேண்டி
காத்திருந்து குருபதத்தில் கனிவாய்க் கேளு
தடுத்தடுமை கொண்டவரும் திசை திசை வைப்பார்
சதாயோக பூரணத்தில் தாக்கி நீயே,

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

பாடல் 936

நீயென்றும் நானென்றும் பேதமில்லை
நிர்மலமாம் வெளிதனிலே நின்ற போதம்
தாயென்றும் சேயென்றும் பேதமில்லை
சரா சரங்கள் ரெண்டு மொன்றாய் நிறைந்துதப்பா
காயென்றும் கனியென்றும் பேதமில்லை
கருவான முக்கனியை கண்டபோது
சீயென்றும் அமுர்தமென்றும் பேதமில்லை
தெளிந்தோர்க்கு வாசி என்ற குதிரை தானே.

பாடல் 937

குதிரையென்ற வாசியினால் தீக்ஷைவீடு
குருகாமல் சுழிமுனையில் குரியாய்ப் போடு
குதிரையின்மே லேரியல்லோ சக்கறங்களெல்லாம்
கூர்மையுடன் கடையரிந்து குணமாய் நின்று
குதிரையின்மே லேரியல்லோ ராஜவீதி
குருபதமாம் புருவமையத் தூடே போகும்
குதிரையின்மே லேரியல்லோ அண்டபதஞ் சுத்தி
குதிரைமுனை அங்கையடா கட்டுகட்டே.

பாடல் 938

கட்டினால் வாசியது மூச்சாடாது
கருவறிந்து குரு சொல்லகட்ட வேணும்
வெட்டினால் பிராணாயம் வாசி யோகம்
இயங்காமல் வூதினால் ஒன்றுமில்லை
முட்டினால் வாசியது கட்டாதய்யா
மூதண்ட குளிகைக்கு பலமோயில்லை
ஓட்டினலாவதென்ன அன்னத்தை விட்டு
உத்தமனே தீக்ஷை விட்டால் ஒக்கப் பாழே.

பாடல் 939

பாழான முப்பாழை அரியவேணும்
பரமபதத் தெல்லையிலே பதிவாய் நின்று



மேலான நிற்குணப்பாழ் கண்டுதேறி
மெய்ஞான கேசரியில் வாசி பூட்டி
காலான அடிமுடியு மொன்றாய் நின்று
கருணைவளர் ஓங்காரக் கம்பத் தேறி
நூலான சாகறமே போதமென்று
னோக்கு மனங்கொண்டு அந்தப் போக்கைக் காணே.

பாடல் 953

பதிவான பதியதுதான் அண்டத்துச்சி
பரம கைலாசம் என்ற சொர்க்க வீடு
மதியான வீடதிலே மனக்கண் சாத்தி
மார்க்கமுடன் சுழினையிலே மணிநாவுன்னி
விதியான எழுத்தரிந்து கமலத்தேகி
வேதாந்த அமுர்தரசங் கொண்டால் மைந்தா
கெதியான மோக்ஷமடா சொல்லப் போமோ
கேசரத்தில் பூரணமாய் கெதிமொண்டேறே.

பாடல் 955

கொள்ளடா அண்டமதில் சார்ந்து கொண்டு
கூர்மையுடன் தன்மயங் கொண்டிருந்தாயாகில்
உள்ளடா சோதி பிரகாசமாகி
உண்மையென்ற ஆதியந்தம் தான்தானாகி
சொல்லடா சொல்லிறந்த மவுனமாகி
சுகசிவ பிறாணகலை சுத்தனாகி
அல்லடா தன்மயம் கொண்டிருந்தாயாகில்
அரகரா சின்மயமா யாகுந் தானே.

பாடல் 956

தானென்ற குருவினுபதேசத்தாலே
சார்ந்து நின்ற அவத்தையெல்லாம் தானே போகும்
வானென்ற வடிவு சிவரூபமானால்
மவுனாதி யோகமதில் வாழ்க்கை யெய்தும்

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

நானென்ற பிரபஞ்ச மாய்கையப்பா
னாசமென்ற அக்கினியாம் நன்றாய்க் காணும்
தேனென்ற வேதாந்த மூடியைப் பார்த்து
தெளிவான யோகமதில் தீர்க்கம் பாரே.

பாடல் 959

சொன்னதினால் தெரியாது மைந்தா
தொடுகுறி போலங்கணையே துலங்கினாக்கால்
கண்ணெதிரே தோன்றிநின்ற காக்ஷிபோலே
கருணைவளர் சாஸ்திரங்கள் கருக்கனெல்லாம்
விண்ணல்லோ தங்கி நின்ற ஒளிபோல் காணும்
விளங்கி சுழிதனையறிய வெளியுங் காணும்
கண்ணதிலே கண்ட ஒளிவெளியின் சூக்ஷம்
ஒடிமுடிந்து சூக்ஷமடா சுழினையாமே.

இந்தப் பாடல்களின் மூலம் ராஜாங்க யோகம் என்பது குருபிரானிடமிருந்து அவரது வாக்காகிய பிராணவ நாதத்தைக் கேட்டுக்கேட்டு நாமும் குருபிரானின் ஒளி வெளியில் கலந்து ஒன்றாகி அறிவுருவாகி நித்தியமாகிய மரணமிலாப் பெருவாழ்வு என்னும் தெய்வீக பரமபத நித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தைக் குரு பெருமானிடமிருந்து பெறுவதே என உணர வேண்டும். மோட்ச வீட்டை அடைய வேறு வழியே இல்லை.

இதையே தனக்குத் தனது குரு பெருமான் சொன்னார் என்றும் கீழ் வரும் பாடலில் அகத்தியர் பெருமான் குறிப்பிடுகிறார்.

பாடல் 958

தானென்ற சாக்ஷியடா குணாதீதமாகி
சகலபொருள் தானாகி தானே தானாய்
வானென்ற ஆகாசமுடிவு மாகி
வகத்தான சோதி ஜெகச்சோதியாகி



கோனென்ற குருவாகி எங்குந்தானாய்
குவிந்தெழுந்த வாசி சிவயோகந்தானாய்
தேனென்ற அமூர்தரச யோகந் தன்னை
சிவாயகுரு தெளிவாகி சொன்னார் காணே!

மேற்கொண்டு இந்த நூல் இறுதிப் பாடல் வரை பல இரகசியங்களைக் கூறியுள்ளார்கள்.

மேலே கூறப்பட்ட சித்தயோக நெறியில் நின்று பழகித்தான் பெற்ற பேரின்ப அனுபவத்தைக் கீழ் வரும் பாடலில் பட்டினத்தார் பெருமான் கூறியருளியுள்ளார்கள். (பாடல் 25]

அட்டாங்க யோகமும் ஆதார மாறும் அவத்தை
ஐந்தும்
விட்டேறிப் போன வெளிதனிலே வியப்பொன்று
கண்டேன்
வட்டாகிச் செம்மதிப் பாலூறல் உண்டு மகிழ்ந்
திருக்க
எட்டாத பேரின்பம் என்னை விழுங்கி இருக்
கின்றதே.

இதேபோல, வடலூர் வள்ளற் பிரான் அவர்கள் அனுபவ மாலையில் கீழ்வரும் பாடல்களில் தனது குருபெருமானருளினால், தான் சிவமயமாக ஆக்கப் பெற்றுப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றதைக் கூறியருளியுள்ளார்கள்.

6வது திருமுறை 82. அனுபவ மாலை பாடல் 98

துருவு பரசாக்கிரத்தைக் கண்டு கொண்டேன் பரம
சொற்பனங் கண்டேன் பரம சுழித்தியும்
கண்டுணர்ந்தேன்
குரு பிரம சாக்கிரத்தைக் கண்டேன் பிரமங்

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

குலவியசொற் பனங்கண்டேன் சிவ சுழித்தி
கண்டேன்
குரு துரியங் காண்கின்றேன் சமரச சன்மார்க்கங்
கூடினேன் பொதுவிலருட் கூத்தாடுங் கணவர்
மருவிடப் பெற்று அவர் வடிவம் நான் ஆனேன் களித்து
வாழ்கின்றேன் எதிரற்ற வாழ்க்கையில் என்தோழி.

தவறான யோகமுறைகளால் விளையும் தீங்குகளை புலத்திய மகா முனிவரும் கீழ்க்கண்ட பாடல்களில் கூறியருளியுள்ளதைக் காணலாம்:

காணு மூச்சடக்கி விழியதும் உருட்டிக்
கபாலமும் திறந்தனர் கோடி
கனத்தவாய்வதனால் குன்மநோய் அணுகி
கலங்கினோர் அவர் ஒரு கோடி
இனமறியாமல் இருத்தியே வாய்வை
இறந்தனர் அவர் ஒருகோடி
பாருலககிதம் தேடியும் குருவின்
பதம் அடையாமலும் மாண்டார்.

இவ்வளவு அரிதினும் அரிதாய்ப் பெரிதினும் பெரிதினும் பெரிதாகிய அடைதற்கரிய பெரும் பேறாகிய விலை மதிக்க முடியாத மெய் ஞானச் சொல்வத்தை நமது முன்னோர்கள் தமிழ் மக்களாகிய நமக்கும், ஏனைய உலகத்தோர்க்கு தனிப் பெருங் கருணையுள்ளத்தோடு இயற்றியருளி விட்டுச் சென்றுள்ளார்கள்.

இந்த நூலின் பெருமையைச் சாதாரண மக்களும் அறிந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற வேண்டும் என்ற நோக்கத்துடனும், யோகாப்பியாசம் என்ற பெயரால் கையாளப்பட்டு வரும். தவறான முறைகளால் ஏற்படும் தீங்குகளை எடுத்துக் கூறி உணர்த்தும் நோக்கத்துடனும் தக்க ஆதாரங்களுடன் இந்த முன்னுரையைத் தொகுத்துக் கூறியுள்ளோம்.

இங்ஙனம்,
மெய்வழி குழந்தைசாமிக் கவுண்டர்
ஈரோடு,

கடவுள் துணை

அகஸ்திய மகாமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய
வாதகாவியத் திறவுகோலாகிய
வாதசௌமியம் என்னும்

# சௌமிய சாகரம் 1200

காப்பு

சோதியெனும் மனோன்மணியைத் தியானஞ்செய்து
சுகமான சௌமியசா கரத்தைப்பாட
ஆதியெனுங் கணபதியும்வல் லபையுங்காப்பு
அரசான பிரம்மனொடு சரஸ்வதியுங்காப்பு
நீதியெனும் மாலுடனே லட்சுமியுங்காப்பு
நின்றிலங்கும் ருத்திரனும் உருத்திரியுங்காப்பு
ஓதியதோர் மயேஸ்பரனும் மயேஸ்பரியுங்காப்பு
உறுதியுள்ள சதாசிவனும் மனோன்மணியுங்
காப்பே. 1

மணியான ரவிமதியுஞ் சுழினைகாப்பு
மகத்தான வேதியர்தன் பாதங்காப்பு
கனியான நால்வேத அந்தங்காப்பு
கருணைவளர் சாஸ்திரமோர் ஆறுங்காப்பு
அணியான ஆதார சொருபங்காப்பு
அருளான அமிர்தரச போதங்காப்பு
தனியான பராபரமாஞ் சோதிகாப்பு
சதாநந்தப் பூரணமாந் தாய்காப்பாமே. 2

தாயான சிவயோக மூலங்காப்பு
சகலகலைக் கியானமணி பீடங்காப்பு
மாயாத வாசிமலர் அந்தங்காப்பு
மணிமந்திர நாதவொலி கீதங்காப்பு
சாயாத அடிமுடியும் நடுவுங்காப்பு
சௌமியமாம் தேவாதி ரிஷிகள்காப்பு
தேயாத வாசியடா மவுனங்காப்பு
சிவசிவா அகாரமுடன் உகாரங்காப்பே. 3



Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

உகாரமென்ற நாதமடா சத்திகாப்பு
உறுதியுள்ள அகாரமடா சிவமேகாப்பு
சிகாரமென்ற சோதியடா வாலைகாப்பு
சிவசிவா மகாரமென்ற மவுனங்காப்பு
வகாரமென்ற பஞ்சகண தீக்ஷகாப்பு
மகத்தான சடாதார ஆதிகாப்பு
நகாரமுடன் அகாரவரை ஓங்காரத்தில்
நாடினின்ற சூட்சமடா ஆதிகாப்பே. 4

ஆதிகுரு வேதியர்தன் பாதம்போற்றி
அருள்பெருகுங் கேசரியைப் பூசைபண்ணி
சோதியெனுஞ் சௌமியசா கரத்தைப்பாட
சுயஞ்சோதி ஆதியந்தஞ் சுழினைகாப்பு
நீதியுடன் ஆதார மூலந்தன்னில்
நின்றிலங்கும் பிரணவமாம் அயனார்காப்பு
ஓதியதோர் கலைமகளும் பூமகளுங்காப்பு
உண்மையுள்ள செயமகளுங் காப்புத்தானே. 5

தானான சதுரகிரி மூலங்கண்டு
தவமான சிவயோகத் திருக்கும்போது
கோனான வேதியரை அடுத்துநானும்
குறியான பூரணத்துக்கு உறுதிகேட்டேன்
ஊனான சத்திசிவம் என்றுபின்னும்
உண்மையுள்ள அகஸ்தியனே வாவாவென்றார்
தேனான வடமொழியைக் கையில்ஈந்து
திருவான பூரணத்தின் திறஞ்சொன்னாரே. 6

திறஞ்சொன்ன மகிமையைநான் பெற்றுக்கொண்டு
திருவான வடமொழியை நன்றாய்ப்பார்த்து
பரஞ்சேர்ந்த பூரணமாம் அறிவிலேறி
பாடினேன் சௌமியசா கரத்தைமைந்தா
சரமான வாசியில்நான் உறுதிகொண்டு
சந்தோஷ மாக ஈராறுநூறும்
வரஞ்சேர்ந்த தவமதனால் பாடிநானும்
மகத்தான வேதியர்முன் வைத்தேன்தானே. 7



தானான சௌமியசா கரத்தைநன்றாய்த்
தன்மையுடன் ஆதியந்தந் தயவாய்ப்பார்த்து
தேனான வடமொழியைத் தமிழ்தான்செய்த
திரமான கருவிபரம் நன்றாய்ச்சொன்னீர்
ஊனான உலகமதில் உலகத்தோர்கள்
உறுதியுள்ள கைலாயம் இடங்கொள்ளாது
மாணாக்கேள் சௌமியசா கரத்தைநீயும்
மார்க்கமுடன் அந்திசந்தி மகிழ்ந்துபாரே. 8

பாரென்று சொன்னமொழி பெற்றுக்கொண்டு
பதிவான பொதிகைதனில் வாசமாகி
நேரென்று சௌமியசா கரத்தைப்பார்த்து
நிச்சயமாய் அஷ்டாங்க யோகம்பார்க்கில்
சாரென்ற பொதிகைமலை சார்புக்குள்ளே
சார்ந்திருந்த தபோதனர்கள் தானேகூடி
நேரென்ற பொதிகைதனின் முடிமேற்சென்று
மெஞ்ஞான சற்குருவென்று அடிபணிந்தார். 9

பணிந்துமிக அனைவோரும் இருகைகூப்பி
பரமகுரு தேசிகரே பதிவாய்நீரும்
கனிந்துமிக அந்தமதிற் கருணையாகி
கடாட்சித்த சௌமியசா கரத்தைநாங்கள்
அணிந்துவரின் தெரிசனங்கள் பார்ப்போமென்று
அனைவோரும் ஒருமனதாய் அருள்கண்கூர்ந்து
துணிந்துவந்தோம் உம்முடைய பாதந்தன்னில்
சுகமாக அடுமைபடைத்துஆள் என்றாரே. 10

ஆளென்று சொன்னதபோ தனரைப்பார்த்து
ஆதிதொடுத் தந்தம்வரை சொன்னோம்நூலில்
காலென்ற கருக்குருவும் நன்றாய்ச்சொன்னோம்
காசினியில் தபோதனர்கள் கருணையாக
வாளென்று சொன்னதொரு தீக்ஷமார்க்கம்
வளமான சவுக்கார வழலைப்போக்கும்
மேலென்ற காப்பதிலே ஆறுலக்ஷம்
விண்டதிலே சூக்ஷமதாய்க் கண்டோம்பாரே. 11

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

கண்டதொரு சகலகலை வேதந்தன்னை
கடைந்தெடுத்து சௌமியசா கரமாய்ப்பாடி
கொண்டதொரு சூஸ்திரத்தைக் குருமுன்வைத்தேன்
குருவான எம்குருவும் நன்றாய்ப்பார்த்து
விண்டதொரு சாகரந்தான் ஆதிசூக்ஷம்
விளம்பாது விளம்பாது மவுனம்பண்ணு
அண்டகே சரமதிலே தவஞ்செய்யென்று
ஆதிகுரு வேதியரும் சொன்னார்பாரே. 12

பாரையா சொல்மொழிகள் தவறொண்ணாது
பத்தியுடன் உத்திரவு பெற்றுவந்தால்
நேரையா சௌமியமாம் பொருளுஞ்சொல்லி
நிசமான சாகரத்தின் நிலையுங்காட்டி
தேரையா வென்றுக்கா யாதிஈந்து
செய்ததொரு சாஸ்திரமே ஈவோமொன்று
மேரையா மேருநடு முடியிற்சென்றேன்
விளம்பியதோர் சௌமியத்தை சொல்லக்கேளே. 13

சொல்லக்கேள் சௌமியசா கரத்தைமைந்தா
சுகமான வடமொழியைத் தமிழால்செய்தேன்
அல்லக்கேள் ஆதிமுதல் சொன்னநூலில்
அரிதரிது இதன்பெருமை யாருங்காணார்
வெல்லக்கேள் வேதமென்ற சௌமியத்தை
மேலான பதவியென்று பதனம்பண்ணி
உள்ளத்தின் தன்னொளிவு மேலேநீயும்
உண்மையுடன் அந்திசந்தி பூசைபண்ணே! 14

பண்ணப்பா சௌமியத்தை பூசைபண்ணு
பதிவான சாகரத்தை அறிந்துகொண்டு
எண்ணப்பா வென்றுதன்னை மறந்திடாதே
இகபரசாதனம் முழுதும் இதுவேசித்தி
முன்னப்பா சொன்னசாஸ் திரங்களெல்லாம்
முன்பின்னாய்ப் பூரணத்திற சேர்க்கச்சொன்னோம்
கண்ணப்பா கண்மணிபோ லிந்தநூல்தான்
கைலாச மேருகிரி தீபமாச்சே. 15



ஆச்சப்பா மேருகிரி தீபம்போலே
அரகரா சௌமியசா கரந்தான்பாரு
நீச்சந்பா கடினமென்றுநீ மலைக்கவேண்டாம்
நேர்மையுள்ள கைபாகம் முறைபாகங்கள்
பாச்சப்பா வெகுதெளிவு இந்நூல்போலே
பகராது முன்சொன்ன சாஸ்திரங்கள்
காச்சப்பா இந்நூலைப் பதனம்பண்ணி
கனகமுடன் சிவயோகங் கருத்தாய்ப்பாரே. 16

கருவான சௌமியசா கரத்தைமைந்தா
கருணையுடன் விளம்புகிறேன் கருவைக்கேளு
திருவான ஆதார மூலசூக்ஷஞ்
செப்பரித்து தத்துவத்தின் வழியின்நேர்மை
உருவான தீக்ஷையொடு பூசைமார்க்கம்
உத்தமனே அஷ்டகன்மஞ் சித்துமூலம்
குருவான கற்பமொடு மந்திரசித்து
கூர்மையென்ன யோகமொடு ஞானந்தானே. 17

தானான யோகமொடு சமாதிதீக்ஷ
சத்தியொடு சிவதீக்ஷ வாலைதீக்ஷ
தேனான பூரணமாம் மவுனதீக்ஷ
திருவான பஞ்சகண தீக்ஷயோடு
ஊனான முப்பூவாம் வழலைதீக்ஷ
உண்மையுள்ள வினோதவகை மோடியங்கம்
பூனான மையுடனே திலதவாடை
போக்கான மறைப்புடனே இன்னங்கேளே. 18

இன்னங்கேள் சொல்லுகிறேன் ஜெயநீர் போக்கு
இன்பமுள்ள திராவகத்தின் கருவின் மார்க்கஞ்
சொன்னதொரு கட்டினங்கள் உருக்கினங்கள்
சுகமான பற்பமொடு செந்தூரங்கள்
வர்ணமுள்ள களங்குடனே மெழுகுமார்க்கம்
மகத்தான தூபமொடு தீபவேதை
எண்ண வொண்ணாத் தைலமொடு லேகியங்கள்
ஏகாந்த மானதொரு லகிரிபோக்கே. 19

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

போக்கான வைப்புமுறை பாஷாணங்கள்
புகழான உபரசங்கள் காரசாரம்
வாக்கான குளிகையுடன் கெவுனசித்து
மகத்தான லோகமா ரணங்களோடு
தாக்கான சத்துருமித் துருக்கள்தானுந்
தன்மையுடன் குருமுடிக்கும் பாகந்தானுந்
தூக்கான புடபாகம் எரிப்பான்பாகந்
துடியான கைபாகங் கணக்குந்தானே. 20

கணக்கான சேர்மானஞ் சரக்குவைப்பு
கருணையுள்ள ரத்தினங்கள் வைப்புமார்க்கம்
புணக்கான சல்லியங்கள் ஒட்டியங்கள்
புலிரத்தம் ஏவல் பில்லி சூன்னியங்கள்
தனக்கான லகிரியிலே அனந்தமார்க்கந்
தன்மையுள்ள தெரிசனங்கள் கோடான கோடி
பிணக்குமுள்ள சக்கரங்கள் ஆவேசங்கள்
ஏகாந்த அஞ்சனங்கள் கோடிபாரே. 21

கோடியென்ற வெகுகோடி தொழில்களெல்லாங்
குறித்தபடி சௌமியமாய்க் காணலாகும்
நாடிமனங் கொண்டுகுறி கண்டாயானால்
நந்திபிர காசமது நயனந்தன்னில்
ஆடிநின்ற திருநடனங் காணலாகும்
அப்பனே சக்கரங்கள் தோணும் பாரு
சூடிநின்ற சக்கரத்தின் இனங்கள்தன்னை
சொல்லுகிறேன் வேதமுறை சூக்ஷந்தானே. 22

## ஜீவாத்மா பரமாத்மா தத்துவத்தின் வியாபாரம்

தானென்ற சூக்ஷமடா விந்துநாதம்
தனைஅறிந்து நாதமுடன் விந்துசேர்ந்து
கோவனன்ற குருவருளால் அங்குதித்து
கொண்டெழுந்த மடபதியை என்னசொல்வேன்
ஊனென்ற மடபதிக்கு உறுதியான
உண்மையுள்ள அக்கினியும் வாய்வுங்கூடி
தேனென்ற ஜீவாத்மா பரமாத்மாவாய்ச்
சென்றிருந்து ஆதாரம் ஆனார்பாரே. 23



பாரப்பா ஆதாரம் ஆறாதாரம்
பரிவான ஆதார மடத்துக்குள்ளே
நேரப்பா அக்கினிதான் ஜீவாத்மாவாய்
நிறைந்துநின்ற வாய்வதுதான் பரமாத்மாவாய்ப்
பேரப்பா பெருகிநின்ற கடத்தினுள்ளே
பிலமாக நின்றுதிரு விளையாட்டாடி
காரப்பா ஆகாசஞ் சாக்ஷியாக
கருணையுடன் நின்றுதடா கருவாய்க்காணே. 24

காணப்பா தத்துவத்தின் விபரஞ்சொல்வேன்
கருணையுடன் சொல்லுகிறேன் கனிவாய்க்கேளு
பேணப்பா பூதமைந்து சொல்லக்கேளு
பிரிதிவு அப்புவுடன் தேய்வுமாக
பூணப்பா வாய்வுடனே ஆகாசந்தான்
பொருந்திநின்ற பூதமடா ஐந்துமாச்சு
தோணப்பா மனக்கண்ணால் நன்றாய்ப் பார்த்துத்
துலங்கிநின்ற பூதத்தை நன்றாய்க்காரே. 25

காரப்பா அஞ்சுபஞ்ச பூதந்தன்னை
கண்குவித்து மனக்கண்ணால் கருவாய்ப் பார்த்தால்
மேரப்பா மேருகிரி காணலாகும்
மேரான சதுரகிரி விலாசந்தோணும்
ஆரப்பா உனக்கிடு சொல்லப்போறேன்
அரகரா பூதவகை அறிந்து கொண்டால்
நேரப்பா நின்றகை லாசந்தோன்றும்
நிஜமான ஞானஇந் திரியங்கேளே. 26

கேளப்பா ஞானஇந் திரியந்தன்னை
கிருபையுடன் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
சூளப்பா தோத்திரந்தான் தேகந்தேகம்
தொக்கென்று சொன்னதுதான் தேகந்தேகம்
வாளப்பா சக்ஷுவென்றால் நேத்ரமாகு
மகத்தான சிங்குவென்றால் வாய்தானாகும்
காலப்பா ஆக்கிராணம் மூக்குமூக்கு
கருணையுள்ள ஞானஇந் திரியமைந்தாம். 27

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

அஞ்சான பஞ்சஇந் திரியத்தன்னை
　　அருளான மனக்கண்ணால் நன்றாய்ப் பார்த்து
நெஞ்சார அஞ்சிநிலை பார்த்துமைந்தா
　　நிலையான குருபதியில் நின்றாயானால்
மிஞ்சாமல் வாசியது தானேதானாய்
　　மெய்ஞ்ஞான தீபமது விளங்கும்பாரு
தஞ்சமுடன் ஐந்துநிலை நன்றாய்ப் பார்த்துச்
　　சங்கையுடன் கர்மஇந் திரியங்கேளே. 28

கேளப்பா வாக்குடனே பாதம்பாணி
　　கிருபையுடன் பாயுரு உபஸ்தம் ஐந்துஞ்
சூளப்பா கர்மஇந் திரியமாகுஞ்
　　சுகமாகத் தானறிந்து சுத்தமானால்
பாளப்பா போகாது ஞானமார்க்கம்
　　பத்தியுடன் ஐந்தையும்நீ கண்டுதேர்ந்தால்
கேளப்பா ஒன்றுமில்லை வாசியேகுங்
　　குறியாக ஐம்புலனைக் கூர்ந்துபாரே. 29

பார்க்கையிலே ஐம்புலனை நன்றாய்க்கேளு
　　பதிவான சத்தமொடு பரிசம்ரூபம்
ஏர்க்கவே ரசமுடனே கெந்தம் ஐந்து
　　இன்பமுள்ள ஐம்புலனைக் அறிவதற்கு
சேர்க்கையுடன் ஐம்புலனைக் கண்டு மைந்தா
　　தேர்ந்துமன தறிவாலே தேர்ந்துகொண்டால்
மார்க்கமுள்ள சித்தரென்று யார்க்குந்தோணும்
　　மைந்தனே ஐம்புலனை வகுத்துக்காணே. 30

காணவே ஐம்புலனை வகுத்துப்பார்த்துக்
　　கருவான ஆதார மூலத்தேகி
தோணவே வாசியுட நிலையைக்கண்டு
　　சுத்தமுடன் அவ்வாசி தன்னிலேறி
பூணவே அண்டவரைத் தன்னிற்சென்று
　　புத்தியுடன் சித்தமதாய் நின்றாயானால்
ஊணவே கரணம்அந்தக் கரணம் நாலும்
　　உண்மையுடன் சொல்லுகிறேன் உகந்துகேளே. 31



கேளப்பா புலத்தியமா ரிஷியேயையா
　　கிருபையுள்ள கரணமந்தக் கரணந்தன்னை
கோளடா இல்லரத மனம்தானொன்று
　　கூர்மையுடன் நின்றிலங்கும் புத்தியொன்று
தேரடா ஆங்காரம் ஆனதொன்று
　　சிவசிவா சுத்தமென்ற சித்தமொன்று
ஆளடா கரணமென்ற கரணம்நான்கும்
　　அப்பனே அறிந்து கொண்டு வாற்றும்பாரே. 32

பாரப்பா ஆத்துமதத் துவம்தானப்பா
　　பதிவாக இருபத்து நாலும் சொன்னேன்
நேரப்பா தானிருந்து ஆத்துமாவாம்
　　நிலையறிந்து பெற்றதினால் வாசியாகும்
காரப்பா வாசிநிலை கருவைக்கண்டு
　　கருவாக ஆத்துமதத் துவத்தைப் பார்த்தால்
ஆரப்பா உனக்குநிகர் உண்டோபிள்ளாய்
　　அப்பனே வித்தியாதத் துவம்கேளே. 33

கேளப்பா வித்தியாதத் துவத்தைச்சொல்வேன்
　　கேள்யென்ன காலை என்றும் நியதிஎன்றும்
சூளப்பா கலையென்றும் வித்தை என்றுஞ்
　　சுகமான ராகம்என்றும் புருடன்என்றும்
நாளப்பா மாய்கை என்றும் ஏழுமாச்சு
　　நன்மையுடன் வித்தியதத் துவத்தைப் பார்த்து
ஆளப்பா ஆதாரத் தேகந்தன்னை
　　அறிந்து கொண்டு சிவதத்து வத்தைக்கேளே. 34

கேளடா சிவதத்துவந் தன்னைமைந்தா
　　கிருபையுள்ள புலத்தியனே நன்றாய்க் கேளு
ஆளடா சுத்தவித்தை ஈசுவரமும்மைந்தா
　　அப்பனே சதாக்கியமும் சத்திசிவம் ஐந்துஞ்
சூளடா சிவதத்துவம் என்றுபேரு
　　சுகமான தத்துவங்கள் முப்பத்தாறும்
வாளடா உடற்கருவி என்றும்பேரு
　　மைந்தனே தானறிந்து தன்னைப்பாரே. 35

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

பாரப்பா தன்னைமிகத் தானேகண்டு
பக்தியுடன் உள்கருவி மூலம்பார்த்து
நேரப்பா நின்றதினால் தத்துவத்தின் பெருமை
நீதியுடன் தோணுமடா நினைவாய்ப்பாரு
சாரப்பா மனசாரச் சார்ந்துபார்த்தால்
சார்வான தத்துவங்கள் தோணும்பாரு
ஆரப்பா அறிவார்கள் பூதமைந்தில்
அதிற்பிறந்த தத்துவந்தான் தொண்ணூற்றாரே. 36

ஆறான பூதம்ஐந்தின் விரிவைக்கேளு
அப்பனே பிரிதிவியின் கூர்தான்மைந்தா
நேரான மயிருடனே எலும்புசர்மம்
நிலையான நரம்புசதை ஐந்துமாச்சு
பேரான பிரிதிவியின் கூறைச்சொன்னேன்
பொறுமையுடன் தான்அறிந்துப் பிலமாய்நின்று
கூரான அப்புடைய கூறுபாரு
குணமான புலத்தியனே குவித்துப்பாரே. 37

பாரப்பா அப்புடைய கூறுசொல்வேன்
பதிவான நீருடனே உதிரம்அப்பா
காரப்பா சுக்கிலமும் மூளைமச்சை
கருவான ஐந்துமடா அப்பின்கூறு
தேரப்பா அப்பினுட கூறறிந்து
தெளிந்துமன தொன்றாகத் தன்னைப்பாரு
சாரப்பா தன்உணர்வாய்ப் பார்த்தால்மைந்தா
தயவான தேய்வினுட கூறுகேளே. 38

கேளப்பா தேய்வினுட கூறுகேளு
கேள்வியென்ன பசியுடனே நித்திரையுமாகும்
கூளப்பா மைதுனமும் பயமுஞ்சோம்பல்
தொகுத்துரைத்த ஐந்துமடா தேய்வின்கூறு
சூரப்பா தேய்வினுட கூறறிந்து
ஆக்கமுடன் தன்னகத்தை மனதாய்ப்பாரு
காலப்பா வலுவறிந்து பார்த்தாயானால்
கலையான வாய்வினுட கூறுதானே. 39



தானான வாய்வினுட கூறுகேளு
தன்மையுள்ள புலத்தியனே நடத்தல்ஓடல்
ஊனான இருத்தலொடு கிடத்தல்மைந்தா
உத்தமனே எழுதலொடும் ஐந்துமாச்சு
வாறான வாய்வினுட கூறறிந்து
மார்க்கமுடன் தன்னகத்தை மகிழ்ந்துபாரு
கோனான குருவருளால் பார்த்தாயானால்
குணமான ஆகாசக் கூறைக்கேளே. 40

கூறாக ஆகாசக் கூறுதன்னை
குறியுடனே சொல்லுகிறேன் குணமாய்க்கேளு
நேராகக் குரோதமொடு லோபம்மோகம்
நிசமான வாச்சரிய மதமுமைந்து
ஊரான ஆதாரந் தன்னைப்பார்த்து
உத்தமனே தானாவாய் நின்றாயானால்
தேராக வாசியது தேரும்தேரும்
சிவபூதம் ஐந்துதொழில் இருத்தலைந்து. 41

அஞ்சான ஐந்து பத்து நாடிதன்னை
அப்பனே சொல்லுகிறேன் அறிவாய்க்கேளு
துஞ்சாத இடையானபின் கழினையாகி
துலங்குகின்ற காந்தாரி யத்தியோடு
மிஞ்சான அஸ்வனியும் அலம்புருடன்
வேகமுள்ள சூதமுடன் சிங்குவகை பத்தும்
நெஞ்சார நின்றதோர் நாடிபத்தும்
நேர்மையுள்ள பிரிதிவியின் கதிதான்பாரே. 42

வளியான வாய்விnட வழிதான்மைந்தா
மார்க்கமுடன் சொல்லுகிறேன் மனதாய்க்கேளு
நெளியாத பிராணனுடன் அபானன்தானும்
நிசமான உதானனுடன் சமானன்மைந்தா
அளியாத வியானனுடன் ஐந்துமப்பா
அரகரா தேய்வுடனே வாய்வுமாச்சு
சுளியாத தேயுவாயுவைத்தான் கண்டால்
சுகமாக பூதவா யுவைத்தான் கேளே. 43

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

கேளப்பா நாகனொடு கூர்மன்மைந்தா
இரிகரனும் தேவகத்தன் தனஞ்செயனாம்ஐந்தும்
ஆரப்பா ஐம்பூத வாயுவென்பார்
ஆச்சரியந் தசவாய்வை அறிந்துகொள்ளு
காலப்பா தசவாய்வை அறிந்துகொண்டு
கருணையுடன் சிவயோகக் கருத்தில்நின்றால்
கோளப்பா ஒன்றுமில்லை எல்லாஞ்சித்தி
குறிப்புடனே ஆகாச வழிதான்கேளே 44

கேளடா ஆகாச வழிதான்மைந்தா
கிருபையுடன் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
வாளடா அர்த்தயே டணைதான்ஒன்று
வகையான புத்திரயே டணைதான்ஒன்று
சூளடா உலகயே டணைதான் ஒன்று
சுத்தமுடன் ஆகாய வழியைக்கண்டு
ஆளடா அந்தரங்கச் சுழியில்நின்று
அப்பனே வாக்காதி அறிந்துபாரே. 45

பாரப்பா வாக்காதி என்னவென்றாற்
பதிவான வசனமொடு கெமனந்தானும்
நேரப்பா விசர்க்கமொடு ஆனந்தம்ஐந்தும்
நிரமான வசனாதி என்றும்பேரு
காரப்பா வசனாதி ஐந்தும்கண்டு
கருவான ஆதார மூலம்பார்த்து
சாரப்பா பிரகிருதி வழியைப்பார்க்க
தன்மையுடன் சொல்லுகிறேன் சங்கைகேளேடு. 46

கேளப்பா ராசதமுந் தாமதமும்மைந்தா
கிருபையுள்ள சாத்துமிகம் குணங்கள்மூன்றும்
வாளப்பா முக்குணங்கள் அறிந்துகொண்டு
வரிசையுடன் விந்தினுட வழியைக்கேளு
சூளப்பா பைசந்தி மத்திமைவைகரியுஞ்
சூக்குமையும் நாலுமிது வாக்கேயாகும்
ஆளப்பா வாக்காதி நாலும்பார்த்து
அரகரா ஆதாரந் தன்னைக்காணே. 47



காணப்பா ஆதாரந் தன்னிலேதான்
கருவான உட்கருவி முப்பத்தாறும்
பூணப்பா புறக்கருவி அறுபதாச்சு
புத்தியுடன் உள்வெளியும் நன்றாய்ப்பார்த்தால்
தோணப்பா தத்துவங்கள் தொண்ணூற்றாறுந்
தோணுமடா இருதயத்தில் சூழ்ந்துபார்க்கில்
வீணப்பா வொன்றுமில்லை தத்துவமாங்குப்பை
விளங்குபதி பசுபாசம் விளையாட்டாச்சே. 48

ஆச்சப்பா வுட்கருவி முப்பத்தாறும்
அப்பனே சிவத்தினுட கூறேயாச்சு
நீச்சப்பா புறக்கருவி யறுவதுதான்
நிசமான சத்தியுட கூறேயாச்சு
பேச்சப்பா வுள்வெளியும் நன்றாய்ப்பார்த்து
பெருமையுட னாதார நிலையுங்கண்டு
காச்சப்பா கருவிகர ணாதியென்று
காடான தத்துவத்தைக் கண்டுதேரே. 49

தேரப்பா சரிதையுடன் கிரிகைரெண்டுஞ்
சிவசிவா சத்தியுட கூறேயாச்சு
காரப்பா யோகமுடன் ஞானம்ரெண்டும்
கருவான சிவத்தினுட காலேயாச்சு
நேரப்பா சிவரசம் அந்தங்கண்டு
நெறிமுறமை தவராமல் அந்தம்பார்த்து
சாரப்பா சதுரகிரி பொதிகைதன்னில்
சங்கையுடன் நின்றுதவந் தானேசெய்யே. 50

தானான தேகமதில் கூடிநின்ற
சங்கைகளைச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
ஊனான ரோமமது மூன்றரையாங்கோடி
உத்தமனே நாடியது வெழுபத்திராயிரமாங்
கோனான தேகமடா பலமோஆயிரமாங்
கொள்கியதிற் குடல்பலந்தான் நாற்பத்தைந்து
பூனான பல்லதுவும் பலந்தான்நாலு
பொருந்திநின்ற சதைபலமும் இருநூறாச்சே. 51

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

ஆச்சப்பா உப்பதுவும் பலந்தான் ஐந்து
அப்பனே மச்சையது பலந்தான் நாலு
நீச்சப்பா ஈரலது பலந்தானெட்டு
நிசமான அஸ்தியதைச் சொல்லக்கேளு
காச்சப்பா பலமும்நூற் றிருபதாச்சே
கூட்டிநின்ற சேவுடுமந்தான் நாழியாகும்
பேச்சப்பா பித்தமது படிதான் காலாம்
பலமான சுக்கிலந்தான் அரைக்காலாகும். 52

ஆச்சப்பா சர்மமது என்னவென்றால்
அப்பனே பலம்நூற்றிப் பதினாலாச்சே
தாமப்பா இப்படித்தான் கூடிநின்று
சரீரமதில் மாசலது எட்டுமாச்சு
நாமப்பா சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு
நாடிநின்ற கோபுரத்தின் வாசல்ஒன்று
ஓமப்பா அவ்வாசல் ஒன்பதுக்கு
உண்மையுள்ள ஆதாரக் கதவைப்பாரே. 53

பாரப்பா ஆதாரக் கதவைச் சாற்றி
பலபலவாய் நின்றதொரு தாளைப்பூட்டி
நேரப்பா அப்பூட்டுத் தனக்குமைந்தா
நிசமான சுழினையே கோல்தானப்பா
ஆரப்பா அறிவார்கள் சுழினைக்கோலை
அறிந்துமிகத் தான்நிறுத்துப் பார்க்கும்போது
வீரப்பா கொண்டதொரு ஆறாதாரம்
விபரமுடன் தோணுதற்கு விபரங்கேளே. 54

## மூலாதாரம்

கேளப்பா விபரமென்ன மூலாதாரங்
கிருபையுடன் கண்டுகொள்ள வகையைக் கேளு
காலப்பா தோன்றிநின்ற மூலாதாரம்
கருணையுடன் சொல்லுகிறேன் அண்டம்போலாம்
மேலப்பா அண்டமதிற் சூழ்ந்து நின்ற
விசையான இதழதுதான் நாலுமாச்சு
சூளப்பா நிறமதுதான் மாணிக்கம்போல்
சுகமாக நின்றுதடா மூலம்பாரே. 55



பாரப்பா மூலமென்ற முட்டைக்குள்ளே
பதியான அக்ஷரந்தான் ஓங்காரமாச்சே
நேரப்பா நின்றஓங் காரத்தோடே
நிசமான ரீங்காரம் உகாரங்கூட்டி
சாரப்பா தன்மனமே சாக்ஷியாக
தன்மையுடன் தானிருந்து செபிப்பாயாகில்
காரப்பா கணபதியும் வல்லபையுமைந்தா
கனிவாக உந்தனிடம் கனிவாற்காணே. 56

காணடா கனிவாகக் கண்டாயானால்
கருணையுள்ள சிவலோகம் உறுதியாச்சு
பூணடா சிவயோகம் உறுதியானால்
பொற்கமலம் உச்சியிலே தீபங்காணும்
பேணடா தீபமதை தினமும் நோக்கிப்
பிசகாமல் வாசியிலே பிலமாய்நில்லு
தோணடா அவ்வாசிப் பிலமாய் நின்றால்
சுகசீவ பிராணகலை சுத்தமாச்சே. 57

## சுவாதிஷ்டானம்

சுத்தமுடன் ஆதார மூலஞ்சொன்னேன்
சுவாதிஷ் டானத்தினுட சுகத்தைக்கேளு
பத்தமுடன் நாற்கோணம் இதழ்தான் ஆறு
பதிவான பொன்னிறம்போல் இருக்கும் மைந்தா
சுத்தமுள்ள நாற்கோணம் நடுவிலேதான்
தெளிவான நகாரமென்ற தீபமேத்தி
நித்தமுமே நகாரமுடன் சிவநீங்கிட்டு
நிலையறிந்து உருச்செபிக்க நிசத்தைக்கேளே. 58

கேளடா நிலையறிந்து வாசிகொண்டு
கீழ்மேலும் நன்றாக நின்றுபாரு
சூளடா நின்றநிலை பார்க்கும்போது
சோதியொன்று தோணுமடா பிரமசொரூபம்
ஆளடா பிரம்மநிலை ரூபங்கண்டால்
அடங்காத வாசியது அடங்கும் வீட்டில்
காளடா வாசியது அடங்கி நின்றால்
கண்ணடங்கா பூரணத்தைக் காணலாமே. 59

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## மணிபூரகம்

காணவே பிரம்மாவின் பதியைச் சொன்னேன்
கருவான மணிபூரகங் கருத்தைக் கேளு
தோணவே பிறை மூன்றாம் பிறைபோற்கீறித்
துலங்க அதில் ஈரைந்து பத்தும் போட்டு
பேணவே நிறமதுதான் பளிங்குபோலாம்
பிறைமூன்றாம் பிறை நடுவே மகாரமிட்டு
பூணவே சங்கிலி மங்கென்றேதான் செபித்துக்காரே. 60
பூரணமாய்த் தினம் நூறு செபித்துக்காரே.

காக்கவுரு செபித்தநடு புருவமதில்
கண்ணுமனக் கண்ணாலே நன்றாய்ப் பார்த்தால்
மார்க்கமுடன் லட்சுமியும் விஷ்ணுதேவர்
மகத்தான பூரணச்சந் திரன்போல் மைந்தா
யேர்க்கையுடன் இருதயத்தில் காணும்பாரு
இன்பமுள்ள தெரிசனத்தைக் கண்டாயானால்
தீர்க்கமுள்ள சிவயோக வாழ்வு பெற்று நோக்கே. 61
செல்வபதி யாயிருப்பாய் தினமும் நோக்கே.

நோக்குவது பூரணச்சந் திரனைநோக்கு
நுண்மையுடன் பூரணமாய் நின்றாயானால்
நூக்குநுனி யந்தமதில் வாசிநின்று
நலங்காமல் தீபமதில் நாடும்பாரு
வாக்குமன தொன்றாகி நின்றுபாரு
மக்களே கண்பசுவு வாழ்வுண்டாகும்
தூக்குமென்ற கொடுமைதனை அகற்றிமைந்தா 62
சுகமான இடமறிந்து சுகத்தில்நில்லே.

## அனாகதம்

நில்லடா நிலைஅறிந்து சுகத்தைக்காண
நிசமான ருத்திரனார் பதியைக் கேளு
சொல்லடா சொல்லறிந்து சுகத்தைப் பார்க்க
சுகமான முக்கோணம் நன்றாய்க்கீறி
அல்லடா முக்கோணத் ததிலேநீதான்
அப்பனே பன்னிரண்டு திரந்தான்போடு
விள்ளடா செம்புனிற மானகோட்டை
விசையான கோட்டைநடு விந்துபோடே. 63



போடப்பா விந்துநடு ஓங்காரந்தான்
பூரணமாய் சிங்கிலி யொன்று நாட்டி
நாடப்பா விந்து நடு முனைமையத்தில்
நாடிநின்று சிங்கிலியென்று சொல்லி
வீடப்பா பிலப்பதற்கு தினம் நாற்றெட்டு
விரும்பிமன தறிவதினா லுருவே செய்தால்
சூடப்பா தானேறி முனைமையத்தில்
சூரியன்போல் காந்திவெகு சோதியாமே. 64

சோதியென்ற காந்தியடா சூரியகாந்தி
துலங்குநடுச் சுழினையைந் காண்டாயானால்
ஆதியென்ற ஆதாரம் ஆறாதாரம்
அருபமய மானதொரு மேலாதாரம்
நீதியுடன் தோணுமடா வாசியாலே
நின்றிலங்கும் வாசிதனைத் தன்னுள்பார்த்து
சாதியென்ற சராசரத்தைத் தானாயெண்ணி
சதாயோக பூரணமாய் நின்று பாரே. 65

பார்க்கையிலே ருத்திரனார் கடாக்ஷத்தாலே
பாதாதி கேசமுதல் நன்றாய்ப் பாரு
சேர்க்கையுடன் பார்க்கையிலே மைந்தாமைந்தா
என்ன சொல்வேன் அக்கினிபோல் ஆகுந்தேகந்
தீர்க்கமுடன் அக்கினிபோல் தன்னுள் கண்டாற்
சிவயோக வாழ்வுவெகு திடமாய் நிற்கும்
மார்க்கமுடன் உருத்திரனார் பதியைப் பார்த்து 66
மனங்குவிந்து பூரணத்தில் மருவியேறே.

## விசுத்தி

மருவி நின்ற தலமதுதான் விசுத்திவீடு
மகத்தான அறுகோணம் நன்றாய்ப் போட்டு
திருவிருந்த அறுகோணஞ் சுத்தி நல்ல
தீர்க்கமுடன் பதினாறு இதழ்தான் போட்டு
குருவிருந்த கோட்டைவெகு கருப்பாய் நிற்குங்
குணமான அக்கோட்டை நடுவிலேதான்
உருவரிந்து விந்திட்டு ஓங்காரஞ் சுத்தி
உத்தமனே வங்கிலி யங்கென்று போடே. 67



Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

போட்டபின்பு மனதுகந்து மனக்கண்சாத்தி
பூரணமாய் வங்கிலி யங்கென்றிட்டு
நாட்டமுடன் தானிருந்து ஒரு நூறு மைந்தா
நன்மையுடன்தான் செபித்து நயனமேவி
தேட்டமுடன் குருபதியில் சென்று பாரு
சிவசிவா வாய்வேக லகிரியுண்டாம்
வாட்டமில்லா லகிரியடா வாய்வேகமாகு
மகத்தான யோகசிவ போதமாமே. 68

ஆமப்பா யோகமென்று சிவயோகந்தான்
அருளான முச்சுடரின் அந்தத்தாலே
ஓமப்பா முச்சுடரின் அந்தம்பார்த்தால்
ஒளிவிளக்காய் நின்றதொரு மூலத்தீதான்
வாமப்பா நிறைந்ததொரு மூலத்தீதான்
வளர்ந்துதடா அறுகோண வரையின் மேலே
நாமப்பா சொல்லுகிறோம் நன்றாய்ப்பாரு
நாதாந்த மயேஸ்வரத்தைக் காணலாமே. 69

## ஆக்கிலை

காணவே மயேஸ்வரத்தின் கடாக்ஷத்தாலே
கண்ணான சதாசிவத்தின் கருவைக்கேளு
தோணவே ஆக்கினையாம் விந்துவட்டம்
சொல்நிறைந்த வட்டமதில் இதழ்தான் ரெண்டு
பூணவே வட்டமதின் நிறந்தான் சொல்வேன்
புதுமைவெகு புதுமையடா ஆகாசந்தான்
பேணவே ஆகாச வட்டத்துள்ளே
பேர்பெரிய பிரணவத்தை நன்றாய் நாட்டே. 70

நாட்டமுடன் ஓங்கார நடுவிலேதான்
நன்மையுடன் அகாரமுடன் உகாரஞ்சாற்றி
தேட்டமுடன் ரீங்காரம் ஹுகாரஞ்சாற்றி
திறமாகத் தானிருந்துப் புருவமேகி
கூட்டமன்றி தானாகத் தானேநின்று
குணமாக அங்றீங் உம்மென்றேதான்
வாட்டமில்லா மனதாக தினம்நூறு மைந்தா
மார்க்கமுடன் தான்செபிக்க வரிசைகேளே. 71



வரிசையுடன் ஆதாரஞ் செபித்து மைந்தா
மார்க்கமுடன் சதாசிவத்தை மகிழ்ந்துகொண்டால்
தெரிசனமாய் நின்றதொரு ஆறாதாரஞ்
சிவசிவா அருபமய மாகத்தோணுங்
கரிசினமாய் நின்றதொரு ஆறாதாரங்
கண்ணடங்காத் தெரிசனங்கள் காணலாகும்
புரிசமுடன் சதாசிவத்தில் மனதை வைத்து
புத்தியுடன் அனுதினமும் பூசைபண்ணே. 72

பண்ணப்பா ஆதாரபூசைப் பண்ணி
பதியான முச்சுடரின் தியானங்கேளு
நண்ணப்பா புருவமதில் மனக்கண்சாற்றி
நாட்டமுடன் அங்கிலி நங்கென்றேதான்
உண்ணப்பா லலாடவிழிக் கண்ணினின்று
உத்தமனே நூற்றெட்டு உருவேசெய்தால்
கண்ணப்பா தான்குளிர மதிநாவின்று
காணுமடா பூரணச்சந் திரனைப்பாரே. 73

பாரப்பா பூரணச்சந் திரனைக்காணில்
பாதாதி கேசமுதல் பதிவாய்மைந்தா
நேரப்பா குளிர்ச்சிவெகு குளிர்ச்சியாகும்
நேமமுட னன்னேரம் நினைவாய்மைந்தா
தேரப்பா குருபதியில் திரமாய்நின்று
செகத்தோர்க்கு விபூதியை நீ கடாக்ஷித்தாக்கால்
வீரப்பா கொண்டதொரு சுரமுந்தீரும்
வினையான வல்வினையும் விட்டுப்போமே. 74

போமப்பா சகலபிணி ரோகமெல்லாம்
பூரணச்சந் திரனுடைய பிறப்பைக்கண்டால்
காமப்பால் காணற்பால் கருணை தங்கும்
கலையான வாசியது கடக்காதப்பா
சோமப்பால் சொலிக்குமடா அந்தப்பாலை
அந்தமுடன் நித்தியமுங் கொண்டாயாகில்
தாமப்பா தன்னிலையே தான்தானாகுந்
தானான ஆதார மூலம்பாரே. 75

ஆச்சப்பா சோதிவெகு காந்தியாகும்
மாகார வவ்வேளை யறிவாய்நின்று
மூச்சப்பா நிறைந்ததொருவாசியாலே
முனையான சுழிமுனையில் வாசிநாட்டி
பேச்சப்பா தானிருத்தி மவுனமாக
பெருமையுடன் சிவயோகத் திருந்தாயாகில்
போச்சப்பா அபமிருத்தி அகன்றுபோகும்
பொன்னொளிவு தேககாந்தி ஆச்சுபாரே. 76

## ரவித்தியானம்

பாரப்பா மூலமதில் மனக்கண்சாற்றி
பதியான ரவியினிட தியானங்கேளு
நேரப்பா புருவனடு தீபம்பார்த்து
நிசமான அங்கிலி வங்கென்றாக்கால்
சாரப்பா பதினாறு உருவிலேதான்
தன்னகமாய் நின்றதொரு ரவிதான்மைந்தா
மேரப்பா தான்துலங்க ரவிதான்மைந்தா
மெய்நிறைந்த காந்திவெகு தேகமாச்சே. 77

தேகமென்ற தேகமடா தேவரூபந்
திருவான ரூபமதை பூசைபண்ணி
பாகமுடன் விபூதியைநீ தியானஞ்செய்து
பாருலகில் மானிடர்க்குக் கடாட்சித்தாக்கால்
ஆகமுடன் சகலசவு பாக்கியம் பெற்று
அருள்பெருக பூரணமாய் இருந்துவாழ்வார்
ஏகமென்ற பூரணத்தின் கிருபையாலே
என்மகனே சுடரினுட தியானங்கேளே. 78

## சுடர்த்தியானம்

கேளப்பா ரவிமதியைத் தியானம்பண்ணி
கிருபையுள்ள சுடரதிலே மனக்கண்சாற்றி
யாளப்பா அங்கிலி றீங்கென்றேதான்
அருள்பெருக நூற்றெட்டு உருவேசெய்தால்
காலப்பா வலுவான ரவிமதிதலனாலே
கருணைவளர் புருவநடுச் சுடரிலேதான்
வாளப்பா மனங்குவிந்து நிற்கும்போதில்
மகத்தான சோதிவெகு சோதியாச்சே. 79



சோதிமய மானசிவ ரூக்ஷங்கண்டால்
சுகசீவப் பிராணனது அகலாதையா
ஆதியிலே முச்சுடராய் நின்றரூக்ஷம்
ஆரறியப் போரரார்கள் அறிவானந்தம்
நீதியுடன் அறிவான போதம்பெற்று
நிசமான முச்சுடரைக் கண்டாயானால்
ஓதியதோர் மந்திரகலை வாசியாலே
உண்மையென்ற மந்திரங்கள் எல்லாஞ்சித்தே 80

சித்தான முச்சுடரின் தியானஞ்சொன்னேன்
சிவாயகுரு சண்முகனார் தீர்க்கத்தாலே
பத்தான தசதீக்ஷை முத்திபெற்றுப்
பரமகுரு சண்முகனார் தியானங்கேளு
வித்தான ரூக்ஷமடா சற்றோயில்லை
வேதமுடி வானதொரு விஞ்சைமூலஞ்
சத்தான விஞ்சையடா சொல்லக்கேளு
சங்கையுடன் ஓம்கிலி சிம்மென்றோதே. 81

## சண்முகத்தியானம்

ஓதியதோர் நாழிகையில் மைந்தாகேளு
உண்மையுள்ள சண்முகனார் வடிவேல்கொண்டு
நீதியுடன் உன்னகத்தில் தானேநின்று
நினைத்தபடி நின்றுவிளை யாடும்பாரு
ஆதியுடன் ஆதார சொரூபமாகி
ஆறுமுக மானசெய லார்தான் காண்பார்
சோதியென்ற சொரூபமதில் ஆறுமுகமாகி
துலங்குதடா சுடரொளியைத் தூண்டிப்பாரே. 82

பாரப்பா சுடரொளியைக் கண்ணால்தூண்டி
பதிவான கடைக்கண்ணால் நடுக்கண்ணைப்பார்க்க
நேரப்பா நடுநிலையைக் கண்ணாற்பார்க்க
நின்ரூபஞ் சோதிமய மாகத்தோணும்
தேரப்பா மனதறிவால் விபூதிவாங்கி
திருவான பதிநோக்கித் தியானம்பண்ணி
காரப்பா உலகோர்க்கு கடாக்ஷித்தாலே
கருமவினை தீருமடா கண்ணைப்பாரே. 83

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

கண்ணைப்பார் மனக்கண்ணால் தன்னைப்பாரு
கமலமென்ற சுழினையுட காலைப்பாரு
விண்ணைப்பார் காலறிந்து உன்னைப்பாரு
வேதமய மானசிவ யோகம்பாரு
பெண்ணைப்பார்த் தலையாதே தன்னைப்பாரு
பெம்மான வாசிதிரு மூலம்பாரு
தன்னைப்பார் தன்னிலையே வாசிமூலஞ்
சதாமூல மானதே சரிதான்பாரே. 84

### வைரவத்தியானம்

பாரப்பா வைரவனார் தியானங்கேளு
பரிவான வைரவனை யார்தான்காண்பார்
நேரப்பா அவருடைய நிலையைக்கேளு
நிலையான ஆதார முடிமேலாக
காரப்பா உங்கிலி அங்கென்றோதிக்
கருத்துறவே மனதாக நின்றாயானால்
ஊரப்பா ஊர்முழுதுங் காவலான
உண்மை என்ற வைரவனைக் காணலாமே. 85

காணலாம் அவருடைய மூலங்கேளு
கனகரத்தின மானசிறு குழந்தைபோலத்
தோணலாம் புருவநடுக் கமலந்தன்னிற்
சுகமாகச் சொரூபநிலை கண்டாயானால்
பேணலாம் அவர்பதத்தைத் தியானஞ்செய்து
பெருமையுடன் மானதமாம் பூசைசெய்தால்
பூணலாஞ் சகலவரங் கைக்குள்ளாகும்
பொற்கமல வைரவனைத் தியானம்பண்ணே. 86

### குருத்தியானம்

பண்ணப்பா தியானமது குருத்தியானம்
பரமகுரு சீர்பாதந் தியானங்கேளு
உண்ணப்பா கண்ணான மூலந்தன்னில்
முத்திகொண்ட அக்கினியாஞ் சுவாலைதன்னை
நண்ணப்பா வாசியினால் நன்றாயூதி
நடுமனையைப் பிடித்தேறி நாட்டமாக
விண்ணப்பா கேசரியாம் புருவமையம்
மேன்மைபெறத் தானிறுத்தி வசிவசியென்னே. 87



எண்ணியிரு நூற்றெட்டில் மைந்தாகேளு
ஏகாந்த மானகுரு இன்பந்தன்னில்
பொன்னொளிபோல் அருவுருவங் கண்ணிற்காணும்
புத்தியுடன் அவ்வேளை புருவமேவிற்
கண்ணொளிவுந் தன்னொளிவாய் உன்னைநோக்கி
கருணையுடன் வசியென்றே கருத்திற்கொண்டு
தன்னொளிவு போலவேநீ உருவேசெய்தால்
தாயான வாசியது தனதாங்காணே. 88

காணவே சத்திசிவம் அந்தமாகுங்
கருணைவளர் அந்தமதைக் கருதக்கேளு
பேணவே சிவமென்றாற் சத்திமூலம்
பேரறிந்து வசியென்றால் வாசிமூலம்
பூணவே சத்திசிவம் வாசியாகிப்
பொருந்திநின்ற காரணத்தை யார்தான்காண்பார்
தோணவே குருமுறையாய்க் காணவேணுந்
தொடுகுறிபோல் காணுதற்கு வகையைக்கேளே. 89

வகையான வகையேது என்றுகேட்டால்
மார்க்கமுடன் சரியைவழி நடந்தாயானால்
தகையாமல் சரியைவழி நடந்தாயானாற்
சிவசிவா கிரியையுட வழியேகாணும்
புகையாமல் கிரியைவழி நன்றாய்ப் பார்த்தாற்
பாலகனே யோகவழி பரிவாய்த்தோணும்
நகையாமல் யோகவழி தானேசென்றால்
நன்மையுடன் ஞானவழி காணலாமே. 90

### சரியை, கிரியை, யோகம் ஞானம்,

காணுதற்கு சரியைவழி என்னவென்றாற்
கருணையுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
பூணுதற்கு நவ்வெழுத்தின் மேலேமைந்தா
புகழான மவ்வெழுத்தாற் சிகராந்தோணும்
பேணுதற்கு மவ்வெழுத்தின் மேலேசென்று
பிலமாக அவ்வெழுத்தின் கீழதாகத்
தோணுதற்கு சிவாலயமும் நதியுமுண்டு
சுத்தமுடன் அந்திடத்தில் கண்டுதேரே. 91

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

கண்டுமனந் தேர்ந்தந்த நதியில்மூழ்கிக்
கமலமலர் சிவாலயத்தைப் பூசைபண்ணி
நின்றனிலை காணாத மாந்தரெல்லாம்
நீள்புவியில் சிவாலயங்கள் நதிகள்தேடி
சென்றுபிகத் தானலைந்து பரதவித்து
சீவனிலையறியாமல் திகைத்துமாண்பர்
அண்டமெனும் உடலுயிரை அறியாமல்தான்
அலைவார்கள் சரியைவழி அறியார்தானே. 92

தானென்ற திருக்கோவில் நதிகள்நல்ல
சங்கையுள்ள வேதமுதல் சாஸ்திரங்கள்
ஊனென்ற மனுப்பிறந்து செய்தமாய்கை
உருதியுள்ள அம்மாய்கை யறிந்துதள்ள
வானென்ற நாதவிந்து செயலறிந்து
மார்க்கமுள்ள மெஞ்ஞானந் தலைவரெல்லாங்
கோனென்ற கேசரியைப் பூசைபண்ணிக்
குறியறியான சரியைவழிக் கூர்ந்தோர்தானே. 93

தானென்ற பூரகத்தின் கீழதாகச்
சபையான சிவாலயங்கள் நதிகளுண்டு
கோனென்ற அனாகதமாம் மயிர்ப்பாலத்தப்பால்
கொள்கின்ற சிவாலயங்கள் நதிகளுண்டு
வானென்ற வாசிமலர் தனையெடுத்து
மகத்தான சிவாலயத்தைப் பூசைபண்ணி
தேனென்ற உடலுயிரை அறியாமற்றான்
திகைத்தபடி மாய்கையிலே திரிவார்பாரே. 94

பாரப்பா சரியைவழி முறைமைசொன்னேன்
பதிவான கிரியைவழி பகரக்கேளு
நேரப்பா முக்கோணந் தன்னிலேதான்
நிறைந்தவிதழ் பனிரெண்டின் மேலதாகச்
சேரப்பா முக்கோணந் தன்னிலேதாகச்
சிவாலயத்திற் சிவனுமையுந் தீபம்போலே
காரப்பா கருவிழி மலர்க்கண்கொண்டு
கருணையுள்ள வாசிமலர் கருவாய்ச்சாற்றே. 95



சாற்றிநீ தொழுதங்கே நின்றாயானாற்
சங்கையுள்ள பாவமெல்லாந் தானேநீரும்
போற்றியே ஆதாரப் புதுமைகண்டு
பொருந்திநின்ற வாசியுட நிரந்தைப்பெற்று
நேத்திரத்தின் சின்மயத்தைக் கண்டுபோற்றி
நினைவறியா மானிடர்கள் நேசந்தப்பி
ஆற்றுமத்தின் நிலைதனையே காணாமற்றான்
அலைவார்கள் கிரியைவழி அறியார்பாரே. 96

பாரப்பா துரியமதின் கீழதாகப்
பத்திநின்ற சுடரொளியாம் மூலத்துள்ளே
காரப்பா கணபதியைத் தொழுதுபோற்றிக்
கருணையுடன் வாசிமலர் சாத்திமைந்தா
நேரப்பா அவ்வாசி கொண்டுமேலே
நீயறிந்து பூரணமாய் நின்றுக்கொண்டு
சாரப்பா சார்புனிலை அறியாரெல்லாம்
சங்கையுடன் அதில்மூழ்கித் தயங்குவாரே. 97

தயங்குவார் நதிமூழ்கி நீர்தெளித்து
தன்மையுடன் நீறணிந்து ஸ்நானம்பண்ணி
மயங்குவார் இருவிழியு மூடிக்கொண்டு
மணியெடுத்துத் தாலாட்டி மதங்கள்பேசி
தியங்குவார் அக்கிரமம் பிடித்தேஅந்தச்
சிவனிலை அறியாதத் திருடர்தானும்
தயங்குவிந்து வாதாரம் பாரமற்றான் 98
நாடுகளிற் தான்திரிவார் நயந்துதள்ளே.

தள்ளடா தனையறியா மூடர்தன்னை
தள்ளிமனை யேறிமனஞ் சாந்தமாக
அள்ளடா எட்டெழுத்துஞ் சிவமதாகும்
உறுதியுள்ள இரண்டெழுத்துஞ் சத்தியாகும்
நில்லடா எட்டிரண்டும் ஒன்றாய்நின்ற
நிலையான சிவாலயங்கள் நதிகள்தன்னை
அல்லடா அந்தனிலை காணாரெல்லாம் 99
அலைவார்கள் கிரியைவழி அறியார்தானே.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

தானென்ற கிரியைவழி சொன்னேன்மைந்தா
தன்மையுடன் யோகவழி சாற்றக்கேளு
கானென்ற இருகதிருஞ் சுழியிலேற்றி
குறியான நவக்கிரகந் தன்னைக்கண்டு
வானென்ற அனுக்கிரகத் துள்ளேசென்று
மகத்தான சிதம்பரத்துக் கப்பால்நின்று
தேனென்ற கமலமலர்ப் பொய்கைதன்னில்
திருவான பொய்கையில் நீராடிக்காணே. 100

காணடா நீராடி சிவனைநீயுங்
கண்டுமன துருதியின லம்பரத்தில்
கோணடா பெருவாசற் சென்றுபுக்கிக்
குணமான சுழிமுனையில் பத்திக்கொண்டு
ஊணடா வாசியினால் ஆறாதாரம்
ஊடுருவ நிராதாரம் அண்டம்மேவி
பேணடா அந்தனிலை தன்னில்நின்று
பிலமான ரவிமதியைத் தன்னுட்காணே. 101

காணப்பா சந்திரகலை பதினாறாகும்
கருவான சூரியகலை பனிரெண்டாகும்
பேணவே இருகதிரும் ஒன்றாய்நின்ற
பிலமான சூரியகலைப் பன்னிரண்டில்
தோணப்பா உடலுக்குள் நின்றமிச்சஞ்
சொந்தமுடன் போனதெங்கே இருந்ததெங்கே
பூணப்பா இருந்தமிச்சம் நாலுந்தானும்
பொருந்திநின்ற பூரணமாய்க் கண்டுபாரே. 102

கண்டுபார் பூரணமே யென்றுபோற்றி
கருணைவளர் கலைநாலுங் காணாமற்றான்
தொண்டரெனப் பசியடக்கி விரதங்காத்துச்
சுழன்றுநின்ற வாசிதனை அடக்கிமைந்தா
நின்றனிலை காணாமல் நதிகள்தேடி
தேடினதால் மலைகளெல்லாஞ் சுற்றிப்பார்த்து
ஒன்றுமிடம் அறியாமல் யோகஞ்செய்து
உடலுயிரைக் காணாமல் அலைவார்பாரே. 103



பாரப்பா யோகவழி நன்றாய்ச்சொன்னேன்
பதிவான ஞானவழி பகரக்கேளு
காரப்பா ஆதார மூலந்தன்னிற்
கனிவான அக்கினிதன் ஆழிதன்னை
சேரப்பா முக்கோணச் சுடரில்நின்று
திருவாசி யானதொரு செங்கண்மேவி
சாரப்பா அந்தமனைச் சொந்தமென்று
சங்கையுடன் தானிருந்து தன்னைக்காணே. 104

காணப்பா மேல்வெளியைக் கண்டுகூடி
கருணையுடன் அவ்வெளியைக் கண்டுகூடி
பூணப்பா நிராதாரச் சித்தமாகிப்
பூரணமாய் நின்றபரி பூரணமேயாகி
தோணப்பா சிவன்அயன்மால் பூசைசெய்து
துடங்கிநின்ற தீவினைகள் ஒன்றுமற்று
பேணப்பா ருசியற்று ஆசையற்று
பேரண்ட சோதியுட சோதிதானே. 105

சோதி என்ற ஐந்தெழுத்துந் தான்தானாகித்
துலங்குகின்ற சதானந்தம் தான்தானாகி
ஆதியென்ற மூன்றெழுத்தும் தான் தானாகி
அடங்கியொன்றாய் நின்றபொருள் தான் தானாகிச்
சாதியென்ற சமரசமும் தான்தானாகிச்
சதரகோடி மந்திரமுந் தான்தானாகி
வேதியென்ற கெவுனமுதல் அஷ்டசித்தும்
பேசாத மவுனமதும் தான்தானாமே. 106

ஆமப்பா வாதியந்தப் பொருள்தானென்றும்
அடங்கினின்ற பஞ்சகர்த்தாள் அதுதானென்றும்,
தாமப்பா சத்திசிவம் தான்தானென்றும்
தண்மையுள்ள பஞ்சகர்த்தாள் தான்தானென்று
ஓமப்பா யேழுவகை யுலகமெல்லாம்
உறுதிகொண்டு தானாகத் தான்தானென்று
சோமப்பா நான்தானே அவன்தானென்றுஞ் 107
சோதி மயமாயிருப்பார் ஞானிதானே.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

தானென்ற சரியைமுதல் ஞானஞ்சொன்னேன்
சமரசமாய்க் கண்டறிந்து தன்னைப்பாரு
ஞூனென்ற உடலுயிர்க் கண்டாயானால்
உண்மையென்ன சரியைமுதல் ஞானந்தோற்றுங்
கோனென்ற குருவருளால் மைந்தா நீயுங்
குறிப்பறிந்து ஞானநிலை கூர்ந்துப் பார்க்க
வாவென்ற சரியை முதல் ஞானமட்டும்
மார்க்கமுட நன்றாகச் சூக்ஷங்கேளே. 108

கேளப்பா அயன்மாலின் திரையறுத்து
கிருபையுள்ள ருத்திரன்தன் திரையை நீக்கி
ஆளப்பா மயேசுரன்றன் திரையைத் தள்ளி
அதன்மேலே சதாசிவன்தன் திரையைக்கட்டு
ஞுளப்பா ஐம்புலனைச் சுட்டுத்தள்ளிச்
சுகசிவப் பிராணமயத் தோடிருந்து
காலப்பா செவிவிழியுங் கடந்தப்பாலே
கருணையுடன் தானிருப்பார் ஞானிதானே. 109

தானென்ற முப்பாழில் மும்மலமும் நீக்கித்
தற்பரத்துக் கப்பால்மயிர்ப் பாலபீதில்
வானென்ற நெருப்பாறுக்கு அப்பாற்சென்று
மகத்தான பரவெளியில் மனதொடுங்கி
கோனென்ற வெளியொளியில் தானேதானாய்க்
குவித்திருந்து சிவயோக ஞானந்தானாய்
ஊனென்ற வாதியந்தந் தானேதானாய்
உகந்திருப்பார் சிவஞான முணர்ந்தோர்காணே. 110

## ஆதியந்த விளக்கம்

காணவே சிவஞானம் உணர்ந்தோர்தானும்
கருணையுள்ள மாதவத்தோர்ப் பெருமைதானும்
பேணவே தூலமதைச் சூக்ஷமாக்கிப்
பிலமான சூக்ஷமதுக் காரணமாய் நின்று
தோணவே ஆதிஅந்தம் ஒன்றாய் நின்று
துலங்குகின்ற சுடரொளியில் சோதியாகிப்
பேணவே பூமியில்வந்து அவதரிப்பார்
பிறந்தாலுஞ் சிவயோகி யாவார்பாரே. 111



பாராளு மெக்கியமா முனியேயையா
பதிவான ரிஷிமுனிவர் சித்தரெல்லாம்
நேராக நின்றுதவம் பெற்றபேரை
நீள்புவியில் பிறந்திடுவார் என்று வாக்கியம்
பேராகச் சொல்லிமனக் கசடுநீக்கிப்
பிறவாத நெறிகாட்டி அமிர்தம் ஈந்து
மாறாத அடிமைபடைத்து ஆளுமென்று
மார்க்கமுடன் அவர்பதத்தில் வணங்கினேனே. 112

வணங்கிமிக நிற்கையிலே வேதியோனும்
மகத்தான ரகஸ்யமடா ஞானமார்க்கம்
இணங்கியதோர் அந்தரங்க மானசூக்ஷம்
ஏகாந்த சூக்ஷமென்ற கதையைக் கேளு
குணங்குலிய ஆதியந்தக் குறியை நன்றாய்க்
கூர்மையுடன் சொல்லுகிறோங் குணமாய்க்கேளே.
(இரண்டு வரிகள் இல்லை) 113

கேளப்பா நான்முகன்மால் இந்திராதிதேவர்
கெடியான வேதமுதல் சமயத்தோரும்
தேரப்பா தேடிஅறி யாதவஸ்து
தெளிவான வெளியதுதான் பரமதாகும்
கேளப்பா பரமான வஸ்துதன்னைக்
கிருபையுடன் அறிவதுவே ஆதியந்தம்
கேளப்பா ஆதியந்த வஸ்து மனுபடைத்த
கெதியைமிக அறிவதுவே விளக்கந்தானே. 114

தானென்ற ஆதியந்த விளக்கந்தன்னைச்
சங்கையுடன் சொல்லுகிறேன் தயவாய்க் கேளு
வானென்ற உலகமதில் மைந்தாமைந்தா
மகத்தான எழுவகையின் தோற்றந்தானும்
கோனென்ற ஜகமதிலே பிறக்குமுன்னே
குருவான பரமிருந்த குறியைமைந்தா
ஊனென்ற திருமுடியும் அடியுந்தன்னை
உத்தமனே சொல்லுகிறேன் உறுதி கேளே. 115

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

புலத்தியனே நன்றாய்க் கேளு
கேளப்பா புலத்தியனே நன்றாய்க் கேளு
இருபையுடன் உலகமது ஜனிக்கு முன்னே
காலப்பா பரமிருந்த கருணை தன்னைக்
காரணமாய்க் குருவருளால் கருதக்கேளு
ஆளப்பா குருபதந்தான் விஸ்வரூபம்
அவருடைய வடிவுஒளி அடிபாதாளம்
வாளப்பா முடியதுதான் அண்டத்துச்சி
மகத்தான பரசொருப வடிவுகாணே. 116

காணவே உச்சிமுடி தன்னை மைந்தா
கருவான பிரமனுமே தேடித்தேடி
தோணவே காணாமல் வந்தாரப்பா
சுகமான மாலவரும் ஏனமாகிப்
பூணவே பூமிபா தாளஞ்சென்று
புத்தியுடன் வைத்தவடிக் காணார்தானே
பேணவே மாலயனுந் தேடிந்தேடிப்
பெருகினின்ற வடிமுடியுங் காணார்பாரே. 117

## உலகம் படைத்த வரலாறு

பாரப்பா அடிமுடியுந் தேடிப்போன
பதிவான மாலயனுங் காணாரென்று
நேரப்பா வேதமுரைத் திட்ட செய்தி
நீள்புவியில் யாவர்களும் உரைத் திட்டசெய்தி
யாரப்பா அறிவார்கள் பரசொரூபம்
அந்தரங்க மானசிவ ரூபாரூபம்
காரப்பா குருவருளால் தெரிந்தமட்டுங்
கருணையுடன் சொல்லுகிறே னென்றுதானே. 118

என்றுமுள்ளார் அடிமுடியே ஆதிஅந்தம்
ஏகமவர் வடிவுவெளி யடிபாதாளம்
மன்றுகதிர் சந்திரனும் இல்லாக்காலம்
அதிரும்இடி மின்மேகம் இல்லாக்காலம்
குன்றுசெடி ஆண் பெண்ணும் இல்லாக்காலங்
கூறுபஞ்ச பூதநெறி இல்லாக்காலம்
ஒன்றெனவே நிறைந்தபரம் நின்றவாறும்
ஒருவரறி யாதசெயல் உண்மைகாணே. 119



காணவே வேதநெறி இல்லாக் காலங்
கருவான சாஸ்திரம் ஆறு இல்லாக்காலம்
பூணவே உபதேசம் இல்லாக்காலம்
புண்ணிய பாவங்கள் இரண்டும் இல்லாக்காலம்
பேணவே குலநெறிகள் இல்லாக்காலம்
பெருகிநின்ற மந்திரங்கள் இல்லாக்காலம்
தோணவே சொன்னதெல்லாம் உண்டாய் நின்ற
சூக்ஷமதைச் சொல்லுகிறேன் சுகமாய்க்கேளே. 120

கேளப்பா பராபரமாய் நின்றசோதிக்
கிருபையுடன் சிவன்படைக்க நினைந்தபோது
மாளப்பா வல்லபரந் தன்னிலேதான்
வளவான சிவமதுதான் உண்டாச்சப்பா
மேலப்பா சிவமதிலே சத்தியுண்டாய்
விளங்கினின்ற சத்தியிலே மைந்தாகேளு
சூளப்பா சதாசிவந்தான் துலங்கினின்ற
சொற்பெரிய சதாசிவத்தின் மயேசுரந்தானே. 121

தானான மயேஸ்வரத்தில் உருத்திரன்றான்
சங்கையுள்ள ருத்திரனிற் திருமால் தோன்றி
கோனான திருமாலில் அயனார் தோன்றிக்
குவிந்தெழுந்த எழுவருந்தான் கூர்மையாக
வானான பராபரத்தை அறியமாட்டார்
மகத்தான பரந்தானே பராபரமாய் நிற்குந்
தேனான பரமசிவம் அதிகாரத்தைத்
தீர்க்கமுட னனுக்கிரகஞ் செய்தார்பாரே. 122

பாரப்பா அனுக்கிரகம் செய்துநல்ல
பரமான பராரபந்தான் எங்குந்தானாய்
நேரப்பா நின்றபரஞ் சோதியாகி
நிறைந்ததொரு சோதியாய் நின்ற போது
சாரப்பாமுன் உதித்த எழுவர்தானும்
சங்கையுடன் அவர்கள் செய்யும் முறமைதன்னை
யாரப்பா அறிவார்கள் புலத்தியா கேள்
ஆதிதொடுத்து அந்தம்வரை அறிந்துகாணே. 123

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

காணவே பரமசிவன் வானுண்டாக்கக்
கருணையுள்ள திருமாலைக் கண்ணால்மேவி
பூணவே சதாசிவத்தைப் பார்க்கும்போது
புத்தியுடன் பேரண்டம் படைத்து நின்றார்
ஊணவே மயேசுரனைப் பார்க்கவேதான்
உருமியிடி வாய்வுதனைப் படைத்து நின்றார்
தோணவே ருத்திரனைக் கண்ணால் பார்க்கத்
துலங்குமின்னல் அக்கினியும் படைத்தார்பாரே. 124

பாரான திருமாலைப் பார்க்கும்போது
பதிவான அகண்டமேகம் படைத்து நின்றார்
ஆரான பிரம்மனையும் நோக்கும்போது
அளவற்ற பூமிதனைப் படைத்து நின்றார்
நேரான சத்திதனைக் கண்ணால்மேவி
நிஜமான சூரியனைப் படைத்து நின்றார்
பேரான சிவமதுவும் பதியாய் நின்ற
பெருமையுடன் எழுவரதி காரங்காணே. 125

காணவே அண்டரவி யதுதான்மைந்தா
காசினியில் அன்புடையோர் அனேகஞ்சொல்வார்
தோணவே கண்டபடி அண்டந்தன்னில்
தொகுத்துரைக்க மாட்டார்கள் கணங்கச்சாதி
பேணவே அண்டமதில் மனுவுண்டாக்கும்
பெருமைதனைக் குருவருளால் பேசுவேன்கேள்
பூணவே மேலேழு லோகந்தன்னை
புத்தியுடன் விதம்விதமாய்ப் படைத்தார்கேளே 126

கேளப்பா லோகமதைப் படைத்தபின்பு
கிருபையுடன் பரமசிவன் மனுவுண்டாக்க
கேளப்பா சத்திதனை வரவழைத்துக்
கெணிதமுடன மனுப்படைக்கக் கிருபை செய்தார்
கேளப்பா பராபரையாள் கிருபை பெற்றுக்
கெணிதமுடன் சதாசிவத்துக் குபதேசித்தாள்
கேளப்பா சதாசிவனும் கிருபைபெற்றுக்
கெதியுடைய மயேஸ்பரருக்கு ஈந்தார்பாரே. 127



பாரான மயேசுரந்தான் ருத்திரருக்கீந்தார்
பதிவான ருத்திரனும் மாலுக்கீந்தார்
நேரான மாலதுவும் அயனுக்கீந்தார்
நிசமான அயனாரும் நிலையைப் பெற்று
பேரான கருணையினால் தனுப்படைக்கப்
பெருமையுடன் ஆதியந்தம் நடுவில் நின்று
மாராத காலறிந்து மவுனங்கொண்டு
மனுப்படைக்க நினைத்துநின்றார் அயனார்
தானே. 128

அயன்முதற்கொண்டு ஐவருடல் உயிருஞ்சத்தி
ஆதியந்த சிவனாரும் உயிர்க்குயிராய்நின்று
தயவுபெற வெடுத்துவுயிர் ஆண் பெண் கோடிச்
சங்கையில்லா மூப்பிளமை சாக்காடன்றி
ஜயம்பெறவே வொருகோடி காலம் வாழ்ந்து
தீர்க்கமுடன் இருக்கையிலே மைந்தாகேளு
நயம்பெறவே சிவனுமையை நோக்கி மைந்தா
நமைவணங்க அனுக்கிரகஞ் செய் என்றாரே. 129

செய்யென்ற சொன்னமொழி உமையுங்கேட்டுச்
சிந்தைமன தொன்றாகச் சிவனை நோக்கி
மெய்யென்ற வித்துவதைத் தானுண்டாக்கி
மேதினியில் உயிர்பயிர்கள் மேன்மையாக
மையென்ற திருமால்தான் மேகந்தன்னை
மார்க்கமுடன் நினைக்கையிலே மைந்தாகேளு
பையென்ற முகிலதனால் அமுர்தமுண்டாய்ப்
பார்தனிலே சகலவித்துப் பதிவதாச்சே. 130

ஆச்சப்பா சென்னல்பதி னெட்டுவித்து
அப்போதே உண்டாச்சு அதின் மேல் மைந்தா
நீச்சப்பா அன்னம் அறு சுவையைக் கண்டு
நிசமான மனுநீதி நேர்மையாக
பேச்சப்பா சகலசித்துந் தானுண்டாச்சுப்
பெருகுகின்ற ஆசைவெகு நேசமாச்சு
மூச்சப்பா வாசியது முன்பின்னாச்சு
முழங்கினி ற ஜகமதுவுங் கலக்கமாச்சே. 131

[illegible]

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

கலங்கினின்ற லோகமதுக் குறுதியாகக்
கருணையுள்ள விஷ்ணுமுனிக் கருத்தை வைத்து
இலங்கினின்ற யெட்டிரண்டும் ஒன்றாய்க்கட்டி
யேகமென்ற வைந்தெழுத்தால் வேதமாக்கித்
துலங்கினின்ற மனுவையொரு நான்கு ஜாதிச்
சுத்தமுடன் தான்வகுத்துச் சுகமாய் மைந்தா
விளங்கினின்ற க்ஷத்திரிய வங்கிஷத்தில்
விபரமுள்ள நாகமுனி விபரங்கேளே. 132

கேளடா நாகமுனி உலகுக்வகயா
கிருபையுடன் பாஷைபதி னெட்டுஞ் சொன்னார்
வாளடா ராஜமுனி தர்க்க சாஸ்திரம்
மகத்தான வேதாந்த சிப்பிசாஸ்திரங்
காலடா தானறிய மதன்சாஸ்திரங்
கலந்தமனு மோகமதால் நன்மைதுன்மை
பாளடா அறுசுவையும் அமிர்தங்காட்டி
வங்கமுடன் அன்னமதாற் சார்ந்தார்தானே. 133

தானென்ற அன்னமதால் நித்திரையுண்டாய்ச்
சங்கையுடன் அனுபோகமூப் பிளமையுண்டாய்
வானென்ற வேகமுடன் ஆசையுண்டாய்
வஞ்சகமும் பிரப்பிறப்புத் தானும் உண்டாய்
தேனென்ற பலகோவில் நதிகளுண்டாய்ச்
செகராஜ மகுடபதி வர்க்கமுண்டாய்க்
கோனென்ற வொப்பனைகள் நன்றாய்ச் செய்து
குறிப்புடனே நாள்முகூர்த்தஞ் செய்தார்
பாரே. 134

பாரான மறையோர்கள் வேள்வி செய்யப்
பதிவான விஷ்ணுமுனி வந்து தோன்றிச்
சீராக வரங்கேளு மென்று சொன்னார்
ஜெகத்திலறு சுருதிமறை யாகவேதான்
நேராக நாள் முகூர்த்தம் நன்றாய்ச் சொல்ல
நீதியுடன் எந்தன்சொல் மேலதாகப்
பேராக அந்தரத்தில் ஆருங்காணாப்
பெருமையுள்ள சோதிதனைப் பேசுங்காணே. 135



காணவே விஷ்ணுமுனி பிரம்மனைந்தான்
கருதலையன் வந்துதித்தங் கேது சொல்வார்
பூணவே யசுபதியோ டிருபந்தேழும்
பொருந்துநலக் கிரகமது தானுண்டாக்கத்
தோணவே விளம்பினபின் மாதுதானுஞ்
சொரூபமுள்ள சதாசிவ மயேசுரன்தானும்
பேணவே ருத்திரனு மாலுந்தானும்
பெருமையுடன் பரணினைக்க வந்தார்தானே. 136

தானென்ற மாதுமைக்கிப் பிரமன் சொல்லச்
சந்திரனுஞ் சூரியனுந் தானேயானாள்
பானென்ற சதாசிவந்தான் ராஜாவானார்
மகத்தான மயேசுரனுஞ் சனியுமானார்
ஊனென்ற ருத்திரனுஞ்சங் கரனுமானார்
உண்மையுள்ள மாலதுவும் புதனுமானார்
மாலென்ற அயன் சுக்கிர வடிவுமானார்
மகத்தான ராகுவுடனே கேதுதானே. 137

காணவே விஷ்ணுவைத்தான் உமையும் பார்க்கக்
கருவான ராகுடனே கேதுமானார்
தோணவே சோதிரிஷீ நாலுமுண்டாந்
துலங்குகின்ற அமாவாசை திதி நாள்கரணம்
பேணவே நவசித்தாற் கிரகமாகி
பேருலகில் நிறைந்தபின்பு பிழைப்பதற்குப்
பூணவே நக்ஷத்திர ராசியோகம்
பொன்னுலகுண் டானதின்பின் னுண்டாம்பாரே 138

பாரான பார்தனிலே மனுவுண்டாக்கிப்
பதிவாக வந்தபின்பு அனேக சாஸ்திரம்
நேரான சாஸ்திரங்கள் சூஸ்திரங்கள்
நேர்மையுள்ள ரிஷ்முனிவர் சித்தரெல்லாம
மேரான கிரிதனிலே தபசுபண்ணி
வெகுகோடி காலம் வரை யோகஞ் செய்து
பேரான வெளியோடே வெளியாய்ச் சேர்ந்தார்
பலமான காலயுகம் பேசக்கேளே. 139

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

### யுகம் பதினெட்டுமறிய

கேளடா புலத்தியனே மைந்தா நீயும்
    கெனிதமுள்ள யுகமதுதான் பதினெட்டப்பா
ஆளடா வரியினுகம் ஈரேழுகோடி
    அற்புதனார் யுகமதுதான் ஈரைந்துகோடி
வாளடா தன்மயுகம் ஈராறு கோடி
    மகத்தான ராசியுகம் ஈரெட்டுகோடி
காலடா யுகமெல்லாஞ் சொல்லிவாரேன்
    கனமான விராசன் நாலைந்துதானே. 140

தானென்ற விண்ணதனில் ஈரெட்டு கோடி
    தருவான வாய்தனக்கு யுகம் ஏழுகோடி
மானென்ற மைனயுகம் இரு மூன்றுகோடி
    மகத்தான மணிகள்யுகம் இரு மூன்றுகோடி
பானென்ற பணியிரதம் நான்குகோடி
    பதிவான விஸ்வாசன்யுகம் மூன்றுகோடி
வானென்ற வாய்தன்யுகம் ஒருகோடி யாகும்
    மார்க்கமுடன் திரேதாயுகந் தன்னைப்பாரே. 141

பாரடா திரேதாயுகம் அதனைக் கேளு
    பதினேழு லக்ஷத்தொன் பதினாயிரமாம்
மேரடா கிரேதாயுகம் அதனைக்கேளு
    விருபது லக்ஷத்தொன் பதினாயிரமாம்
தேரடா துவாபரயுகம் அதனைக் கேளு
    தீர்க்கமுடன் ஒன்பதுலக்ஷத்து ஒன்பதினாயிரமாம்
காரடா கலியுகம் வெகு கடினமைந்தா
    கண்டுபார் நாலுலக்ஷத்து முப்பதினாயிரமாம். 142

ஆமப்பா இந்தயுகம் பதினெட்டு மைந்தா
    அப்பனே கூடியொரு சதுர்யுகமாகுந்
தாமப்பா சதுர்யுகம் பதினெட்டுச் சென்றால்
    தயவான இந்திரனுக்கு ஒரு நாளாகும்
ஓமப்பா அந்தநாள் ஆறைந்து கூடி
    உத்தமனே சொல்லுகிறேன் ஒருமாதமாகும்
போமப்பா அம்மாதம் பனிரெண்டு கூடி
    புத்தியுடன் வருடமெனப் புகழ்ந்துகாணே. 143



காணப்பா அவ்வருஷம் அறுபதுதான் கூடிக்
    கருவான ஆண்டுயுகம் என்பார்மேலோர்
பூணப்பா ஆண்டுயுகம் பதினெட்டு சென்றால்
    பொங்குகடல் பிரளயமாய்க் கண்டுபாரு
வேளப்பா பிரளயமும் நூறாயிரமுமானால்
    பெரிரிதான நான்பெருக்கம் பேணிப்பாரே
தோணப்பா வப்பெருக்கு யீரெட்டு சென்றால்
    சுகமான யிந்திரர்க்குப் பூரணமாம்பாரே. 144

பாரடா சுகமாக வனந்தநாள் மைந்தா
    பதிவாக ஏழாயிரங் கோடிமீண்டால்
நேரடா வகோரமுனிக் கிருவருமையா
    நிசமாக அந்தநாள் எண்கோடி சென்றால்
சாரடா நாதமுனி பூரணமுமாவார்
    சங்கையுடன் அந்தநாள் கோடிசென்றால்
பேரடா விஷ்ணுமுனி பரமபதமாவார்
    பிலமான அந்தநாள் பதிங்கோடிதானே. 145

காணவே பதிங்கோடி செல்லும்போது
    காசிமா முனியவருங் கயிலாசமாவார்
பூணவே அந்தநாள் எண்கோடி மீண்டால்
    புகழான மாமுனிக்கி இடரேயாகுந்
தோணவே அந்தநாள் நவகோடி மீண்டால்
    சுகமான ஈஸ்வரமுனியும் பிரம்மாவாவார்
பேணவே அந்தநாள் ஏழு கோடி சென்றால்
    பிலமான எண்கோணமுனி தனக்குக்கேனே. 146

கேளடா எண்கோண முனியுமைந்தா
    கிருபையுடன் நிமைதிறந் திடும்போதையா
சூளடா அவர்தானும் பூரணமே யாவார்
    சுகமாக அந்தநாள் நவகோடி சென்றால்
ஆளடா அக்கினிமா முனிதான்மைந்தா
    அரகரா பரமபத பாகஞ்சேர்வார்
பாளடா அந்தநாள் எண் கோடிமீண்டா
    பார்த்துமா முனியவரும் பரமபதமாமே. 147

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

ஆமப்பா அந்தநாள் பதின்கோடி மீண்டால்
அருமையுள்ள ரோமரிஷிக்கு ஒருரோமம் உதிரும்
தாமடா ரோமமது மூன்றரையாங்கோடி
சரியாக உதிரும்போ அவர்மரணமாவார்
நாமடா வந்தநாள் மூவிரட்டியானால்
நலமான பிரமமுனியவர்க்குப் பூசைவேளை
ஓமடா சிவபூசை யெழுநூறு மீண்டால்
உள்ளமுனி ரிஷிகளுக்கு ஒருநாளுமாமே. 148

அந்தநாள் ஏழாயிரம் கோடிமீண்டால்
ஆனதொரு ரிஷிமுனிவர் பிறந்திடுவாரப்பா
இந்தநாள் பதினாயிரங் கோடிமீண்டால்
இதமான மால்தனக்கு ஒரு நாளாகும்
பந்தமுடன் கொண்டநாள் முப்பத்தொருமாதம்
பதிவான மாதமீராறு வொரு வருஷம்
சொந்தமுடன் வருஷமது அறுபதுமேயானால்
சுகமாகக் கண்டு கொள்ள ஆண்டுகளுமாமே. 149

ஆண்டுகளும் ஈரொன்ப தாகில்மைந்தா
ஆனசலப் பிரளயம் எழுநூறு கண்டாய்
காண்டசலப் பிரளயமும் எழுநூறு மீண்டால்
கலங்குமகா பிரளயமாம் நூறுதான் மீண்டால்
தோண்டுமொரு பூதசங்கார மெனலாகுஞ்
சுகபூத சங்கார மொருகோடிமீண்டால்
தாண்டிவரும் போதுவந்த சங்காரந்தான்
தருவான சங்காரமொரு மூன்றுமாமே. 150

ஆமென்ற சங்கார மாகிவருங்காலமதிய
திருமா லயனும் ஆலிலை மேற்பள்ளி
ஓமென்ற சயனமது ஒரு கோடி மீண்டால்
உத்தமனே நாகமதில் நித்திரையுமாவார்
தானென்ற நித்திரை முத்திரை மேலாகி
தன்னொளிவு விண்ணொளிவு சரியாய்ப் பார்த்து
நாமென்றும் இவரென்றும் நினையாமலந்த
நாதாந்த பூரணத்தில் பூரணமானாரே. 151



பூரணமாய் நின்றதொரு ரிஷிமுனிவர்தேவர்
பொருந்திநின்று வாதாரம் தன்றாய்ப் பார்த்து
காரணமாய்க் கருணையொளி பார்வையாலே
கணயோக மானசிவ னிஷ்டைகூடி
பாரணிந்த பூமிதனில் அனந்தங்கோடி
பத்தியுடன் தானிருந்து பரத்திற் செல்ல
நேரணிந்து நிலையறிந்து நிலையில் நின்று
நிசமான பூரணங்கண் டேறினாரே. 152

ஏறியே பூரணத்தில் செல்லும்போது
என்ன சொல்வேன் பிரிதிவியைப் பிரம்மனுக்குத்
தேரியே வாய்வுதனை மயேஸ்வரற்குத் தத்தஞ்
சிவசிவா ஆகாசந் தன்னைமைந்தா
வாரியே அண்டமெல்லாந் தத்தஞ்செய்து
மைந்தனே சகலமுமே சொன்னேன்பாரு
கூரியே சதாசிவத்திற்குத் தத்தம் பண்ணி
கொண்டபின்பு அறிவுபூரணத்தைக்கேளே. 153

கேளப்பா ரவிதனையே சூரியர்க்குத்தத்தங்
கிருபையுள்ள மதிதனையே சந்திரற்குத் தத்தம்
வாளப்பா சூடான சோதிதனை மைந்தா
மகத்தான செகச்சோதி யிடமேசென்று
சூளப்பா யெங்கும் நிரை பரத்தோடொப்பாய்த்
துலங்குதடா நட்சத்திரஞ் சோதிபோலே
காலப்பா தனையறிந்த பேருக்கெல்லாங்
கடாக்ஷமுடன் பராபரத்திற் கலந்தார்பாரே. 154

பாரப்பா வுலகமெல்லாம் பரத்தினுட் கூத்து
பரிவான கூத்ததுவும் வாசிநேர்மை
நேரப்பா வாசியது வன்னியுடன் கூடி
நிசமான பூதவகை ஐந்துண்டாச்சு
பேரப்பா ஐந்துவகை ஐந்துண்டாச்சு
பெருகினின்ற தத்துவங்கள் தொண்ணூற்றாறாய்
வீரப்பா கொண்டசெடந் தான்தானாக
வேதாந்த முறைமைநெறி யொன்றுகேளே. 155

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## ஒன்றான பொருள்

ஒன்றான பொருளறிந்து ஒன்றைக் கேளு
  உத்தமனே நலமான உறுதி கொண்டு
நின்றாடும் வாசிதனில் மனக்கண் சாற்றி
  நிசமான சரியையொடு கிரியையோகம்
பண்டான ஞானமொடு நாலுமைந்தா
  பார்த்தவர்க்குக் கெதிமோக்ஷம் பலனுண்டாகும்
அண்ட கேசரி மாது தன்னாவந்த
  ஆதியென்ற சரியைவழி அறிந்துபாரே. 156

பாரப்பா சரியை வழி அகார தீக்ஷை
  பாலகனே தேகசுத்தி அனுஷ்டானங்கள்
காரப்பா கிரியைவழி உகார தீக்ஷை
  கருவான சிவலிங்க சக்திபூஜை
சாரப்பா யோகவழி மகார தீக்ஷை
  சகலகலை காலறிந்து தன்னைக்காண
நேரப்பா ஞானவழி பூரணமாந் தீக்ஷை
  நிராதார சொரூபநிலை தீபமாச்சே. 157

## சாலோக சாமீப பதவி

ஆச்சப்பா சரியைவழி நடந்தோர்க்கப்பா
  அப்போதே சாலோக பதவியாகும்
பேச்சப்பா கிரியைவழி நடந்தோர்க்கப்பா
  பெருமையுடன் சாரூப பதமேயாகும்
நீச்சப்பா யோகவழி நடந்தோர்க்கையா
  நிசமாக சாமீப பதவியாகும்
மூச்சப்பா ஞானவழி வந்தோர்க்கையா
  முத்தியுள்ள சாயுச்சிய பதவிதானே. 158

தானென்ற சாலோக பதவிசேர்ந்தால்
  சகலசவு பாக்கியபதி தானேயாவான்
ஊனென்ற சாமீப பதவிசேர்ந்தால்
  உலகுதனில் சராசரங்க ளோகஞ்செய்வார்
கோனென்ற சாரூப பதவிசேர்ந்தால்
  குவலயத்திற் சிவயோக ஞானியாவான்
வானென்ற சாயுச்சிய பதவிசேர்ந்தால்
  மகத்தான வெளியோடே வெளியாவானே. 159



வானான வெளியோடே வெளியாய்நின்று
  மகத்தான நாற்பதமும் வகையராய்ப் பெற்று
ஊனான பஞ்சகர்த்தாள் நிலையும்பெற்று
  உகாந்தவரை திருநடன உண்மைகண்டு
கோனான குருபதத்தில் மனமொடுங்கி
  குறியான பூரணமாய்ச் சேர்ந்தோர்க்கப்பா
தானான சமாதியுட னுண்மைகேளு
  தன்மையுடன் நாற்பதமு மொன்றதாமே. 160

தாமென்ற சரியைவழி நடந்தாலென்ன
  தன்னறிவாய்க் கிரியைவழி நடந்தாலென்ன
வோமென்ற யோகவெளி நடந்தாலென்ன
  உத்தமனே ஞானமதில் உறைந்தாலென்ன
ஆமென்ற பூரணமே தாமென்றெண்ணி
  அனுபான தமர்வாசல் அதிலேசென்று
நாமென்ற ஐந்தெழுத்தில் இரண்டைப்பற்றி
  நாதாந்த வெளியொளியில் நாடினாரே. 161

## சமாதியளவு

நாட்டமுடன் பூரணத்தில் நாடினோர்க்கு
  நாதாந்த சமாதியுட நன்மைகேளு
தேட்டமுடன் எவ்விடமே யானாலென்ன
  சிவசிவா அந்திடத்தில் செம்மைபண்ணி
வாட்டமுடன் பத்தடியிற் சதுரமாக
  மைந்தனே ரெண்டுமுழ ஆழஞ்செய்து
ஆட்டமுடன் அதின்கீழே ஆறடியில் மைந்தா
  அப்பனே முச்சாணி லாழம்பண்ணே. 162

பண்ணப்பா அதின்கீழே நாலடியில் மைந்தா
  பதிவான ஆழமது எண்சாண் நீளம்
நண்ணப்பா நிதானமதாய் நன்றாய்ச்செய்து
  நலமான கிரகமதிற் பிரவேசிக்க
உண்ணப்பா கற்பொடியுஞ் செங்கல்த்தூளும்
  உத்தமனே திருநீறும் மூன்றும்ஒன்றாய்
முன்னப்பா செய்துகொண்டு பதனம்பண்ணி
  முத்திகர மாவதற்கு முறைமைகேளே. 163

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

கேளடா பாலுடனே இளநீர்விட்டுக்
கிருபையுடன் தண்ணீரும் தேனுங்கூட்டி
சூளடா அபிஷேகம் நன்றாய்ச் செய்து
சுத்தமுடன் மேல்துவட்டிச் சமமாய்மைந்தா
ஆளடா அரைதனக்குப் பட்டுவஸ்த்திரம்
அன்பாகத் தான்அணிந்து அதின்மேற்கேளு
மேலடா பாதாதி கேசமட்டும்
மேன்மையுடன் விபூதி தூளிதமே செய்யே. 164

செய்யடா விபூதிதூளிதமே செய்து
திருவான புருவமதில் திலதப்பொட்டு
மெய்யடா தங்கமதால் பட்டஞ்செய்து
மேன்மைபெற ஐந்தெழுத்தை அதிலேமாறி
பையடா நெற்றிதனிற் பட்டங்கட்டிப்
பாங்குபெறச் சுகந்தமலர் மாலைசாற்றி
வையடா அமுதுகனி வர்க்கமுன்னே
வைத்தபின்பு தூபமொடு தீபங்காட்டே. 165

காட்டடா தூபமொடு தீபங்காட்டி
கருணையுடன் ரதமதின்மேற் கடாக்ஷஞ்செய்து
நாட்டடா மணியோசை சங்கினோசை
நலமான ஜெயகண்டி மேளவாத்தியம்
மூட்டடா சகலவொலி நாதத்தோடே
முக்கியமாய் ரதமதனை நடத்திகொண்டு
சூட்டடா சமாதினுட வாசற்சென்று
சுகமாகக் கிரகப்பிரவேசம்பண்ணே. 166

பண்ணப்பா கிரகமென்ற சமாதினுள்ளே
பதிவான மத்தியென்ற எண்சாண் தன்னில்
நண்ணப்பா தூபமதால் சுத்திபண்ணி
நாட்டமுடன் ஐயும்கிலியும் சிவயநமாவென்று
கண்ணப்பா ஈசான்னியம் பார்வையாகக்
கருணையுடன் தானிருத்திக் கனிவாய்மைந்தா
முன்னப்பா செய்துவைத்த முத்தூள்தன்னை
முக்கியமுடன் சிவவசியென் றெடுத்திடாயே. 167



எடுத்துநன் றாய்ப் பாதாதி கேசமட்டும்
இன்பமுடன் தான்தூளை கெட்டிசெய்து
அடுத்துமிக பாதமுதல் புருவமட்டும்
அளவாகப் பொடியிட்டு வாழ்த்திமைந்தா
தொடுத்துமுகப் புருவமுத லுச்சிமட்டும்
சொல்லுகிறேன் விபூதியில்கற் பூரஞ்சேர்த்து
கொட்டிமிக அமிழ்த்திநன் றாய்த் தூபதீபங்
குருவாழ்க மூர்த்திகர மாவாயென்னே! 168

எண்ணியே ஐந்தெழுத்தை உச்சரித்து
இன்பமுடன் மணல்பரப்பித் திரணைபோட்டு
உண்ணியே திரணிநடு லிங்கபீடம்
உத்தமனே தான்வகுத்து உறுதியாகப்
புண்ணியனே சுகந்தமலர் அர்ச்சனைகள்செய்து
புத்தியுடன் சகலரச வர்க்கம்வைத்து
வன்னியென்ற ருத்திரனைத் தியானம்பண்ணி
மார்க்கமுடன் மானதமாம் பூசைசெய்யே. 169

செய்யப்பா மானதமாய்ப் பூசைசெய்து
சிந்தைமனது ஒன்றாகச் சிவனைநோக்கி
மெய்யப்பா கோதானம் பூதானங்கள்
மேன்மையுள்ள கன்னிகா தானஞ்செய்து
கையப்பா தவறாமல் அதற்குப்பூசை
கருணையுடன் பூரிகா தானஞ்செய்து
கையப்பா மையமென்ற குருவைப்போற்றி
மார்க்கமுடன் தன்பதியில் வந்துகேளே. 170

கேளடா தன்பதியில் வந்திருந்து
கிருபையுடன் சட்டரச வர்க்கஞ்செய்து
வாளடா குருபதத்தைப் போற்றிமைந்தா
வணக்கமுடன் குருபூசை வளமாய்ச்செய்து
பாளடா போகாமற் சமாதில் மைந்தா
பத்தியுடன் நித்தியமும் பூசைசெய்தால்
கோளடா வாராமற் சமாதிதன்னிற்
குருவான முற்றாகார மதிகமாமே. 171

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

ஆமப்பா வதிகமுள்ள வான்பால்தன்னை
அருள்பெருக சமாதிவைக்கு முறைமைசொன்னேன்
ஓமப்பா உறுதியுள்ள சத்திமாது
உண்மையுடன் மூர்த்திகர மானால்மைந்தா
தாமப்பா முன்போலே சமாதிசெய்து
தன்மையுடன் மேல்திசையிற் குகைதான்செய்து
நாமப்பா சொல்லுகிறோம் மூர்த்திகரமான
நாதாந்த மாதுதனைச் சுகாசனமே செய்யே. 172

செய்யப்பா சுகாசனமாய்த் தீர்க்கம்பண்ணி
சிவசிவா அபிஷேகம் நன்றாய்ச்செய்து
மெய்யப்பா தெரியாமல் பட்டுவஸ்த்திரம்
மேன்மைபெறத் தானணிந்து விபூதிசாற்றி
மையப்பா மையமதில் திலதப்பொட்டு
மகத்தான சுகந்தமலர் மாலைசாற்றி
வையப்பா தங்கத்தால் பட்டஞ்செய்து
மகத்தான எட்டெழுத்தை மாறிக்கேளே. 173

கேளடா எட்டெழுத்தைக் கால்தலையாய் மாறி
கிருபையுடன் நெற்றிதனிற் பட்டங்கட்டி
ஆளடா தூபமுடன் தீபஞ்செய்து
அருள்பெருக ரதமதின்மேல் அன்பாய்வைத்து
வாளடா மணியோசை சங்கினோசை
மகத்தான ஜெயகண்டி நாதஞ்செய்து
மேலடா சமாதிவலஞ் செய்துநல்ல
வேதாந்த மானநடுக் குகையில்வையே. 174

வையப்பா கீழ்முகமாய்க் குகையில்வைத்து
மார்க்கமுடன் செங்கல்கல் லுப்புநீறும்
மெய்யப்பா மூன்றுபொடி ஒன்றாய்க்கூட்டி
மேன்மைபெற குகைனிறைய அமிழ்த்திவைத்து
கையப்பா வாராமல் மணல்நிறுத்திக்
கருணையுடன் சதுரமதாய்த் திரணைசெய்து
செய்யப்பா திரணைநடுஸ் தம்பம்வைத்துத்
தீர்க்கமுடன் மானதமாய்ப் பூசைபண்ணே. 175



பண்ணப்பா சகலரச வர்க்கம்வைத்துப்
பதிவான மயேஸ்வரியைப் பூசைபண்ணி
கண்ணப்பா தானோக்கி மனதுகூர்ந்து
கன்னிகா தானமுடன் கோதானங்கள்
பொன்னப்பா தான்விளையும் பூதானங்கள்
புத்தியுடன் பூரிகா தானஞ்செய்து
நண்ணப்பா தன்பதியில் வந்திருந்து
நாட்டமுடன் குருபூசை நன்றாய்க்காணே. 176

காணவே குருபூசை நன்றாய்ச் செய்து
கருணைவளர் சமாதிதனில் கடாக்ஷமாக
பூணவே நித்தியமும் பூசைசெய்தாற்
பூரணமாய் மூர்த்திகரம் புதுமையாகும்
தோணவே சத்தியுட சமாதிதன்னில்
துலங்கும் வெகுபுதுமைகள்தான் என்னசொல்வேன்
பேணவே பூரணமாய்ச் சமாதிபூசைப்
பெருமைவிட்டு ஒருமையதாய்ச் செய்துபாரே. 177

பாரடா ஆண்ரூபம் முனிதானாச்சு
பதிவான பெண்ரூபம் ரிஷிதானாச்சு
காரடா ரிஷிமுனிவர் கருணைதன்னை
கருணையுடன் கண்டறிந்து பூசைசெய்ய
ஆரடா அறிவார்கள் ஆதியந்தம்
அரகரா ஆதியந்தம் ஆண்பெண்ணாச்சு
நேரடா ஆண்பெண்ணா இறந்தாலென்ன
நேர்மையுள்ள அறிவல்லோ சாக்ஷிதானே. 178

தானேதான் தன்மனமே சாக்ஷியாகத்
தன்மையுடன் பூரணமாய் நின்றாயானால்
கோனேதான் தானவனாய் அருளேதங்கும்
குருவான நவக்கிரக சூக்ஷத்தாலே
பூணேநீ பொற்கமலத் துச்சிமீதில்
பூரணமாய் நின்றிலங்கும் போதத்தாலே
தானேதான் நீயெனவே நன்மையாக
நாட்டமுடன் வாசியினால் நயந்துபாரே. 179

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

பாரப்பா நயனவொளி சூசுந்தாலே
பதிவான மூலமதில் ஆறாதாரங்
காரப்பா ஆதார லிங்கபீடம்
கண்ணிறைந்த டுச்சுடராம் கமலபீடம்
நேரப்பா நின்றதொரு விந்துபீடம்
நின்றிலங்கும் கற்பூர தீபபீடம்
ஆரப்பா அறிவார்கள் ஆதிபீடம்
அந்தரங்க பீடமதைப் பூசைபண்ணே. 180

பூசைநெறி அறியாமல் ஆண் பெண் என்றும்
பொல்லாத மாய்கைவலைத் தன்னிற்சென்று
ஆசைகொண்டு மோகமதால் அறிவுங்கெட்டு
வங்கமென்ற சங்கதியை அறியாமல்தான்
பாசமென்ற பலராசியில் மனதழுந்தி
பரகதியை அறியாத பாவிமாரே
ஓசையென்ற சத்தமுதிற் தடங்கிவிட்டை
உற்றமனக் கண்ணாலே நித்தம்பாரே. 181

## பிரணவ மகிமை

நித்தமும்நீ புத்தியுடன் பார்த்துமைந்தா
நேர்மையுடன் அந்திசந்தி பூசை பண்ண
சுத்தமுடன் சொல்லுகிறேன் புலத்தியாகேள்
சோதியென்ற ஆதார மூலம்பார்த்து
பத்தியுடன் அங்கிலி ஓமென்று நீயும்
பதிலாக மானதமா உருவேசெய்தால்
சித்தியுள்ள கணபதியும் வல்லபையும் மைந்தா
சிந்தைதனில் ஒளிவிளக்காய்த் தெரிசிப்பாயே. 182

தெரிசிப்பாய்த் தினந்தோறுந் தியானம் பண்ணி
தீர்க்கமுடன் மானதமாம் பூசைசெய்தால்
நெறிசித்தி யாகிஅந்த நெறியிற்குள்ளே
நின்றிலங்கும் கணபதியும் வல்லபையுமைந்தா
பரிசித்த மாகவேநீ தெரிசித்தாக்காற்
பத்தியுடன் சகலசித்தும் கைக்குள்ளாகும்
வருவித்த சித்தான்தான் கைக்குள்ளான
மகத்தான அவையடக்கஞ் சொல்லக்கேளே. 183



## அவையடக்கம்

கேளப்பா அவையடக்கஞ் சொல்லக் கேளு
இருபையுள்ள வல்லபையுங் கணபதியுமைந்தா
ஆளப்பா பிரம்மாவுஞ் சரஸ்வதியுமானார்
அதின பிறகு திருமாலும் லட்சுமியுமானார்
மேலப்பா ருத்திரனும் உருத்திரியுமானார்
மேன்புடனே மயேசுரனும் மயேஸ்பரியுமானார்
காலப்பா சதாசிவனும் மனோன்மணியுமாகி
காரணமெல்லாம் முடிந்து சத்திசிவமாச்சே. 184

ஆச்சப்பா ஆதிபரா பரந்தான்மைந்தா
அனுக்கிரகத் தாலுதித்த கணபதி வல்லபையும்
மூச்சப்பா நிரைந்தசத்தி சிவமுமாகி
மூவுலகுந் தானாகி முதலுமாகி
பேச்சப்பா நிறைந்ததொரு பஞ்சபூதம்
பேறாகிப் பெருமையினாற் கணபதியுமாகி
பாச்சப்பா பஞ்சகர்த்தாள் ஐந்து பேரும்
பக்திகொண்டு ஆதியிலே ஓம் என்றாரே. 185

ஓமென்றார் பிரணவமே ஆதிவஸ்து
உலகமெல்லாந் தானிறைந்த ஓமசத்தி
தாமென்ற சத்தியடா எங்குந்தானாய்ச்
சதாகோடி மந்திரத்துக்கு உயிராய்நின்று
ஆமென்று வாடினது ஓங்காரந்தான்
அடிமுடியாய நின்றதுவும் ஓங்காரந்தான்
நாமென்ற ஓங்காரந் தன்னிலேதான்
நாடிநின்ற எழுவகையும் பிறந்தவாரே. 186

வாறான எழுவகையின் தோற்றமெல்லாம்
மகத்தான ஓங்கார வடிவுமாச்சு
பேரான வேதமொடு சாஸ்திரங்கள்
பெருகிநின்ற மந்திரங்கள் அஷ்டகர்மம்
தேரான ஜபதபங்கள் யோகநிஷ்டை
நின்றிலங்கும் கௌனமுதல் வசியமாற்றம்
கூரான வாதமொடு வைத்தியமெல்லாம் 187
குருவான ஓங்காரக் குறிதான் கேளே.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

காணவே ஓங்காரம் ஓம்பிரதானம்
கருணைவளர் ஆதார மூலபீடம்
தோணவே மூலமென்ற ஆதாரத்தில்
துலங்கினின்ற ஆவியடா வாசியாச்சு
பேணவே ஆவியென்ற வாசியேறி
பெருகினின்ற ஆதாரங் கடந்தப்பாலே
பூணவே ரவிமதியின் சுடரிற்சென்று
புத்தியுடன் பூரணமாய்த் தீபம்பாரே. 188

பாரப்பா தீபமென்றால் அறிவின் கண்ணு
பத்திகொண்டு அறிவதினால் புருவமேவி
சாரப்பா கண்டமதில் அங்கென்றாணி
சதாபோத பூரணமாய் நின்று பார்த்தால்
நேரப்பா நின்றிலங்குஞ் சோதிபோலே
நித்தியமுஞ் சுத்தமுடன் நினைவாய்ப்பார்த்தால்
ஆரப்பா வென்றதொரு ஆறாதார
மாதிசிவ சோதிமய மாகுந்தானே. 189

தானான ஆதாரஞ் சோதிபோலே
சங்கையுடன் தோணுமடா அங்கேபாரு
வானான அண்டமதின் நடுவே பார்த்தால்
வகையாகத் தோணுமடா பஞ்சரூபம்
தேனான வடிவுபஞ்ச ரூபமாகிச்
சிவரூப மானசெயல் யாருங்காணார்
கோனான சிவரூபந் தான்தானென்று
குறித்து மனம் நிறுத்தினித்தம் பூசைபண்ணே. 190

பண்ணப்பா பூசைவிதி தன்னைக்காணார்
பார்தனிலே அமைத்தவிதிச் சித்துமாச்சு
நண்ணப்பா சித்தமுள்ள மதிதான் மைந்தா
நடுவான பீடமடா அண்டத்துச்சி
கண்ணப்பா தானிறைந்த உச்சவீதில்
கமலமென்ற ஆயிரத்தின் இதழினுள்ளே
முன்னப்பா அமிர்தமது கண்விண்டோடு
மூர்க்கமுடன் அந்தமிர்தம் பூசை பண்ணே. 191



பண்ணடா சிவபூசை சத்திபூசை
பத்தியுடன் சித்தமதாய் வாலைபூசை
நண்ணப்பா பூரணமாய் பூசையோகி
நாதாந்த சோதியடா யோகபூசை
பண்ணடா தவராமற் பூசை செய்ய
கருமானஞ் சொல்லுகிறேன் கருவாய்க் கேளு
விண்ணடா நிறைந்தமலர்க் கண்ணேசூக்ஷ்ம்
வேதாந்த சூக்ஷ்மதை விரும்பிக்கேளே. 192

## அகாரதீக்ஷை

விரும்பிமனங் கொண்டுசிவ பூசைகேளு
வேதாந்த சின்மயத்தை மெய்யிற்கொண்டு
வரும்பிறவி தனையகற்றுஞ் சிவமேதென்றால்
வகையுடனே சொல்லுகிறேன் அகாரமாச்சு
அருந்தவமாய் நின்றதொரு அகாரபீடம்
ஆரறியப் போரார்களாதிவிந்து
திருந்தியதோர் விந்துவென்றால் கெங்கைகெங்கை
திருவான கெங்கையடா அமிர்தந்தானே. 193

தானான அமிர்தமடா வகாரமாச்சு
சங்கையுடன் காரமதைத் தானேதானாய்
வாரான கேசரியைத் தியானம் பண்ணி
வரிசையுடன் உதயத்தில் தியானஞ்செய்தால்
ஊனான தேகமதில் நின்றபீடை
உத்தமனே அப்போதே விலகிப்போச்சு
வீணான பீடையது விலகிப்போனால்
வேதாந்த திரேகமது சித்தியாச்சே. 194

ஆச்சப்பா திரேதமது சித்தியானால்
ஆதிசதா சிவசோதி அங்கேகாணும்
மூச்சப்பா தன்னிலைவிட் டசையாதையா
முத்தியுள்ள சித்தமது கெட்டியாச்சு
பேச்சப்பா தானடங்கி மௌனமாச்சு
பேரண்டஞ் சுத்திவர கெவனமாச்சு
நீச்சப்பா தானறிந்து கெவுனத்தேகி
நிசமான வகாரமதைப் பூசைபண்ணே. 195



Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

### உகாரதீக்ஷை

பண்ணப்பா சிவமான அகாரதீக்ஷை
பத்திகொண்டு பூரணமாய்ச் செய்தபின்பு
நண்ணப்பா உகாரமென்ற சத்திதீக்ஷை
நன்மையுடன் சொல்லுகிறேன் ஆண்மைகேளு
விண்ணப்பா கண்ணான மூலத்தீயில்
விளங்கினின்றி உகாரமென்றும் சத்தியென்றும்
முன்னப்பா நிறைந்தசிவ சத்தியோடே
முத்தியுள்ள அகாரமென்ற வஸ்துசேரே. 196

சேரப்பா அகாரமுடன் உகாரங்கூட்டி
செம்மையுடன் உருவேத்தி நின்றாயானால்
நேரப்பா நின்றதிரு வாசியாலே
நிலையான புருவமதில் தீபங்காணும்
காரப்பா தீபமதைக் கமலக்கண்ணால்
கண்ணிரைந்து வாசியினால் ஊன்றிப்பாரு
சாரப்பா வாசியினால் ஊன்றிப்பார்க்கச்
சதாபோத மானசிவ யோகியாமே. 197

### மகாரதீக்ஷை

ஆமப்பா சிவயோகஞ் செய்வதற்கு
அப்பனே அகாரமுடன் உகாரஞ்சொன்னேன்
தாமப்பா மகாரமென்ற வாலைதன்னைத்
தாரணியி லாரறிவார் சங்கைமார்க்கம்
காமப்பால் கொண்டசிவ கெங்கையான
கன்னிமனோன் மணியீன்ற நாதமென்றும்
நாமப்பா சொல்லுகிறோஞ் செந்தேனென்றும்
நாதாந்த மென்ற மகாரமாமே. 198

ஆமென்ற மகாரமுடன் மைந்தாகேளு
அருள்பெருக அகாரமுடன் மைந்தாகேளு
ஓமென்ற பிரணவத்தின் மகிமையாலே
உறுதியுடன் மூன்றெழுத்துஞ் செவித்தாயாகில்
தாமென்ற தன்னிலையே பிரம்மமாகி
தானாகித் தானவனாய் தான்தானாவாய்
நாமென்ற நாதாந்த முத்தியாலே
நடுவெழுத்து மூன்றெழுத்துஞ் சித்திதானே. 199



### சிகாரதீக்ஷை

காணவே மூன்றெழுத்துங் கருணையாகக்
கூட்டாகச் செபித்தபின்பு இன்னங்கேளு
பேணவே சிகாரமென்றால் ஆர்தான் காண்பார்
பேரண்டமான பூரணமேயாகுந்
தோணவே பூரணத்தைக் கண்டுகொண்டு
சுகமான சிவசத்தி வாலையோடே
பூணவே தானிருந்தி செபித்தால்மைந்தா
பூரணமாய்க் காயசித்தி புனிதமாமே. 200

### வகாரதீக்ஷை

புனிதமுடன் தானிருந்து பூசைபண்ணி
பொற்கமலத் துச்சியிலே மனதைவைத்து
இனிதமுடன் வகாரமென்றால் வாசியாச்சு
ஏகமென்ற வாசியிலே இன்பம்வைத்து
கனிகரண மானசிவ சத்திவாலை
கண்ணான பூரணமும் நாலுங்கூட்டி
மணிகரண மானதொரு அஞ்சும்மைந்தா
மகத்தான பஞ்சகண தீக்ஷையாச்சே. 201

### பஞ்சகண தீக்ஷை

ஆச்சப்பா பஞ்சகண தீக்ஷைபோதம்
அப்பனே வகைவிபரம் நன்றாய்க்கேளு
நீச்சப்பா சிவதீக்ஷை உதயமாகும்
நிசமான மாலையிலே சத்திதீக்ஷை
பேச்சப்பா பேசாத வாலைதீக்ஷை
பேணிமனங் கண்டவுடன் தெண்டம்பண்ணு
மூச்சப்பா நிறைந்ததொரு வாமரூபி
முக்திகொண்ட பஞ்சகெணந் தான்தானாகும். 202

தானான பஞ்சகெணந் தானாய்நின்று
தன்மையுடன் நின்றுவிளை யாடலாச்சு
ஊனாகி நின்றுவிளை யாடுஞ்சித்தை
உலகமதில் அறியாமல் உழன்றுபோனால்
வானான வடிவுபஞ்ச ரூபந்தன்னை
மார்க்கமுடன் கண்டுமன மகிழ்ச்சியானார்
கோனான குருபரம் வேறில்லைமைந்தா
குவலயத்தில் நீயுமொரு சித்தனாமே. 203

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

சித்துமய மாவதற்கு மைந்தாமைந்தா
நிர்க்கமுடன் காரமதை யாண்டுசேவி
முத்திபெற செபித்தபின்பு உகாரந்தன்னை
மூர்க்கமுடன் ஆண்டொன்று செபித்துக்கொள்ளு
பத்தியுடன் செபித்தபின்பு மகாரந்தன்னை
பாலகனே அண்டொன்று பதியாய்ச்சேவி
புத்தியுடன் இதுமூன்றுஞ் செபித்துத்தீர்ந்தால்
பூரணமுங் காரணமும் பொருந்தும்பாரே. 204

பாரப்பா பூரணமே அண்டமாச்சுப்
பதிவான காரணமே பிண்டமாச்சு
நேரப்பா அண்டமொடு பிண்டம்ரெண்டும்
நேரறிந்துக் கொண்டவனே சித்தன்சித்தன்
சாரப்பா சௌமியசா கரத்தில்நீயும்
தன்மையுடன் பூரணமாய்ச் சார்ந்துகொண்டால்
மேரப்பா அண்டபிண்டம் தானாய்நின்று
மேதினியில் பூரணமாய் வாசியாமே. 205

## முப்புச் சுன்னம்

வாசிக்குஞ் சீதமலர் முப்புமாச்சு
வாடாத முப்பூவை யார்தான் காண்பார்
நேசிக்கு முப்பூவைச் சொல்லக்கேளு
நிசமான சத்தமடா பூமிநாதம்
பூசிக்கும் பூனாதம் பூரஞ்சத்தி
பொருந்திநின்ற சவுக்கார மண்டமாது
காசிக்கு மேலான கன்னிகன்னி
கைலாச மனங்கொண்ட முப்பூவாச்சே. 206

ஆச்சப்பா முப்பூவும் பூரச்சுன்னம்
அதுதெளிந்த கெங்கையடா நாதம்நாதம்
பேச்சப்பா பெருகிநின்ற நாதத்துள்ளே
பெருகிநின்ற சுத்தசலம் விந்துசேர்த்து
மூச்சப்பா தானடங்க அண்டஞ்சேர்த்து
முத்தியுந் தான்கூட்டிப் புடத்தைப்போடு
காச்சப்பா புடமறிந்து காச்சிப்பாரு
கன்னடங்காச் சுன்னமடா முப்பூகாணே. 207



காணாத முப்பூவைக் கண்டால்மைந்தா
கருவான காரமுடன் காரஞ்சேரு
பானான காரமதிற் காரஞ்சேர்த்து
பரிதிமதிச் சுடரான செயநீராச்சு
தேனாக செயநீரில் வீரஞ்சேர்க்கச்
சிவந்ததொரு சென்னீராய் நாதமாச்சு
ஊனான நாதமதைப் பானம்பண்ணி
உப்புமுதல் கற்பூரம் வரையுங்கூட்டே. 208

## முப்புச் செயநீர் பற்பம்

கட்டான கட்டுமுறை திட்டங்கண்டால்
கனகமென்ற பாக்கியங்கள் கைக்குள்ளாகும்
மட்டாக இன்னமொரு முப்பூச்சுன்னம்
மார்க்கமுடன் சொல்லுகிறேன் மைந்தாமைந்தா
கிட்டாத அந்தமடா அண்டத்தாதி
கெணிதமுள்ள பூரமுடன் வெடியுங்கூட்டித்
தட்டாமல் கல்வமதில் நாதநீரால்
தன்மையுடன் தானரைத்து வட்டுப்பண்ணே. 209

பண்ணியதோர் வட்டதுவும் நன்றாய்க்காய்ந்தால்
பாலகனே மண்சிலை வலுவாய்ச்செய்து
புண்ணியனே நிறையறிந்து புடத்தைப்போடு
பூவான முப்பூவுஞ் சுன்னமாச்சு
கண்ணிறைந்த சுன்னமடா கமலச்சுன்னங்
காரமுள்ள சுன்னமதிற் சாரஞ்சேர்க்க
வன்னியென்ற ஜயநீரை என்னசொல்வேன்
வானிறைந்த நீரதிலே வீரஞ்சேரே. 210

சேரடா வீரமது சேர்ந்தபோது
தெளிவான நீரதுவும் செயநீராச்சுக்
காரடா செயநீரைப் பதனம்பண்ணிக்
கட்டான வாதமுறை திட்டம்பார்த்தால்
பேரடா கொண்டதொரு நவலோகங்கள்
பொருதிநின்ற வங்கமெல்லாந் தங்கமாச்சு
நேரடா தங்கரதி மாதுதன்னை
நேசமுடன் பாசம்வைத்துப் பூசைப்பண்ணே. 211

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

பூசைப்பண்ணிப்
பண்ணப்பா சத்திசிவ பூசைப்பண்ணிப்
பதிவான சிவயோகம் பார்க்கும்போது
கண்ணப்பா தன்னிலையில் கருணையாகுங்
கருணைவளர் தீபமதில் தீபங்காணும்
விண்ணப்பா நிறைந்ததொரு தீபங்கண்டால்
வேதாந்த தேகமடா முத்தியாச்சு
முண்ணப்பா நிறைந்தசிவ முத்தியாலே
முத்தியுள்ள அமுர்தரச பற்பங்கேளே. 212

பற்பமென்ற உற்பனத்தை யார்தான்காண்பார்
பதிவான நகாரமுடன் மகாரஞ்சேர்த்து
உற்பனமாய்க் காரமுடன் பூரங்கூட்டி
உறுதியுடன் பூரணனீர் தன்னாலாட்டி
கற்பமென்று அற்புதமாய் புடமேசெய்தால்
கசடற்று நீறியது பற்பமாகும்
அற்புதமாய் நீறினதோர் பற்பந்தன்னை
அங்கமென்ற சங்கதியை அறிந்துவூட்டே. 213

அறிந்துகொண்டு ஆதாரம் நன்றாய்ப்பார்த்து
ஆதியென்ற பற்பமொடு சுன்னம்ரெண்டாம்
வருந்திமனக் கனிவதனால் செய்துமைந்தா
வகையுடனே அஷ்டாங்க யோகம்பாரு
தெரிந்துசடந் தானறிந்து யோகம்பாரு
தீர்க்கமுள்ள மார்க்கமென்று சொல்லக்கேளு
பொருந்திநின்ற அஷ்டகன்மஞ் சித்துபெற்றால்
பூரணமா அஷ்டாங்க யோகமாமே. 214

## அஷ்டகர்ம விபரம்

யோகமென்ற அஷ்டாங்க யோகம்பார்க்க
உத்தமனே அஷ்டகர்மஞ் சித்துகேளு
ஆமென்ற தேகநவக் கிரகமாச்சு
ஆதியென்ற அநுக்கிரக முடியில்நின்று
பாகமென்ற ஆதார மூலந்தன்னை
பத்திகொண்டு ஊடுருவிப் பார்க்கும்போது
வேகமென்ற அட்சரத்தின் ஆட்டையல்லால்
என்மகனே மற்றதெல்லாம் ஸ்தூலங்காணே. 215



## வசிகரம்

காணவே ஸ்தூலமுடன் சூக்ஷங்கண்டால்
காரணமாய்ச் சென்றுவிளை யாடலாகும்
பூணவே நின்றுவிளை யாடுதற்குப்
புத்தியுடன் அஷ்டகர்ம சித்துகேளு
தோணவே அஷ்டகர்ம சித்துகேளு
சொல்லுகிறேன் வசிகரத்தின் சூக்ஷந்தன்னை
ஊணவே தானிருந்து மூலம்பார்த்து
உவமையுடன் குருபதியை உகந்துகாணே. 216

உகந்துகொண்டு வசிகரத்தின் சூக்ஷங்கேளு
உத்தமனே வடதிசையை நோக்கிமைந்தா
அகந்தெளிய விபூதி உத்தளமாய்ப் பூசி
ஆனகலை ஆசனமேல் இருந்துகொண்டு
முகந்தெளிந்த ருத்திராக்ஷ மணியைவாங்கி
முத்தியுடன் ஆதிகண பதியைநன்றாய்ச்
செகந்தெளிய செபிப்பதற்கு மந்திரங்கேளு
சிவசிவ ஓம்றீங் அங்கென்றோதே. 217

ஓதடா ஆயிரத்தெண் ணுருவேசெய்தால்
உண்மையென்ற ஆதிகண பதிதான்மைந்தா
நீதியுடன் உனதிடத்தில் நின்றுகொண்டு
நீநினைத்த காரியங்கள் வசியஞ்செய்வார்
பேதமென்ற வேதமெல்லாம் வசியமாகும்
பேரண்டஞ் சித்தண்டம் வசியமாகும்
வேதமென்ற வேதமொடு சாஸ்திரங்கள்
விளங்கிநின்ற மந்திரங்கள் வசியமாமே. 218

ஆமப்பா தேவரோடு முனிவர்தானும்
அடங்காத பிசாசுமுதற் சத்துருக்கள்
ஓமப்பா மிருகமுதல் அஷ்டனாகம்
ஒடுங்காத பக்ஷிமுதல் சகலமெல்லாந்
தாமப்பா ஆதிகஉண பதியின்சூக்ஷந்
தண்மையுடன் தியானித்துத் தானேநின்றால்
காமப்பால் கானற்பால் வசியமாகிக்
கருணையுடன் சகலமும் வசியங்காணே. 219

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## மோகனம்

காணவே வசிகரத்தின் மூலஞ்சொன்னேன்
கணக்கான மோகனத்தின் கருணைகேளு
பேணவே கீழ்த்திசையை நோக்கிமைந்தா
பிரணவத்தால் விபூதி உத்தளமாய்ப்பூசி
தோணவே புலியாசனம் மேற்கொண்டு
சுத்தமென்று ஜெபமணி கையில்வாங்கிப்
பூணவே சபிப்பதற்கு மந்திரங்கேளு
பொருந்துமகா கணபதியின் சூக்ஷந்தானே. 220

தானென்ற சூக்ஷமது சொல்லக்கேளு
சங்கையுடன் ஓம்கிலி சிங்கென்றேதான்
வானென்ற குருபதியில் நின்றுகொண்டு
மார்க்கமுடன் ஆயிரத்தெண் ணுருவேசெய்தால்
கோனென்ற மகாகண பதிதான்மைந்தா
குருவான இருதயத்தில் பிரகாசிப்பார்
ஊனென்ற இருதயத்திற் பிரகாசித்தால்
உத்தமனே சகலமும் மோகனந்தான்பாரே. 221

பாரப்பா ரிஷிமுனிவர் தேவரெல்லாம்
பதிவான மிருகமுதல் பக்ஷியெல்லாங்
காரப்பா சகலநோய் விஷங்களெல்லாங்
காட்டேரி பிசாசுமுதல் கணங்களெல்லாம்
நேரப்பா நதிகளொடுஸ் தலங்களெல்லாம்
நேர்மையுடன் உன்சமூகங் கண்டால்மைந்தா
வீரப்பா தானொடுங்கி மோகனமேயாகும்
வேதமகா கணபதியும் விஞ்சையாச்சே. 222

## தம்பனம்

ஆச்சப்பா மோகனத்தின் அருமைசொன்னேன்
அரகரா தம்பனத்தின் அருமைகேளு
காச்சப்பா மேல்திசையை நோக்கிமைந்தா
கருணையுடன் விபூதி உத்தளமாய்ப்பூசி
பேச்சப்பா தானிருந்து மவுனமாக
பெருமையுடன் தெற்பை ஆசனமேற்கொண்டு
மூச்சப்பா தானிருத்தித் தாமரையின்மணியால்
மூர்க்கமுடன் செபிப்பதற்கு மந்திரங்கேளே. 223



கேளப்பா நடனகண பதியின்சூக்ஷங்
கிருபையுடன் ஓம்ஸ்ரீம் கிலியென்றேதான்
காலப்பா தானிருத்தி மைந்தாகேளு
கருணையுடன் ஆயிரத்தெண் ணுருவேசெய்தால்
மேலப்பா நடனகண பதிதான்மைந்தா
மேன்மைபெற உனதிடத்தில் நடனஞ்செய்து
சூளப்பா உனதிடத்தில் இருத்திக்கொண்டு
சுத்தமுடன் தம்பனத்துக் கென்செய்வாரே. 224

வாரான தம்பனந்தான் என்னவென்றால்
மகத்தான துஷ்டரொடு மிருகமெல்லாம்
நேராக உன்னுடைய சமூகங்கண்டால்
நேர்வையுடன் மனதொடுங்கி தம்பனமேயாவார்
பேரான வாய்வுடனே நெருப்புத்தண்ணீர்
பிரளாமல் தம்பிக்கும் பெருமையாகக்
கூரான நடனகண பதியினாலே
கூர்மையுடன் சகலமுந்தம் பனமாம்பாரே. 225

## உச்சாடனம்

பாரப்பா தம்பனத்தைச் சொன்னேன்மைந்தா
பதிவான உச்சாடனத்தைப் பகரக்கேளு
நேரப்பா தென்திசையை நோக்கிமைந்தா
நேர்மையுடன் விபூதி உத்தளமாய்ப்பூசி
காரப்பா பட்டந்தா னாசனமேற்கொண்டு
கருணையுடன் சங்குமணி கையில்வாங்கி
சாரப்பா சுத்திகண பதியின்சூக்ஷந்
தன்மையுடன் ஓம்கிலியுஞ் சவ்வென்றெண்ணே. 226

எண்ணியே ஆயிரத்தெண் ணுருவேசெய்தால்
ஏகாந்த சத்திகண பதியினாலே
உன்னியே சாடனந்தான் மைந்தாமைந்தா
உறுதியுடன் சத்தியமா யாடும்பாரு
நண்ணியே சாடனமுஞ் சித்தியானால்
நாதாந்த புலத்தியனே சொல்லக்கேளு
திண்ணிமையாய்க் கண்டதெல்லா முச்சாடிக்கும்
நோக்குமனக் கண்ணதினாற் றன்னைப்பாரே. 227

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

பாரப்பா பாரதனில் இருந்துக் கொண்டு
பத்தியுடன் சிவயோகத் திருக்கும்போது
வீரப்பா கொண்டதொரு நோய்களெல்லாம்
விதமுடனே பில்லிசூன் னியங்களெல்லாம்
நேரப்பா உச்சாடனத்தாற் காணாதோடும்
நிருவகிதா சகலசித்தும் ஆடலாகும்
தேரப்பா சத்திகண பதியினாலே
நிர்க்கமுடன் சாடனந்தான் சித்தியாமே. 228

## ஆக்கிருஷணம்

சித்தியுடன் சாடனத்தைச் சொன்னேன்மைந்தா
தீர்க்கமுடன் கிருசனத்தை செப்பக்கேளு
முக்தியுடன் பேசுதற்கு முகமாய்க் கொண்டு
மோனமுடன் விபுதி உத்தளமாய்ப் பூசி
பத்தியுடன் பட்டுவஸ்திர மேலேகொண்டு
பதிவாகப் படிகமணி கையில்வாங்கி
புத்தியுடன் வாலைகண பதியின்சூக்ஷம்
பூரணமாய் ஓம்கிலியென் றோதே. 229

ஓதியே ஆயிரத்தெண் ணுருவேசெய்தால்
உத்தமனே கிருசனந்தான் சித்தியாகும்
நீதியென்ற கிருசனந்தான் உறுதியாலே
நினைத்தபடி நின்றுவிளை யாடும்பாரு
சோதியென நின்றுவிளை யாடுதற்குச்
சொல்லுகிறேன் வாலைகண பதியினாலே
ஆதியென்ற வினைகளெல்லாம் அகன்றுபோகும்
அடங்காத விதங்களெல்லாம் அடங்கும்பாரே. 230

பாரான பார்தனிலே வஷ்டகர்மம்
பத்தியுடன் செய்துவிளை யாடும்போது
வீரான கர்ப்பமெல்லாங் கிருசனத்தினாலே
விட்டகன்று போகுமடா விண்ணைனோக்கு
நேராக னோக்குமனக் கண்ணால்நீயும்
நேர்மையுடன் குருபதியில் நின்றாயாகில்
பேரான வாலகண பதியினாலே
பெருமையுடன் கிருசனத்தைப் பேணிப்பாரே. 231



## வித்துவேஷணம்

பாரடா கிருசனத்தை சொன்னேன்மைந்தா
பதிவானவித் துவேஷணத்தைப் பகரக்கேளு
காரடா தென்மேற்கு முகமாய்க்கொண்டு
கருணையுடன் விபூதி உத்தளமாய்ப்பூசிச்
சாரடா வெள்ளைவஸ் திரமேற்கொண்டு
சங்கையுடன் பவளமணி கையில்வாங்கி
நேரடா உச்சிட்ட கணபதியின்சூஷம்
நேர்மையுடன் சொல்லுகிறேன் நினைவாய்க்
கேளே. 232

காணவே ஓம்ஸ்ரீயு மறியுமென்று
கருணையுடன் ஆயிரத்தெண் ணுருவேசெய்தால்
பூணவே வித்துவே ஷணந்தான்மைந்தா
பூரணமாய் நின்றுவிளை யாடும்பாரு
தோணவே நின்றுவிளை யாடுஞ்செய்தி
சொல்லுகிறேன் வேஷணத்தைத் தியானஞ்செய்து
பேணவே பெண்களுக்குக் கடாட்சித்தாக்காற்
பெருமையுடன் திருநீறால் கெர்ப்பமாமே. 233

கெர்ப்பமென்ற உற்பனந்தான் சித்தியாகுங்
கிருமையுடன் கரத்தாலே தானானாலும்
உற்பனமா யுன்கரத்தால் தொட்டால்மைந்தா
ஒன்றுபத்தாய்த் தான்வளரும் உண்மையுண்மை
விற்பன விதர்ச்சனமா யிருந்துகொண்டு
வேதாந்த சற்குருவை தியானம்பண்ணி
நட்புடனே உச்சிகண பதியைத்தொழுதால்
நாலான காரியமுஞ் சித்தியாமே. 234

## மாரணம்

சித்தியுள்ள வேஷணத்தைச் சொன்னேன்மைந்தா
தீர்க்கமுள்ள மாரணத்தைச் செப்பக்கேளு
பத்தியுடன் தென்கிழக்கு முகமாய்க்கொண்டு
பாலகனே விபூதியை உத்தளமாய்ப்பூசி
வெத்திபெற வேங்கையா சனமேற்கொண்டு
வேகமுள்ள எட்டிமணி கையல் வாங்கி
முத்தியுடன் உக்கிரகண பதியின்சூக்ஷம்
மூர்க்கமாய் ஓம்றீங் நசியென்றெண்ணே. 235

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

எண்ணப்பா ஆயிரத்தெண் ணுருவேசெய்தால்
என்னசெய்வேன் மாரணந்தான் சித்தியாகும்
நண்ணப்பா மாரணந்தான் சித்தியானால்
நாடுமுன்னே சகலபிணி மாண்டுபோகும்
கண்ணப்பா தான்கெடுக்கச் சத்துருவின்பேரை
கருணையுடன் தானினைத்து மாரணத்தேயோத
முன்னப்பா குண்ணியவன் மாண்டுபோவான்
மூர்க்கமுடன் மாரணத்தை யேற்றியூதே. 236

ஓதியொரு நாழிகையில் மைந்தாகேளு
உதிரமதில் அக்கினிதான் உடனேபாஞ்சு
வீதியென்ற தெருத்தோறும் அலைவான்மட்டை
விஞ்சையென்ற மாரணத்தை நெஞ்சில் வைத்து
நீதியுடன் விபூதியைநீ கடாட்சித்தாக்கால்
நேர்மையுடன் சகலபிணி மாண்டுபோகுஞ்
சோதியென்ற உக்கிரகண பதியின்சூக்ஷஞ்
சுத்தமுடன் மாரணத்து குயிருமாச்சே. 237

## பேதனம்

ஆச்சப்பா மாரணத்தைச் சொன்னேன்மைந்தா
அருள்பெருகும் பேதனத்தை அருளக்கேளு
காச்சப்பா வடமேற்கு முகமாய்க்கொண்டு
கருணையுடன் விபூதியை உத்தனமாய்ப்பூசி
மூச்சப்பா தானிருத்திக் குருவைப்போற்றி
முத்திபெற கிருஷ்ணா சனமேற்கொண்டு
பாச்சப்பா மூலகண பதியின்சூக்ஷம்
பத்தியிடன் ஓம்ரீம் அம்மென்றெண்ணே. 238

எண்ணடா முளகுமணி தானுமைந்தா
இன்பமுடன் னாயிரத்தெண் ணுருவேயானாற்
உண்ணடா பேதனந்தான் உறுதியாகும்
உத்தமனே அதனுடைய சித்திகேளு
கண்ணடா தானறிந்து பேதனத்தையோதி
கருத்துடனே சிவயோகத் திருக்கும்போது
நண்ணடா உன்ரூபம் மைந்தாகேளு
நாட்டமுடன் விதவிதமாய்த் தோணும்பாரே. 239



பாரப்பா புலத்தியனே சொல்லக்கேளு
பத்தியுடன் பேதனத்தைத் தியானம்பண்ணி
நேரப்பா நின்றபிணி யாளர்கையில்
நிக்ஷயமாய் விபூதியைநீ கட்டினாக்கால்
சாரப்பா சுரதோஷ விக்கமெல்லாம்
க்ஷணத்திலே பேதலிக்கும் விருதுபோடு
தேரப்பா மூலகண பதியினாலே
தீர்க்கமுடன் பேதனந்தான் செம்மையாமே. 240

செம்மையுடன் அஷ்டகர்மம் எட்டுக்குந்தான்
தீர்க்கமுடன் அஷ்டகண பதியின்சூக்ஷம்
நன்மையுடன் சொன்னடா நயந்துபாரு
நாதரந்த புலத்தியமா ரிஷியேயையா
யுண்மையுடன் அஷ்டதிசைக் கரசாய்நின்று
உகந்துவிளை யாடுதற்கு இதுவேசூக்ஷந்
தன்மையுடன் சூக்ஷமதிற் சாக்ஷியாக
தானிருந்து அஷ்டகர்மந் தான்தானாமே. 241

## அஷ்டகணபதி மூலமந்திரம்

ஆமப்பா அஷ்டதிசைக் கரசாய்நின்ற
அருமையுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
ஓமப்பா ஆதிகண பதிதானொன்று
உறுதியுள்ள மகாகண பதிதானொன்று
தாமப்பா நடனகண பதிதானொன்று
சங்கையுள்ள சக்திகண பதிதானொன்று
நாமப்பா சொல்லுகிறோம் ஒன்றாய்க்கேளு
நன்மையுள்ள வாலகண பதிதானொன்றே. 242

ஒன்றான உச்சிட்ட கணபதிதானொன்று
உத்தமனே உக்கிரக்ண பதிதானொன்று
நன்றான மூலகண பதிதானொன்று
நாட்டமுட அஷ்டகண பதிக்குமொன்றாய்க்
குன்றாத மூலமந்திர சூக்ஷந்தன்னைக்
குறிப்புடனே சொல்லுகிறேன் குணமாய்க்கேளு
நின்றாடு மூலமடா ஆதிமூலம்
நிலையறிந்து ஓம்கிலி அங்உங்கென்னே. 243

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

எண்ணமுடன் இடதுகையால் விபூதிவைத்து
ஏகாந்த கணபதியின் சுழியைநாட்டி
சொன்னமொழி தவறாமற் சுடரைப்பார்த்து
சுத்தமுடன் ஓம்கிலி அங்கங்கென்று
தன்னகமே சாட்சியதாய் இருநாட்டெட்டுத்
தான்செபித்து விபூதியைநீ கடாட்சித்தாக்கால்
முன்னிறைந்த சற்குருவின் கடாக்ஷத்தாலே
மூர்க்கமுடன் நிருகிற வியாதிகேளே. 244

கேளப்பா சுரமுடனே சன்னிதீரும்
கெடியான குன்மமுடன் காசந்தீரும்
சூளப்பா வஞ்சினையும் ஏவல்தீரும்
சுருக்கான பலவிஷமுந் தோஷந்தீரும்
வாளப்பா கரப்பனொடு கெர்ப்பரோகம்
வயற்றிலுள்ள திரட்சியெல்லாம் வாங்கிப்போகும்
ஆளப்பா அஷ்டதிசைக் கரசாய்நின்று
ஆதியென்ற பூரணத்தில் அழுந்தலாமே! 245

## அஷ்டாங்க யோகம்

வாளப்பா அஷ்டகர்ம சித்துசொன்னேன்
மகத்தான அஷ்டாங்க யோகங்கேளு
சூளப்பா யேமமொடு நேமந்தானும்
ஆசனமும் பிராணாயம் பிரத்தியாகாரம்
காணடா தாரணையுந் தியானம்மைந்தா
கருணையுள்ள சமாதுடனே எட்டுமாச்சு
நூலடா தானறிந்து எட்டும்பார்த்தால்
நுடங்காமல் பூரணத்தில் நோக்கலாமே. 246

நோக்கடா எமவகைப் பதினொ..ன்றுக்கும்
நுன்மையுடன் நேமமது வகைதான்பத்து
தாக்கடா ஆசனத்தில் வகைதான்கேளு
சங்கையுள்ள வகையதுவும் ஒன்பதாச்சு
தூக்கடா பிராணாயம் வகைதான்அஞ்சு
சொல்லுகிறேன் பிரத்தியாகாரம வகைஆறு
வாக்கடா தாரணையின் வகைதான்ஆறு
வரிசையுள்ள தியானமது வகைதான்பத்தே. 247



வகையான சமாதியது வகைதான்அஞ்சு
மார்க்கமுடன் இதுவிபரம் வழுத்தக்கேளு
தகையாதே அங்கிஷையும் சத்தியதினோடு
தானான அந்திகமும் பிரம்மங்கேளு
தேனான மட்சையொடு இருதிகூடம்
தன்மையுள்ள யிதற்காசம் சவுசத்தோடு
வானான யேழ்வகை பதினொன்றுந்தான்
மார்க்கமுடன் கண்டறிந்து வகையாய்நீயும்
ஊனான காயமதை யறிந்துக்கொண்டு
வுறுதியுடன் அஷ்டாங்க யோகஞ்செய்தால்
தேனான அமிர்தரசங் கொள்ளலாகும்
சிவசிவா நேமமதை செப்பக்கேளே. 248

## நியமம்

செப்புகிறேன் நியமவகை பத்துமக்காள்
சிவசிவா தவசோடு சந்தோஷந்தான்
ஒப்புகிறேன் ஆற்றிகஞ்சந் தானத்தோடு
உட்சிவ பூசையொடு சித்தாந்தசிரவணம்
அப்புகிறேன் சிவத்தோடு சிவமதிதான்மைந்தா
அருள்பெருகும் விரதமென்ற வகைதான்பத்துந்
துப்புரவாய்க் கண்டறிந்து சிவயோகத்தை
சுகமாக வகையுடனே யறிந்துபாரே. 249

## ஆசனவிபரம்

அறிந்துபா ராசனங்கள் ஒன்பதையுங்கேளு
அப்பனே சொற்றிலங்கோ முகத்தினோடு
விரிந்துபார் பத்மமொடு வீரம்மைந்தா
விரையான சிங்கமொடு பத்திரமுமைந்தா
பரிந்துபார் முத்தமொடு மயுரமைந்தா
பதிவாக நின்றசுகம் ஒன்பதாச்சு
வரிந்துநின்ற ஒன்பதையுந் தன்னுட்கண்டு
வகையுடனே அஷ்டாங்க யோகம்பாரே. 250

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## பிராணாயாமம்

பாரப்பா பிராணாய வகைதான்ஐந்தும்
பத்தியுடன் சொல்லுகிறேன் பதிவாய்க்கேளு
நேரப்பா ரேசகபூ ரகமூங்கும்பகம்
நிசமான சவுபீசம் நிர்ப்பீசம்ஐந்தும்
காரப்பா குருவருளால் கண்டுதேறி
கருணையுடன் பிராணாயக் கருவைக்கண்டு
தேரப்பா தேறிமனந் தெளிவாய்நின்று
சிவசிவா சிவயோகத் தீர்க்கமைந்தே. 251

அஞ்சாமல் ஆறுவகை பிரத்தியாகாரம்
அப்பனே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
குஞ்சான சரீரம்என்ற பிரத்தியாகாரம்
உருவான இந்திரியம் பிரத்தியாகாரம்
நெஞ்சான பிராணனென்ற பிரத்தியாகாரம்
நிஜமான கரணமென்ற பிரத்தியாகாரம்
பஞ்சான காமியமாம் பிரத்தியாகாரம்
பார்மகனே சர்வசங்க பிரத்தியாகாரம். 252

## பிரத்தியாகாரம்

காரமென்ற பிரத்தியா காரம்ஆறும்
கருணையுடன் சற்குருவால் கண்டறிந்து
வீரமென்ற மனதாலே யோகம்பாரு
வேதாந்த சாஸ்திரத்தை விரும்பிப்பாரு
சாரமென்ற அமிர்தரச பானங்கொள்ளு
சதாகாலம் பூரணத்தில் சார்ந்துநில்லு
பாரமென்று மனஞ்சலித்து விட்டாயாகில்
பத்திமுத்தி காணவெகு அரிதாம்பாரே. 253

## தாரணை

பாரடா தாரணையில் ஆறுவிதங்கேளு
பதிவான பூததா ரணைதானொன்று
நேரடா பிராணதா ரணைதானொன்று
நிசமான காரணதா ரணைதானொன்று
தேரடா தெய்வதா ரணைதானொன்று
சேர்ந்துனின்ற தத்துவதா ரணைதானொன்று
காரடா பிரமதா ரணைதானொன்று
கருணையுடன் ஆறுவிதங் கண்டுபாரே 254



## தியானம்

கண்டுபார் தியானவகை பத்துஞ்சொல்வேன்
கருணைபெற தேகமென்ற தியானமொன்று
நின்றுபார் சடாதார தியானமொன்று
நிசமான மண்டலத்தில் தியானமொன்று
விண்டுபார் பிரம்மத்தின் தியானமொன்று
விபரமுடன் மாலுடைய தியானமொன்று
சென்றுபா ருத்திரனார் தியானமொன்று
சிவசிவா தேவாதி தியானமொன்று
ஒன்றாக விஸ்வமென்ற தியானமொன்றே. 255
உத்தமனே பிரணவத்தின் தியானமொன்று
நின்றாடும் நிராதர தியானமொன்று
நிசமான தியானவகை பத்துமைந்தா
அண்டர்தொழுஞ் சற்குருவைத் தியானம்பண்ணி
அகண்டபரி பூரணமா அறிவில்நின்று
நன்றாக சிவயோகத் திருந்துகொண்டால்
நாதாந்த முத்தரென நாடுவாரே. 256

## சமாதிவகை

நாடவே சமாதிஐந்தும் சொல்லக்கேளு
நாதாந்தத் தந்துவலய சமாதியொன்று
கூடவே விகற்பமாஞ் சமாதியொன்று
குறியான நிர்விகற்பச் சமாதியொன்று
தேடவே சஞ்சார சமாதியொன்று
தீர்க்கமுள்ள அருள்பெருகுஞ் சமாதியொன்று
ஆடவே சமாதிவகை ஐந்தும்பார்த்து
அஷ்டாங்க யோகமென்ற எட்டில்நில்லே. 257

## இயமவகை

நில்லப்பா அஷ்டாங்கம் எட்டுமாச்சு
நேராக இயமமென்ற பத்துங்கேளு
சொல்லப்பா லக்ஷணத்தைச் சொல்லுகிறேன்கேள்
சுகமான நரமிருக பக்ஷியென்றும்
விள்ளப்பா உந்தனிட சுகதுக்கம்போல்
மேன்மைபெற பார்க்கஅங் கிசையென்பார்கள்
நல்லப்பா சித்தாதி சொல்லுவதுமைந்தா
நாட்டமுடன் வேதாந்தி சொல்லுவதுங்கேளே. 258



Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

கேளடா கைகடந்தைம்பொறி வழியில்நின்று
கிருபையுடன் அகண்டம்என்ற பூரணத்தைமைந்தா
வாழடா அறிந்துபர சித்தனாகி
வகையான ஆதிவர்னாச் சிரமத்தாலே
கோளடா விகற்பமெல்லாங் கண்டுதள்ளி
கூர்மையுடன் மாறாமல் அங்கிசையாய்ச்சார்ந்து
ஆளடா அல்லிநின்ற நீரைப்போலே
அமர்ந்திருந்த அங்கிசைதான் என்பாரப்பா
மானடா மயங்கினின்ற பொய்யைவிட்டால்
மகத்தான சத்தியந்தான் என்பார்தானே. 259

தானென்ற வஸ்துவையும் தவிரவேறே
சாதகந்தான இல்லையென்று சஞ்சலித்து
பானென்ற சத்தியமாம் வாக்குக்காயம்
பத்தியுடன் சுத்தமதாய் பதிவாய்நின்று
ஆனென்றே இருக்கிறதை ஆத்தீகமென்பார்
அன்னாதசர சரீரத்தை சுலபமாக்க
கோனென்று நிதானித்து பின்னையொன்று
கூறாதே ஆர்த்தீகம் என்றுசொல்லே. 260

## பிரம்மம்

சொல்லாது ருதுகால மில்லாநேரம்
சுகமான பெண்வெறுத்தால் பிரம்மமென்பார்
உள்ளான சரீரமே சுபாவமாக
உத்தமனே லக்ஷணமா விருத்தியாலே
நல்லான பிரம்மமதே சுபாவமென்று
நன்மையுடன் நிரந்தரமும் ஆலோசித்தால்
வில்லான திதுபிரம்ம சரீரமென்று
விரிந்துரைப்பார் வேதாந்தி அறிவார்பாரே. 261

பாரப்பா சித்தாந்தி சொல்லுவாரும்
பதிவான சமுசாரம் ஆகாதென்பார்
நேரப்பா தன்னுடம்பில் வருத்தம்விட்டு
நிசமாக சுகவருத்த லிதயந்தன்னில்
சாரப்பாத் தன்னனந்தம் வந்தாலுந்தான்
சாதகமாய் சத்துருவுக் கிதமேசெய்யில்
பேரப்பா ஆக்ஷேப மிதையென்பார்கள்
பேய்மக்க ளிதுவல்ல சொல்லக்கேளே. 262



சொல்லக்கேள் வேதாந்த சாஸ்திரமேசெம்மை
சூதென்றலைந்த சமயமெல்லாந் தொல்லையென்று
அல்லக்கேள் திடப்படுத்தல் ஆக்ஷேபமாகும்
அடங்காத சத்துருவால் வியாதிபீடை
விள்ளக்கேள் இதுகளிலே புத்திமலமற்று
விபரமுடன் இருக்கிறதே சமயமென்பார்
சொல்லக்கேள் சுகதுக்கம் உதிரபந்தம்
செகமாய்கை மானாபி மானங்கேளே. 263

காணடா அபிமான சொப்பனத்தை
கசடான மனதாலே தாங்கலற்று
பேணடா தொய்தநிலைப் பெற்றாராகில்
பெருகிநின்ற சமயமிது பிலமாய்ப்பாரு
ஊணடா காரியத்தில் மனதிக்கோணை
உருகாம லிருக்கிறதே தரித்திரமென்பார்
தோணடா வேதாந்தத் தாலேமுத்தி
சுத்தமுட னமைத்தொன்று மில்லைத்தானே. 264

இல்லையடா இதைவிட்டால் முத்தியென்று
யேகாந்த யெக்கியமா முனிதான்சொன்னார்
தொல்லையடா மற்றதெல்லாம் என்றுபூண
சுகமான திருதியென்ற திதுவுமாச்சு
கல்லையடா ஆகாரச் சுருக்கில்மைந்தா
கருணையுடன் மிதாகாரமென்பாரையோ
அல்லையென்ற சொற்பனத்தில் பத்தைதான்கண்டு
அடங்கிநின்றால் பிரபஞ்ச மகிலந்தானே. 265

அகிலமெல்லாந் தானாகி அசைவுமற்று
அகண்டபரி பூரணமா இருந்தோம்நாம்தான்
தகிலமெல்லா முண்டசலம் போலேநின்று
தன்னைப்போல் ஊரைப்பார்க்கி ளமிதாசாரந்தான்
பகிலமென்றப் பிரதிகையும் நிறந்தன்னாலே
பரவிநின்ற பாசத்தைப் பருவமாக
ரகிலமென்ற காமமொடு குரோதந்தன்னை
உட்ச்சவுசம் புறச்சவுச மென்பார்காணே. 266

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

காணப்பா வேதாந்த சாரத்தாலே
காலமென்ற திருதிகளை காணேனென்று
வீணப்பா வந்ததில்லைப் போனதில்லை
வேதாந்த குருமுகத்தை தெரிந்துகொண்டு
தோணப்பா யெக்கால வஸ்த்துதானாம்
சுகமாக இருப்பதுமே சவுமாச்சு
ஆணப்பா இயமமென்ற பதினொன்றுஞ்சொன்னேன்
அறிந்துகொண்டு நியமமதை அருளக்கேளே. 267

## நியமவகை

அறிவான மறையினுள்ளே பிரிந்ததென்னும்
அப்பனே நிஷ்களமாஞ் சந்திராயணத்தை
நெறியான விரதமதாய் சரீரம்வத்தி
நேர்மையுட விருப்பதையோ தபசென்பார்கள்
விரிவான சத்தியந்தான் என்பதேது
விபரமெல்லாம் வித்தையென்று சொல்வதேது
சரியாக தானென்னப் பட்டதாரு
சங்கையுடன் நானென்ற சொல்தானாரே. 268

சொல்லான நமக்குவந்த சொந்தமேது
சோத்தியந்தான் வந்தவகை எதுதானென்றும்
நல்லான வருத்தமதாய்ப் பார்த்துப்பாத்து
நன்மையுடன் நிரந்தரமு மாலோசித்து
பொல்லாது பூணதெல்லாம் விருத்திபண்ணி
புத்தியுடன் திடப்படுதல் தபசாச்சப்பா
நில்லாமல் கிடைத்தமட்டும் சந்தோஷித்து
நன்மையுடன் இருப்பதுவே சந்தோஷங்காணே. 269

காணடா பிர்ம்மாதி லோகத்துள்ளே
கலந்தசுரான் பீடமுதற் சிந்தித்தெண்ணி
தோணடா நாகம்போல் வெருப்புவந்து
சொற்பனம்போல் அசத்தென்று தூரத்தள்ளி
ஊணடா உண்மையென்ற வேதாந்தத்தை
உணர்ந்து சச்சிதாநந்த மயமாகநின்று
பூணடா தடையற்றுந் தெளிந்துநின்றால்
புத்தியுடன் ஆனந்த வடிவுமாமே. 270



வடிவாக இருப்பதுவே சந்தோஷமாகும்
வரிசையுடன் ஆகம புராணந்தன்னை
படிவாக விட்டுவிட நின்றுகொண்டு
பத்தியுடன் வேதாந்த பொருளென்றெண்ணி
முடிவாக அத்திவுரித் தடிமேல்நின்று
முன்பின்னாயாகுகிற முறையாதென்று
அடியார்கள் சொல்லுகிற கருவைக்கேளு
அவர்சொல்லும் பூரணமு மறிந்துபாரே. 271

அரிந்துகொண்டால் ஆர்த்திக மிதுவேயாச்சு
அருள்பெருகத் தெரிகின்ற பொருளையெல்லாந்
தெரிந்துகொண்டு புண்ணியமாம் காலதோஷஞ்
செயலறிந்து கொடுப்பதுவே தானமென்பார்
அரிந்துநின்று குருச்சொல்லைத் தானுட்கொண்டு
மார்க்கமுடன் முத்தனாய் மனமொன்றாக
சொரிந்துமிக தன்னுடைய சொத்தையெல்லாம்
சுகமாக குருபதத்தில் தியானம்பண்ணே. 272

பண்ணடா சிவனயன்மால் வேதியோர்க்கும்
பதிவான அரதேசி பரதேசிக்கும்
நண்ணடா க்ஷத்திரியர் வைசியரோடு
நலம்பெறவே தரணிதன்னில் பிறருக்கெல்லாம்
உண்ணியே தானதர்மஞ் செய்யென்றேதான்
உத்தமனே உலகத்தோர் சொல்வாரையா
துண்ணியே தனந்தேகம் சுகபோகம்போலே
சுகமாக சகலமெல்லாந் துலங்கக்கேளே. 273

கேளடா சகலசித்தும் பொசித்ததெல்லாங்
கிருபையுடன் நமக்கெனவே திருத்திக்கொண்டு
நாணடா வொருமித்துக் கவனிப்பார்க்குபுண்ணியம்
நன்மையுடனாச்சுதென்று அறிந்துகொள்ளு
வாணடா சாஸ்திரத்தின் பயனோடப்பா
வரிசையாய்க் கோர்க்கிறதே சிரவணமாகும்
ஆணடா சாஸ்திரங்க ளெல்லாம்விட்டு
அசைந்தாடும் விருத்தியெல்லாம் பிடித்துத்தள்ளே.
274

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

தள்ளியுந்தன் நிழல்போலே குருவானபின்னே
சச்சிதா னந்தமயந் தானென்றெண்ணி
தெள்ளிமையாய் தெளிவுக்குச் சித்தாந்தத்தில்
சேர்ந்துகொண்டு கேட்கிறதே சிரவணமாகும்
நள்ளினமாம் பிரவிர்த்தி நிவர்த்திபண்ணி
நன்மையுடன் இருக்கின்ற பிரஜைகளெல்லாம்
அள்ளிமலப் பூரணமே தெய்வமென்று
அறிவிக்கும் புத்தியடா சிரவணமாமே. 275

ஆமப்பா சத்தான வியாபாரத்தில்
ஆதாரம் வெகுகோடி அமர்ந்தாலுந்தான்
தாமப்பா அதின்மேலே அபேகைஷவிட்டால்
சங்கையுடன் மரியாதை இலட்சையென்பார்
சாமப்பா கேட்டிருந்த ஞானமெல்லாம்
சங்கையில்லா நிலைகுலைந்து தானேசந்நி
நாமப்பா சரியாமல் பெண்டீர்பிள்ளை
நன்மையுள்ள பாசமெல்லாம் ரேசிச்செண்ணே. 276

எண்ணியதோர் மாயாநி வந்தாலுந்தான்
என்மகனே அனிசகத்தி லிருந்துகொண்டு
துண்ணியந்த சிந்தாந்த நிலையில்நின்றால்
துலங்கிநின்ற வகையென்று சொல்லலாகும்
உண்ணியந்த கோளைவிட்டு தெளிவுவந்தால்
உத்தமனே மதியென்பார் உண்மையாக
குண்ணியந்த வேதாந்த நிலையில்நின்று
குருவான பூரணத்தைக் குவிந்துநோக்கே. 277

நோக்கென்று சொன்னதிலே நோக்குநோக்கு
நோக்கினதால் மதியென்று சொல்லலாகும்
வாக்கென்றும் குருசொன்ன மந்திரத்தைசெவித்து
மார்க்கமுடன் நின்றதால் சிவமதாச்சு
போக்கென்று மனதற்று வேதாந்தம்பார்த்து
புத்தியுடன் பூரணமாய் தள்ளியெல்லாந்
தூக்குகின்ற மோனமுற்றால் சிவமுமாச்சு
சுகமாக மற்றதெல்லாஞ் சிவமல்லபாரே. 278



பாரப்பா குருசொன்ன சாஸ்திரத்தின்படியே
பத்தியுடன் நடக்கிறதே விரதமென்பார்
நேரப்பா எந்தெந்தக் காரியங்கள் வந்தும்
நேர்மையுள்ள துக்கம் வந்து நாம் பிர்மமென்று
தேரப்பா நிரந்தரமும் வேதம் பார்த்து
செம்மையுடன் நிற்பதுவே விரதமென்பார்
சாரப்பா நேமமென்ற பத்துஞ் சொன்னேன்
சங்கையுடன் இருவகையுந் தானேகாணே. 279

காணவே இருவகையும் பார்ப்பானாகில்
கலங்கிமனஞ் சுவரில்லாச் சித்திரம்போலாம்
பூணவே அடிப்படையை வைக்குமுன்னே
பூட்டுகின்ற குளிகைக்கு மொக்குமொக்கு
பேணவே காயசித்தி பண்ணுமுன்னே
பேறான சதுர்யுகங் கண்டபேர்க்கும்
தேணவே செடத்தோடே முத்திகாணான்
சொக்கினபின் முத்தியென்றசொல்லுங்காணே. 280

## ஆசனமொன்பது விவரம்

காணடா ஆசனத்தை விரித்துச்சொல்வேன்
கருவாக கோற்றிக ஆசனத்தைக்கேளு
தோணடா முழந்தாட்கு ளச்சிரெண்டில்
சுகமான பதமிருக்க கோற்றிகமாச்சு
பூணடா சிங்கா சனத்தைக்கேளு
பூரணமாய் ஒட்டியான பந்தம்பண்ணி
பேணடா முழந்தாள்மேல் கரங்கள் நீட்டி
பிராணனென்ற தாரணையைப் பார்ப்பார்
பாரே. 281

பாரப்பா பத்திர சனத்தைக்கேளு
பதிவாகத் தானறிந்து காலைரெண்டும்
காரப்பா பிரகாலை கையால் கட்டி
கண்ணறிந்து தானோக்க ஆசனமுமாச்சு
சாரப்பா முத்தான ஆசனத்தைக் கேளு
சங்கையுடன் பரடுமேல் பரடுபோட்டு
சேரப்பா குதத்துக்குள் குதிகால்வைத்து
செம்மையுடன் தானிருக்கத் திறந்தானாமே. 282

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

ஆமப்பா கோமுகா சனத்தைக்கேளு
அங்கமுடன் முழங்கால்மேல் முழங்கால் போட்டு
தாமப்பா பாதம்ரெண்டில் கையையூணித்
தானிருக்க கோமுகா சனமதாச்சு
நாமப்பா வீரமென்ற ஆசனத்தைக் கேளு
நாட்டமுடன் இடக்கால்மேல் வலக்கால்போட்டு
ஓமப்பா கோமுகம்போல் இருந்து கொண்டால்
உத்தமனே வீரமென்ற வுறுதிபாரே. 283

உறுதியுள்ள பத்மமதை சொல்லக்கேளு
உண்மையுடன் பாதம்ரெண்டும் துடைமேலேற்றி
சுருதியுடன் கைரெண்டும் முழந்தாள் வைத்து
சுத்தமுடன் தன்னகத்தை சுகமாய்ப் பார்க்க
பரிதியுள்ள பத்மாசன மிதென்று
பதிவான வேதாந்தப் பெரியோரெல்லாம்
வரிதியுடன் யெக்கியமா முனிதான் சொல்ல
மகத்தான ஆசனத்தை மகிழ்ந்தார்காணே. 284

காணவே மயூறா சனத்தைக் கேளு
கருணையுடன் கைரெண்டுந் தரையிலூன்றி
ஊணவே முழங்கையை உந்தியிலே வைத்து
உகந்து நின்ற சிம்மம்போல் உறுதிகொள்ளு
பேணவே சுகமுத்தா சனத்தை சொல்வேன
பேணிமனங் கொண்டபடி யிருக்க நன்று
பூணவே ஒன்பதுக்கும் விபரஞ்சொன்னேன்
பூரணமாய் பிராணாயப் பொருளைக்கேளே. 285

## பிரணாயாமம்

பொருளான ரேசகந்தான் விடுவதப்பா
புத்தியுடன் பூரகந்தான் உள்ளே வாங்கல்
அருளான கும்பகந்தான் அண்டத்தெல்லை
அரகரா சவுபீசம் மந்திரமார்க்கம்
திருவான நிற்பீசம் மந்திரத்தைவிட்டு
சிவசிவா வெளிதனிலே பூரித்தேகில்
உருவாக அஞ்சவிதம் வெளியாய்ச் சொன்னேன்
உத்தமனே ஆசனத்தி லிருந்து பாரே. 286



பாரப்பா மாத்திரைதான் முப்பத்திரண்டு
பரிவாக பூரிப்பாய் மூலத்துள்ளே
சாரப்பா மாத்திரைதான் அறுபத்தினாலு
சங்கையுடன் கும்பித்துப் பாருபாரு
காரப்பா மாத்திரைதான் பதினாறாக
கனிவாக ரேசிப்பாய் தவுடாமல்
நேரப்பா இம்முறையைப் பதனம்பண்ணி
நேர்மையுடன் பிரம்மதல மறிந்து ஓதே. 287

அறிந்துபிரம்ம நிலையறிந்து நன்றாயோது
அதின்பிறகு விஷ்ணுவிலே அமர்ந்துவோது
தெரிந்து ருத்திர நிலையறிந்து திறமாயோது
சிவசிவா மயேசுரத்தில் திறமாயோது
வருந்திமன நிலையறிந்து மைந்தாமைந்தா
மகத்தான சதாசிவத்தில் வந்துகூடி
விரிந்ததலந் தனையறிந்து ஓதியேற
விள்ளுகிறேன் பிராணாயம் ஒன்றேயாச்சே. 288

ஆச்சப்பா பிராணாயம் அறிந்து செய்தால்
அனேகமென்ற பாவமெல்லாம் அகன்று போகும்
மூச்சப்பா பிராணாயஞ் செய்யச் செய்ய
முக்கியமுடன் தேகத்தில் வேர்வை கொள்ளும்
நீச்சப்பா மும்மலமுங் கழிந்துபோகும்
நேர்மையுடன் நாடியெல்லாஞ் சித்தியாகும்
காச்சப்பா திசைனாதங் காதிற்கேழ்க்கும்
கருணையுடன் பிராணாயங் கருதக்கேளே. 289

கேளப்பா எட்டுவகை பருவமுண்டு
கிருபையுடன் புலத்தியனே சொல்லக்கேளு
காளப்பா கழண்டுவெகு வேர்வையானால்
கருத்துடனே தம்பிக்கும் ரெண்டாம்பக்ஷம்
வாளப்பா அக்கினிதான் சொலித்து நின்று
மகத்தான தீபனமாம் மூன்று பக்ஷம்
கேளப்பா யில்லாமல் வாசியேறி
குருபதியில் தீபமுண்டாம் நாலாம்பக்ஷம் 290

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

பட்சமுடன் தன்னறிவே சாட்சியானால்
பரிந்து பிரகாசிக்கும் ஐந்தாம்பட்சம்
பிச்சையுடன் குண்டலியிற் சத்தங்கொள்ளும்
என்மகனே சொல்லுகிறேன் ஆறாம்பட்சம்
அச்சமற ஏழுக்குள் மைந்தாகேளு
ஆகாச கெவுனமடா அதிகமாகும்
மெச்சவே தூரதிஷ்டி அறியப்பண்ணும்
மெய்ஞ்ஞானம் எட்டினுள் மேன்மைத்தானே. 291

காணவே எட்டினிலே திட்டமானால்
கர்மமென்ற தீவினைகள் காணாதோடும்
பூணவே ஆதாரஞ் சித்தியாகும்
பூரணமும் காரணமும் பொருந்துமையா
தோணவே சொருபமதாய் சோதியாகும்
சுகசீவ பிராணகலை சோபிக்கும்பாரு
பேணவே பிராணாயம் பெலத்துதானால்
பேரண்டஞ் சித்தண்டந்தான் தானாச்சே. 292

## பிரத்தியாகார வகை

ஆச்சப்பா சொல்லுகிறேன் பிரத்தியாகாரம்
அப்பனே வாசினையின் வழியிற்சென்று
மூச்சப்பா நடத்தி வைக்கும் இந்திரியப்பாம்பு
முனையறிந்து மரித்கிறதே பிரத்தியாகாரம்
நீச்சப்பா நிலையான பிரத்தியாகாரம்
நிசமாகும் ஆறுவிதம் உண்டுபாரு
பேச்சப்பா பேச்சறிந்து ஆருவிதந்தன்னைப்
பிலமான புலத்தியனே சொல்லக்கேளே. 293

சொல்லக்கேள் சரீரமென்று பிரத்தியாகாரஞ்
சுகமாகச் சமாதியிலே இருத்தலொன்று
விள்ளக்கேள் அறிவென்ற சிவமதொன்று
விபரமுடன் கண்டுணர்ந்த மேன்மையாகி
அல்லக்கேள் நாடிசுத்தியான பின்பு
அப்பனே இளமையெல்லாம் காப்பதென்றுஞ்
சொல்லக்கேள் ரெண்டு விதங் கண்டு கொள்ளு
சிவசிவா இந்திரியச் செயல்தான் பாரே. 294



பாரப்பா யிந்திரியந் தன்தன் போக்காய்ப்
பதியைவிட்டு போகாமற் சமாதி தன்னில்
நேரப்பா பூட்டறுத்து நின்றால் மக்காள்
நேர்மையுடன் பிராணனென்ற பிரத்தியாகாரஞ்
சேரப்பா நாடிசுத்தி செய்தபின்பு
சிவசிவா உச்சிமுதற் உருவந்தொட்டு
காரப்பா தோத்திரமுந் தொக்குசச்சு
கருவான சுங்குடனே ஆக்கிராணங்காணே. 295

காணவே அடிநாக்குக் கண்டம் நெஞ்சு
கருவான உதிரமொடு நரம்புநாபி
தோணவே துடைமுழங்கால் பாதங்கேளு
தொகுத்துநின்ற அங்குஷ்டங் களிலே மக்காள்
பூணவே பிராணனைத்தான் தானம்விட்டு
புத்தியுடன் அழைக்கிறது தலைகீழாகும்
பேணவே பிராணனென்ற பிரத்தியாகாரம்
பிரதான மானநிலை பேசுவேனே. 296

பேசுவேன் அந்தரங்க கரணம்தன்னை
பிரபஞ்ச மாய்கைதன்னை நீக்கிமைந்தா
தேசுவென்ற காரியமாம் வஸ்துதன்னைத்
தெரிந்துகொண்டு சங்கற்ப விகற்பமெல்லாம்
ஆசுவென்ற மரைப்பித்து விராணதாரை
அங்கமுடன் பண்ணுகிற யோகந்தன்னில்
வீசுகிறேன் ஆகமென்ற வேதாந்தத்தை
விபரமுடன் ஞானமதில் நிருத்தல்நன்றே. 297

நன்றான காரியந்தான் பிரத்தியாகாரம்
நன்மையுடன் தனதான்னியம் பொன்னும்மண்ணும்
நின்றாடும் புத்திரருஞ் சகலவித்துங்கண்டால்
நேர்மையுடன் நாகம்போல் காணுமக்காள்
ஒன்றான வைராக்யம் வந்துதானால்
உத்தமனே விடுதல்மெத்த உசத்திநன்று
பன்றான சருவங்கம் பிரத்தியாகாரம்
பதிவித்து வாமவேதாந்த பலனைக்காரே. 298

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

காரப்பா சாக்ஷியெங்கும் நாமாய்நின்று
கவிழ்ந்துநின்ற மாயமெல்லாம் நமக்குக்கீழே
சாரப்பா நிரந்தரமும் உரைத்துநின்று
சகலபிர பஞ்சமெல்லா மிருத்துவென்று
நேரப்பா நின்றவனே அதன்தாள்புத்தன்
நினைவான ஆறுவகை அறிவித்தேதான்
பேரப்பா ஆறுவிதத் தாரணையைச் சொல்வேன்
பெருகிநின்ற பூதமஞ்சு சமத்தாய்க்கேளே. 299

## தாரணைவிபரம்

கேளப்பா சரீரத்தில் பஞ்சபூதம்
கிருபையுடன் சூடுகிற தரனத்துள்ளே
சூளப்பா மண்டலத்தில் வர்ணமூர்த்திச்
சுகமாகத் தாவிருக்க பிராணதாரை
வாளப்பா பதிவான மூலத்துள்ளே
வணக்கமுடன் பிராணனைத்தான் தரிசிக்கப்பணி
ஆளப்பா சிரமத்தோடு உண்ணப்பண்ணும்
அப்பனே ராப்பகலாய்க் காணுங்காணே. 300

காணப்பா குருவசனந் தெரிந்துகொண்டு
கலந்துநின்ற மாய்கையொடு மாயாவின்பம்
பேணப்பா சைதன்னியம் இந்தமூன்றும்
பிலமான ஆபீசம் போலேபாரு
தோணப்பா மறைந்திருக்கக் கண்டாலுந்தான்
துகளருத்து திர்க்கமுடன் முத்தியாக
பேணப்பா அறிவுடனே என்க்ஷேரந்தாள்
பிலமாக நிற்கிறதோர் திறந்தான்பாரே. 301

## தியான விபரம்

பாரப்பா லோகத்தில் பிரமந்தாயென்று
பதிவாக நிச்சயித்து மனதுபூண்டு
நேரப்பா அறிவல்லோ தாரணையுமாச்ச்
நிலையான தியானமதின் நேர்மைகேளு
காரப்பா அகிலமெல்லாம் போதமாக
கண்கண்ட சடமெல்லாம் அகண்டமாகி
நேரப்பா வெளியெல்லாம் நிர்மலாய்க்காண
நேர்மையுள்ள தியானமிது நினைவாய்க்காணே.
302



காணவே அமரபக்ஷம் பூர்வபக்ஷந்தன்னில்
கலந்துநின்ற ஆசனத்தில் கருணைவைத்து
பூணவே குண்டலமுங் கிரிடமுஞ்சாத்தி
புகழான சரஸ்வதியும் வாமபாகம்
பேணவே பரிவாரஞ் சூழ்ந்துநிற்க
பெருமையுடன் இருதயத்தில் தியானம்பண்ணி
தோணவே மானதமாய்ப் பூசைசெய்தால்
சுத்தமுடன் தியானமடா சுகமாய்ப்பாரே. 303

## மால்தியானம்

பாரப்பா மாலுடைய தியானங்கேளு
பத்தியுடன் பச்சைவர்ண ரூபமாக
நேரப்பா சங்கொடு சக்கரமுமாக
நிசமான புஷ்பமொடு சக்கரங்கள்சாத்தி
காரப்பா லக்ஷ்மியும் வாமபாகம்
கண்ணரிந்த முத்திரையுந் துளசிமாலை
சேரப்பா லக்ஷ்மியும் வாமபாகம்
திர்க்கமுடன் தியானிக்கத் தியானமாச்சே. 304

ஆச்சப்பா ருத்திரனை தியானஞ்செய்து
அரகரா அஞ்செழுத்தும் ஆயுதங்களோடு
காச்சப்பா குண்டலமுங் கிரீடம்வைத்து
கருணையுள்ள ருத்திரியும் வாமபாகம்
பேச்சப்பா தாவிருத்தி மவுனமாக
பெருமையுடன் இருதயத்தில் பேணிப்பார்க்க
மூச்சப்பா அடங்கி நின்ற தியானமாச்சு
முத்தியுடனே தனித்து இருந்துபாரே. 305

இருந்துகொண்டு மயேசுரனைத் தியானம்பண்ணி
இருள்கண்ட வெளிபோலே இன்பங்கொண்டு
வருந்திநின்ற குண்டலமுங் கிரீடஞ்சாற்றி
மகத்தான மயேஸ்வரியை வாமம்வைத்து
சொரிந்தமுர்தம் பூர்ணமாய் போதங்கொண்டு
சுகசிவ பிராணகளை சுத்தமாக
அருந்தலமா இருதயத்தில் நினைக்கமைந்தா
அப்பனே மயேஸ்வரனார் தியானங்காணே. 306

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

### சதாசிவத்தியானம்

காணவே சதாசிவனார் தியானங்கேளு
கருணையுடன் பஞ்சவர்ண ரூபமாக
தோணவே மனோன்மணியும் வாமபாகம்
சுகமாக தேவகணஞ் சூழ்ந்துநிற்க
பேணவே இருதயமாங் கமலந்தன்னில்
பிரியமுடன் தானினைந்து தியானித்தாக்கால்
பூணவே நினைத்தவண்ணங் கண்ணிற்காணும்
புனிதமுள்ள தியானமதை பூண்டுபாரே. 307

பாரப்பா இப்படியே ஆறுவகைத்தியானம்
பதிவான மண்டலத்தில் மூன்றுவகைத்தியானம்
நேரப்பா தானிருந்து உபாசிப்பார்கள்
நேர்மையுள்ள தேவாதி தியானமாச்சு
வேரப்பா விஸ்வமென்ற தியானஞ்சொல்வேன்
விளங்கிநின்ற பிரபஞ்சந் தான்தானென்று
காரப்பா அகண்டவெளி ரூபமாக
கருணையெனத் தானிருக்கத் தியானமாச்சே. 308

### அத்தோயுதம்

ஆச்சப்பா அத்தோய தியானங்கேளு
அண்டரண்ட புவனமெல்லாம் தாமென்றெண்ணி
மூச்சப்பா சகலவுயிர் தாமென்றெண்ணி
முடிவில்லா மந்திரமுந் தாமென்றெண்ணி.
நீச்சப்பா பஞ்சகர்த்தாள் தாமென்றெண்ணி
நிசமான பரம்வெளிதான் தாமென்றெண்ணி
பேச்சப்பா பேசாத மவுனந்தானாய்
பேரண்டத் துட்பொருளாய்த் தியானஞ்செய்யே. 309

### சமாதிவிபரம்

செய்யப்பா தியானமது பத்துஞ்சொன்னேஞ்
சிவசிவா சமாதியஞ்சுஞ் செப்பக்கேளே
மெய்யப்பா தத்துவலய சமாதியப்பா
விளங்கிநின்ற பத்துமதை நன்றாய்ப்பார்த்து
பொய்யப்பா வென்றறிந்து புருவமேவி
பூரணமாய் கற்பூர தீபம்பார்த்து
மெய்யப்பா மய்யத்தில் நின்றாயானால்
மகத்தான தத்துவலய சமாதியாச்சே. 310



ஆச்சப்பா தத்துவலய சமாதிசொன்னேன்
அரகரா சவ்விகற்ப சமாதிகேளு
நீச்சப்பா நிலையறிந்து வாசியாலே
நிறைந்தபரி பூரணமாய்த் தீபம்பார்க்கில்
காச்சப்பா கருவிகர ணாதியென்ற
கசடறுத்து வெளியொளியாய்க் கண்டுகொண்டால்
பேச்சப்பா சவ்விகற்ப சமாதியாச்சு
பிலமான நிருவிகற்ப சமாதி கேளே. 311

கேளடா நிருவிகற்ப சமாதிதன்னை
கிருபையுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
வாளடா தன்னறிவே சாக்ஷியாக
மகத்தான அண்டமெல்லாம் தான்தானாக
கேளடா சகலவஸ்தும் போதமாக
கண்டதுவும் கேட்டதுவும் மாயமாக
ஆரடா ஆனந்தங் கொண்டாயானால்
அரகரா நிருவிகற்ப மதுதான்காணே. 312

காணவே நிருவிகற்ப சமாதிசொன்னேன்
கருணையுள்ள சஞ்சார சமாதிகேளு
தோணவே அண்டசரா சரங்களெல்லாம்
சுகமாக வேறல்ல நாமென்றெண்ணி
பேணவே தானிருந்து கிரகசூக்ஷம்
பிரியமுடன் கண்டறிந்து வாசிபூட்டு
ஊணவே நடக்கும்போ திறக்கும் போதும்
ஒடுக்கமுடன் மவுனமாய் உலாவுவாயே. 313

வாயான மேல்வாசல் பூட்டும்போது
மகத்தான திக்குயெட்டும் ஒடுக்கமாச்சு
மாயாத ஒடுக்கமதில் ஒடுங்கியந்த
மகத்தான அனுக்கிரகம் வலஞ்சென்றேறி
தாயான சிரமதே போதமாகத்
தானிருக்க சஞ்சார சமாதியாச்சே
தோயாத சஞ்சார சமாதிகொண்டு
சுகமாக ஆரூட சமாதிகாணே. 314

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

காணவே ஆருட சமாதிதன்னை
கருணையுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
பூணவே தத்துவலய சமாதிபெற்று
புகழான சவ்விகற்ப சமாதிபெற்று
பேணவே நிருவிகற்ப சமாதிபெற்று
பிலமதாக சஞ்சார சமாதியாக
தோணவே ஆருட சமாதிகொண்டால்
சுத்தமென்ன அசுத்தமென்ன ரெண்டுமொன்றே. 315

ஒன்றான ஆருட சமாதிகேளு
உண்மையுள்ள புலத்தியனே யருமையாக
கண்டதொரு காக்ஷியெல்லாமனத் தீபமென்று
கால்பிடித்து நடுவேறி முடிமேலாக
விண்டதொரு பஞ்சரிவை யறிவால்நீக்கி
வேதாந்த தரும்வெளி ஒளித்தன்னோடே
நின்றாடிக் கொண்டுசிவ ஜோதியாகி
நின்றதினால் ஆருட சமாதியாச்சே. 316

ஆச்சப்பா சமாதியஞ்சும் நன்றாய்ச்சொன்னோம்
ஆதிதொடுத் தந்தவரை நன்றாய்ப்பாரு
பேச்சப்பா தானிருந்து நன்றாய்ப்பாரு
பெருகிநின்ற அஷ்டாங்க திட்டம்பாரு
மூச்சப்பா முன்னிலையாய் நிறுத்திக்கொண்டு
முத்தியுள்ள நவக்கிரக சூக்ஷங்கண்டு
பாச்சப்பா அனுக்கிரக பதியில்நின்று
பாதாதி கேசமுதல் தன்னைப்பாரே. 317

தன்னைத்தான் தானறிந்து பார்க்கும்போது
தத்துவமாய் நின்றதொரு தொண்ணூற்றாறும்
யெண்ணத்தான் தொலையாது ஆசாபாசம்
யென்சொல்லுவேன் பஞ்சகர்த்தாள் பஞ்சபூதம்
கண்ணைத்தான் தானறிந்து கண்ணில்காணும்
கலையான ரவிமதியும் சுடர்கள்மூன்று
உண்ணத்தான் உகந்தமனம் ஊணிப்பார்க்க
உண்மையென்ற நிச்சயத்தை உரைக்கொண்
ணாதே. 318



ஒண்ணான நிச்சயத்தை உரைக்கவென்றால்
உண்ணாக்கும் அண்ணாக்கும் ஒன்றுங்காணேன்
கண்ணான பேரொளியை என்னசொல்வேன்
கருப்பல்ல வெளுப்பல்ல சிகப்புமல்ல
விண்ணான நீலமல்ல பச்சையல்ல
விளம்புதற்கு அரிதான அண்டத்துள்ளே
பண்ணான பாழ்விட்டு ஈராருக்குள்ளே
பாய்ந்துதன்னை பார்க்கயெல்லா மிருளாய்ப்
போச்சே. 319

இருளான இருளிணிட ஒளியைப்பார்க்க
யென்னசொல்வேன் அதனுடைய இன்பந்தன்னை
மருளான மனம்நிருத்தி மனக்கண்கொண்டு
மாசற்ற பிருவொளியை மகிழ்ந்தோர்தானும்
அருளான பொருளிலே தானேதானாய்
அமந்துவெளி தனையறிந்து ஒளியைப்பற்றி
வெகுளாமலிரு அருளில் தானேதானாய்
விளங்குமருள் பொருளெனவே மேவிப்பாரே. 320

மேவுகின்ற ஆதியந்த மூர்த்திக்குமுன்னே
மெய்ஞ்ஞான இருளதிலே அருளுண்டாச்சு
தாவுகின்ற அருளதிலே ஒளியுண்டாச்சு
தண்ணொளிவு தானதனால் வெளியுண்டாச்சு
கூவுகின்ற பரவெளியால் சதாசிவனே
கூர்மையுடன் பேரண்டம் படைத்துநின்றார்
பாவுகின்ற மயேசுரனார் சத்தத்தோட
பதிவான வாய்வுதனை படைத்தார்பாரே. 321

பாரப்பா ருத்திரனார் தவத்தாலந்த
பக்குவமாய் அக்கினியை படைத்துநின்றார்
பேரப்பா பெற்றதொரு பிரம்மாவுந்தான்
பெருகிநின்ற பூமிதனைப் படைத்தாரப்பா
நேரப்பா திருமால்தான் கருணையாலே
நிச்சயமாய்ச் சலமதனை படைத்துநின்றார்
காரப்பா முன்சொன்ன சத்திசிவம்ரெண்டும்
கருணையுடன் ரவிமதியு மானார்தானே. 322



Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

தானேதான் ஆகிநின்ற எழுவர் தானும்
தனித்துநின்ற பராமரமாஞ் சுழியினுள்ளே
வானேதான் கெதியெனவே சகலசித்தும்
வரிந்துவிளை யாடிமிக வானமுட்டி
ஊனேதான் தானேவே முப்பாழுக்கப்பால்
ஒடுங்கிநின்ற பாழ்வீட்டுக்குள்ளே சென்று
நானேதான் நீயென்று அந்தகாரம்
நலமான இருளதனில் நாடிப்பாரே. 323

பாரப்பா இருளொளியும் வெளிமூன்றப்பா
பதிவான தேகமதில் கண்டுகொள்ளு
சாரப்பா இம்மூன்றின் நிலையைச்சொல்வேன்
சரீரமென்ற சத்தியடா இருள்தானப்பா
நேரப்பா அறிவான ஒளியின்கண்ணு
நிசமான வெளியத்த மாயாமாயம்
காரப்பா மாய்கைவெளி கண்ணோருக்ஷங்
கருவான கண்மறைந்தால் இருள்தான்காணே. 324

காணப்பா இருளதினால் ஒளிவுதான்தோற்றும்
கருவான ஒளியதினால் வெளிதான்தோற்றும்
பேணப்பா வெளியொளியும் எதனாலாச்சு
பெருகிநின்ற இருளதிலே உண்டாச்சப்பா
ஊணப்பா தானொடுங்கும் வகையைக்கேளு
உத்தமனே வெளியதுவும் ஒளியாய்ச்சேரும்
பூணப்பா ஒளியதுவும் இருளில்சேரும்
புத்தியுடன் கண்டறிவாய்த் தன்னுள்தானே. 325

தன்னுள்ளே தானறிந்து தன்னைப்பார்க்க
தனதான மண்டலங்கள் மூன்றினுள்ளே
கண்ணுள்ளே பொரிதனிலே தன்னைக்கண்டேன்
கருணைவர வெளிதனிலே தின்னக்கண்டேன்
விண்ணுள்ளே முச்சுடரைக் கண்டேஅந்த
வேதாந்த முச்சடரின் ஒளியைப்பார்க்கில்
யெண்ணுள்ளே இருளதனில் நின்றுபார்க்கில்
ஏகாந்த நிராமயமாம் அருள்தானாச்சே. 326



ஆச்சப்பா அருள்நிறைந்த புருவமத்தி
அண்டபகிரண்டமென்ற ஆதிவீடு
பேச்சப்பா பெருகிநின்ற ஆதிவீட்டில்
பிலமான பஞ்சகர்த்தாள் பஞ்சசத்தி
மூச்சப்பா நிறைந்தவொரு சுடர்கள்மூன்று
முனையான சுழிமுனைதான் மோக்ஷமென்று
போச்சப்பா அந்திடமே சொந்தமாக
புத்தியுடன் அந்திடத்தைப் பூசைபண்ணே. 327

பண்ணப்பா பூசைவிதி கண்ணேருக்ஷம்
பாலகனே ருக்ஷமென்ற சுடரில்நின்று
நண்ணப்பா ஆதார மூலபாடம்
நாதாந்த மூலமடா நந்திவீடு
மூண்ணப்பா பின்னான நந்திவீட்டில்
மோக்ஷமென்ற அகாரத்தைச் சொல்லக்கேளு
விண்ணப்பா நிறைந்திருந்த புருவமேவி
மேன்மைபெற ஓம்றீங் அம்மென்றோதே. 328

ஓதுவது புருவநடு சுழியில்நின்று
உத்தமனே நூற்றெட்டு உருவேசெய்தால்
மாதுவளர் ஆதார பூசைதானும்
மார்க்கமுடன் சுத்தமதாய் சித்தியாச்சு
கோதுபழு தில்லாத ஆறாதாரம்
குருவான மூலமடா மேலாதாரம்
நீதியுள்ள ஆதாரம் ஈராறுக்கும்
நிரஞ்சனமாய் நின்ற பூரணந்தான்பாரே. 329

பாரப்பா பூரணமாஞ் சோதியுண்டு
பத்திகொண்டு ஆதார பீடமானால்
நேரப்பா ஆதார பீடமீதில்
நிரஞ்சனமாய் நின்றவொரு வாலைதன்னை
காரப்பா கருணைவெளி கண்ணால்மேவி
கமலரச அமுர்தமதை கனிந்துகொண்டால்
பேரப்பா பெற்றவொரு சருவவாலை
பெருகிநின்ற வாலையடா கண்கொள்ளாதே. 330

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

கண்ணான கண்மூடிக் கருத்தொன்றாகிக்
கருணைபெறக் கேசரத்தில் மனக்கண்சாற்றி
விண்ணான நேத்திரத்தை விரலாலாட்டு
விளங்கிநின்ற ரவிபோலே காந்திவீசும்
ஒண்ணான காந்திபிரகாசங் கண்டால்
உத்தமனே அபமிருத்து ஓடிப்போச்சு
முன்னான சோதியிலே மனக்கண்சாற்றி
முத்தியுடன் சுத்தமதாய்த் தன்னைப்பாரே. 331

பாரப்பா சிவயோக வாலைப்பெண்தான்
பத்திநின்ற தசனாதந் தானேகொண்டான்
காரப்பா வாலையவள் இருந்தவீடு
கருணைவளர் கேசரியாங் கமலந்தன்னில்
நேரப்பா சுழிசுழியாம் புருவமீதில்
நின்றிலங்கும் கற்பூர தீபந்தானாய்
சேரப்பா அத்திபச் சுடரிலேதான்
தெளிந்துகொண்டு சிவஞானசிவத்தைத்தேடே. 332

தேடப்பா கண்மூடி விழியைத்தானே
திருவான சுழி முனையில் கருத்தை வைத்து
நாடப்பா நேத்திரத்தைச் சூட்டிப்பாரு
நாதாந்த சுடர்விழியில் விரலாலாட்ட
கூட்டப்பா பிறபையொளி யென்னசொல்வேன்
கோடான கோடிரவி பிறபைவீசும்
சூடப்பா அப்பிறபை தானேகண்டால்
சுகமான சிவருபம் தான்தானாச்சே. 333

ஆச்சப்பா சிவகளை இதுதானப்பா
ஆதியந்த மானதுவும் இதுதானப்பா
பேச்சப்பா பேசாத மவுனமையா
பெருகிநின்ற சாயுச்சிய பதமிதையா
மூச்சப்பா நிறைந்ததிரு வாசியாலே
முத்திபெற நவக்கிரகம் சூக்ஷம்பார்த்து
காச்சப்பா அக்கினிகொண்டு ஆறாதாரங்
கருவான வெளிப்பூசை கண்உண்டேனே 334



கண்கண்ட சிவரூபம் இதுதானப்பா
கருணைவளர் சாயுச்சிய பதமீதையா
விண்கண்ட வெளிப்பூச்சை சரிதை மார்க்கம்
வேதாந்த சுழிமுனையில் மேவிப்பாரு
முன்கண்ட காக்ஷியெல்லாம் அங்குகண்டேன்
முத்தியுள்ள பிறப்புறப்பு முன்னேகண்டேன்
கண்கண்ட ஓங்கார வட்டந்தன்னில்
காணுதடா எட்டு இரண்டுங் கருவாய்க்காணே. 335

## நாதவிந்து

காணப்பா புலத்தியனே உனக்காய்ச் சொன்னேன்
கருவான எட்டிரண்டும் நாதவிந்து
பேணப்பா நாதவிந்து சத்திசிவமாச்சு
பெருகிநின்ற சத்திசிவந் தான்தானென்று
பூணப்பா அறிவதனால் மனமேபூண்டு
புத்தியுடன் சத்திசிவம் உரைக்கக் கேளு
தோணப்பா தனையறிந்து பூசை செய்ய
சொல்லுகிறேன் கருமானஞ் சூக்ஷந்தானே. 336

தானான சூக்ஷமது என்னவென்றால்
தன்மையுடன் போம்வாய்வு சிவமதாகும்
ஊனான உட்புகுதல் சத்தியாகும்
உண்மையுடன் இதுவறிந்து தன்னைப் பார்த்து
கோனான குருபீடம் புருவமத்தி
குருவான அனுக்கிரக சுழினைமீதில்
வானான கேசரமே தானேதானாய்
மனங்குவிந்து பூசை செய்யும் வகையைக்கேளே. 337

வகையான பூரகந்தான் வங்கென்றோது
மகத்தான கும்பகந்தான் அங்கென்றோது
துகையான ரேசகந்தான் சிங்கென்றய்யா
சுத்தமுடன் யோக சாதனையைக் கேளு
பகையான பூரகந்தான் வங்கென்றோது
புத்தியுடன் தானிருக்க மாத்திரை ரெண்டாச்சு
நகையாதே நாலுதிரம் அங்கென்றாக்கால்
நன்மையுள்ள மாத்திரைதான் நாலுமாச்சே. 338

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

ஆச்சப்பா ரேசகஞ்செய் கிங்கென்றேதான்
அணைந்துமிக ஊதிவிடு தள்ளாடாமல்
மூச்சப்பா தானிருந்து இப்படியே செய்தால்
முக்கியமடா சிவயோகம் பூசைதானும்
பேச்சப்பா பேசாமல் மவுனங்கொண்டு
பெருகிநின்ற வாசிதாரணையைப் பற்றி
காச்சப்பா இப்படியே வருஷம் ஒன்றில்
கருவை பெற சிவயோகம் கருதிப்பாரே. 339

## மயேஸ்வரி பூசை

பாரப்பா இந்தவிதந் தேவிபூசை
பதராமல் செய்துசிவ யோகம் பார்த்தால்
நேரப்பா நின்றவனாம் மகனேயென்று
நினைத்தவரந் தான்கொடுப்பாள் நிலையைப்பற்றி
சாரப்பா வாசிசிவ யோகத்தாலே
சார்ந்திருந்து பூரணியைப் பூசைசெய்ய
காரப்பா ஆதாரம் நன்றாய்ப் பார்த்து
கருத்தைவைத்து பூசைசெய்யக் கருவைக்கேளே. 340

கேளப்பா மயேஸ்வரிக்கு வாமபூசை
கிருபையுடன் செய்கின்ற முறையே தென்றால்
வாளப்பா அன்னமுடன் பலகாரங்கள்
வர்க்கவகை நெய்யுடனே பால்ரசங்கள்
ஆளப்பா வெண்தயிரு மண்டத்தோடு
அருள்பெருக வஸ்துவொடு சுத்திவைத்து
காளப்பா தானறிந்து நைவேத்தியஞ் செய்து
கருணைபெற தூபமுடன் தீபங்காட்டே. 341

காட்டடா தூபமொடு தீபங்காட்டிக்
கருணைபெற மானதமாய்த் தியானஞ் செய்து
மூட்டடா மணியோசை சங்கினோசை
முழுக்கடா சகனாத வோசையோடு
கூட்டடா சங்கீத மேளவாத்தியங்
குமறவே நாககுர சாமத்தாளஞ்
சூட்டடா சோட்சமாம் உபசாரங்கள்
சுத்தமுடன் செய்துகெடந் தன்னைவாங்கா. 342



வாங்கியிடு மார்பினிடை அணைந்து மைந்தா
வணக்கமுடன் சிம்றிங்கிலி யென்றேதான்
ஓங்கியொரு மனதாக தியானம்பண்ணி
உத்தமனே புருவநடுக் கமலத்தேகி
தாங்கிமிக ஓம்றிங் அம் என்றோதி
சங்கையுடன் மூலகனை பதியைப் பார்த்து
பாங்குபெற வசிவசியென் றமுர்தமூட்டி
பத்தியுடன் சற்குருவே நமவென்றோதே. 343

ஓதிமனப் பூரணமாய் மைந்தா நீயும்
உண்மையுடன் அமுதுகறி வர்க்கமெல்லாம்
நீதியுடன் மூலமதுக் கற்பணமே செய்து
நேர்மையுடன் சிஷர்களை அருகழைத்து
சோதியென்ற புருவமதில் திருநீறிட்டு
சுகசிவ பிராணிகளை அமுர்தமீய்ந்து
ஆதிபரஞ் சோதிதனைத் தியானம்பண்ணி
அமுதுகறி வர்க்கமெல்லாம் அவர்கட்கியே. 344

ஈய்ந்துமிக ஸின்மாலிய மெல்லாங்கூட்டி
இன்பமுடன் தூபதீபங்கள் காட்டி
ஆய்ந்துநின்ற அரதேசி பரதேசிக்கும்
அன்னமொடு பலகாரம் அன்பாயீந்து
சாய்ந்துமனம் போகாமல் நிலையில்நின்று
சங்கையுடன் வாசிதா ரணையைப்பற்றி
பாய்ந்துமிக ஆதாரத் துள்ளே சென்று
பராபரையே காரணியே அம்பரையே பெண்ணே. 345

## தோத்திரம்

அம்பரமே அகண்டமே ஆதித்தாயே
ஆதியந்த மில்லாத அரூபத்தாயே
சம்பரையே சமரச மவுனஞான
சச்சிதா னந்தவெளித் தாயேதாயே
நம்பரையே நாதாந்த கருணைவித்தே
நானென்றும் நீயென்றும் இல்லாதாலே
உம்பரையே உம்பருக்கும் அரிஅயற்குமெட்டா
ஓங்காரங் கடந்துநின்ற ஒளியை பெண்ணே. 345

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

ஒளியாகி ஒளி நிறைந்த வெளியுமாகி
ஒன்றாகி ரெண்டாகி உறுதியாகி
வளியாகித் தீயாகி வானுமாகி
மவுனரச யோகமென்னும் ஞானமாகித்
தெளிவாகி தெளிவினுள்ளே ஒளியுமாகித்
சித்தாதி ரிஷிகள்சித்தர் மனமுமாகி
தெளிவாகி சுழிவாகித் தெளிவினுள்ளே
நேத்திரத்துக் கடங்காத பூரணமே என்னே. 347

பூரணமே கருணைவளர் போதத்தாயே
போதமய மானசிவ யோகத்தாயே
காரணமே கண்நிறைந்த கமலத்தாயே
கமலரச பூரணமாய் நின்றமாதே
ாரணமாய் சகலசித்துந் தானேதானாய்
மகாமந்திர சொரூபமதாய் நின்றதாயே
தாரணமாய் சகலவுயிர் வாசியாலே
சத்தசுத்த சித்தமுமாய்த் தானேகாணே. 348

காணுகின்ற கர்ப்பூர தீபமாதே
கயிலாச வாசமுள்ள கமலத்தாயே
பூணுகின்ற சத்தாகி சித்துமாகிப்
பூரணமா யானந்த மயமுமாகி
ஊணுகின்ற சித்த சுத்தமுமாகி
ஊஞ்சையுள்ள நாதவிந்து கரணையாகித்
தோணுகின்ற வெளியொளியின் சோதியாகி
சோதியென்ற ஆதியந்த வடிவுமாமே. 349

வடிவாகி முடிவாகி மாலுங்காணா
மன்னுயிர்க்குந் தானான மயமுமாகி
அடியாகி நடுவாகி வானுந்தாண்டி
அண்டசரா சரங்களுட நினைவுமாகி
முடிவாகி நானாகி நீயுமாகி
மூச்சாகி மூச்சற்ற பொருளுமாகி
வடிவாகி அற்றதுமாய்ச் சுழியுமாகி
வழங்கிநின்ற ஆனந்தப் பொருளுமாமே. 350



பொருளான வேதாந்தஞ் சித்தாந்தமாகி
புகழ்ந்துநின்ற சமரசத்தின் போக்குமாகி
அருளாகி அருளிருந்த அகண்டமாகி
அளவற்ற ஆகாச ரூபமாகி
மருளாகி மருள்கண்டு அறிவுமாகி
மகத்தான சோதிசிவ சாக்ஷியாகி
இருளாகி ஒளியாகி வெளியுமாகி
ஏத்தரிய பூரணமா இருந்ததாயே. 351

தாயாகி தந்தையுமாய்ச் சேயுமாகி
சகலஉயிர்ப் பிராணிகளின் சீவனாகி
காயாகிக் கனியாகி ரசமுமாகி
கண்ணாகி விண்ணாகி காந்தியாகி
ஓயாத மணிகெவுன நாதமாகி
ஒன்றுக்கு மடங்காத ஊமையாகிப்
பேயாகி பேர்பெரிய கண்டங்களாகிப்
பேரண்டமான பூரணமே யென்னே. 352

பூரணமாய்க் காரணமாய் புத்தியாகி
போக்காகி வரத்தாகி புகழ்ந்துஎங்கும்
காரணமாய் நிற்குணமாய்க் கருணையாரக்
கண்ணடங்கா விண்ணாகி கருத்துமாகி
வாரணமாய் அதுவாகி இதுவுமாகி
மருவியபின் அதுவற்று இதுவுமற்று
தோரணமாய் அண்டமுதற் பதமுமாகிச்
சொல்லாகிக் குறியாகி நின்றவாறே. 353

குறியாகி வேதாந்தக் காக்ஷியாகி
குணமாகி மனமாகி அதுவுந்தாண்டி
நெறியாகி ஆதியந்த சூக்ஷமாகி
நேரான வாசிதிரு வாசியாகி
சிறிதாகிப் பெரிதாகிச் சீவனாகிச்
சிவநிலை காலாகித் தெளிவுமாகி
பெறிதாகி எட்டுடனே நாலுமாகி
பேரொளியாய்ச் சித்தொளியாய் நின்றதாயே. 354

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

தாயாகி ஆதார மூலமாகித்
தன்னொளிவும் விண்ணொளிவுந் தான்றானாகி
தீயாகிக் காற்றாகி வானுமாகி
செயலாகி மண்ணாகிப் புண்ணுமாகி
வாயாகிக் கண்ணாகி மூக்குமாகி
வானிறைந்த காற்றாகிப் பருசமாகி
சேயாகித் திருவாகிச் செல்வமாகி
தேவிமனோன் மணியாள கண்ணேயென்னே. 355

கண்ணாகி கண்ணிறைந்த சாக்ஷியாகி
கருணைவளர் கற்பூர தீபமாகி
ஒண்ணாகி சத்திசிவம் ரெண்டுமாகி
பூத்தகலை ரவிமதியுஞ் சுடர்மூன்றாகி
விண்ணாகி வேதமென்ற நாலுமாகி
வேதாந்த பஞ்சகர்த்தாள் அஞ்சுமாகி
மூண்மைபெற சடாக்ஷரங்கள் ஆறுமாகி
முத்தியுள்ள வகைதோற்ற மேழுமாமே. 356

ஆமென்ற அஷ்டாக்ஷரங்கள் எட்டுமாகி
ஆதிநவக் கிரகமுடன் தீக்ஷயாகி
ஓமென்ற தீக்ஷதனக்கி உயிராய்நின்ற
ஓங்கார ரீங்கார உருவுமாகி
நாமென்ற நவ்வுடனே மவ்வுமாகி
நலமான சிவ்வுடனே வவ்வும் யவ்வாய்த்
தாமென்ற அய்யுடனே கிலியுமாகி
சகலவுயிர் சவ்வாகி நின்றதாயே 357

தாயாகி மூலகண பதியுமாகி
தங்மையுள்ள நான்முகனு மாலுமாகித்
தீயாகி ருத்திரனும் மயேஸ்பரனுமாகி
சிவசிவா சதாசிவனு மணியுமாகி
ஓயாத முச்சுடரும் ஒளியுமாகி
ஒன்றுமற்று நின்றபொருள் தானுமாகி
வாயாற ஓதுகிற மந்திரமாகி
மந்திரமெல்லாம் அடங்கும் சோதிதானே. 358



## ஆறுவகை முத்திரை விபரம்

சோதியென்ற மயேஸ்பரியைப் பூசைசெய்யில்
சுகமான முத்திரையை சொல்லக்கேளு
ஆதியென்ற முத்திரைதான் ஆர்தான்காண்பார்
அருள்பெருகு முத்திரையை மனதிற்கொண்டு
நீதியுடனாறுவகை முத்திரையைக் கேளு
நிசமான ஆவரகன் முத்திரைதானொன்று
ஓதியதோர் தாவான முத்திரைதானொன்று
உத்தமனே யோனியென்ற முத்திரைதானொன்றே. 359

ஒன்றான திருவினி முத்திரைதானொன்று
உருதியுள்ள சோபினி முத்திரைதானொன்று
நன்றான யோகினி முத்திரை தானொன்று
நாட்டமுடன் ஆறுவகை முத்திரையைமைந்தா
குன்றாத சிவயோக சற்குருவினாலே
குரியறிந்து ஆறுவகை முத்திரையைப்பெற்று
நின்றாடு மயேஸ்பரியைப் பூசைசெய்யில்
நீ மகனே ஆறுவகை முத்திரையைச்சாற்றே. 360

சாற்றுவது அவரவர்கள் முத்திரையைக்கண்டு
சங்கையுடன் ஓமென்று தியானஞ்செய்யில்
பார்த்திபனே சதாகோடி மந்திரமுஞ்சித்தி
பதிவான சகலநிலை சாஸ்திரமுஞ்சித்தி
தேற்றியதோர் ஆதார மூலமதுசித்தி
திருவாசியான தொரு வாசியதுசித்தி
தோத்திரமாய் நின்றதொரு பூசையதுசித்தி
சுகமான ஆவரகன் முத்திரையின்சித்தே. 361

சித்தான தாவான முத்திரையைச் செய்து
தீர்க்கமுடன் கிலியென்று தியானஞ்செய்து
வத்தாத பூரணமாஞ் சிவயோகசித்தி
மகத்தான கற்பூர தீபமதுசித்தி
வித்தான பிற்மமொடு சரஸ்பதியுஞ்சித்தி
வேதமயமான சிவ போதஞ்சித்தி
சத்தான தாபனமுத் திரையின் மகிமை
சங்கையுடன் கண்டுசிவ யோகஞ்செய்யே. 362

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

### திராவினி முத்திரை

காணவே திருவினி முத்திரையைக் கேளு
கைகூட்டி தற்சனி இருவிரலும்விரித்துப்
பூணவே மத்திமையாங் கனிஷ்டமூன்றும்
பேதமுடன் விரலழுந்த திராவினிமுத்திரையாம்
பேணவே முத்திரையைக் குருவருளால்கண்டு
பிலமாக வங்கென்று தியானித்தாக்கால்
தோணவே சகலசித்தி தானேஉண்டாய் 371
சுத்தமுடன் வசிகரமாய் வாழுந்தானே.

### யோனி முத்திரை

தானென்ற யோனிமுத் திரையைக்கேளு
சங்கையுடன் சொல்லுகிறேன் அங்குஷ்டம்
ரெண்டும்
பூணென்ற கனுட்டையடி விரல்படவே வைத்துப்
பொருந்து ரெண்டுங்கைகூப்பிப் பிடித்துக்
கொண்டால்
தேனென்ற யோனிமுத் திரையுமாச்சு
செம்மையுடன் முத்திரையைத் தீர்க்கம்பண்ணி
ஊனென்ற ரீங்காரம் மனதிற்கொண்டு
உறுதியுடன் தான்செபிக்க தேவதைகள்சித்தே.
372

சித்தமுடன் பூசைவழி தன்னில்மைந்தா
தீர்க்கமுடன் பதினாறு முத்திரையைச்சொன்னேன்
சத்தமுள்ள முத்திரைகள் தன்னிலேதான்
சுகமான ஆறுவகை முத்திரைகள்நன்று
பத்தியுடன் ஆறுவகை முத்திரையினாலே
பகுத்தரிந்து ஆதாரத் தெரிசினங்கள்பெற்று
வித்தான பிரவிதனை நன்றாய்நீக்கி
வேதாந்தப் பூரணமாய் விளங்குமுத்தி. 373

### கரத்தின்விரல் மகிமை

முத்தியுள்ள கரத்தின்விரல் மகிமைதன்னை
மோனமுடன் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
பத்தியுள்ள அங்குஷ்டம் பெருவிரலாய்நிற்கும்
பதிவான அடுத்தவிரல் தற்சனையாம்மைந்தா
முத்தியுள்ள நடுவிரல்தான் மத்திமையாய்நிற்குந்
திருவான பவுத்திரந்தான் அனாமிகைதான்
மைந்தா
சுத்தமுள்ள சுண்டுவிரல் கனுட்டியெனலாகுஞ்
சுகமாக இதையறிந்து முத்திரையைச் செய்யே.
374



செய்யப்பா பூசைவிதி அந்தமாகுஞ்
சிவசிவா ஆதியந்தம் ஆர்தான்காண்பார்
மெய்யப்பா ஆதியிலே அமைந்தவிதி மைந்தா
மெஞ்ஞான மூலமடா ஓங்காரந்தான்
மையப்பா ஓங்கார ரவியுமாச்சு
மகத்தான மகாரமடா மதியுமாச்சு
பையப்பா ரவிமதியுந் தானே நின்று
பார்க்க இருள் கண்காகூி தானுண்டாச்சே. 375

ஆச்சப்பா அமைத்தவிதி இதுதானாச்சு
ஆதியந்த பூரணமும் இதுதானாச்சு
மூச்சப்பா நின்றவிடம் அதுதானாச்சு
மூவுலகு மாண்டவிடம் அதுதானாச்சு
காச்சப்பா அந்தஇடம் சொந்தமாக
காலரிந்து மேலானக் கமலக்கண்ணை
பாச்சப்பா காலறிந்து இடைபின்னாக
மிகுந்தறிந்து மூலமதிற் பதிவாய் நில்லே. 376

பதிவான இடமதுதான் புருவமத்தி
பறைஞான கேசரியாள் இருக்கும்வீடு
விதியான வீடறிந்து கெதியென்றெண்ணி
மெஞ்ஞான அமுர்தரசம் கொண்டாயானால்
மதியான சந்திரகலை ரவியிற்சென்று
மகத்தான சோதி பிரகாசங்காணுங்
கெதியான சோதி பிரகாசங் கண்டால்
கேசரத்தை ஆளுகிற வாசிதானே. 37

### முப்புச்சுன்னம்

வாசியென்ற சிவயோகந் தனக்குமைந்தா
மகத்தான காரமுள்ள முப்புசொல்வேன்
தேசியென்ற உப்புடனே காரம்பூரம்
திரமாக மூன்றுமொன்றாய்க் கல்வத்திட்டு
ஊசியென்ற உப்புநீர் தன்னாலாட்டி
உறுதியுடன் தானெடுத்து வட்டுபண்ணி
மாசியென்ற சிவகலசப் புடத்தைப்போடு
மகத்தான சுன்னமிது காரந்தானே.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

தானென்ற காரமடா அண்டச்சத்து
தருவான பூமியுட நாதச்சத்து
வானென்ற வீரமடா பூரச்சத்து
மாற்கமுடன் சத்துவகை மூன்றுங்கூட்டி
மானென்ற கல்வத்தில் நன்றாயாட்டி
மானதிருக் களித்துருட்டிப் புடத்தைப்போடு
ஊனென்ற சத்துவகை மூன்றுமொன்றாய்
உடன் சேர்ந்து உருகியது சுன்னமாச்சே. 379

ஆச்சப்பா இன்னமொரு சுன்னஞ்சொல்வேன்
ஆதியென்ற பூரமு மனந்தஞ்சேர்த்து
காச்சப்பா களிம்பான துரிசுகூட்டி
கல்வமதில் பழச்சாற்றால் நன்றாயாட்டி
மூச்சப்பா தானிருக ரவியிற்போட்டு
முன்னவனைத் தான்பணிந்து புடத்தைப்போடு
நீச்சப்பா நிலையாத காரமாச்சு
நிசமான காரம்வெகு சுன்னமாச்சே. 380

## மூப்புச் செயநீர்

பாரப்பா சுன்னவகை மூன்றுமொன்றாய்ப்
பக்குவமாய்க் கல்வத்தில் வைத்துக் கொண்டு
காரப்பா அறுவகைநீர் தன்னாலாட்டி
கருணை பெறவழித்து உருட்டி ரவியில்போட்டு
சாரப்பா நீர்வத்த நன்றாய்க்காய்ந்தால்
சற்குருவை தான்பணிந்து புடத்தைப்போடு
வீரப்பா தானொடுங்கி நீறிப்போகும்
வெகுசுருக்கு மூன்றுவகை சுன்னந்தானே. 381

தானான மூன்றுவகை ஒன்றாய்நின்று
தன்மையுடன் நீறியது காரமாச்சு
ஊனான காரமுள்ள சுன்னம்போட
உத்தமனே நவாச்சாரம் வீரம்பூரங்
கோனான குருவருளால் நாலுஞ்சேர்த்து
கூர்மையுடன் கல்வமதில் பொடித்துக்கொண்டு
வானான பீங்கானில் வைத்துமைந்தா
மூத்தான சந்திரனில் வைத்துக்காணே. 382



காணவே சந்திரனில் வைத்துப்பாரு
கசிந்து மிகந்தானூறிக் கெங்கையாச்சு
தோணவே கெங்கையென்ற செயநீர் தன்னை
சுத்தமுள்ள பீங்கானில் வடித்து வைத்துப்
பேணவே சரக்குகளில் சுருக்குத்தாக்கப்
பேசாமற் றானடங்கிக் கட்டிப் போகும்
ஊணவே உபரசங்கள் நீறிப்போகும்
உருமையுள்ள சத்துவகை மெழுகுமாமே. 383

ஆமப்பா காரமுதல் சாரமெல்லாம்
அருமையுள்ள செயநீரால் மெழுகுமாகுங்
காமப்பால் கானற்ப்பால் கசிந்துநின்ற
கருவான செயநீரை யார்தான் காண்பார்
சோமப்பால் கண்டவனே சுருநிகாண்பான்
சோர்வன்றி வாதமுறை தானேசெய்வான்
நாமப்பா வென்றகுறி தன்னைநீயும்
நாதாந்த பூரணமாய் நாடிப்பாரே. 384

நாடிப்பார் மூன்றுவகை சுன்னந்தன்னை
நன்மையுடன் கைமுறையாய்ச் செய்து கொண்டு
தேடிப்பார் சரக்குகள்தான் நன்றாய்க்கட்டுந்
திரமான நவலோகந் தங்கமாகுஞ்
சூடிப்பார் தங்கமென்ற அங்கந்தன்னில்
சோதி சிவமயமான அண்டமென்ற
வாடிப்பார்த் தலையாமல் சொல்லக்கேளு
மகத்தான ருத்திரரை வணங்கிக்காணே. 385

## அறுவகை சரக்குக்கட்டு

காணப்பா பூரணமாய் அண்டசத்து
கண்டவர்கள் விண்டதில்லை கற்பாஷாணம்
ஊணப்பா உறுதியுள்ள கற்பாஷாணம்
உண்மையுள்ள வீரமடா லிங்கந்தாரம்
பூணப்பா பிரிதிவியும் அப்புஞ்சேர்த்துப்
புத்தியுடன் ஆறுமொன்றாய்க் கல்வத்திட்டு
தோணப்பா மூன்றுசுன்னச் செயநீராலே
சுத்தமுடன் தானரைத்து சுத்தம்பண்ணே. 386



Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

சுத்திபண்ணும் வகையதுவைச் சொல்லக்கேளு
சுகமாக தானரைத்து வட்டுப்பண்ணி
பத்தியுடன் சட்டிநடு வைத்துச்சாம்பல்
பத்துமிகத் தியெரித்து பதத்தைப்பாரு
சித்தியுடன் அனலெழும்பிக் கட்டிப்போகுந்
தீர்க்கமுடன் தானெடுத்து செப்பக்கேளு
புத்தியுடன் செம்பிலரை வாசிதாக்கிப்
பூரணமாய் வெள்ளியிலே பூட்டிப்பாரே. 387

பார்க்க வெள்ளி தங்கமய மாகப்போச்சு
பரஞான சேகரியின் வாசத்தாலே
வேர்க்கையுடன் சிவயோகந் தங்கிப்போச்சு
யேகாந்த அஷ்டகர்மஞ் சித்தியாச்சு
சேர்க்கையுடன் ஆதார மூலபீடம்
திருவான பீடமதைத் தியானம் பண்ணித்
தீர்க்கமுடன் நீ இருந்து வாசியேறி
ஜெக தீபமானசெயல் தான்தானாமே. 388

## ஆதார பூசை

தானான ஆதார சொருபந்தன்னை
சங்கையுடன் தானறிந்து தியானஞ் செய்ய
தேனான புலத்தியனே சொல்லக்கேளு
தேகசுத்தி உயிர்ச் சிவமாய் தெளிந்து கொண்டு
வானான லலாடமதில் மனக்கண் வைத்து
மனங்கனிய ஓம் றீங் அம்மென்றாக்கால்
கோனான ஆதார பூசைதானுங்
கோடான கோடிசெயதப் பலத்துக்கொப்பே. 389

ஒப்பென்ற உருசைதனைச் சொல்லக் கேளு
ஓமென்றப் பிரணவமே மூலபீடஞ்
செப்பென்ற பீடமதில் றீங்காரவாலை
சென்றிருந்தாள் அகாரமென்ற சிவனார்தானுங்
குப்பென்று தானெழுந்து வாசியாகக்
கொண்டுநின்ற திருவாசி அம்மாவாசி
அப்பென்ற ஆதார அம்மாவாசி
அதையறிந்து சிவயோக அங்கம்பாரே. 390



பாரப்பா சிவயோக அங்கம் பார்க்க
பதிவாக றீங்கென்றால் பூரகமேயாகும்
நேரப்பா அம்மென்றால் கும்பகமேயாகும்
நேர்மையுடன் நிலையறிந்து நேசம் வைத்து
சாரப்பா ஓமென்று ரேசகமே செய்யில்
தவிடாடா தேவாசி தானே தங்கும்
சேரப்பா வாசியது தங்கும் வீட்டில்
சென்றிருந்து அடிநடுவு முடியைக்காணே. 391

காணவே றீங்காரம் நாதமாச்சு
கருணைவளர் அகாரமடா விந்துவாச்சு
பூணவே ஓங்காரம் வாசியாச்சு
புத்தியுடன் தனதறிவால் தன்னுள்பாரு
தோணவே தனதறிவால் பார்க்கும்போது
சோதியென்ற ரவிமதியுஞ் சுடர்மூன்றாச்சு
பேணவே சுடர் மூன்றுந் தன்னுட்பார்க்க
பேசவொண்ணா மௌனமென்ற கற்பமாச்சே 392

ஆச்சப்பா கற்பமென்ற அறிவைக்கேளு
ஆதியென்ற றீங்காரஞ் சத்தியாச்சு
நீச்சப்பா சத்தியென்ற அகாரந்தன்னை
நிலையறிந்து மாலையிலே நேர்மையாகப்
பேச்சப்பா தானிறந்த மௌவுனமென்று
பெருமையுடன் உருமையதாய்ப் பூசித்தாக்கால்
மூச்சப்பா தன்னிலைவிட்டு அசையாதையா
மூர்க்கமுள்ள ஓம்சத்தி முத்திப்பாரே. 393

## அகார பூசை

பாரப்பா ஓம்சத்தி பூசைசொன்னேன்
பதிவான அகாரமென்ற சிவத்தின் பூசை
நேரப்பா நிலையறிந்து அகாரமான
நேரான சிவமதுவும் விந்துவாச்சு
காரப்பா விந்துவென்ற சாரந்தன்னை
கருணையுடன் பூரணமாய் உதயந்தன்னில்
தேரப்பா தானிருந்து உருவே செய்தால்
சிதம்பரத்தின் எல்லையிலே தீபமாமே. 394

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

ஆமப்பா அகாரசிவ பூசை சொன்னேன்
அறிந்து மனதருளாலே அறிவைப்பற்றி
நாமப்பா வென்றமதந் தன்னைநீக்கி
நடுவான றீங்கார வாலைதன்னை
தாமப்பா தன்னகமே வென்று போற்றி
சதானந்த பூரணமாய்ப் பூசை செய்தால்
வாமப்பால் கொண்டகெதி தன்னாலந்த
மகத்தான மடபதிதான் நீர்க்குந்தானே. 395

தானென்ற மடபதிதான் தான்தானாகித்
தன்மையுடன் பூரணத்தில் சாற்றக்கேளு
வானென்ற வடிவுடைய அண்டந்தன்னில்
மகந்தான அமுர்தரச போதந்தன்னைக்
கோனென்ற குருவருளால் தானே வாங்கி
குறியான சத்திசிவ நாதங்கூட்டித்
தேனென்ற கற்பூர தீபங்காட்டி
திருவான பதினோக்கிப் பூசைபண்ணே. 396

பண்ணப்பா பஞ்சகெண தீஷைமார்க்கம்
பாலகனே தானறிந்து பதிமேற்கொண்டு
விண்ணப்பா தானறிந்த வாசியாலே
வேதாந்த முச்சுடருக் கப்பாலேகி
உண்ணப்பா தன்னறிவால் மனக்கண் கொண்டு
வுகமுடிந்த பட்டணத்தின் இறுதிபாரு
கண்ணப்பா தானறிந்து தன்னைப் பார்க்க
கசடரவே தான்சிகற அங்கம்பாரே. 397

## நாட்டம்

அங்கமுடன் நின்றபஞ்ச பூதமதுநசித்து
அணுகி நின்றபஞ்சமல மாதாரம் நசித்து
சங்கையுள்ள சிவகளையம் புவியாட நசித்து
சாக்கிரம வித்தையுட சாரசரங்கள் நசித்து
பொங்கு புகனெழுவகையும் பூசை பலநசித்து
போக்கான சரிதைமுதல் ஞானவரை நசித்து
நங்கை முதல் போதவரை இருவளியும் நசித்து
நானென்ற சொல்லதனை நசிப்பதுவே நாட்டம்398



நாட்டமுடன் நின்றதிருகரணம் பதகதுவும் நசித்து
நாதாந்தனாதமுடன் வித்ததுவும் நசித்து
தேட்டமென்ற யோகமுடன் சிவயோக நசித்து
திருவான கோவில்களும் நதிகளுமே நசித்து
ஆட்டமென்ற ஆங்கார கூத்துகளும் நசித்து
அஞ்செழுத்து மூன்றெழுத்து மொன்று மிக நசித்து
வாட்டமென்ற மயக்கமுடன் மகிழ்ச்சிகளும் நசித்து
வந்ததுவும் போனதுவும் நசிப்பதுவே நாட்டம். 399

நாட்டமுடன் நயனமதில் கண்டதெல்லாம் நசித்து
நடுவணையு மடிமுடியும் நசிப்பதுவும் நசித்து
ஆட்டமென்ற ஆகாச வாய்வுகளும் நசித்து
அடர்ந்தெழுந்த அக்கினியு முப்பதுவும் நசித்து
தேட்டமுடன் பிரிதிவியும் ரவிமதியும் நசித்து
திருகிநின்ற சுளிமுனையும் அசபையும் நசித்து
ஓட்டமென்ற பாசமது பிறப்பும் நசித்து
ஒன்றுமத்த நிராமயமா யொடுங்குவது நாட்டம். 400

ஒடுங்குவது காண்பனென உண்ணுவதுவும் நசித்து
உருதியுடளனப் பிரமமொடு நியமமநசித்து
அடங்கி நின்ற பிராணாயம் ஆசனமும் நசித்து
அரகரா பிரத்தியா காரமது நசித்து
துடங்கி நின்ற தாரணையும் தியானமது நசித்து
சுகசிவ பிராணகலை சமாதிகளும் நசித்து
திடங் கொண்ட தூலமுடன் சூக்ஷமும் நசித்து
சிவசிவா நிராமயமாய் தெளிவதுவே நாட்டம். 401

தெளிவான வசிகரமும் மோகனமும் நசித்து
திரமான தம்பனமும் உச்சாடனமும் நசித்து
வளியான கிரிசனமும் வேசனமும் நசித்து
மாரணமும் பேதனமும் வகையுடனே நசித்து
பளியான செகச்சால மானதெல்லாம் நசித்து
பரிசனமாய் நின்றதொரு பெண்ணாசை நசித்து
ஒளியாத பெண்ணாசை மண்ணாசை நசித்து
ஒன்று மற்று தன்மயமா யொடுங்குவதே நாட்டம். 402

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

ஒடுங்கி நிராமயமாகிப் பூரணதாரகமாய்
உகமுடிந்த கவனமெல்லா மொருபுறமாய் நீக்கி
இடங்குவிந்து வலமான யேகபூரணமாய்
எந்தெந்தக் காரியமும் இன்பமுடன நினைத்தால்
தடங்கலன்றிச் சித்துவெகு சத்தமாய்க் காணுந்
தன்மையுடன் தன்மனதை தானறிந்ததாலே
திடங்குவிந்து நிராமயமாய் சின்மயபூரணமாய்
சிவசிவா சிவகரமே சிவமயமாய்க் காணே. 403

காணவே கண்டதெல்லாஞ் சிவமயமென்றெண்ணு
கடந்தேறிப் போனதெல்லாஞ்சிவமயமென்றெண்ணு
பேணவே தன்னகமே சிவமயமென்றெண்ணு
பிலமான வாசியது சிவமயமென்றெண்ணு
உண்ணவே அண்டபிண்டஞ் சிவமயமென்றெண்ணு
ஒடுங்கி நின்ற சத்தமது சிவமயமென்றெண்ணு
தோணவே சிவமயமும் நிராமயமென்றெண்ணி
சுகசீவ பிராணகலை சுருபமயமாமே. 404

## சூரியகிரி சோமகிரி நிதானம்

ஆமப்பா சுருபமயம் பூரணமென்றெண்ணி
அடர்ந்தெழுந்த தத்துவத்தை அறிவால் நீக்கி
தாமப்பா ஓமென்ற பிரணவத்தினாலே
தன்னுயிர் போல் மன்னுயிரைத் தான்தானென்று
நாமப்பா சொல்லுகிறோம நாதாந்த வீட்டில்
நாடிமனங் கொண்டு திருநயனம் பாரு
சோமப்பா பால்கொண்டு திருநயனம் பார்க்க
சோமகிரி சூரியகிரி சத்தமாச்சே. 405

ஆச்சப்பா சோமகிரி உச்சிமூலம்
ஆள்பெருகுஞ் சூரியகிரி மூலமாச்சு
மூச்சப்பா உபையகிரி நடுவிலேதான்
மோக்ஷமென்ற கரணியைநான் என்ன சொல்வேன்
பேச்சப்பா பேசாத காக்ஷிதன்னை
பிரணவத்தின் கிருபையினால் சொல்லக்கேளு
நீச்சப்பா நிலையறிந்து காணப்போகா
நீசமான நிலையதுதான் உந்திகாணே. 406



காணவே உந்தியென்ற ககலமீதில்
கண்கொள்ளா காக்ஷிவெகு சூக்ஷங்காணும்
தோணவே சூக்ஷநிலை தானேகண்டு
துருவமென்ற மேருவடா அண்டந்தன்னில்
பூணவே அண்டபதங் கைக்குள்ளாக
புருவமென்ற சமாதியிலே பூண்டு கொண்டு
ஊணவே மனதுறுதி யாகநின்றால்
உத்தகலை ரவிமதியுஞ் சோதியாச்சே. 407

சோதியென்ற முச்சுடரும் ஒன்றாய்நின்று
துலங்குதடா தன்னகத்தில் நன்றாய்ப்பாரு
நீதியுடன் நிலையறித்து பார்க்கும்போது
நிலையறிந்து கண்டதெல்லாஞ் சோதியாச்சு
ஆதியென்ற சோதியடா மனக்கண்ணாச்சு
அறிவான தீபமடா ஆத்துமாவாச்சு
ஓதியதோர் மந்திரகலை ஆத்துமாவாகி
உண்மையென்ற பூரணமாய் விளங்குந்தானே. 408

தானேதான் விளங்குமடா அறிவானந்தந்
தன்மையுள்ள பூரணமாய்த் தான்தானாகும்
வீணேதான் திரியாதே அறிவைப்பற்று
வேதாந்தஞ் சித்தாந்தம் இரண்டுமொன்று
கோனேதான் தானவனாய்க் குறித்துப்பாரு
குறியறிந்து பார்த்துநிலை கொண்டாயானால்
ஊனேதான் ஆனந்த போதமாகும்
உண்மையென்ற நிருவிகற்பம் உறுதிபாரே. 409

பாரப்பா நிருவிகற்ப மார்தான் காண்பார்
புத்தியுள்ள புலத்தியனே பகரக்கேளு
காரப்பா அகாரமென்றால் சிவமதாச்சு
கருணைவளர் சிவமதுதான் விந்துவிந்து
நேரப்பா விந்துநிலை அறிந்து கொள்ள
நிசமுனக்கு யில்லையடா நிசத்தைக் கேளு
சாரப்பா சற்குருவின் இடமே சென்று
சங்கையுடன் தானவனாய்த் தன்னைப்பாரே. 410

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

பாரப்பா தன்னைமிக அறிவால்கண்டு
பாலகனே விந்துரச அமுர்தம்வாங்கி
நேரப்பா சற்குருவை தியானம்பண்ணி
நிலையறிந்து கணபதிக்கி அபிஷேகித்தால்
வீரப்பா கொண்டுநின்ற அறிவுமைந்தா
மெய்ஞ்ஞான பூரணமாய் விளங்கும் பாரு
காரப்பா அந்தநிலை சொந்தமென்று
கருணையுடன் அந்தி சந்தி பூசைபண்ணே. 411

### மணிகெவுன குளிகை

பண்ணப்பா அந்திசந்தி பூசைபண்ணி
பரம கைலாசமென்ற பதியை நோக்கி
கண்ணப்பா தானறிந்து தன்னைப்பார்த்தால்
கசடான கர்மவினை காணாதோடும்
எண்ணப்பா என்றுதன்னை மறந்திடாதே
எட்டறிந்து திட்டமுடன் கட்டாய்நில்லு
மூன்னப்பா விசையறிந்து பாய்ந்த தண்ணீர்
முத்தியுடன் மணிகெவுன குளிகைபாரே. 412

பாராகும் புலத்திய மாரிஷியே அய்யா
பதியான உலகமது பேயாங்கூற்று
நேரான கூற்றதுதான் சிவன் செயலென்றெண்ணி
நேர்மையுடன் பூரணமாய்ப் புருவமேவி
தூரான அடிமுடியும் ஒன்றாய்க் கண்டு
சுகசிவப் பிராணமய மாக நின்றால்
மாறாத வாழ்வுசிவ யோகவாழ்வு
வந்துதடா வந்துதடா மனதைக்காரே. 413

### கற்பம்

மனதான மனதறிந்து மனதைக் காக்க
மாற்கமுள்ள கற்பமொன்று வழுத்தக்கேளு
கனமான கற்பமடா ஆர்தான் காண்பார்
கருணைவளர் உகாரமடா சத்தி சத்தி
குணமான உகாரமென்ற சத்தி தன்னை
குருவருளால் அந்திசந்தி பூசை பண்ணிச்
சினமான ஆங்காரத் திருக்கறுத்து
சின்மயங் கொண்டென்னாளுந் திறமாய்நில்லே 414



### உகார தீட்சை

திறமான சத்தியடா உகார சத்தி
சிவசிவாமனம் நிருத்திப் பூசை செய்தால்
உரமான தேகமடா உறுதியாகும்
உற்றகலைக் கியானமடா சித்தியாகும்
பறமான அண்டபதம் கைக்குஉள்ளாகுந்
திருவான பூரணமுஞ் சித்தியாகும்
திரமான பராபரமுந் தான் தானாகும் 415
பதிவான மூலசத்தி பலந்தான்பாரே.

பாரப்பா பதியறிந்து குருவைக்கண்டு
பத்தியுடன் சத்திசிவ பூசைபண்ணி
காரப்பா கருணைவிளி மலர்க்கண்ணாலே
கமலமென்ற புருவநடு கண்ணைப்பற்றி
நேரப்பா நின்றதினால் மைந்தா மைந்தா
நிசமான சிவரூபம் கண்ணிற்காணும்
தேரப்பா சிவரூபங் கண்ணால்கண்டு 416
தெளிந்து மனங்கொண்டதினா லாதிபாரே.

ஆதியென்ற நாதமடா சோதி சோதி
அதையறிந்து பூரணமாயப் பூசை செய்தால்
சோதியென்ற ஞானமது மிதுதானாச்சு
சுகமான சிவயோக மிதுதானாச்சு
நீதியென்ற பிராணாய மிதுதானாச்சு
நிசமான வாசியது மிதுதானாச்சு
ஓதியதோர் மந்திரமு மிதுதானாச்சு
உண்மையென்ற பூசையது மிதுதானாச்சே. 417

ஆச்சப்பா கெவுனரச மிதுதானாச்சு
ஆதியென்ற கற்பமது மிதுதானாச்சு
நீச்சப்பா உபதேச மிதுதானாச்சு
நிசமான சத்திசிவ மிதுதானாச்சு
பேச்சப்பா பேசுவது மிதுதானாச்சு
பேசாத மௌவுனம் மிதுதானாச்சு
காச்சப்பா தெரிசனமு மிதுதானாச்சு 418
கருணை வளர்வாலையுட கருத்துத்தானே.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## வாலைதீக்ஷை

கருத்தறிந்து கருணையுடன் கருவைக்கொண்டால்
காலசதி மேலசதி காணாதோடுந்
திருத்தமுடன் பூரணமும் நிலைநின்றாடுந்
திருவான வாலையுட செந்தேனாலே
வருத்தமென்ற மாய்கையெல்லாம் மாண்டுபோகும்
மங்கையுட கொங்கையது வலுமைமெத்த
திருத்தியந்த மாதரசைப் பூசைபண்ணி
செம்மையுள்ள மாதாவாய் மகவாயெண்ணே. 419

என்மகனே புலத்தியமா ரிஷியேஅய்யா
இன்பரசந்தான் கொடுத்த மாதர்தன்னை
தன்மையுடன் மோகமதாய் சரசஞ்செய்தால்
தான்நினைத்த காரியங்கள் தவருண்டேபோம்
உண்மையென்ற மந்திரங்கள் உதவாதய்யா
உடலதிலே செந்தீயும் உடனேபத்தும்
வண்மையென்ற கூற்றவனும் உயிரையுண்பான்
மார்க்கமுடன் மனதறிந்து மனதைக்காரே. 420

காரப்பா மனதறிந்து மனதைக்காத்து
கருணையுடன் சத்திசிவ வாலைபூசை
நேரப்பா நேர்மையுடன் பூசைசெய்தால்
நினைத்தபடி முடிக்கும்வகை கைக்குள்ளாகுஞ்
சாரப்பா சகலகலைக் கியானந்தோற்றுஞ்
சதாயோகமான சிவ யோகந்தானாய்
தேரப்பா சிவயோகத் திறத்தால்மைந்தா
சிவசிவா பூரணத்தின் செயலைக்காணே. 421

செயலான செயலறிந்து செயலைக்காண
திறமான தீர்க்கமொன்று செப்பக்கேளு
யலான மயக்கருத்து மவுனங்கொண்டு
மகத்தான கேசரியாம் அண்டத்தேகி
யமான பூரணமாஞ் சோதித்தாயை
க்கமுடன் தான்வணங்கி தொழுதுபோற்றி
மாக வைத்துருமை செய்துகொண்டு
நாதாந்த பூரணத்தை நயமாய்வாங்கே. 422



## பூரணமெழுகு

வாங்கி வந்த பூரணத்தை மைந்தா நீயும்
வணக்கமுடன் பீங்காளில் வைத்துப் போற்றி
பாங்குபெற ரவிபீசஞ் சரியாய்ச்சேர்த்து
பதமாக மத்தித்து ரவியில்வைத்து
சாங்கமாய்க் காய்ந்த பின்பு எடுத்துப்பாரு
சதாசிவத்தின் செயலதனால் மெழுகாய்ப்போகும்
பூங்கமல அமுர்தரச மெழுகைவாங்கி
புத்தியுடன் சத்திசிவ வாலைசேரே. 423

## சத்தியுப்பு தயிலம்

சேரப்பா அஞ்சையுமே ஒன்றாய்ச்சேர்த்து
திறமாக மத்தித்து ரவியில் போடு
சாரப்பா இன்னமொரு கருமானங் கேள்
சத்தியுப்பு தன்னுடனே வீரம்பூரம்
காரப்பா கருவறிந்து சேர்த்துக் கொண்டு
கவசமதில் தானமுழ்த்தித் தயிலம்வாங்கி
நேரப்பா முன்சொன்ன அஞ்சும் போடே
நிசமான தயிலமதை விட்டுக்கிண்டே. 424

## அமுர்தரசங் கொள்ள

கிண்டி மிகத்தானெடுத்து ரவியில்போட்டு
கிருபையுடன் பீங்கான்றன் தாளிச்சேர்த்து
அண்ட கேசரிமாது தன்னைப்போற்றி
ஆக்கை நிலை தனையறிந்து அந்திசந்தி
குண்டுமணி அளவெடுத்துக் கொண்டாயானால்
குடிலமென்ற தீவினைகள் காணாதோடும்
எண்டிசையும் கீர்த்திபெற வாழ்வாரப்பா
இன்பரச காயாதி கற்பந்தானே. 425

தானென்ற மவுனாதி மவுனமாது
தனையறிந்த காலமதில் தானேதானாய்
தேனென்ற திவ்வியரச பானங்கொள்ள
சிவந்த மலர்க்குவிந்தபூ விரிந்தகாலம்
ஊனென்ற மதுராச மெழுகுதன்னில்
உகந்து மனங்கொண்டு வாய்வேகமாகி
கோவென்ற குருவருளா லுருஞ்சிவாங்கி
குவிந்தமலர்க் கனிந்தமணி சுவைத்துவாங்கே. 426

## மாங்கனி

வாங்கியது சுவையறிய மதுரங்கொண்டு
மனங்கனிய மாவடியில் மலர்க்கண்சாற்றி
பாங்குபெற குருவடியில் பதிவாய்நின்றால்
பதிவாக சிவயோகப் பலத்தினாலே
தாங்கிநின்ற மூலமுதல் ஆறாதாரந்
தனக்காசி புவனமெல்லாம் தானேதானாய்
ஓங்கியதோர் வாசியுட பலத்தினாலே
ஊத்தை மனைபிலத்துதடா உறுதிப்பாரே. 427

உறுதி உள்ள பஞ்சகண பஞ்சமூலம்
உண்மையென்ற ஸ்ரீகோண மந்தத்தாலே
பருதி மதிசுடரொளியாய் அண்டஞ்சூழ்ந்து
பதிமணியாந் திசநாத வாசியாலே
சுருதி திருவாசியம்மா வாசியாலே
சுகசிவ பிராணகலை சோதியாகி
சரிதையொடு கிரிகைசிவ யோகமாகி
சகலகலைக் கியானமென்ற ஞானமாமே. 428

ஞானமென்ற ஞானமடா மவுனஞானம்
நாதாந்த போதமென்ற ஞானந்தன்னை
மோனமென்ற மனதடங்கி ஞானப்பாலை
முத்திபிருகலை அறிந்து ஊதிவாங்க
பானமென்ற பானமடா மதுரபானம்
பரஞான பூரணமாய் நின்றுபாயும்
தானமென்ற தலமறிந்து வாய்வாலுங்க
சங்கையுடன் வாசிகொண்டு வாயால்வாங்கே. 429

வாங்கியிரு கலையறிந்து மவுனமாக
மவுனமென்ற மாங்கனியை கனிவாயுண்க
ங்கியெழு சபைதாண்டப் பிலமுண்டாகும்
ஒடுங்கி மனக்கால் கெதியை ஊணிப்பாரு
ங்குபெற அண்டரண்டஞ் சுற்றிமீளும்
பரஞான ஸ்ரீகோணத் தாயினாட்டு
ங்கனி தானுண்ட பிலங் கெதியுண்டாச்சு
மகத்தான சூக்ஷமென்ற சூக்ஷம்பாரே. 430



சூக்ஷமென்ற ஆச்சியுட கலையைப்பாரு
சூதான மானகெதி இருகாலய்யா
சாக்ஷியினுள் சூக்ஷத்தின் காலைக்காண
கண்காக்ஷி யானாக்கால் வாதமாச்சு
தாக்ஷியென்று நிஜக்காக்ஷி அமுர்தமுண்ணத்
தானறிந்த கண்காக்ஷி தானாய்நின்று
பேச்சியென்ற சூட்சமடா பின்னேதுமில்லை
பிலமான அனுபோகி யானாற்பாரே. 431

பாரடா இவளாட்டுக் காலேவாதம்
பத்திகொண்டு கண்டுபிடி வாதஞ்சித்தி
ஊரடா உப்பாலும் அப்பினாலும்
உள்ளபடி கண்டுபிடி வாதத்தாயைக்
காரடா முப்பூவிற் கட்டும்வித்தை
கையறிந்த ரசவாதங் கொள்ளையாச்சு
நாரடா நாறிமன மார்தான் கேழ்ப்பார்
நல்லபதங் கண்டவர்கள் யேழைதானே. 432

## அமுர்தரசமுண்ண

ஏழையென்றே யான்பார்த்தேன் என்னைப்போலே
ஏக நிராமயமான சோதிப்பாலை
காலையிலே கருவறிந்து கொண்டோருக்கு
கண்டபடி கண்டவற்குத் தொண்டுசெய்வேன்
வாழையிலே தலைகுலை சாய்நதமாககம்
வசையறியார் துரையரியார் மனதைக்காணார்
தாழையிலே பூப்பூத்து சனியுண்டாச்சு
சதாபோத யோகமதால் காணுவாயே. 433

காணுதற்கு என்னசொல்வேன் விதிதான்வேணும்
கண்டவர்கள் விண்டதுண்டோ கனியின்மாற்கம்
பூணுதற்கு மனம்பூண்டுக் காலைப்பார்க்க
புலம்பி மனம நிலையாதே மூலம்பார்க்க
தோணுதற்கு மும்மலமும் கண்டுபோகுஞ்
சுகமாக சாகரத்தை அறிந்துகொள்வாய்
பேணுதற்கு யேகவெளி சூக்ஷாசூக்ஷம்
பொரிந்து கொள்வதற்குத் தொட்டுக்காட்டே. 434

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## முக்கிகாரணபூசை

தொட்டுமிகக் காட்டுவது அந்தரங்கத்தோடு
குறிபோல காட்டுவது சூக்ஷாசூக்ஷம்
கட்டுவது அங்கையடா யிருகால்தொட்டு
காரணத்தால் தொட்டவிடங் கருணையாகும்
எட்டும் ரண்டுங் கூடியல்லோ திறவுகோலாய்
இதையறிந்து பூரணத்தால் அதிர்ந்து பார்க்க
கிட்டுமடா பூரணத்தின் வட்டம்பாரு
கேசரத்தின் கேசரியின் கிருபைபாரே. 435

பாரடா பரஞ்சோதி முக்கோணத்தில்
பத்திகொண்டு இன்னமொரு கருவைக்கேளு
கூறடா கனிந்துஉனது அறிவால்நீயுங்
காலறிந்து வாசியினால் கருவைப்பற்றி
ஆரடா நிலையறிந்து பானங்கொள்ளு
நிலையான அறுசபையும் நிலைதப்பாது
பேரடா அடிமூலங் கணேசன் இச்சை
மெஞ்ஞான பூரணத்தின் கெதியைப்பாரே. 436

## மந்திரவாள் தியானம்

கெதியான கேசரமே மணியின்சோதி
கணேசனடி மூலமடா ஆதியந்தம்
மதியான மையமடா ருத்திரமூலம்
மகத்தான வாசியடா சிம்றீங்கென்று
விதியான எழுந்தறிந்து ஓதுதற்கு
விளம்பரிது ஓங்கார விஞ்சைமூலம்
பதியான பதியறிந்து மந்திரவாளை
பத்தி மனங்கொண்டபடி இன்னங்கேளே. 437

கேளப்பா மந்திரமாம் மூலமந்திரங்
கேசரத்தின் பூரண ஓங்காரவாளால்
ஆளப்பா இதையறிந்து தியானம்பண்ணி
அடிமாந்து செய்யாது அறிவைப்பற்றி
நாளப்பா முப்பெலியும் அமர்ந்தேவாங்கும்
நாற்பத்தி முக்கோண மாத்தாளுக்கு
வாளப்பா வாழ்வதற்கு மவுனத்தாயை
மனதுருக பூரணமாய் மதிக்கக்கண்ணே. 438



கண்ணான கமலிதிரி சூலிவாமி
காரணமே பூரணமே கமலத்தாயே
விண்ணான சபைதனிலே நடனமாடி
வேதாந்தப் பேரொளியாய் நின்றதாயே
முன்னான கண்மணியே ரூபாரூபி
முதலான பூரணமே அருமைக்கண்ணே
ஒண்ணான பூரணமா யென்னாளுந்தான்
ஓமென்ற மூலமந்திர சத்திமாதே. 439

சத்தியமாய் நின்றசிவ சத்திமாதே
சமர்முனையில் வைத்திருந்த தாயேதாயே
வெத்தியுள்ள பூரணத்தின் வேதரூபி
வேதாந்த கோத்திரமாய் விளங்குந்தாயே
முத்தியுள்ள மோனமந்திர விவேகத்தாயே
மோனமுடன் தியானமதாய்ப் பூசைசெய்யே
பத்தியுள்ள மந்திரவாள் கையிலீய்ந்து
பதிவான வரங்கொடுப்பான் கெதியைப்பாரே. 440

## நவகும்பபூசை

பார்முழுது மொருகுடைக்கீழ் பதிவாயான
பகர்ந்த சொல்லை மறவாதே ஞானம்பாரு
சீர்பெறவே பூசைசெய்ய கும்பமெட்டும்
தீர்க்கமுள்ள கும்பமடா ஓம் பிரதானம்
நேர்பெறவே கும்பநடுக் கும்பம்வைத்து
நேர்மையுடன் நவக்கிரகந் தனக்குமைந்தா
பேர்பெறவே கரகமதிற் கடியில்மைந்தா
பிலமான அட்சதையும் படிதானொன்றே. 441

படிவாக அட்சதையைப் பரப்பிமைந்தா
பத்தியுடன் பிரணவத்தை பதிவாய்நாட்டி
முடிவான சத்திநடு மையத்தின் கும்பம்
மோனமுள்ள அட்சதையும் படிதானெட்டு
அடியான தலந்திலே சாத்திக்கும்ப
மதியென்ற பிரணவத்தை மன்பாய்ச்சாற்றி
வடிவாக யெனையாள வாவாவென்று
மார்க்கமுடன் தானிருந்து சொல்லக்கேளே. 442

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

### நாற்பத்து முக்கோணம்

கேளப்பா பிரணவமேல் முக்கோணமிட்டுக்
கிருபையுள்ள கோணமதில் விந்துபோட்டு
வாளப்பா சொல்லுகிறேன் கும்பமெல்லாம்
வகையுடனே நூலணிந்து கெங்கைவிட்டு
ஆளப்பா மாங்குலையுந் தேங்காய்சாற்றி
அன்பாகரவர்தனிந்து ஆடைசாற்றி
சூளப்பா சுகந்தபரி மளங்கள் சாற்றி
சுத்தமுடன் தானிருந்து பூசைபண்ணே. 443

பூசைமுறை சொல்லுகிறேன் மைந்தா மைந்தா
பூரணமாங் கும்பநடுக் கும்பந்தன்னில்
நேசமுடன் மதுரரசக் கனிகள்வைத்து
நேமமுடன் தூபமுடன் தீபங்காட்டி
ஓசையுள்ள மணிநாதம் சங்கினாதம்
உற்றமனே ஜேகண்டி ஜெகநாதந்தான்
ஆசையுட னுபசாரஞ் செய்துநல்ல
ஆனந்த பூரணியைப் பூசைப்பண்ணே. 444

பண்ணப்பா பூசைநவ கும்பபூசை
பத்திகொண்டு சந்தமதாய் சத்திபூசை
விண்ணப்பா நிரைந்ததிரு மந்திரவாளாய்
விளங்குகின்ற வேதாநத வாலைபூஜை
கண்ணப்பா நிறைந்ததிரு வாலைபூசை
காரணமும் பூரணமாய் நின்றபூசை
முன்னப்பா செயதவத்தால் பலிக்கும்பூசை
பூத்தியுள்ள பூசையடா சித்திதானே. 445

### புவனை பூஜை

சித்தித்த பூசையடா தேவிபூசை
திக்கெட்டும் வெத்தியடா இந்த பூசை
பத்தித்த பூசையடா தப்போயில்லை
பதியறிந்த மந்திரவாள் தன்னைநீயும்
புத்திக் குளிதையறிந்து பூசைபண்ணும்
பூமி முதலாகாச மட்டும் பெற்றதாயி
முத்திக்கள முத்தியடா அறிவைப்பாரு
முன்னவன் தான் கண்ணிறைந்த மூலந்தானே. 44



தாளென்ற மூலமடா யேகமூலந்
தயவான கும்பநவ மூலமெல்லாம்
வாளென்ற புருவமடா சொற்ணபுஷ்பம்
வகையுடனே திசைகளெட்டு கும்பஞ்சேர்த்து
கோளென்ற கும்பம்நடுக் கும்பந்தன்னில்
குருவான தங்கமது களஞ்சிவாங்கி
பூளென்ற தகடதுவே புவனைமாது
பூறணியான் அட்சரத்தைப் பொருந்திநாட்டே. 447

நாட்டமென்ற நடுவான கும்பந்தன்னில்
நாதாந்த புவனைசக கரத்தைச்சாற்றி
தேட்டமென்ற கும்பநவ கும்பமெல்லாம்
சிவசிவா பூசைமுறை செயமாய்ச்செய்து
ஆட்டமென்ற அம்பலவா தன்னைநீயும்
அங்கனையே பூரணமாய்த் தியானம்பண்ணி
வாட்டமில்லா வாசிமலர் வாசத்தாலே
வளர்பிறையுந் தேய்பிறையும் பூசைபண்ணே. 448

பண்ணடா பூசைமுறை ஆசைவைத்து
பத்தியுடன் மனங்கொண்டு பூசைசெய்தால்
முன்னடா நின்றுதிரு புவனைதாயும்
மூன்றுலகும் தன்வசமாய் ஆள்வதற்கு
கண்ணடா கருணைவிட்டு திருநீறிட்டு
கமலமலர் அமுர்தமதை கனிவாயூட்டி
விண்ணடா தானிருந்த மந்திரவாளை
வேதாந்த பூரணமாய் ஈவாள்பாரே. 449

### மந்திரத் தியானம்

பாராளும் புலத்தியனே சகலருக்கும்
பதிவான மந்திரவாள் சூட்சங்கேளு
நேரான மூலமடா வடிவுமாச்சு
நிசமான றீங்காரம் வேலுமாச்சு
கூறாத வடிவெல்லாம் மந்திரவாளை
கூர்மையுடன் சொல்லுகிறேன ஓம்றீங்கென்று
மாறாத மவுனமதாய் தியானம்பண்ண
மாக்கமுடன் திசையான வகையைப்பற்றே. 450



Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

பத்திமனங் கொண்டு பூரணமாய் நின்று
பரஞான கேசரமே வாசமாகி
சுத்தமுடன் ஓம்றீங் வசிவசிஎன்றோத
சூழ்ந்திருந்த சத்துருக்கள் வசியமாகும்
சித்தமுடன் ஓம்றீங் நசிநசியென்றோத
சினந்து வரும் பீடையெல்லாம் அகன்றுபோகுஞ்
சுத்தமுடன் ஓம்றீங் வசிவசியென்றோத
சகல சவுபாக்கியங்கள் தானுண்டாமே. 451

உண்டாகும்ஓம் றீங் மசிமசிஎன்றோத
ஒடுங்காத காலகடி விஷங்கள்மீளுந்
தண்டாமல் ஓம்றீங் அங்கென்றோத
தட்டழிந்து மிருகமெல்லாந் தானேயோடும்
நன்றாகச் சொன்னதிந்த மந்திரவாளை
நாட்டமுடன் பூரணமாய் பூசைபண்ணி
நின்றாட யாதொருகால் எழுத்துக்கெல்லாம்
நிசமான மந்திரவாள் ஓம்றீங்கென்னே. 452

என்னுவதும் உன்னுவது மந்திர சூட்சம்
ஏகாந்த சூட்சமதை என்னசொல்வேன்
விண் நிரைந்த சூட்சமடா அம்மாவாசி
வேதாந்த வாசிசிவ விந்துநாதம்
கண் நிறைந்த போதமடா கமலபோதம்
கருணைவளர் பூரணமாய் நின்றநாதம்
...ன்னி விளையாடுகின்ற நாதந்தன்னை
உத்தமனே மெய்த்தவமாய்க் கண்டுபாரே. 453

...ரப்பா இடதுகண் அகாரஞ்சந்திரன்
பதிவான வலதுகண் உகாரஞ் சூரியன்
...ரப்பா சுழிமுனைதான் மகாரம் அக்கினி
நினைவாக இப்படியே தியானஞ்செய்து
...ப்பா செபிக்கிரதேவி மந்திரங்கேளு
கருணையுடன் ஓம்றீங் சிவய வசியென்று
...ப்பா இப்படியே தியான செபம் பண்ண
...சிவசிவா இகபரமும் முத்தியாச்சே. 454



முத்தியுடன் இப்படியே மூன்றுகாலம்
முனைநிருத்தி தியானசெபம் செய்துவந்தால்
பத்தியுடன் சிவயோகஞ் சித்தியாச்சு
பஞ்ச கணதீட்சையுமோ முத்தியாச்சு
சுத்தமுள்ள தீட்சையது ஆறாதாரஞ்
சுகமான ஆதாரம் ஆறுமுகமாச்சு
சித்தமுடன் இருதயத்தில் தானேநின்று
சிவசிவா நினைத்தபடி முடிக்கும்பாரே. 455

பாரடா சத்திசிவ பூசைபண்ணி
பரைஞான வாலைரசம் பதிவாய்க்கொண்டால்
நேரடா ஆதாரஞ் சித்தியாகும்
நிலையான வாசியது அகலாதய்யா
சாரடா நாதாந்தப் போதத்தேகி
சங்கையுடன் சற்குருவை தியானம்பண்ணி
ஏறடா பஞ்சகண தீட்சையாலே
எட்டான அஷ்டசித்துந் திட்டமாகும். 456

## பஞ்சகணதீட்சை

திட்டமுடன் பஞ்சகண தீட்சை தன்னை
செய்யு கிரமார்க்கமதை செப்பக்கேளு
சட்டமுடன் ஆதிகர்ப்பம் அகாரம்விந்து
சங்கையுடன் ஆண்டொன்று செபித்தபின்பு
இஷ்டமுடன் உகாரமென்ற சத்திமாது
யின்பமுடன் மனமநிறுத்திக் கொண்டுதேரு
வட்டமதில் மனம்நிறுத்தி அந்திசந்தி 457
மைந்தனே எட்டுரண்டுங் கொண்டுதேறே.

தேரப்பா காலைசிவம் மாலைசத்தி
செம்மையுடன் கொண்டு மனந்தேர்ந்தபோது
காரப்பா வாலைபதம் பணிந்துகொண்டு
கருணையுடன் நாதாந்த போததேகி
மேரப்பா பெருநடு முக்கோணத்தில்
விஞ்சை யெனுங் காயாஸ்திரி றீங்காரத்தை
சாரப்பா தன்மனமே சாட்சியாகத் 4.8
தானிருத்தி றீங்கார மூலம்பாரே.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

பாரப்பா பரஞான மூலமான
பத்தியுள்ள காயாஸ்திரி விஞ்சைதன்னை
நேரப்பா அறியாமல் மதங்கள் பூண்டு
நிசமில்லா ஆதிமறை யோர்கள்கூடி
வீரப்பா கொண்டதொரு அட்சரத்தையோதி
வீணிற் பலநாளலைந்து விசையுங்கெட்டு
தூலப்பா அடிப்படையும் தகர்ந்துனல்ல
சுழிவான சுழிதனிலே சுழன்றார்காணே. 459

காணுகின்ற சுழிதனிலே சுழலாமல்தான்
கருவான காயாஸ்திரி விஞ்சைகேளு
ஊணுகின்ற விஞ்சையடா மவுனஞானம்
உண்மையென்ற ஞானமடா மந்திரவாலை
தோணுகின்ற வாலையடா மந்திரரூபி
சுயஞ் ஜோதியான ஜெக ஜோதிதன்னை
பூணுகின்ற சித்தம்தாய் தானேநின்று
பூரணமாய்க் கேசரியைப் பூசைபண்ணே. 460

பண்ணப்பா கேசரியை பூசைபண்ணி
பரையான மந்திரகலை வாசிதன்னை
நண்ணப்பா அவள்பதமே கெதியென்றெண்ணி
நாளான நாளறிந்து பூசைபண்ணி
கண்ணப்பா தானிருந்து யிடையாங்கண்ணில்
கால்மாரி கொண்டு கெதி கண்ணைப்பார்த்து
உண்ணப்பா வசியினால் உருஞ்சிவுண்ணு
உண்ணையிலே மனந்தன்னை ஒடுங்கிஉண்ணே. 461

ஒடுக்கி மனதுருக்கமுடன் கொண்டாயானால்
உனது கெதிகால்வேக முரைக்கப்போமோ
யிடுக்க மென்றதீவினைகள் இடங்கெட்டோடும்
என்மகனே உன்வுடம்பு நாதமாகும்
அடுக்குநிலை ஆதாரம் அடங்கி வாழும்
ஆதிசிவ சாம்பவியாள் நிர்த்தஞ்செய்வாள்
தொடுக்கு மெலாமுப்பூவின் வாசத்தாலே
சஜீவ பிராணனது சுத்தமாமே. 462



## அமாவாசி விபரம்

சுத்தமுள்ள ஆதார குட்சந்தன்னை
தொடுகுறி போலச் சொல்லுகிறேன்நன்றாய்க்கேளு
சித்தமுள்ள தேகமது நிசமிமைந்தா
சிவசிவா நிசமியிலே நவமிதோன்றும்
பத்தமுள்ள நவமியாலே அஷ்டசத்தி
பதிவாக அஷ்டாங்க யோகமானால்
உத்ததொரு அஷ்டாங்க யோகந்தன்னில்
உதித்தசதம் எழுவகை தோற்றம்பாரே. 463

பாரப்பா எழுவகைத் தோற்றந்தன்னில்
பதிவான மடபதிகள் ஆறுமாச்சு
காரப்பா மடபதியில் பஞ்சகர்த்தான்
கருணையுள்ள நால்வேதங் கருவாய்க்கட்டி
நேரப்பா நின்றதிரு மூர்த்தியானார்
நிறைந்த திருமூர்த்தி சத்தி சிவமுமானார்
சாரப்பா சத்திசிவம் ரெண்டுமொன்றாய்
தானாகித் தானவனாய் ஏகமாமே. 464

ஏகமென்ற தேசியடா ஏகாதேசி
இன்பமுடன் துவாதேசி ரெண்டுமாகி
தேகமென்ற வாசியடா திரையோதேசி
செம்மையுடன் சதுர்த்தெசி சேர்ந்துஒன்றாய்
ஆகமென்ற ஆகமங்கள் அறிவேதானாம்
அடங்கிநின்ற வாசியம்மா வாசியாச்சு
பாகமுடன் வாசிநின்ற அம்மாவாசி
பத்தியுடன் தன்னகமாய்ப் பதிவாய்ப்பாரே. 465

பாரப்பா தன்னகத்தைப் பதிவாய்ப் பார்க்கில்
பாழான ரவிமதியும் பாய்ந்து பாய்ந்து
நேரப்பா ஒன்றையொன்று நம்பாமல்தான்
நிலைதவறி மாண்டயிடம் யார்தான் காண்பார்
சேரப்பா மாண்டகெதி என்னவென்றால்
திங்களென்ற சந்திரனே வாசியாச்சு
வீரப்பா கொண்டதொரு மூலஆவி
விளங்கி நின்ற சத்திசிவ மாகுங்காணே. 466

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

காணவே சத்திசிவ மாகிநின்ற
காலான வாய்வுடனே நீயும்ரெண்டும்
பூணவே ஆகாரஞ் சாக்ஷியாகப்
போனதின் பின் பிரிதிவியும் அப்பும்ரெண்டு
தோணவே ரெண்டுமது மொன்றாய்க்கூட்டி
சேர்ந்து மிகதான் மடிந்து சுத்தமாகப்
பேணவே மண்ணாகி உப்பாய்ப்போன
பேச்சறிந்து அஞ்சையுமே பேணிப்பாரே. 467

பேணிப்பார் பஞ்சகர்த்தான் அஞ்சமொன்றாய்
பிலமாக நின்று விளையாடுதற்கு
பூணிப்பார் அகாரமென்ற சிவமாம்விந்தை
புத்தியுடன் பூரணமாய்ப் பூசைபண்ணி
ஊணிப்பார் அதன்பிறகு உகாரசத்தி
ஓமெனவே தான்செபித்து உறுதிபெற்றால்
ஆணிமாத்த திகமதாய் பஞ்சபூதம்
அப்பனே பூரணமா யாகும்பாரே. 468

பாரப்பா மவுனமுடன் நின்றுவாழ
பரைஞான கேசரியாள் பாதம்போற்றி
சாரப்பா அவள்பதமே கெதியென்றெண்ணி
சங்கையுடன் மவுனரசந் தானேகொண்டால்
பேரப்பா பெற்றதொரு தவப்பேராலே
பேரண்டஞ் சுற்றிவர கெதியுண்டாகும்
ஆரப்பா அறிவார்கள் மவுனப்போக்கை
அறிந்து கொண்டு பூரணத்தை அடுத்துவாழே. 469

அடுத்துமிக வாழ்வதற்கு மைந்தாகேளு
ஆதியண்ட பூரணமாம் அண்டத்தேகி
விடுத்துமிக அதின்ரசத்தை வாங்கிக்கொண்டு
வேதாந்த சத்திசிவ பானமூட்டி
கடுத்துமிகப் போகாமல் கற்பூரஞ் சாற்றி
கலங்கமில்லா ரவிதனிலே காயவைத்து
எடுத்துமிகப் பூரணமாய்க் கொண்டாயானால்
ஏகாந்த மானசிவ யோகியாச்சே. 470



ஆச்சப்பா சிவயோகி யாவதென்றால்
அடங்கி நின்ற பஞ்சகர்த்தா ளஞ்சுபேரை
பேச்சப்பா பேச்சறிந்து கண்டு கொண்டு
பெருமையினால் சிவயோக முத்தனாச்சு
மூச்சப்பா தானறிந்து தன்னைப் பார்த்து
முனையான சுழினையில் வாசிபூட்டி
காச்சப்பா அக்கினிகொண் டாறாதாரங்
கசடகலக் காச்சிவிடு கனகமாமே. 471

## அரிதாரமியம்

ஆமப்பா கனகமென்ற தங்கத்தாயை
அருமையுடன் காணுதற்கு அங்கங்கேளு
ஓமப்பா வீரமுடன் லிங்கங்கூட்டி
உண்மையுடன் கமலரசந் தன்னாலாட்டி
தாமப்பா தாரமதுக் கங்கிபூட்டி
சங்கையுடன் ரவிதனிலே காயப்போட்டு
நாமப்பா சொல்லுகிறோம் அயக்கரண்டி
நன்மையுடன் கவசமிட்டு வெண்ணைகுற்றே. 472

வெண்ணையென்றால் நல்லெண்ணை விட்டுமைந்தா
இன்பமுடன் தானுருக்க ஈயமாகும்
பெண்ணையொத்த தாரமடா ஈயமானார்
பொன்னான பொன்விளையும் புகழ்ந்து பாரு
கண்ணையென்ற அரிதார ஈயந்தன்னை
கருத்தினிலே யான் சொல்லவென்றால் மெத்த
கஷ்டம்
என்னை வளர்த்தெடுத்தகுரு நாதன் சொன்னார்
என்மகனே நீயுமிந்தப் படிதான்பாரே. 473

## தாமிர பற்பம்

பாரப்பா இன்னமொரு கருவைக்கேளு
பதிவான பூரமடா கற்பூரந்தான்
நேரப்பா கற்பூரம் அதனோடொக்க
நிசமான கெந்தகமுங் கூட்டிச் சேர்த்து
காரப்பா கல்வமதில் அரைக்கும்போது
கசிந்துமிக சிவமாகுஞ் சிவத்திற்கேளு
சாரப்பா அரிதாரம் வீரஞ்சேர்த்து
தானரைத்து துட்டதற்கு கவசம்பண்ணே. 474

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

பண்ணப்பா கவசமது நன்றாய் செய்து
பாலகனே புடம்போட பற்பமாகும்
என்னப்பா வென்றுசொல்லி இருந்துவிட்டால்
ஈடேற்றமில்லையடா தன்னைப்பாரு
விண்ணப்பா அந்தமதில் தன்னைப்பாரு
மெய்யுருகக் காணுமடா அங்கத்தங்கந்
தன்னப்பா ரங்கமடா தங்கமாகுந்
தாயான கெந்தகத்தின் தைலங்கேளே. 475

### கெந்தகத் தைலம்

கேளப்பா பானையிலே பசும்பால்விட்டு
கிருபையுடன் தலைவாழைக் குருத்துவாங்கி
வாளப்பா குருத்தினால் வேடுகட்டி
மைந்தனே அதின்மேலே கெந்திபோட்டு
ஆளப்பா அடுப்பேற்றி எரிக்கும்போது
ஆதியென்ற கெந்தியது தைலமாகும்
கேளப்பா இல்லாத தைலந்தன்னை
கூர்மையுடன் பீங்கானில் வாங்கிக்கேளே. 476

கேளடா தயிலமதில் மைந்தாகேளு
கேள்வியென்ன புழுகுடனே கூடன்கூட்டி
ஆளடா தயிலமதில் பொடியைப் போட
அப்போது தயிலமது தண்ணீராகுங்
கேளடா இல்லாத தண்ணீர் தன்னில்
கூர்மையுடன் மனோசிலையைத் துவைத்துவாட்ட
வானடா வாட்டினதை உருக்கி மைந்தா
வளமான தங்கமதிற் சேர்த்துக்காணே. 477

சேர்த்துமிகப் பார்க்கையிலே தங்கஞ்செம்பாஞ்
சிவசிவா தங்காதி செம்புதன்னை
பார்த்துமிக வெள்ளியிலே பத்துக்கொன்று
பக்குவமாய்த் தான்கொடுத்து ஊதிப்பாரு
ாத்துமிக கனியிலே ஊதிப்பார்க்க
கைலாச மேருவது தங்கமாச்சு
த்தியதோர் தங்கமதைக் கண்டுநீயும்
தன்மையுடன் பூரணமாய் வாழ்வாய் பாரே. 478



பாரப்பா வாழ்வதுவும் ஆசை ஆசை
பலபணிதி புகுறுவது மாசையாசை
நேரப்பா நிற்பதுவு மாசை ஆசை
நிஷ்டையென்ற சிவயோக மாசை ஆசை
காரப்பா சகலகலை வாசியேறி
கண்ணறிந்து பார்ப்பதுவு மாசையாசை
சாரப்பா காயாதி கர்ப்பந்தன்னை
சந்தித்து நிற்பதுவு மாசைதானே. 479

### ஆசாபாசம்

ஆசையென்ற ஆசையெல்லா மாசாபாசம்
அரகரா தியாகமென்ற பாசத்துக்கு
ஓசையென்ற சிவையதினால் ஆசைமீறி
உண்மையென்ற ஞானமதி தன்னைக்காண
பாசையென்ற பலசமைய நூலாராய்ந்து
பத்திகொண்ட அஷ்டாங்க பாசத்தேகி
பூசையென்ற ஆகமங்கள் செய்து கொண்டு
பொல்லாத மாய்கையிலே புகுந்தார்பாரே. 480

பாரப்பா மாய்கையென்ன ஆசாபாசம்
பலபலவாம் சாஸ்திரத்தை பக்தியேறும்
நேரப்பா போதையிலே சென்டுபாயும்
நேர்மையுடன் புருவமதில் நிலையில் நிற்கும்
காரப்பா காயாதி கர்ப்பந்தேடும்
கர்ப்பமொன்று செந்தூர பற்பஞ்செய்யும்
வீரப்பா செந்தூரலோகம்பண்ணு
விசையான மாய்கைவிளை யாட்டுத்தானே. 481

தானென்ற மாய்கைவிளை யாட்டில்லாவிட்டால்
சங்கற்ப விகற்பமென்ற சார்பங்கேது
கோனென்ற குருவருளால் எண்ணிப்பார்க்கில்
கொண்டபடி நின்றதுவே பரசொரூபம்
தேனென்ற அருபமதுக் காகவேண்டி
செய்ததொரு பலதொழிலால் குத்தமில்லை
ஊனென்ற பல்தொழிலுக் குருதியான
உறுதியுள்ள தங்கமடா உண்மைதானே. 482

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## லிங்கக்கட்டு

உண்மையுள்ள தங்கரதி மாதுதன்னை
உறுதியுடன் காணுதற்கு வகையைக் கேளு
தண்மையென்ற நாகரசம் ஒன்றாய்க் கூட்டி
சரியாக பொரிக்காரம் கெந்தி சேர்ந்து
நன்மையுடன் கலசப்பால் தன்னாலாட்டி
நாதந்த லிங்கமதுக் கங்கிபூட்டி
செம்மையுடன் ரவிதனிலே காயவைத்து
சிவசிவா சுண்ணாம்பு முப்புங்கூட்டே. 483

கூட்டிமிகச் சம்பளத்தால் நன்றாயாட்டி
கூர்மையுடன் மேல்கவசஞ் சீலைசெய்து
வாட்டிமிகப் புடம்போட்டு எடுத்துப்பார்த்தால்
மகத்தான சாதிலிங்கம் கட்டிப்போடிம்
தாஷ்டிகமாய்ச் சவ்வீர மப்படியேகட்டுஞ்
சார்வறிந்து கட்டுமுறை திட்டும்பார்த்தால்
நாட்டியதோர் ரசவாதங் கைக்குள்ளாகும்
நாதாந்த புலத்தியனே இன்னங்கேளே. 484

## கல்லுப்புகட்டு

கேளடா சவுக்காரம் அன்னபேதி
கெடியான அப்பிரகம் முட்டையோடு
வாளடா பொன்னுருக்கும் பொரிக்காரந்தான்
மகத்தான சங்குடனே ஆறுங்கூட்டி
சூளடா மேனிச்சார் தன்னாலாட்டிச்
சுகமான கல்லுப்புக் கங்கிபூட்டி
மாளடா ரவிதனிலே காயவைத்து
மார்க்கமுடன் இன்னமொரு வரிசைகேளே. 485

வரிசையுடன் சுண்ணாம்பு முப்புங்கூட்டி
மார்க்கமுடன் சம்பளத்தால் நன்றாயாட்டி
வரிசையுடன் மேல்கவசம் நன்றாய்ச் செய்து
வண்மையுடன் புடம்போட்டு எடுத்துப்பாரு
கரிசனமாய்ப் புடமாறி எடுத்துப் பார்த்தால்
கல்லா கல்லுப்பு கட்டுப்பாரு
பரிசனமாய்க் கல்லுப்பு கட்டிற்றானால்
பாலகனே வேதைமுகம் பதிவாங்காணே. 486



காணவே கட்டிநின்ற உப்போடொக்க
கருவான சாதிலிங்கக் கட்டுங்கூட்டி
ஊணவே கமலரசந் தன்னாலாட்டு
உத்தமனே வகையறிந்து புடமேசெய்தால்
தோணவே லிங்கமுடன் உப்புஞ் சேர்ந்து
சுத்தமுடன் கட்டியது சித்தியாகும்
பேணவே சித்தியுடன் கட்டும்லிங்கம்
பெரிதான வெள்ளிசெம்பில் வேதையாச்சே. 487

ஆச்சப்பா இன்னமொரு வேதைமார்க்கம்
அருமையுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
தோச்சப்பா அரிதாரம் சாதிலிங்கம்
சுகமான பொரிக்காரஞ் சவ்வீரந்தான்
பாச்சப்பா வகைக்கிமஞ்சி சாடிபூட்டி
பதிவாக கமலரசந் தன்னாலாட்டி
நீச்சப்பா தங்கமொரு பலத்தகட்டில்
நீ மகனே கவசமது நன்றாய்ச்செய்யே. 488

## தங்கபீயம்

செய்யப்பா மண்சீலை வலுவாய்ச் செய்து
சிவசிவா புடந்தனில் வைத்துப் பார்த்தால்
மையப்பா மையமென்ற தங்காயம்
மார்க்கமுடன் செம்புதனில் பத்துக்கொன்று
வையப்பா வைத்துமிகப் பார்த்தேனென்று
வண்மையுடன் சொல்லினார் என் ஆசான்தானும்
கையப்பா தாவிருந்து உருக்கிக்கொண்டு
கனமாக நாலிலொன்று வெள்ளி சேரே. 489

சேர்த்துமிகத் தானுருக்கிப் பார்க்கும்போது
சிவசிவா பொன்னொளிவை என்னசொல்வேன்
மாத்ததிக மானசிவ சோதித்தாயை
மனதுபரி பூரணமாய்ப் பூசைபண்ணி
ஆத்துமத்துக் கரசான சோதியென்று
அனுதினமுஞ் சிவயோகத் தாசைப்பூண்டு
பார்த்திபனே பூரணமாய் நின்றாயானால்
பக்குவமாய்ப் பூரணத்தில் பதியலாமே. 490

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

பதியான பதியதுதான் பரசொரூபம்
பசுவான வாசியடா காலுமாச்சு
விதியான பாகமடா வீடதாச்சு
வீடறிந்து கால்நிறுத்தி யோகஞ்செய்தால்
கெதியான முச்சுடரும் ஒன்றாய்நின்று
கேசரத்தி லாடுகின்ற கெதியைப்பார்த்தால்
மதியான மதிமயக்கந் தானேதீர்ந்து
மாசற்ற சோதியென வாழலாமே. 491

வாழலாம் சவுமியமாய் நின்றுகொண்டு
மகத்தான சாரசமுந் தாமென்றெண்ணி
ஆளலாம் அந்தரங்க மூலமாக
ஆதிபர ஞானவெளி சோதிபோலே
ஞாளலாஞ் சுத்தசித்த சுகத்தைப் பெற்றுத்
துலங்கலாம் மணிமகுடச் சோதிபோலே
மேலெல்லாம் பாசமென்று நினைக்கவேண்டாம்
வேதாந்த பிண்டமடா அண்டந்தானே. 492

தானாவ அண்டபிண்ட மண்விண்ணாச்சு
சகல சராசரங்களெல்லாம் அதுதானாச்சு
வானென்ற வடிவுதன்னைக் காணாரெல்லாம்
வாசா கோசரமாகப் பேசலாச்சு
ஊனென்ற உடலுயிரை உண்மையாக
உண்மையென்ற ஞானநெறி காணாரெல்லாம்
வீணென்ற வேடமதைத் தரித்துக்கொண்டு
வெறியெடுத்த நாய்போலே திரிவான்பாரே. 493

## செயநீர்

பாரப்பா வெறியெடுத்த உதாரச்செந்தி
பாய்ந்தேறிப் பத்திமன மலையாமல்தான்
காரப்பா அதற்குமொரு கருவைக்கேளு
கருவான துரிசுசவ் வீரங்கூட்டி
ாரப்பா பச்சையென்ற கற்பூரத்தோடு
தனித்த பச்சைப்புழுகுடனே நாலுங்கூட்டி
ரப்பா அரைத்துப்பீங் கானில்வைக்க
நேசமாக ஊருமடா செயநீர்தானே. 494



## வெள்ளி பற்பம்

தானான செயநீரில் மைந்தாகேளு
தகடான அரிதாரந் தோய்த்துதோய்த்து
வானான ரவிதனிலே வைத்துப்பார்க்க
மாசத்து நீருமடா துருசுநீறுங்
கோனான சவ்வீரங் கூடநீறும்
கூர்மையுடன் மூன்றுநீ றொன்றாகக்கூட்டி
தேனான வெள்ளியொரு பலத்தகட்டில்
மூர்க்கமுடன் தான்பூசிப் புடத்தைப்போடே. 495

போடப்பா புடந்தனில் வைத்துப்பார்க்கப்
பூரணமாய் வெள்ளியது நீறிப்போகும்
நாடப்பா வெள்ளியென்ற நீறில்மைந்தா
நன்மையுடன் இடைசரியாய் வீரம்பூரம்
சூடப்பா கல்வத்தில நாதநீறால்
சுத்தமுடன் தானாட்டி எடுத்துக்கொண்டு
ஆடப்பா தங்கமென்ற காசிலப்பா
அதின்பிறகு உப்புடனே சங்குங்கூட்டே. 496

## தங்கபற்பம்

கூட்டிநன்றாய்ப் பழச்சாற்றில் நன்றாயாட்டி
கூர்மையுடன் மேற்கவசஞ் சீலைசெய்து
நாட்டிநன்றாய் எருவடிக்கி புடத்தைப் போட்டால்
நாதாந்தத் தங்கமது நீறிப்போகும்
தாட்டிகமாய் நீறிநின்ற தங்கம்நீறும்
தானெடுத்துப் பதனமதாய் வைத்துக்கொண்டு
பூட்டிநன்றாய் நவலோகந் தன்னில்
பொல்லாத லோகமெல்லாம் தங்கந்தானே. 497

## நாகக்கட்டு

தானான நாகமதைக் காணவேண்டி
தன்மையுள்ள நாகமூறை ஒன்றுகேளு
வீணான கெந்தகமும் துரிசுதாரம்
வெள்ளைப் பாஷாணமுடன் சாரஞ்சங்கு
வானான அறுசரக்குங் கல்வத்திட்டு
வரிசையுடன் சம்பளத்தின் சாற்றிலாட்டி
கோனான நாகமதிற கவசம்பண்ணிக்
கூர்மையுடன் சத்தியுப்பால் சீலைசெய்யே 498

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

செய்யப்பா சீலைசெய்து புடத்தைப்போடு
செம்மையுடன் நாகமது உருகிநிற்கும்
மெய்யப்பா உருகிநின்ற நாகத்தோடே
மேலான தங்கத்தைச் சரியாய்ச்சேர்த்து
வையப்பா செம்புவெள்ளி ஒன்றாய்க்கூட்டி
மகத்தான நாகுரு பத்துக்கொன்று
கையப்பா தானறிந்து குடுத்துப்பாரு
கண்டங்காத் தங்கவொளி காணலாமே. 499

காணவே இன்னமொரு கருவைக்கேளு
கருவான பேதியுடன் தாரங்கூட்டிப்
பேணவே தானரைக்க நீருண்டாகும்
பரிகி நின்றநீர தனில் சொல்லக்கேளு
தோணவே அரிதாரம் வீரம்பூரம்
சுத்தமுடன் தானரைத்து ரவியில்வைத்து
உண்ணவே நீறியது பற்பமாகும்
உத்தமனே அதுவுடனே கெந்திகூட்டே. 500

கூட்டி மிகவாய்நீரால் அரைத்துமைந்தா
குருவான தங்கமதின் மேலேபூசி
வாட்டி மிகப்புடம் போடத் தங்கநீறும்
மகத்தான பற்பமதை வைத்துக்கொண்டு
நாட்டமுடன் பணவிடைதான் தேனிற்கொண்டால்
நரசென்மம் அல்லவடா தேவனாச்சு
தாஷ்டிகமாய்த்தாய் பதத்தைப் பூசைபண்ணி
தானவனால் நின்றுதவந் தானேசெய்யே. 501

## அரிதார ஈயம்

செய்யப்பா கட்டிநின்ற வீரம்லிங்கம்
தீர்க்கமுடன் நாதநீர் தன்னாலாட்டி
மெய்யப்பா தாரமதுக் கங்கிபூட்டி
விசையான ரவியில்வைக்க ஈயமாகும்
வையப்பா தங்கமதில் ஈயஞ்சேர்த்து
மார்க்கமுடன் தானுருக்க குருவாய்நிற்கும்
பையப்பா குருவெடுத்து வெள்ளிச்செம்பில்
புத்துக்கு ஒன்றிடவே பழுக்கும்பாரே. 502



பாரப்பா காரமுடன் வீரங்கூட்டி
பத்தியுடன் தானரைக்க நீருண்டாகும்
நேரப்பா அன்வீரல் மைந்தாகேளு
நிசமாக சாரமுடன் வீரந்தோய்த்துக்
கூரப்பா விளக்கொளியில் வாட்டினாக்கால்
கசடற்று கட்டியது திட்டமாகும்
சேரப்பா நாகமது உருகும்போது
செயமான சாரமதைச் சேர்த்துப்பாரே. 503

## நாகக்கட்டு

சேர்த்துமிகத்தானுருக்க நாகந்தானும்
தீர்க்கமுடன் தானிருந்து கண்விட்டாடும்
பார்த்துமிக அன்னேரந் தங்கஞ்சேரு
பதிவான வீரமது கூடச்சேரு
கார்த்துநன்றாய்ச் சேர்த்ததைநீ யெடுத்துப்பாரு
கனகமயமானதொரு களங்கதாகும்
ஆற்றுமற்றுக்காசான் களங்குதன்னை
அன்புவைத்துவெள்ளிசெம்பி லணைத்துப்பாரே 504

அணைத்துமிகத்தான் உருக்கி எடுத்துப்பார்த்தால்
ஆதிமிக சோதியென்ற தங்கத்தாய்தான்
நினைத்தபடி தான்குடுக்குஞ் சோதித்தாயை
நித்தியமுஞ்சுத்தமதாயப் பூசைப்பண்ணி
மனதைமிகத் தானிருத்தி சோதிப்பார்த்தால்
மகத்தானவாசிசிவ யோகந்தன்னால்
சினந்து வருங்காலனவன் ஓடிப்போவான்
சிவசிவா குருபதத்தில் தெளிவாய்நில்லே. 505

## சாரக்கட்டு

நில்லப்பா ஞானியண்ட முட்டைத்தோலும்
நிசமான கடல்நுரையுஞ் சாரஞ்சேர்த்து
உண்ணப்பா நாதநீர் தன்னாலாட்டி
உத்தமனே சாரமதுக் கங்கிபூட்டி
சொல்லப்பா ரவிதனிலே காயவைத்து
சிவசிவா புடம்போட உருகிக்கட்டும்
வில்லப்பா விசைபோலே கட்டும்சாரம்
வேதாந்த நாகமிதில் கட்டும்பாரே. 506

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

### வீரவைப்பு

பாரப்பா சவ்வீர வைப்புசொல்வேன்
பதிவான நவாச்சாரம் அன்னபேதி
சாரப்பா கல்லுப்பும் சீனிக்காரம்
சங்கையுள்ள வெடியுப்பு துரிசுவெள்ளை
காரப்பா சாதிலிங்கங் கெவுரித்துத்தம்
கனமான தாளகமும் யெவச்சாரந்தான்
நேரப்பா வகைக்கி ஒருபலமுங்கூட்டி
இதமாகமடைக்கி அரை ரசமுஞ்சேரே. 507

சேர்த்துமிகத்தான் பொடித்து குப்பிக்கேற்றி
தீர்க்கமுடன் மண்சீலை மூன்றுஞ்செய்து
பார்த்திபனேகுப்பி மூக்களவுமட்டும்
பதிவாக மண்விட்டு அடுப்பில்வைத்து
காத்துநீயெடுத்து அதை கனமாய்வைத்தால்
கண்மணியே வீரவைப்பு என்னசொல்வேன்
நாத்துமிகப் போகாமல் நாலுசாமம்
நன்றாகத்தீ மூட்டி எரித்துப்பாரே. 508

பாரடா எரித்துமிக இறக்கிவைத்து
பத்தியுடன் குளுந்தபின்பு எடுத்துப்பாரு
நேரடா வீரமதை என்னசொல்வேன
நிசமான பூரணசந்திரனைப் போலே
பேரடா பெற்றதொரு வீரமாச்சு
பிலமான வீரமதை யார்தான் காண்பார்
காரடா சற்குருவைத் தொழுதுபோற்றி
கனமான சிவயோகக் கருத்தில்நில்லே. 509

### பாஷாணக்கட்டு

நில்லென்ற நிலைதனிலே நின்றுகொண்டு
நீமகனே இலுப்பையுடன் பாலைவாங்கி
செல்லென்ற பாஷாணக் கட்டிமேலே
செம்மையுடன் தான்தடவி மைந்தாகேளு
டல்லென்ற காயரைத்து பதமறிந்துமைந்தா
உண்மையுடன் புடமபோட உருகிநிற்கும்
சால்லொன்றும் தவறாமல் தாம்பூரத்தில்
சுத்தமுடன் ஈநதிடுவாய் பத்துக்கொன்றே. 510



ஒன்றாகத்தான் கொடுத்து உருக்கி மைந்தா
உண்மையுடன் பத்துக்கு ஒன்றுவெள்ளி
நன்றாகத்தான் கொடுத்து உருக்கிப்பாரு
நல்லவெள்ளி மாத்ததிகம் நலமாய்காணும்
நின்றாடும் பொன்வெள்ளி கண்டாயானால்
நின்மனது அலையாது யோகத்தேகும்
குன்றாது சிவயோகம் கூர்மையாகும்
குருவசனம் மறவாமல் குறிகண்டாட்டே. 511

நாட்டமென்ற நயனமடா மைந்தாகேளு
நன்மையுள்ள இடதுகலை சந்திரனாச்சு
தேட்டமென்ற வலதுகலை சூரியனாச்சு
சிவசிவா நடுமய்யஞ் சுழினையாச்சு
வாட்டமென்ற இவையெல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து
வண்மையுடன் ஒன்றாகி நின்றுகொண்டு
கூட்டமென்ற அக்கினிதான் சோதியாச்சு
குருவருளால் முச்சுடரை கண்டுதேறே. 512

தேருவது சூக்ஷாதி சூக்ஷமப்பா
திருவான சூக்ஷமதை சொல்லக்கேளு
நேருவது கலையறிந்து சுழினைக்கேற்றி
நெற்றியென்ற மத்தியடா மகாரமீதில்
சாருவது தெளிவெனவே சார்ந்துகொண்டால்
தன்மயமாம் வாசிதான் தயவாய்நிற்கும்
ஆருவது ஆதாரம் தன்னில்
அடங்கிநின்ற அக்கினியே சோதிகாணே. 513

### எல்லாந்தான்தான்

சோதியென்ற அக்கினியே தான்தானாகும்
துலங்குகின்ற முச்சுடரும் தான்தானாகும்
ஆதியென்றும் அந்தமென்றும் தான்தானாகும்
அடங்கிநின்ற சிவயோகந் தான்தானாகும்
சாதியென்ற சமரசமுந் தான்தானாகும்
சச்சுதானந்த பூரணமும் தான்தானாகும்
நீதியுடன் தன்னறிவாய்ப் பார்க்கும்போது
நிறைந்துநின்ற பூரணமாய்க் காணலாச்சே. 514



Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## ஞானம்

ஆச்சப்பா பூரணமாய் நின்றகாளி
அரிதரிது காணுதற்கு அருமையாகும்
பேச்சப்பா பெருகிநின்ற இருளுக்குள்ளே
பிறந்துதடா ரவிமதியும் ஒளியாய்நின்று
காச்சப்பா ஒளியறிந்து வழியைக்கண்டேன்
கண்டவழி ஒளியதுவே கலந்துசென்று
பேச்சப்பா இருளொளியில் அலைந்துகொண்டு
போனயிடம் வந்தயிடம் புகுந்துபாரே. 515

பாரப்பா புகுந்தயிடம் பத்திக்கொண்டு
பதிவாக வந்தயிடம் வெளிதான்மைந்தா
நேரப்பா வெளியொளிதான் எங்கேயென்றால்
நிசமான ஆகாசம் இருளாய்ப்போச்சு
சேரப்பா செனித்ததுவும் இருளிலாச்சு
செத்திறந்து போனதுவும் இருளிலாச்சு
காரப்பா கண்டதெல்லாம் இருள்தானாச்சு
கணங்கண்ட காரியங்கள் கனவாய்ப்போச்சே. 516

போச்சப்பா கண்டதெல்லாம் கனவாய்ப்போச்சு
பொரிந்த மனங்காணாத பொருள்தான்சத்தியம்
போச்சப்பா சத்தியமெல்லாம் மாயமாச்சுப்
பேச்சத்தவிடமதுதான் நித்தியமாச்சே
ஆச்சப்பா ஆசையெல்லாம் பாசம்பாசம்
ஆசையற்ற ஆசையது அதுதான்சாக்ஷி
சாக்ஷியென்ற காக்ஷிதனை கண்ணாற்காண
கண்ணுமில்லை காதுமில்லை என்றுதானே. 517

என்றுதான் இருந்தபடி இருந்ததெல்லாம்
என்மகனே இனிமேலே வேறுண்டாச்சோ
அன்றுதான் இன்றுவரை ஒன்றேயல்லால்
ஆடினதும் அடங்கினதும் அதுதான்பாரு
ஒன்றுதான் பலபொருளாய் விரிந்து நின்று
ஓடிமிக அடங்கினதும் ஒன்றுதானே
நின்றபடியிது போதங் கண்டு கொண்டு
நிச்சயமென்றுச்சிதமாய் நின்றுகாணே. 518



## பாசம்

காணுவதும் பூணுவதும் பாசமாகும்
கலங்குவது முழுங்குவதும் பாசமாகும்
பேணுவதும் பிதற்றுதும் பாசமாகும்
பெருகுவதும் குருகுவதும் பாசமாகும்
பூணுவதும் போற்றுவதும் பாசமாகும்
போத நெறியானதுவும் பாசமாகும்
தோணுவதுஞ் சுருக்குவதும் பாசமாகும்
சுத்தமுடன் நின்றபடி தன்னுள்பாரே. 519

பாரப்பா தன்னுள்ளே பகுத்துப்பார்க்கில்
பாழான பிரிதிவிதான் மண்ணாப்போச்சு
நேரப்பா அப்பதுவும் தண்ணீராச்சு
நிசமான தேய்வதுவும் நெருப்புமாச்சு
தாரப்பா வயறதுவும் காற்றுமாச்சு
கருவான ஆகாசம் சாசரியாச்சு
சேரப்பா அறிவதுவும் அதுவேயாச்சு
தேட்டமென்ன வாட்டமென்ன தெளிந்துபாரே 520

தெளிந்து நிலைதனை அரிந்து தெளிந்துபார்க்கில்
தெளிவறிந்து சொல்வதற்கு நாவங்கில்லை
அளிந்து அந்தவடிவான வடிவே அல்லால்
அருபமென்றுஞ் சுருபமென்றும் அவற்றுள்போமோ
நெளிந்து மனம் போகாமல் அறிந்து அந்த
நேரறிந்து நிலைசெலுத்திக் கொண்டால் மைந்தா
வளிந்தோடிப் போகாது அந்ததேசு
பாதகமே போதகமாய் வாழுங்கணே. 521

## சூதமணி வேதை

காணவே சூதத்தின் கட்டுச்சொல்வேன்
கருணைவளர் சூதமது பலந்தானொன்று
பூணவே கல்வத்தி லிட்டுக் கொண்டு
புத்தியுடன் வெற்றிலைச்சார் செங்கல்தூளும்
பேணவே மத்தித்து கழுவிப்போட்டு
பிலமான ரவிதனிலே காய்ந்தபின்பு
தோணவே வழலைபச்சை துருசு கூட்டி
சுத்தமுடன நாதவிந்தை விட்டு ஆட்டே. 522

ஆட்டவே சூதமது வெண்ணையாகும்
அரைபச்சை பூனாகம் அரைத்துக் கொண்டு
கூட்டவே குகைபோலே செய்து மைந்தா
குருவான ரசவெண்ணை அதற்குள் வைத்து
நாட்டவே அவிபுடமாய் பத்துபோட்டால்
நல்லரசந்தானிருகி கல்லுப்போலாம்
வாட்ட கருவூமத்தின் காயில்வைத்து
மைந்தனே முன்போலே புடத்தைப் போடே. 523

போட்டபின்பு கரண்டியிலே எண்ணை குத்தி
புத்தியுடன் தானுருக்கி எடுத்துக் கொண்டு
நாட்டமுடன் குடக்கறியில் உருக்கிப் பார்த்தால்
நல்லரசமணியதுவும் கண்விட்டாடும்
தேட்டமுடன் அம்மணியை எடுத்துக் கொண்டு
சிவசிவாசாரணைகள் திறமாய்ச் செய்தால்
ஆட்டமுடன் அண்டமெல்லாஞ் சுத்திவரலாகும்
அரகரா சூதமணி ஆட்டுத்தானே. 524

தானென்ற பூரணமே அமுர்தமாகும்பாரு
தண்மையுடன் அந்தமுர்தந் தானேகொண்டு
தேனென்ற அந்தமுர்தங் கொண்டு தேர்ந்தால்
திருவாசல் பூட்டுகள்தான் திறக்கும்பாரு
ஊனென்ற ஆதார மங்கேகாணும்
உண்மையென்ற நாதவொளி கிதங்கேழ்க்கும்
நானென்ற நாட்டமதாய் நின்றாயானால்
நல்லபதங்கிட்டுமடா நயனம்பாரே. 525

## சூதமணி செந்தூரம்

பாரப்பா சூதமணி தனையெடுத்து
பத்தியுள்ள நாதமதால் சுருக்குத்தாக்கி
சேரப்பா அந்நிடைக்கி தங்கஞ்சேர்த்து
திறமான அப்பிரகம் விந்தாலாட்டி
நேரப்பா மணி தனக்கு அங்கிபூட்டி
நேர்மையுடன் ரவிதனிலே காயப்போட்டு
தேரப்பா சட்டியிலே கரியுப்பிட்டு
திறமான ரசமணியை நடுவில்வையே. 526



வையப்பா மேலுமந்தப் படிதானுப்பை
வரிசையுடன் செய்தபின்பு சட்டிமூடி
மெய்யப்பா மண்சீலை ஏழு செய்து
மெஞ்ஞான சற்குருவின் பாதம்போற்றி
தையப்பா தவறாமல் அடுப்பிலேற்றி
கமலமென்ற அக்கினியை நாலுசாமம்
செய்யப்பா தீமூட்டிப் பதந்தப்பாமல்
செம்மையுடன் தானிறக்கி ஆறவையே. 527

ஆறவைத்து ரசமணியை எடுத்துப்பாரு
அப்பனே செந்தூரம் கண்கொள்ளாது
தேறவைக்குந் தேகமதை செந்தூரந்தான்
சிவசிவா பணவிடைதான் தேனிற்கொண்டால்
மாறவைக்கும் வாசியது நேரே நிற்கும்
மகத்தான ஆகார மங்காதப்பா
ஊறவைக்குஞ் செம்புதனில் சத்தேபட்டால்
ஊறலத்து தங்கமய மாகுந்தானே. 528

## லிங்கவேதை

தானென்ற சாதிலிங்கம் வேதை சொல்வேன்
தவறாமல் லிங்கமது ஓர்பலமும் வாங்கி
கோனென்ற ரசமுடனே வங்கஞ்சேர்த்து
குருவான அரப்பொடியுங் கூடச் சேர்த்து
தேனென்ற நாதமதாய் நன்றாயாட்டி
செம்மையுடன் லிங்கமதுக் கங்கி பூட்டி
வானென்ற ரவிதனிலே மைந்தா நீயும்
வணக்கமுடன் காயவைத்து வரிசைகேளே. 529

வரிசையுடன்கெந்தி அரிதாரம் வெள்ளை
மகத்தான கெவுரிகரி யுப்புத்துத்தம்
வரிசையுடன் வகைக்கியிரு களஞ்சிவாங்கி
உத்தமனே கல்வமதில் பொடித்துக் கொண்டு
கரிசனமாய் அயச்செம்பில் பொடியரை தானிட்டு
கனமாக கவசமதை அதின்மேல் வைத்து
புரசமுடன் புடம்போட்டு எடுத்துப்பாரு
புதுமைவெகு செந்தூரங் கண்கொள்ளாதே. 530

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

கொள்ளாத பசுவுக்கு கன்னங்கேது
கொண்டு கரையேறுதற்குச் செந்தூரத்தில்
கள்ளாகேள் பணவிடைதான் தேனிற்கொண்டால்
கசடான தத்துவங்கள் கனகமாகும்
உள்ளான வாசியது உறுதியாகும்
உண்மையென்ற தலமதிலே தீபங்காணும்
வின்னாமல் விண்டதொரு செந்தூரத்தை 531
விபரமுடன் அந்திசந்தி கொண்டுதேரே.

கொண்டுமனந் தேறினபின் மைந்தாகேளு
கூர்மையுடன் நவலோகந் தன்னிலேதான்
அண்டர் தொழுஞ்செந்தூரஞ் சற்றேபட்டால்
அசடான கசடகன்று அன்னம்போலாம்
கண்டதொரு அருணகிரி உதையங்கண்டால்
கண் கொள்ளா சித்துவிதை விளையாடலாகும்
தொண்டருட தொண்டருக்கு தொண்டுபண்ணி 532
சுத்தமுடன் சிவயோகத் துறையில் நில்லே.

நில்லடா வழி துறையிவ் வணக்கமாக
நின்றுகரை யேறினபின் மனையிற்செல்லு
அல்லடாயிவ் விடமே சொற் கம்சொற்கம்
ஆதியந்தச் சொற்கமதில் அருள்கண்மேவி
செல்லடா சிவயோக வாழ்க்கைதன்னில்
செம்மையுடன் சகலசவு பாக்கியம்பெற்று
உள்ளடா வுள்ளவரை உலகத்தோடே
உகந்தவரை தானிருந்து உள்ளம்பாரே. 533

பாரப்பா உள்ளமதை தினமுமைந்தா
பத்திகொண்டு சுத்தமுடன் பார்த்தாயானால்
பேரப்பா பெற்றதொரு உள்ளந்தானும்
பெருமையுடன் தான்பழுக்கும் உருமை வைத்து
கூரப்பா கருணைவளர் அமுர்தபோதம்
கண்ணிறைந்த போதமடா யோகத்தேகி
சாரப்பா சாரசமே தானாய் நின்று
சங்கல்ப விகல்பமது சார்ந்துதள்ளே. 534



தள்ளுவது ஆரையென்றால் மைந்தாகேளு
தன்னுறவுயில்லாத சமையத்தோரை
உள்ளுரைந்த உள்ளமதைப் பாரார் தன்னை
உத்தசிவஞ் சத்திபதம் தேடார் தன்னை
நல்லுணர்வு இல்லாத நாயகன் தன்னை
நாதாந்த வேதமதைக் காணார் தன்னை
சொல்லுணர்வாய் நாவில்வைத்துப் பேசவேண்டாம்
சோதிமய மானசிவ ஞானம்பாரே. 535

பாரடா சிவஞான மென்னவென்றால்
பாருலகில் நின்றவுயிர் பயிர்களெல்லாம்
நேரடா தன்னகம்போல் காணவேணும்
நேர்மையுடன் சத்தியமாய் நிற்கவேணும்
காரடா சகலகலைக் கியானமெல்லாங்
கருத்துகந்து பூரணமாய்க் காணவேணும்
மேரடா மேருகிரி அந்தங்கண்டு 536
விள்ளாத பொருளதுவே விளங்கும்பாரே.

பாரான உலகமதே மாயவாழ்க்கை
மகத்தான வாழ்க்கையிலே மருவிநின்று
நேரான நிச்செயத்தை அறியாமற்றான்
நிசமான வெளியென்றும் ஒளிதானென்றும்
பேரான பரமென்றும் பரந்தானென்றும்
பெருகி நின்ற சத்தியென்றும் சிவந்தானென்றுங்
கூறாதயின மென்றும் எண்ணியெண்ணி
கொண்டு நின்ற நிச்சயத்தை அறியார்காணே. 537

காணவே நிச்சயத்தைக் காணவென்றால்
கண்ணே துவாயேது கருத்தங்கேது
பூணவே நின்று அண்டத் தப்பால் பாரும்
பொருந்தி நின்ற பூமியின் கீழிருப்பார்பாரு
ஊணவே நின்றகெதி பார்த்தாயானால்
உலகேது நீயேது நான்தான் ஏது
பேணவே பார்க்க அந்த மயமாய்ப் போச்சு 538
பேச்சற்ற சூக்ஷத்தின் காக்ஷிதானே.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

காக்ஷியென்ற காக்ஷிகள் காக்ஷியாச்சு
கலந்து ஒன்றாய் நின்ற பொருள் சூக்ஷமாச்சு
மோக்ஷமென்ற சூக்ஷமதில் தானாமென்று
மோனமுடன் தானிருப்பார் போதமாகப்
பேச்சான முச்சிரந்த வடிவே யோகம்
வலமான யோகபதி பூரணமேதானாம்
சூக்ஷமென்ற சூக்ஷமதை போதமாக
சூக்ஷாதிசூட்சமுடன் இருப்பார்தானே. 539

## நாகரச மெழுகு

இருப்பார்கள் சூட்சாதி சூட்சமாக
ஏறுதற்கு வழியொன்று சொல்லக் கேளு
வெறுப்பாக மனமலைந்து போகாவண்ணம்
வேதாந்த நாகரச மெழுகு செல்வேன்
கருப்பான நாகரசம் ஒன்றாய்க் கொண்டு
கருணையுடன் அந்திடைக்கி நாலத்தொன்று
குறிப்பான வீரமுடன் கெவுரிலிங்கம்
குருவான அரிதாரம் அயக்காந்தம்பாரே. 540

பாரப்பா காந்தமுடன் சாரம்பூரம்
பதிவான துத்தமுடன் துரிசுகாரம்
நேரப்பா பதிமூன்றும் வகையாய் தாக்கி
நேர்மையுடன் கல்வமதில் பொடித்து மைந்தா
காரப்பா கமலரசந் தன்னாலந்த
கருணையுடன் மூன்றுநாள் நன்றாயாட்டி
சேரப்பா ஒன்றாக ஆடும்போது
திருவான நாதநீர் தன்னாலாட்டே, 541

ஆட்டுவாய் நாலுநாள் நன்றாயாட்டி
அதன்பிறகு வெடியுப்பு நீரால் மைந்தா
கூட்டியே ஆறுநாள் தானேயாட்டி
குருவான மெழுகதுவை என்ன சொல்வேன்
நாட்டியே வழித்தெடுத்து மைந்தா நீயும்
நன்மைபெற ரவிதனிலே நவநாள் போட்டு
பூட்டியே ரவிதனிலே நவநாள் போட்டால்
பொன்னான பொன்மெழுகு கண்கொள்ளாதே. 542



கண்கொள்ளா காக்ஷிதரும் மெழுகை மைந்தா
கருணையுடன் அவையடக்கமாக வைத்து
விண் கொள்ளா தங்கஅப ரஞ்சிதன்னை
வேதாந்த மெழுகுக்கு நாலத்தொன்று
பொன் கொள்ளாப் பொன்விளையுந் தாயே என்று
புத்தியுடன் தங்காதி மெழுகுங்கூட்டி
கண் கொள்ளாச் சோதியென்று கல்வத்தாட்டி
கனகாதி மெழுகுதனைப் பதனம் பண்ணே. 543

பண்ணடா பதனம்வெகு பதனமாக
பத்தியுடன் அயச்சிமிழில் பதிவாய் வைத்து
நண்ணடா நவலோகந் தன்னிற் பூசி
நாட்டமுடன் மண்ணரைத்துக் கவசஞ்செய்து
உண்ணடா சற்குருவைத் தியானம்பண்ணி
உறுதியுடன் புடம்போட்டு எடுத்துப்பாரு
கண்ணடா கொள்ளாத சோதிப்போலே
கைகண்ட தங்கமடா மெய்தான்பாரே. 544

பாரப்பா மெய்யான தங்கத்தாயை
பத்துக் கொன்று பூரணமாய்க் கண்டபோது
நேரப்பா நின்றதொரு வாசியாலே
நீங்காத சிவயோகம் நேரதாகும்
காலப்பா சிவயோகத் திருந்து கொண்டால்
கலந்துகொண்ட கற்பமெல்லாஞ் சித்தியாகும்
பேரப்பா கொண்டகற்பஞ் சித்தியானால்
பேர்பெரிய சிவயோக முனிதானாச்சே. 545

ஆச்சப்பா சிவயோக முனிதானென்றும்
அடங்காத வாசிசிவ யோகியென்றும்
மூச்சப்பா நிறைந்த கேசரி தானென்றும்
முத்தியுள்ள ஞானபர தேசியென்றும்
பேச்சப்பா பேசாத மவுனியென்றும்
பேரண்டஞ் சித்திவருங் கெவுனியென்றும்
பாச்சப்பா பருதிமதி சுடர்மூன்றாலே
பாரான கேசரியின் சோதிபாரே. 546

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## தீபம் பார்க்க

சோதியந்தக் கண்ணதிலே சோதிகாண
சத்தமுள்ள கருமான மொன்றுகேளு
நீதியந்த பூதியடா விடுதி வாங்கி
நிச்செயமாய் கற்பூரமீதின் மேல் வைத்து
ஆதியந்த சோதியுட தீபம் பார்த்து
அதின்பிறகு கற்பூரத் திருநீர்வாங்கி
ஓதியந்த விபூதிதனை உத்தளமாய்பூச
உண்மையுடன் பூசயிலே சோதியாமே. 547

ஆமென்ற கற்பூர தீபத்தில் நின்று
அனுதினமும் உத்தளமாய் அணிந்து கொண்டால்
ஓமென்ற சிவபூசை சத்திபூசை
உரிமையுடன் தினஞ்செய்த பலத்துக் கொக்கும்
தானென்றும் அவனென்றும் வேறொன்றில்லை
சதாகாலம் கற்பூரத் திருநீர் தன்னை
நாபென்று அகம்பிடித்த நோயாளிக்கு
நாட்டமுடன் தான்கொடுக்க நன்மையாமே. 548

நன்மையுள்ள பூசையடா மவுனபூசை
நல்லோர்கள் அறிவார்கள் இந்தப் பூசை
உண்மையுள்ள பூசையென்று மைந்தா நீயும்
உறுதியுடன் அந்தி சந்தி உருவமைத்து
தன்மையுடன் இடதுகையில் மைந்தா நீயும்
தயவாக விபூதியை நீ பிடித்து வைத்து
நுண்மையுடன் கற்பூரம் அதின் மேல் வைத்து
நோக்கிமன தறிவாலே தீபம் ஏற்றே. 549

ற்றிமனப் பூரணமாய் வலதுகையில்
என்மகனே சிவமாலை எடுத்துக் கொண்டு
போற்றி நன்றாய்ப் புருவமதில் மனதை வைத்து
புத்தியுடன் ஓம்றீங்சிம் சிவமென்று
ார்த்திபனே உருச்செபிப்பாய் தொண்ணூற்றாறு
பத்தியுடன் தான்செபித்து விபூதி வாங்கி
த்திடுவாய் நெத்தியிலும் உத்தளமாய்ப் பூசிச்
சணத்திலே சோதிபிர காசந்தானே. 550



காணவே தன்ரூபம் சிவமயமாயெண்ணித்
கருணையுடன் சகலஉப சாரஞ்செய்து
பூணவே ஓம்ரீங்சிம் சிவமென்று
புத்தியுடன் கற்பூர தீபப்பார்த்து
தோணவே ஆதாரஞ் சுத்தியாகும்
சூழ்ந்து நின்ற பாசமெல்லாம் அகன்று போகும்
பேணவே இவ்விதமாய்த் தியானஞ் செய்தால்
பேரண்டச் சித்தனெனப் பேசலாமே. 551

பேசவொண்ணா அந்தரங்கம் ஞானந்தன்னை
பிறரறியச் செய்யாதே பேணிப்பாரு
தேசுவென நின்ற கேசரியைப் பாரு
திருவாகி நின்றதிரு வாசிபாரு
ஆசுவென நின்றஆ தாரம் பாரு
ஆதியந்த பூரணமாய் ரவியிற் சேரு
கூசிமனங் குன்றாமல் குருவைக் காரு
குருவான அமுர்தரச கற்பங்காரே. 552

கர்ப்பமென்ற உற்பனத்தைச் சொல்லக்கேளு
கருணைவளர் நாதவிந்து கடாக்ஷமாகும்
விற்பன விதக்ஷணமாய்க் கடாக்ஷம் பெற்று
விந்துநிலை தானறிந்து நாதத்தேகி
உற்பனமாய் கற்பமென்று கொண்டால்மைந்தா
உண்மையென்ற பூரணமாய் இருக்கும்பாரு
அற்பமென்று நீநினைந்து விட்டாயாகில்
ஆதசர தேவதைகள் அகல்வார்பாரே. 553

## நாகரச வங்கபற்பம்

பாரப்பா ஆதாரமுள்ள பீடம்
பிரம்மனகைலாச மென்ற பிரம்மபீடம்
நேரப்பா நின்றுபிர காசமாக
நேர்மையுள்ள நாகரசம் சொல்லக்கேளு
காரப்பா ரசமுடனே நாகவங்கம்
கலந்து ஒருகட்டியதாய் எடுத்துக் கொண்டு
சேரப்பா அதுக்குஅரை பொடிதானப்பா
தீர்க்கமுடன் தானெடுத்துக் கல்வத்தாட்டே. 554

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

ஆட்டுவது சம்பனத்தின் சாற்றால்மைந்தா
அப்பனே வட்டிமெழுகு போலேயாட்டி
கூட்டுவது நாகரசக் கட்டிதன்னை
கூர்மையுடன் தான்பொடித்துக் கூடச்சேர்த்து
நீட்டுவாய் பழச்சாற்றால் நன்றாயாட்டி
சிவசிவா ரெண்டுமொன்றாய்ச் சேர்ந்தபோது
நாட்டுவாய் துரிசுஅரி தாரலிங்கம்
நல்லகெந்தி வீரமுடன் பூரஞ்சேரே. 555

சேரப்பா நவமூலம் ஒன்றாய்க்கூட்டி
சேர்த்துநன்றாய் நாதநீர் தன்னாலாட்டி
வீரப்பா தானொடுங்கும் அதனாலாட்டி
விபரமுடன் கமலரசந் தன்னைவார்த்து
நேரப்பா நெட்டடங்க நன்றாயாட்டி
நேர்மையுடன் தான்வழித்து வட்டுப்பண்ணி
சீரப்பா ரவிதனிலே வைத்துமைந்தா
சிவசிவா காய்ந்தபின்பு கவசஞ்செய்யே. 556

செய்யப்பா மண்சிலை கவசஞ்செய்து
செம்மையுடன் சற்குருவைத் தியானம்பண்ணி
வைய்ப்பா புடமதுவை நிதானமாக
வைத்தபின்பு சடாக்ஷரத்தை மருவிஓது
கையப்பா தவறாமல் புடத்தைப்பார்த்து
கணபதியைத்தான் தொழுது கருவைப்பாரு
பொய்யப்பா போகாது நவமூலந்தான்
பொருமி மிககட்டியது பற்பமாச்சே. 557

ஆச்சப்பா திசைமூலம் பற்பந்தன்னை
அப்பனே பரணிதனில் அடக்கம்பண்ணி
காச்சப்பா கனகமென்ற தங்கந்தன்னில்
கருவான பற்பமதை நாலத்தொன்று
பாச்சப்பா அமுர்தமதால் பாசம்பண்ணி
பரிவான தங்கமதுக் கங்கிபூட்டி
மூச்சப்பா போகாமல் கவசம்பண்ணி
முத்திபெறப் புடமதுவை வைத்துக்காணே. 558



காணவே புடமதுவை வைத்துப்பார்க்க
கனகமென்ற தங்காதி குருவாய்நிற்கும்
பேணவே கனகமென்ற குருவெடுத்து
பிலமான வெள்ளிசெம்பு பத்துக்கொன்று
தோணவேதான் கொடுத்து உருக்கிப்பாரு
சுத்தமுள்ள வெள்ளிசெம்பு சோதியாகும்
ஊணவே சோதிதனைக் கண்டபோதே
ஊன்றதொரு பாசமெல்லாம் ஓடிப்போச்சே. 559

போச்சப்பா பாசமென்ற ஆசாபாசம்
பொர்க்கமலச் சோதிதனை கண்டபோதே
மூச்சப்பா பேச்சடங்கி சாக்ஷியாச்சு
முத்தியுள்ள சிவஞானம் போதமாச்சு
பேச்சப்பா பேசாதே போதந்தன்னை
பிரியமுடன் கொண்டுகெதி கண்டாயானால்
பாச்சப்பா கேசரத்தில் வாசிதன்னை
பதிவாகத் தானிருத்தித் தன்னைப்பாரே. 560

பாரப்பா பதியறிந்து தன்னைத்தானே
பாதாதி கேசமுதற் பார்க்கும்போது
நேரப்பா நின்சமுகம் விண்ணகமும்மொன்றாம்
நிறைந்து பரிபூரணமாய் நிர்மலமேயாச்சு
சேரப்பா நிர்மலமாய்க் கண்டபோதே
செகமயமே சிவமயமாய் தெளிந்துகொள்ளும்
பேரப்பா கொண்டசிவ ரூபந்தன்னால்
பிரமன் மாலானவரும் பலங்கெட்டாரே. 561

பலங்கெட்ட மானிடர்கள் பலநூல்பார்த்து
பேசுதற்கும் அரிதான பிரம்மந்தன்னை
நலங்கெட்ட மானிடர்கள் கூடிக்கொண்டு
நாதாந்தனாதமென்றுஞ் சோதியென்றும்
சலங்கெட்ட ஒளியென்றும் வெளிதானென்றும்
சகலஉயிர் தானான யோகமென்றும்
குலங்கொண்ட பூரணமாம் வஸ்துவென்றும்
குருபற்பல பேரெடுத்துங் கூறுவாரே. 562

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

கூறுவான் நினைத்தபடி காணாமற்தான்
குறியான அண்டவெளி சதாசிவமாய்ப்போச்சு
ஏறுரதோன் வாசியது மயேஸ்பரனாய்போச்சு
என்மகனே அக்கினிதான் ருத்திரனாய்ப்போச்சு
ஊருரதோர் சிவதுமதுதான் மாலுடையமாயம்
உண்மையென்ற பிரிதிவிதான் பிர்மனுடநிஷ்டை
தேருரதோரவிமதியுஞ் சத்திசிவமாச்சு
செப்புதற்கு எந்தவிதம் தெளிந்துபாரே. 563

## தாம்பூரபற்பம்

பாரப்பா தெளிவான பற்பமொன்று
பத்தியுடன் சொல்லுகிறேன் பதிவாய்க்கேளு
தேரப்பா சாரமுடன் அண்டத்தோலும்
நீமகனே ரெண்டையுந்தான் ஒன்றாய்க்கூட்டி
சேரப்பா கல்வமதில் அரைக்கும்போது
சிவசிவா கசிந்துவெகு சலமாய்நிற்கும்
தேரப்பா இச்சலத்தில் வீரம்பூரம்
தீர்க்கமுடன் தானரைத்து ரவியில்வையே. 564

வையப்பா ரவிதனிலே நீறிப்போகும்
மகத்தான நீறுடனே கெந்திகூட்டி
மெய்யப்பா முன்னீரால் அரைத்துக்கொண்டு
மேலான தாம்பூரத் துட்டில்பூசி
பையப்பா அதின்மேலே மண்தான்செய்து
பாலகனே நிதானமதாய்ப் புடத்தைப்போடு
கையப்பா தவறாமல் புடந்தான்போடு
காசென்ற தாம்பூரம் நீறிப்போச்சே. 565

போச்சப்பா தாம்பூரம் நீறிப்போச்சு
புத்தியுடன் அந்நீறைக் கல்வத்திட்டு
காச்சப்பா அதுக்குநீ காரசமும்வீரம்
கலந்துகொண்டு கமலரசந் தன்னாலாட்டி
மூச்சப்பா முன்போல அரைத்துமைந்தா
முத்திபெறத் தான்வழித்து உருட்டிக்கொண்டு
பாச்சப்பா நிழல்தனிலே வைத்துப்பார்த்தால்
பக்குவமாய் நீர்வத்தி நீறிப்போமே. 566



## அரிதார ஈயம்

நீறிநின்ற நீரதிலே வேதைகோடி
நேர்மையுடன் பூரணமாய்க் கண்டுதேறி
ஆறிநின்ற மனதாலே மைந்தாகேளு
அடங்கிநின்ற வீரமுடன் லிங்கங்கூட்டி
ஊறிநின்ற வாய்நீரால் அரைத்துக்கொண்டு
உத்தமனே தாரமதுக் கங்கிபூட்டி
தேறிநின்ற அடுப்பதனில் வைத்துப்பாரு
தீர்க்கமுடன் தானுருகி ஈயமாகும் 567

## தங்கபர்ப்பம்

ஆமப்பா ஈயமென்ற தாரந்தன்னில்
அரகரா சவ்வீரம் ரசமுங்கூட்டி
வாமப்பால் தன்னாலே பாகம்பண்ணி
மகத்தான தங்கமதுக் கங்கிபூட்டி
தாமப்பா சுண்ணாம்பு சிலைசுற்றி
தங்கமென்ற கவசமதை புடமேசெய்து
ஓமப்பா பிரணவத்தை தியானம்பண்ணி
உத்தமனே புடமாறி எடுத்துப்பாரு. 568

எடுத்துமிக கவசத்தை விடுத்துப்பார்க்கில்
ஏகாந்த தங்கமதை என்னசொல்வேன்
தொடுத்தமலர்ப் பூப்போலே தங்கம்நீறி
சுத்தமுடன் இருக்குமடா எடுத்துக்கொண்டு
அடுத்ததொரு ஆதார பூசைபண்ணி
அப்பனே பணவிடைதான் தேனில்கொண்டால்
கடுத்ததொரு மாலியவான் ஓடிப்போவான்
கனகம்போல் தேகமுமாங் கண்டுபாரே. 569

## வெடியுப்புக்கட்டி

கண்டுபார் இன்னமொரு கருவைக்கேளு
கருவான வீரமுடன் ரோமங்கூட்டி
விண்டுபார் கமலரசந் தன்னாலாட்டி
வீரமுடன் ரோமமது நன்றாய்ச்சேர்த்துக்
கொண்டதுவும் வெண்ணையது போலேயாகும்
கொடிதான வெண்ணைதனை எடுத்துக்கொண்டு
நின்றதொரு வெடியுப்புக் கம்பிதன்னில் 570
நீமகனே தடவிநன்றாய் ரவியில்போடே.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

போட்டபின்பு இன்னமொரு கருவைக்கேளு
புதுமையுள்ள காரமடா சீனிக்காரம்
தேட்டமுடன் காரமதைச் சுற்றிவைத்து
திருவான கம்பியுப்பை நடுவேவைத்து
வாட்டமுடன் தீயெரித்து எடுத்துப்பார்த்தால்
நல்லவெடி கம்பியது சிவக்கும்பாரு
வாட்டமென்ன கம்பியுப்பு சிவந்துதானால்
மகத்தான லோகமெல்லாம் தங்கமாமே. 571

## அண்ட கவசம்

ஆமப்பா அண்டமென்ற முட்டை வாங்கி
அன்பாக எருக்கம்பால் தன்னில் போட்டு
தாமப்பா மறுனாள்தான் எடுத்துக் கொண்டு
சங்கையுடன் எலுமிச்சஞ் சாற்றில்போட்டு
நாமப்பா சொல்லுகிறோம் மறுநாளில்தான்
நன்றாக வீரமுடன் லிங்கஞ் சேர்த்து
வாமப்பால் தன்னாலே நன்றாயாட்டி
மகத்தான அண்டமதில் கவசம் போடே. 572

போடப்பா கவசமது நன்றாய்ச் செய்து
புத்தியுடன் மண்டலஞ்சென் றெடுத்துப்பாரு
நாடப்பா கவசமதை எடுத்துப் பார்க்க
நாதாந்த அண்டமது கட்டிப் போகும்
கூடப்பா கட்டிநின்ற அண்டம் வாங்கி
கொடிதான அரிதாரம் தனக்குப்பூசி
ஆடப்பா ரவிதனிலே வைத்துப் பார்க்க
அறுபத்து நால்வருந்தான் அடங்கும் பாரே. 573

பாரப்பா அடங்கிமிகக் கட்டிப்போகும்
பரிவான உபரசங்கள் நீறிப்போகும்
பேரப்பா கொண்டதொரு காரசாரம்
பிலமான அண்டமதில் மெழுகுமாச்சு
ஆரப்பா அறிவார்கள் அண்டக்கூறு
அண்டமென்ற கேசரியை கண்டோன் காண்பான்
நேரப்பா நின்றநிலை அண்டமாச்சு
நிலையான அண்டம்வெகு மாயமாச்சே. 574



ஆச்சப்பா மாயமென்ற அண்டத்துள்ளே
அடங்கி நின்ற ரவிமதியின் கூத்தைக் கேளு
மூச்சப்பா அடங்கிநின்ற வேகத்தாலே
மூடங்கிநின்ற உயிர் பயிர்கள் முதலாகக் கொண்டு
நீச்சப்பா நின்றநிலை காணாமல்தான்
நின்றிலங்கு ரவிமதியு மடங்கிப் போச்சு
பேச்சப்பா பேசினது ரவிமதியினாலே
பிலங்குறைந்து போனதும் ரவிதான்காணே. 575

## சாரக்கட்டு

காணவே கருமானஞ் சொல்லக் கேளு
கருவான முட்டையதன் ஓடுவாங்கி
தோணவே கடல்நுரையுங் காரங்கூட்டி
சுத்தமுடன் வெடியுப்பு நீராலாட்டிப்
பேணவே சாரமதுக் கங்கிபூட்டி
பிலமான ரவிதனிலே காய வைத்து
பூணவே மண்சீலை வலுவாய்ச் செய்து
புத்தியுடன் நிதானமதாய்ப் புடத்தைப் போடே 576

போட்டவுடன் ஆறவிட்டு எடுத்துப்பாரு
புதுமையுள்ள சாரமது தானேகட்டி
நாட்டமுடன் கட்டியது உருகிநிற்கும்
நாதாந்த சற்குருவைப் பூசைபண்ணி
தேட்டமுடன் நாகமதைக் குகையிலிட்டு
செம்மையுடன் உலையில் வைத்து உருக்கும்போது
ஆட்டமென்ற கட்டிநின்ற சாரம்போட
அடங்காத புகையடங்கிக் கட்டும்பாரே. 577

பாரப்பா கட்டிநின்ற நாகந்தன்னில்
பதிவான தங்கமது நாலுக்கொன்று
நேரப்பா தான்கூட்டி உருக்கிப் பார்க்க
நிசமான நாகமதில் தங்கஞ்சென்று
வீரப்பா தானடங்கி உருகிப்போகும்
வெள்ளி செம்பு எட்டுரெண்டு பத்துங்கூட்டி
சேரப்பா நாகதரு வொன்றுபோடு
தீர்க்கமுடன் தானுருகத் தங்கமாமே. 578



Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

ஆமப்பா தங்கமென்ற சோதித் தாயை
அன்பு வைத்து அந்தி சந்தி பூசித்தாக் கால்
வாமப்பா கொண்டசிவ சூட்சந்தானும்
மகத்தான வட்டமடா விந்து வட்டம்
சோமப்பா சொலிக்கும் விந்துவட்டத் துள்ளே
சொலிக்குமடா மதியமுர்தச் சுனைதான் ஊறி
ஓமப்பா வென்றதொரு வணக்கத் தாலே
உண்மையென்ற ஏமமதில் சோதியாச்சே. 579

## உப்புக்கட்டு

ஆச்சப்பா சோதியென்ற துறையைக் கேளு
அரகரா அமுரியிலே பூநீர் கொட்டி
காச்சப்பா ரவியிலதை உலர வைத்து
கருணைபெற ஓட்டிலதை வாரியிட்டு
பாச்சப்பா பருமணியாய் உப்பை வைத்து
பதிவாக மேலுமதை பூநீரிற் கொட்டி
மூச்சப்பா போகாமல் ஒடு மூடி
முத்திபெற புடம்போடக் கட்டு முப்பே. 580

கட்டி நின்ற உப்பதனைச் செந்தூரிக்க
கருவிபரஞ் சொல்லுகிறேன் கருவாய்க் கேளு
கெட்டியுள்ள அயச்சிமிளில் மைந்தா நீயுங்
கெந்தி ஒன்று காரமரை சாரங்கால்தான்
மாட்டி நன்றாயுலைதனிலே வைத்துப் பார்த்தால்
மகத்தான கருமூன்று முருகி நிறகும்
திட்டமுடன் கட்டுமுப்பும் அதிலே போட்டு
சில்விட்டு புடந்தனிலே தீர்க்கம் பண்ணே: 581

தீர்க்கமுடன் புடந்தனிலே வைத்தால்மைந்தா
சிவசிவா செந்தூரம் என்ன சொல்வேன்
ஆக்கமுடன் செந்தூரந் தன்னை மைந்தா
அப்பனே அந்திசந்தி தேனில் கொள்ள
சேர்க்கையுள்ள தேகமடா சித்தியாச்சு
சிவயோக வாழ்வுமிகச் செம்மை யாச்சு
மூர்க்கமுள்ள உடலெல்லாம் தீர்க்கமாச்சு
மூதண்ட கெவுனமுள்ள சூரணியுமாச்சே. 582



## சூத வேதை

ஆச்சப்பா சூதமென்ற தங்கமொன்று
அரகரா கட்டுமுப்பு மூன்றுங்கூட்டி
பாச்சப்பா கல்வமதில் நாதநீரால்
பத்தியுடன் தானரைக்க மெழுகுமாமே
பேச்சப்பா பேசாமல் மெழுகு மைந்தா
பெருமையுள்ள பஞ்சலோகத்தில் ஈந்து
காச்சப்பா மாத்ததுவுங் கனக மாகுங்
கனகமதை கண்டுமனங் கண்டுதேறே. 583

## திசைநாகக் கட்டு

தேறவே இன்னமொரு வேதை மார்க்கம்
செப்புகிறேன் நன்றாகத் தெளிந்து கேளு
கூறவே வேண்டாங்காண் மவுனமார்க்கம்
கொடிதான கெந்தகமுந் தாரங்கூட்டி
மாறவே தானுருக்கி வைத்துக் கொண்டு
மகத்தான லிங்கமுடன் வீரம், பூரம்
ஆறவே ரசமுடனே நாகம்வங்கம்
அப்பனே சாரமுடன் காரமெட்டே. 584

எட்டான சரக்கையொரு நிறையாய்க் கொண்டு
என் மகனே தான் பொடித்து வைத்துக்கொண்டு
கட்டான கெந்தகமுந் தாரம்ரெட்டி
கைமுறையாய்த் தானுருக்கிப் பொடியைச் சேர்த்து
திட்டமுடன் தான்மடிய நன்றாய்க் கிண்டி
செம்மையுடன் ஆறவைத்து எடுத்துக் கொண்டு
நட்டமுடன் கல்வமதில் பிட்டுமைந்தா
நாகமென்ற நீரதினால் நன்றாயாட்டே. 585

ஆட்டப்பா நெட்டடங்க நன்றாயாட்டி
அதின் பிறகு தானெடுத்து வட்டுபண்ணி
நாட்டப்பா ரவிதனிலே காய வைத்து
நன்றாக மண்சீலை சுவசம் போட்டு
மூட்டப்பா புடந்தனிலே வைத்துப்பாரு
முத்திபெறக் கட்டியது திட்டமாகும்
கூட்டப்பா எட்டுரெண்டும் ஒன்றாய்க்கூட்டி
கூடிநின்ற திசைநாதம் கட்டைவாங்கே. 586

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## செந்தூரம்

வாங்கியந்த திசைநாகக்கட்டை மைந்தா
மார்க்கமுடன் கெந்திஅரி தாரம் லிங்கம்
பங்குபெற அந்திடைக்கி சரியாகக்கூட்டி
பத்தியுடன் தான் பொடித்துக் குப்பிக்கேற்றி
சாங்கமாய் மண்சீலை ஏழுஞ்சுத்தி
தாளியென்ற பானையிலே சாம்பலிட்டு
ஓங்கியந்த சாம்பல்நடு குப்பிவைத்து
உண்மையுடன் மூக்களவு சாம்பல் சாத்தே. 587

சாத்திநன்றாய் அடுப்பேற்றித் தீயை மூட்டி
சாமமென்ற சாமமடா ஆறுசாமம்
போத்தி நன்றாய்த் தானெரித்துக் குப்பிக்குள்ளே
புத்தியுடன் தான்பாரு கண்ணே கூசும்
பார்த்திபனே அன்நேரம் பதமென்றெண்ணி
புத்தியுடன் தானிறக்கி ஆறவைத்து
வாத்தி நன்றாய் குப்பிதனை எடுத்துப்பாரு
மகத்தான செந்தூரம் கண் கொள்ளாதே. 588

கண்கொள்ளா செந்தூரந் தன்னைமைந்தா
கருணையுடன் தானெடுத்து வைத்துக் கொண்டு
விண் கொண்ட தங்கமதுக் கிடைதான் மைந்தா
வேதாந்த செந்தூர மெடுத்துக் கொண்டு
பெண் கொண்ட நாதமதால் அரைத்துப் பூசி
பிலமான ஒட்டில் வைத்து மண்ணும்பூசி
பொன்கொண்ட சேதியென்ற புடத்தைப்போடு
பொன்விளையுந் தங்கமது குருவாய்ப் போச்சே. 589

குருவான தங்காதி குருவைமைந்தா
குணமான நவலோகந தன்னில்பூட்டி
திருவான தங்கமடா அங்கமாகுந்
தேகமென்ற அங்கமது இறக்க வேண்டி
-ருவான செந்தூரம் பணவிடைதான் கொண்டால்
உண்மையுள்ள ஆகாரஞ் சிவந்து போகும்
-ருவான முலைப்பாலில் மண்டலமே கொண்டால்
கைலாச வாசமாய் வாழலாமே. 590



## லோககாந்த ரசவங்கச் செந்தூரம்

வாழ்வதற்கு இன்னமொரு வரிசை கேளு
வரிசையுள்ள அரைப்பொடியுங் காந்தங் கூட்டி
ஆள்வதற்கு கல்வமதில் இட்டுமைந்தா
அப்பனே சம்பளத்தின் சாற்றாலாட்டி
மாள்வதற்கு வகைகேளு மைந்தா மைந்தா
மகத்தான ரசமுடனே நாகம் வங்கம்
தாள்வதற்கு அயக்காந்தத் துடனேகூட்டி
சங்கையுடன் சம்பளத்தின் சாற்றாலாட்டே. 591

ஆட்டயிலே அதில்சேர்க்க மருந்துகேளு
அந்திடைக்கி பத்திலொன்று தங்கங்கூட்டி
நீட்டயிலே கெந்திஅரி தாரம்லிங்கம்
நிசமான கெவுரியுடன் தாளசுமும்பச்சை
பூட்டயிலே பாஷாணம் மிருதார் சிங்கி
புகழான வீரமுடன் பூரங்காரம்
வாட்டயிலே தங்கமிடைச் சரியாய்ப்போட்டு
மைந்தனே வெடியுப்பு நீராலாட்டே. 592

ஆட்டி நன்றாய் வழித்துருட்டி வட்டுபண்ணி
அப்பனே ரவிமுகத்தில் காயவைத்து
தாஷ்டிகமாய் ஓட்டில்வைத்து ஓடுமூடி
சந்துவாய் தெரியாமல் மண்ணும்பூசி
வாட்டுவாய் புடந்தனிலே மைந்தா நீயும்
மகத்தான செந்தூரங் கண்கொள்ளாது
நாட்டி நன்றாய் இவ்விதமாய் செந்தூரஞ் செய்து
நாலான காரியமும் வகையாய்ப்பாரே. 593

## நவலோக வேதை

பாரப்பா இன்னமொரு சூக்ஷஞ் சொல்வேன்
பதிவான அயமுடனே வெள்ளி செம்பு
நேரப்பா தங்கமுடன் நாலுமைந்தா
நீ மகனே ஒரிடையாய் தகடுசெய்து
காரப்பா பழச்சாற்றில் போட்டு மைந்தா
கருணையுடன் மறுநாள்தான் கழுவிப் போட்டு
சேரப்பா நாலுவகை தகட்டை மைந்தா
செம்மையுடன் குகையிலிட்டு காரம்போடே. 594

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

போடப்பா காரமிட்டு உருக்கிப்பாரு
பூரணமாய் நாலுமொன்றாய் உருகிநிற்கும்
நாடப்பா உருகுமுகந் தன்னைப் பார்த்து
நாதாந்த ரசமுடனே நாகங்கூட்டி
சூடப்பா உருகுமுகந் தன்னில் ஈய
சுருக்காக நாலுரெண்டுங் குருவாய்ப் போகும்
ஆடப்பா குருவெடுத்து வைத்துக் கொண்டு
அனுதினமுஞ் சற்குருவைத் தொழுது பணியே. 595

பணிந்து நின்று சற்குருவை தியானம் பண்ணி
பதிவான வெள்ளியிலே பத்துக் கொன்று
கனிந்துமனங் கனியவேநீ கொடுத்துப்பாரு
கனிந்துமிக உருகியது கனகமாகும்
அணிந்து அந்த கனகமதைப் பூசை பண்ணி
அஷ்டாங்க யோகமதில் திட்டம் பார்த்தால்
தணிந்துலக முனதுபதம் பணியு மப்பா
தானவனாய் நீயறிந்து தன்னைப்பாரே. 596

தன்னைப்பார் கண்ணிரிவின் கண்ணால்நீயும்
கானரிந்து பார்ப்ப தற்குசங்கை கேளு
விண்ணப்பார்த் தந்தநிலைதன்னில் நின்று
வேதாந்த சத்திசிவ பூசைபண்ணி
கண்ணப்பா மனக்கண்ணால் வாலைபூசை
கருத்துள்வைத்து கேசரியின் சார்வுகொண்டு
உன்னைப்பார் பூரணமே கெதியென்றெண்ணி
உண்டாகும் வாசியைநீ உத்துப்பாரே. 597

## ஸாஸ்திர விபரம்

பாரப்பா ஆதாரந் தன்னைநீயும்
பத்தியுடன் ஊடுருவப் பார்த்துமைந்தா
நேரப்பா பஞ்சகணை தீக்ஷை பெற்று
நீ மகனே நவலோக செந்தூரத்தை
சேரப்பா பணவிடையாய்க் கொண்டுமைந்தா
தீர்க்கமுடன் தானரிந்து தேவிபூசை
சேரப்பா பூசைமுறை தவறாமற்தான்
காத்துமனக் கண்ணாலே தன்னைக்காணே. 598



காணப்பா தன்னைமிகத் தானே காணே
காவியமும் புறாணமும் கலந்து பார்த்துப்
பேணப்பா சவுமியசா கரத்தை நன்றாய்ப்
பெருமைவிட்டு உருமையதாய் பேணிப்பாரு
பூணப்பா தத்துவங்கள் நன்றாய்த்தோணும்
பூரணமும் காரணமும் பொருந்தி வாழும்
தோணப்பா தேவாந்த முடிவுதோணுந்
துலங்குகின்ற சித்தாந்த சோதிதானே. 599

## வாலை பூசை

தானான வாலை சிவபூசை கேளு
தருவான மூலமடா தாயார்வீடு
வானான லாடமடா சிவமாஞ்சோதி
மகத்தான சுழினையடா மவுனத்தந்தம்
கோனான ரிஷிகளுமோ ஆருஞ்சொல்லார்
கூர்மையுடன் அங்மங்உங் கென்றேதான்
ஊனான கேசரியில் மனக்கண்சாத்தி
உத்தமனே பதினாரு உருவே செய்யே. 600

உருவரிந்து திருவேற நீறுசாற்றி
உத்தமனே தினந்தோருந் தியானஞ் செய்ய
திருவிருந்த சத்திசிவ பூசைதானும்
திரக்கமுடன் கோடிசெய்த பலத்துக்கொக்கும்
கருவரிந்து ஆதார பூசைகேளு
கருணையுடன் ஹ்ம் றீங் அம்மென்றேதான்
குருவருந்த ப'ழுதயத்தில் மனக்கண் சாத்தி
கூர்மையுடன் சுழிமுனையில் கூர்ந்துபாரே. 601

கூர்ந்துபா ரென்றுமனங் கூர்ந்தபோது
கோடான கோடிதவம் அப்போதாச்சு
தேர்ந்துசட மரியாமல் உலகத்தோர்கள்
சிவசிவா பூசைமடஞ் சிங்காரித்து
நேர்ந்தசிவ சக்கரங்கள் பாத்திரங்கள்
நிலைநிருத்தி வெகுனுணுக்கம் பூசை செய்வார்
சார்ந்த அந்த பூசைவெகு சரிகைமார்க்கம்
தனைநிருத்தி கிரிகையென்ற யோகம்பாரே. 602

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

பாரப்பா யோகபூசை அரிவானந்தம்
பதிவான தீபமென்றால் மனக்கண் பார்வை
நேரப்பாவாசி யென்றால் அமுர்தபாணம்
நிலையான பிர்மமென்றால் மாய்கைமாய்கை
காரப்பா மாய்கை வெளிகண்ணே சூட்சம்
கருவான சூட்சமடா நாதவிந்து
வீரப்பா கொண்டதொரு னாதவிந்து
விபரமுட னித்தனையு மரியலாச்சே. 603

## யோகப் பெருமை

ஆச்சப்பா அரிதான நாதவிந்து
அண்டமொடு புவனமெல்லாம் அதுதானாகி
பேச்சப்பா பேசாத மவுனமாகிப்
பெருகிநின்ற ஆதாரக் கூத்துமாகி
நீச்சப்பா அஞ்சுபஞ்ச பூதமாகி
நிசமாகி சதாகோடி மந்திரமுமாகி
மூச்சப்பா நிறைந்தெழுந்த தீயுங்காற்று
முத்திபெற சுழிமுனையில் முடிந்து போச்சே. 604

## நிச்சயத்தின் பெருமை

முடிந்ததொரு நிச்சயத்தை ஆர்தான்காண்பார்
மோனமுள்ள தபோதனரில் கோடிக்கொன்று
விடிந்தவகை முடிந்தவகை அவன்தான்கண்டு
மேதினியில் தானறிவான் குருவேயென்று
படிந்ததொரு நிச்சயத்தை அறியாரெல்லாம்
பரப்பிர்ம்ம வஸ்துவென்றும் பரந்தானென்றும்
வடிந்ததொரு வஸ்துவென பார்ப்போமென்பார்
மகத்தான பூரணந்தான் என்பார்தானே. 605

தானான நிராமயமே என்பார்கோடி
தன்மனமே சாக்ஷியதாய் சாக்ஷியென்பார்
கோனான பூரணமே சோதியென்பார்
குன்றாத கற்பூர தீபமென்பார்
வானான ரவிமதியுஞ் சுடரேயென்பார்
மகத்தான அடிநடுவு முடியேயென்பார்
தேனான நிச்சயத்தைப் பெற்றோர்தானும்
சிவசிவா மவுனமதாய் திரிவார்பாரே. 606



பாரப்பா பூரணமாய் நயனசூக்ஷம்
பதிவான கேசரியாம் உச்சிமீதில்
காரப்பா கண்ணுடனக் கண்ணுங்கொண்டு
கருணையுள்ள வாசியென்ற கருவைநோக்கி
நேரப்பா நின்றதினால் யோகபாச்ச
நினைவுகொண்டு பார்த்ததினால் தீபமாச்சு
தேறப்பா தீபமனத் தினமும்நோக்க
சிவகற்பங் காலவரை இருக்கும்பாரே. 607

பாரடா சவுமிய சாகரத்தை நன்றாய்
பார்த்துமன நிலையறிந்து பதிவாய்மைந்தா
நேரடா நிலையறிந்து நிலையைப்பாரு
நிலையான சவுமியத்தை யார்தான்காண்பார்
சாரடா சவுமியத்தில் சார்ந்துகொண்டு
சராசரமாங் கடலறிந்து நீஞ்சியேறி
காரடா சகலகனாப் போதஞானங்
கருணையுடன் பூரணமாய் கண்டுதேறே. 608

கண்டதொரு போதையிலே கனலைத்தாண்டி
கனலெழுந்த வாசியினால் அண்டமேவி
அண்ட கேசரிமாது தன்னைக்கண்டு
அருள்பெருகும் புருவமதில் பந்துகொண்டு
தெண்டனிடும் படிநிலையைத் தெரிசித்தேதான்
சிவாயகுரு பூரணத்தை கண்டாயானால்
மண்டலங்கள் மூன்றுமர சான்வாயய்யா
மணிநாத அமுர்தகலை வாசிபாரே. 609

## நிலையறிய

வாசியென்றுஞ் சுவாசமதை மைந்தாகேளு
மனம்நடுங்கத் தானடங்கி மாண்டார்கோடி
நாசியென்ற வாசியதைச் சொல்லக்கேளு
நடுவான பூரணமா மெட்டுரெண்டு
மாசியென்ற மயக்கருத்து ஒன்றாய்க்கூட்டி
மணிநாத கெவுனமுடன் கொண்டாயானால்
தேசியென்ற குதிரையது தானேநின்று
திரும்பு மிடசாரி வலசாரி தானே. 610

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

தானாகித் தானவனாய்த் தானேதானாய்
தனித்துநின்ற இடமதனை வலத்தில்சேர்க்க
கோனாகிப் பூரணமாய்ப் பொங்குந்தானாய்
குவிந்துநின்ற நிச்சயத்துக் குணமாய்நின்று
நானாகி நானீயுந் தான்தானென்றும்
நாட்டமுடன் இருக்கையிலே இதுதானாச்சு
ஊனான பஞ்சகர்த்தா ளதுதானான
உண்மைதனை பார்க்கமனம் ஒன்றுந்தானே. 611

ஒன்றுமற்று நின்றகெதி தன்னைப்பார்க்க
ஓமென்ற பிரணவத்தால் காரத்தேகி
நின்றுகொண்டு திரிபுரத்தைச் சென்றுபார்த்தே
நிலையறிந்து பார்க்கையிலே ஒன்றுகேளு
விண்டு அதைச் சொல்வதற்கு நாவங்கில்லை
வேதாந்தஞ் சித்தாந்தம் ரெண்டும் பொய்யாம்
அன்றுமுதல் இன்றுவரை கண்டகாக்ஷி
அரகரா பூரணமாஞ் சாக்ஷியாச்சே. 612

சாக்ஷியென்ற நிச்சயமாய் சூக்ஷந்தன்னை
சற்குருவால் கண்டறிந்து கொண்டாயானால்
பேச்சறிந்து மவுனமதாய்க் கெவுனமாகும்
பேசாத நிச்சயத்தில் பிலமாய்நிற்கும்
காக்ஷியென்ற காக்ஷியெல்லாம் அதுக்குள்நின்று
காரணமாய் வந்தசெயல் ஆர்தான்காண்பார்
மூச்சறிந்த முன்முகப்பிற் தீபமேற்றி
முடிகாணா அருளொளியை சற்றேபாரே. 613

### மயக்கமறிய

சற்றேபார் என்றுசொன்ன சொல்லேஆசை
சங்கையுடன் ஆசையெல்லாம் மாயாமாயம்
வித்தான ஆதியந்த மாயாமாயம்
விலாசமுள்ள வெளியொளியும் மாயாமாயஞ்
சத்தான சாஸ்திரங்கள் மாயாமாயஞ்
சென்றதொரு உயிர்களெல்லா மாயாமாயஞ்
சித்தான சித்தியெல்லாம் தெளிந்துபார்க்க
சின்மயா னந்தமாதய்த் தெளிந்துபோச்சே. 614



### சின்மயத்தின் பெருமை

தெளிந்துநின்ற சின்மயத்தின் வடிவுதன்னை
சிவசிவா சதாசிவனும் மகேசன் தானும்
அளிந்துநின்ற ருத்திரன்மால் பிரமன் தானும்
ஆதவனுஞ் சந்திரனோ டேழுபேரும்
தெளிந்துநிதம் மலைந்தவருந் தேடிக்காணா
நிசமான நிச்சயத்தை யார்தான் காண்பார்
தெளிந்துகொண்டு சின்மயமாய் இருந்தாயாகில்
சின்மயத்திற் தன்மயங்கண் டேரும்பாரே. 615

பாரப்பா சின்மயத்தில் மைந்தாகேளு
பனிரெண்டு பூரணந்தான் பிறந்துதப்பா
நேரப்பா பூரணந்தான் நின்று ஆட்டி
நேசமென்ற பாசமெல்லாங் கண்டுதேறி
காரப்பா யென்றுபரி பூரணமாய்நின்று
கருணையுடன் சின்மயத்திற் கலந்துபோச்சு
ஆரப்பா அறிவார்கள் சின்மயத்தின் வடிவு
அங்குமில்லை இங்குமில்லை எங்குந்தானே. 616

எங்குந்தான் தானாக நின்றசூக்ஷம்
ஏகபரா பரமான மயமேயாகுஞ்
சங்கையில்லாப் பரமசுகஞ் சின்மயமே யாச்சு
சைதன்னிய மானசின் மயத்தை மைந்தா
அங்கமுடன் பிரம்மமென்றும் வெளிதா னென்றும்
அரூபமாய் நின்றதிரு ஒளிதா னென்றும்
மங்களமாய் நிறைந்ததிரு மாசியென்றும்
மவுனமாய் நின்றமயந் தானென்றாரோ. 617

### வசிஷ்டர் ஸ்ரீராமருக்குச் சொன்னகதை

தானேதான் தானாகத் தன்னைக்கண்டால்
சவுமியமாய் நின்றபொருளதுதானென்று
ஊனேதான் தானான வசிஷ்டர் தானும்
ஒருகோடி ஊழிவரை தவமேசெய்து
நானேதான் என்றுவெகு கதையாய்ப்பாடி
நாட்டினார் ராமனுக்கு வாசியென்றே
கோனேதான் வாசியில்லாக் குருவுமில்லைக்
கொண்டபடி சாஸ்திரத்தை வகுத்துப்பாரே. 618

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

வருத்தமொரு சாஸ்திரத்தில் மைந்தா மைந்தா
மகத்தான நிச்சயத்தைச் சொல்லவில்லை
தொகுத்துமிக நாமுரைந்தோஞ் சவுமியத்தில்
சொல்லவொண்ணா நிச்சயத்தின் சூக்ஷஞ்
சொன்னோம்
பகுத்தறிந்த பெரியோர்கள் எடுத்துப் பார்த்து
பரமபத நிச்சயத்தில் நிசமானார்கள்
மிகுத்துமே பரமமதுதானே யென்றும்
ஏகமய மானசின்மயத்தைப் பாரே. 619

பாரப்பா சின்மயத்தில் தன்மயங்கொண் டேறி
பகுத்தறிவாய்த் தானிருந்துப் பார்க்கும் போதில்
நேரப்பா ஆதியந்தஞ் சின்மயமாய்க் காணும்
நிசமான வெளியொளியுஞ் சின்மயமாய்க்காணுஞ்
சாரப்பா சத்திசிவஞ் சின்மயமாய்க் காணுஞ்
சங்கையில்லாத் தொந்தமெல்லாஞ் சின்மயமாய்க்
காணும்
சேரப்பா கண்காக்ஷியான தெல்லாஞ்
சிவசிவா தன்மயமாய்த் தெளியலாச்சே. 620

ச்சப்பா சின்மயமாய்த் தெளிந்து கொண்டால்
ஆசையென்ற பாசமெல்லா மகன்று போகும்
ச்சப்பா பேச்சறிந்து மவுனமாகும்
பெருகிநின்ற கற்பமெல்லா மதுவாய் நிற்கும்
ச்சப்பா ஆதாரம் நிராதார மாகுங்
கண்கண்ட காக்ஷியெல்லாங் காரணமாய் நிற்கும்
சப்பா தானிருந்து மோட்ச கெதியான
மோனமென்ற மவுனமடா சின்மயந்தான்பாரே 621

ப்பா பத்திகொண்டு சின்மயத்தைக் காண
ார்மகனே சரிதையொடு கிரிகை ரெண்டும்
பா தவறாமல் பத்திகொண்டு
தமமுடன் செய்துவரும் போதிலேதான்
பா பெற்றதொரு தவப்பே றாலே
சாத மவனகுரு மவுனமாக
பா மெருகிரி தீபம் போலே
ஞான சற்குருவும் வருவார்காணே. 622



காணவே சற்குருவுங் கருணை கூர்ந்து
கண்கண்ட சரிதையோடு கிரிகைரெண்டும்
பூணவே செய்துவந்த நெறியைப் பார்த்து
புத்தியுள்ள யென்மகனே வாவென்றே தான்
ஊணவே வாசியுட வழியுஞ் சொல்லி
உண்மையுள்ள சிவயோக நிலையுங்காட்டித்
தோணவே ஞானமென்ற அண்டத்துள்ளே
தொடுகுறிபோல் சின்மயத்தின் மயஞ்சொல்வாரே. 623

மயமான சின்மயத்தின் வடிவுதன்னை
மனதுகந்து மனக்கண்ணால் மகிழ்ந்துபார்த்தால்
செயமான தன்மயஞ்சின் மயமாய்ப் போகுஞ்
சிவாயகுரு பூரணஞ்சின் மயமாய்நிற்கும்
சுயமான வெளியொளி சின்மயமாய் நிற்குஞ்
சுடரான சோதியுஞ்சின் மயமாய்நிற்கும்
நயமான ஆதார ரூபமெல்லாம்
நாதாந்த பூரணசின் மயந்தான்பாரே. 624

## ஆறுமுகக்கங்கு செந்தூரம்

பாரப்பா சின்மயமாங் குருவைக்காண
பதிவான அருளுடனே பொருளும்வேணும்
நேரப்பா நிறைந்த பொருள் தங்கத்தாயை
நேர்மையுடன் காணுதற்கு வகையைக்கேளு
சாரப்பா ரசமுடனே நாகவங்கஞ்
சரியாக மூன்றையுமே ஒன்றாய்ச் சேர்த்து
தேரப்பா இன்னமொரு கருமானங்கேள்
திறமான தங்கமுடன் வெள்ளிச்செம்பே. 625

செம்புடனே வெள்ளிதங்க முருகும்போது
சிவசிவா நாகவங்க ரசத்தைச்சேரு
நம்புதலாய் சேர்த்துஒரு மணியாய் நிற்கும்
நாதாந்த ஆறுமுக மணிக்கி மைந்தா
தெம்புதலா அந்திடைக்கி மைந்தா கேளு
திருவான காந்தம் அயஞ் சரியாய்வாங்கி
வம்பகலக் கல்வமதில் இட்டுக்கொண்டு
முகத்தான பழச்சாற்றால் மைபோலாட்டே. 626

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

ஆட்டிநன்றாய் காயவைத்துத் தானேசெய்து
ஆறுமுகக் களங்கதனை அதின்மேல் வைத்து
நீட்டி நன்றாய் தான்மடியப் பொடியே செய்து
நீமகனே அப்பொடிக்கி நேரதாக
நாட்டிநன்றாய்க் கெந்தகமுந் தாரீகமுஞ் சேர்த்து
நல்லதண்ணீர் விட்டாட்டித் தானேசெய்து
காட்டிநன்றாய் பத்துவகை தானுமொன்றாய்
கூர்மையுடன் தான்மடியப் பொடியே செய்யே 627

செய்யப்பா பத்துவகைப் பொடியு மொன்றாய்
செயமாக குப்பிதனில் விட்டுமைந்தா
கையப்பா தவறாமல் மண்சீலை செய்து
கணக்குடனே தானுடுத்திக் காயவைத்து
வையப்பா பாண்டமதில் சாம்பலிட்டு
மகத்தான மேருதனை நடுவேவைத்து
மெய்யப்பா குப்பிகுப்பி மூக்களவாயிட்டு
வேதாந்த சற்குருவை தியானம்பண்ணே. 628

பண்ணப்பா சற்குருவை தியானஞ்செய்து
பயபக்தி யாகவேநீ அடுப்பிலேற்றி
கண்ணப்பா தவறாமல் கமலனோக்கி
கருணையுடன் அனல்முட்டி கால்கொண்டுதி
விண்ணப்பா தான்கனிய அனலைமூட்டி
விண்ணான மேருதனைக் கண்ணால்பாரு
பொன்னப்பா தான்வினையு மேருக்குள்ளே
பொன்னொளிவு போலுருகும் பதத்தைப்பாரே. 629

பாரப்பா பதமான பதத்தைப்பாரு
பத்தியுடன் தானிறக்கி ஆறவைத்து
காரப்பா சற்குருவைத் தியானம்பண்ணி
கமண்டலத்தில் நின்றநடு மேரைவாங்கி
நேரப்பா தானிருத்தி தூபதீபம்
நேர்மையுடன் உபசார வணக்கம்பண்ணி
காரப்பா மேருவினிச் சார்ந்துநின்ற
சதாபோத பூரணியை எடுத்துப்பாரே. 630



எடுத்துமிகப் பார்க்கையிலே கண்கொள்ளாது
இன்பரச செந்தூரம் என்னசொல்வேன்
நடுத்தரமாய் நின்றதொரு செந்தூரத்தை
நயந்துமிக வாங்கியதைப் பதனம்பண்ணி
அடுத்தமனை சுழிதனிலே மனதைகாட்டி
அருள்பெருகும் பூரண செந்தூரம்தன்னை
தொடுத்ததொரு ஆதார பூசைபண்ணி
சுத்தமுடன் பணிவிடைத்தான் கொண்டுபாரே. 631

## சின்மயத்தில் சித்துண்டானது

பாரடா அந்திசந்தி தினந்தான் கொண்டால்
பரமகை வாசமென்ற தேகமாச்சு
நேரடா பரமகை லாசங்கண்ட
நிச்சயத்தால் சின்மயத்தில் நேரலாச்சு
காரடா சின்மயத்தில் சார்ந்துநின்ற
கங்கையினால் அங்குமிங்கும் ஒன்றாய்ப்போச்சு
பேரடா அங்குமிங்கும் ஒன்றாய்க்கண்ட
பெருமையுள்ள தலமதனைப் பேசுறேனே. 632

பேசுகிறேன் தலமகிமை ஆதியந்தம்
பிலமான ஆதியந்த மணவிண்ணாச்சு
ஆசுவென நின்றதொரு மணவிண் தன்னை
அப்பனே குருவருளால் அறிந்துகொண்டு
தேசுவென நின்றவிண்ணுக் கப்பால்பாரு
தெளிவாக தெளிந்தமண்ணுக் கப்பால்பாரு
நேசமுள்ள சின்மயத்தின் வடிவுகாணும்
நிசமான தலமதிலே நின்றுபாரே. 633

நின்றுமிகப் பார்க்கையிலே மைந்தாகேளு
நிலையான சின்மயத்தில் உதித்தவித்து
விண்டுமிகச் சொல்லாத வடிவேகாணும்
வேதாந்த வடிவுதன்னை விள்ளப்போமோ
ஒன்றுபொரு ளானதிலே ஒலியுண்டாச்சு
உண்மையென்ற ஒளிதனிலே வெளியுண்டாச்சு
சென்றதொரு அண்டவெளி தன்னில்நின்று
செகச் சால மாய்கையெலாந் தெளிந்துதன்னே. 634

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## அயச்செம்பு செந்தூரம்

தெளிவாக இன்னமொரு செந்தூரந்தான்
நிர்க்கமுடன் சொல்லுகிறேன் மார்க்கமாக
சுளிவான அயமுடனே செம்புரெண்டு
சுத்தமுடன் நாவியதை சுத்திபண்ணி
வளியாக குகைதனிலே காரங்கூட்டி
மார்க்கமுடன் உருக்கையிலே வெள்ளிசேரு
பளியாக வெள்ளியது பாயும்போது.
பத்தியுடன் தங்கமதை தானேசேரே. 635

சேர்த்துநன்றாய் உருக்கயிலே மைந்தாகேளு
திருவான நாகவங்கரசமுஞ் சேர்த்து
பார்த்திபனே தான் குடுத்துப் பார்க்கும்போது
பதிவான களங்குநிறம் என்னசொல்வேன்
ஏத்தமுள்ள களங்குநீரை தாரங்கெந்தி
இசையான காந்தமுடன் மூன்றுங்கூட்டி
வாத்திஒன்றாய்க் கல்வமதில் மைந்தாநீயும்
வணக்கமுடன் கமலரசந் தன்னாலாட்டே. 636

ஆட்டுவது கமலரசந் தன்னாலாட்டி
அப்பனே தானுருட்டிக் காயவைத்து
தாஷ்டிகமாய் காய்ந்தபின்பு பொடித்துமைந்தா
தண்மையுடன் காசியென்ற குப்பிக்கேற்றி
நீட்டுவது மணசிலை ஏழுஞ்செயது
மகத்தான தாளிதனில் சாம்பலிட்டுத்
தேட்டுடைய குப்பிதனை நடுவேவைத்து
சிவசிவா மூக்களவு சாம்பல்சாற்றே. 637

சாத்திமிக அடுப்பேத்தி மைந்தாகேளு
சற்குருவைத் தான்தொழுது அனலைமூட்டி
பாத்திபனே அனல்மூட்டி ஆறுசாமம்
பயபக்தியாகவேநீ எரிக்கும்போது
போத்தியதோர் குப்பியதின் உள்ளேமைந்தா
பொன்மெழுகு போலுருகிச் சிவந்துநிற்கும்
புத்தமலர் வாசனைபோல் சிவந்துதானால்
புண்ணியனே தானிறக்கி ஆறவையே. 638



வையப்பா மனங்குளிர ஆறவைத்து
மகத்தான குப்பிதனை எடுத்துமைந்தா
கையப்பா தவறாமல் கவசம்நீக்கி
கறுணைவளர் செந்தூரந் தன்னைப்பாரு
பொய்யப்பா போகாது முருக்கம் பூப்போல்
பூரணமாய் நின்றிலங்கும் புருவமேவி
மெய்யப்பா சற்குருவைத் தியானம்பண்ணி
வேதாந்த செந்தூரம் பதனம்பண்ணே. 639

பதனமதாய்ப் பளிங்கினுட குப்பிக்கேற்றி
பார்மகனே அந்திசந்தி பூசைபண்ணி
மதனமதாய் மனங்குவிந்து குருவைப்போற்று
மகத்தான செந்தூரம் தன்னைமைந்தா
விதனமென்ற நோயகற்றுந் தாயேயென்று
விரும்பிநிதம் பணவிடைதான் மெய்யிலூட்டு
அதனமதாய்க் கொள்ளாமல் பணிவிடைதான்மைந்தா
அப்பனே அந்திசந்தி கொண்டுதேறே. 640

தேறப்பா அந்திசந்தி கொண்டு தேர்ந்தால்
தேகவச்சிர காயமடா தேவரூபம்
பேரப்பா பெற்றதொரு செந்தூரத்தை
பிலமான நவலோகந் தன்னில்மைந்தா
சேரப்பா இனமறிந்து பாச்சினாக்கால்
செம்மையுடன் நவலோகஞ் செம்மையாகுங்
காரப்பா கறுணைவனச் செந்தூரத்தை
கருணையுடன் பூரணமாய்க் கோண்டுதேரே. 641

## அயக்காந்த உபரசச் செந்தூரம்

தேறவே இன்னமொரு செந்தூரங்கேள்
திருவான அயமிடனே காந்தஞ் சேர்த்து
ஊறவே சம்பளத்தின் சாறுவிட்டு
உருகவே தானரைத்து உலர வைத்து
நேரவே அதுக்கு நிகர் லிங்கஞ் சேரு
நேர்மையுடன் தாளகமும் வீரஞ் சேரு
கூறவே துருசுடனே துத்தஞ் சேரு
குருவான காரமுடன் சாரஞ்சேரே. 642



Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

சேரப்பா ரசமுடனே நாகம்வங்கம்
செம்மையுடன் பனிரெண்டும் ஒன்றாய்ச் சேர்த்து
நேரப்பா தங்கமது நாலுக்கொன்று
நேர்மையுடன் தான்கூட்டி கமலப்பாலால்
காரப்பா கல்வமதில் நன்றாயாட்டி
கடுரவியில் உலரவைத்து தூளே செய்து
மேரப்பா வென்றதொரு குப்பிக்கேற்றி
விபரமுடன் மண்சீலை ஏழுஞ் செய்யே. 643

செய்யப்பா மண்சீலை வலுவாய்ச் செய்து
தீர்க்கமென்ற பாண்டமதில் சாம்பலிட்டு
வையப்பா குப்பிதனை நடுவே வைத்து
மார்க்கமுடன் மூக்களவு சாம்பலிட்டு
மெய்யப்பா சற்குருவைத் தியானஞ்செய்து
மேன்மைபெற அடுப்பேற்றி அனலைத்தாக்கு
கையப்பா தவறாமல் அனலைத் தாக்கி
கருணையுடன் ஆறுசாமம் எரித்துக்காணே. 644

காணவே ஆறுசாமம் எரித்துமைந்தா
கருணைவளர் குப்பிதனை கண்ணால்பாரு
பூணவே குப்பிதனை பார்க்கும்போது
பொன்மெழுகு போலவேதான் உருகிநிற்கும்
பேணவே உருகுநிலை தனைஅறிந்து
பிசகாமல் தான்இறக்கி ஆறவைத்து
தேணவே குப்பிதனை எடுத்துப்பாரு
சோதியென்ற செந்தூரம் கண் கொள்ளாதே. 645

கண்கொள்ளா காக்ஷிதருஞ் செந்தூரத்தை
கைமுறையாய்த் தானெடுத்து பதனம்பண்ணி
விண்ணிறைந்த சோதியெனத் தியானம் பண்ணி
மெய்யாகப் பணவிடைதான் இருபோதுண்ணு
தன் மனமே சாக்ஷியதாய்த் தினமுங் கொண்டால்
தங்கமய மாகுமடா அங்கந்தானும்
பொன்மயமாய் நின்றுவினை யாடுமிந்தப்
பூரணசெந் தூரமதின் புதுமைகேளே. 646



கேளப்பா வெள்ளிசெம்பு தகடுபண்ணி
இருபையுள்ள செந்தூர மதிநீர்ப் பூசி
வாளப்பா அக்கினியில் வாட்டிப் பார்க்க
வரிசையுடன் தகடுருவிப் பழுக்குமைந்தா
சூளப்பா சுத்தமுடன் பழுத்துநின்ற
சோதியென்ற தங்கமடா சொர்க்கமாச்சு
ஆளப்பா சொர்க்கமதைப் பெத்துகொண்டு
அருள் பெருகும் பூரணமா யடங்குவாயே. 647

அடங்கிமிக வாழ்வதற்கு அண்டமேவி
ஆதிசிவ சாம்பவியாள் பாதங் கொண்டு
துடங்கியந்த வாசிமலர் தனையெடுத்து
சுத்தமுடன் நித்தியமும் பூசைபண்ணி
திடங்களொடு சிவயோகஞ் சித்தியாகுந்
திருவான அமுர்தரசம் மருவிப்பாயும்
மடங்களென்ற மடபதிகள் மங்காதய்யா
மந்திர பஞ்சாக்ஷரத்தை மருவிப்பாரே. 648

பாரப்பா அகாரமது சிவமுமாச்சு
பதிவான சிவமதுதான் உயிருமாச்சு
நேரப்பா உகாரமது சத்தியாச்சு
நேர்மையுள்ள சத்தியது உடல்தானய்யா
சாரப்பா மகாரமது மவுனமாச்சு
சாயுச்சிய மவுனமது சோதியாச்சு
தேரப்பா சிகாரமது தீயுமாச்சு
திருவான காரமது வாய்வுமாச்சே. 649

## யோகக் குறிப்பு

ஆச்சப்பா அகாரத்தை மதியிலூது
அப்பனே உகாரத்தை ரவியிலூது
காச்சப்பா மகாரத்தை சின்மயமாய் நின்று
கருணையுள்ள ரவிமதியைப் புருவத்தேற்றி
மூச்சப்பா அசையாத சிகாரத்தீயில்
முன்னிறைந்த உகாரமென்ற வாய்வாலூது
பேச்சப்பா பேசாத அக்கினிதானேகிப்
பிலமான புருவமதில் சோதியாச்சே. 650

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

சோதியென்ற சோதிசிவ சூக்ஷந்தன்னை
சுத்தமுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
ஆதியென்ற அகாரமடா சிவந்தானுப்பு
அருளான வுபகார சத்தி பனியுமாச்சு
நீதிசென்ற மகாரமடா மவுனவாலை
நிசமான பூரணந்தான் சிகாரமாச்சு
சாதியென்ற நாலையுந்தான் ஒன்றாய்க்கூட்டி
சமரசமாய்ப் பூரமென்ற உப்பைச் சேரே. 651

### பஞ்சகண தீக்ஷை உப்பு

சேர்த்து நன்றாய் ரவிதனிலே வைத்துமைந்தா
தீர்க்கமுடன் இன்னமொரு செய்திகேளு
ஆத்துமத்துக் குறவான ஆதியுப்பை
அரிந்தெடுத் தெடுத்துசத்தி ரவிபீசங்கூட்டி
யெத்தி மிகத்தானிருந்து தயிலம் வாங்கிப்
பூரணமாய் நாலுடனே சேர்த்துக்கிண்டி
பார்த்துமிகப் பதனமதாய்ப் பாணிச்சேர்க்கப்
பஞ்சகண தீக்ஷையெனப் பகரலாமே. 652

ஆமப்பா முதல்தீக்ஷை அகாரமாகும்
அப்பனே உகாரமது ரெண்டாந்தீக்ஷை
காமப்பால் மகாரமது மூன்றாந்தீக்ஷை
கருணைவளர் சிகாரமது நாலாந்தீக்ஷை
தாமப்பால் வகாரமது அஞ்சாந்தீக்ஷை
தண்மையுடன் தானறிந்து ஒன்றாய்ச் சேர்க்க
ஓமப்பா பஞ்சகண தீக்ஷையாச்சு
உண்மையென்ற தீக்ஷையிலே உகந்துநில்லே. 653

நில்லப்பா பஞ்சகெண தீக்ஷைபெற்றால்
நிசமான பஞ்சசபை நீதானாச்சு
சொல்லப்பா சோதிபஞ்சா க்ஷரந்தானாச்சு
சுத்தமுள்ள சடாக்ஷரத் துக்குப்பியாச்சு
செல்லப்பா அண்டபத முடிவுமாச்சு
சித்தாந்த வேதாந்தத் தெளிவுமாச்சு
ஐளப்பா உள்வெளியுந் தான் தானாச்சு
உண்மையுடன் தானிருந்து தாயைக் காணே, 654



தாயான பூரணமே சதாபோதமாகுந்
தன்னைத் தானறிதல் தெரிசினமு மாகும்
மாயான பிரபஞ்ச சிவமயமென் றெண்ணு
மார்க்கமென்ற பகுத்தறிவே அறிவானந்தஞ்
சாயாத நிலையதுவே சிவயோக மாகுஞ்
சகல உயிர் தானானால் சற்குருவே ஆகுந்
தேயாத ரவியதனால் இதனைக் கண்டு
சிவயோக யோகமதில் திறஞ் செய்வாயே. 655

### நூல் அறிய

திரமான சவுமிய சாகரத்தைப் பாரு
தீர்க்கமுடன் காவியத்தை தினமும் பாரு
உரமான பூரணத்தை பூசைபண்ணி
உண்மையென்ற பலபலக் கியானம் பாரு
வரமான ஞானமடா மவுனக்கியானம்
வணக்கமுடன் ஆயிரத்தை மகிழ்ந்து பாரு
திரமான தத்துவமா யிரத்தைப்பாரு
தீக்ஷையொடு பூசைவிதி நீகண்டு பாரே. 656

### நூல் தொகை நூல் பார்க்க

பாரப்பா வாதமதிற் கோடாகோடி
பதிவான வயித்திய மதிலேயில்லை
நேரப்பா பூரணத்திலிருந்து கொண்டு
நேமமுடன் சூஸ்திரத்தில் அனந்தஞ் சொன்னேன்
மேரப்பா மேருகிரி தீபம்போலே
மெஞ்ஞான பூரண வேதாந்தஞ் சொன்னேன்
தேரப்பா ஆதிமுதல் அந்தஞ் சொன்னேன்
தீர்க்கமுடன் சொன்னதெல்லாந் தெளிந்துகாணே. 657

### வல்லாரை கற்பம்

தெளிந்து மிகக் காணுதற்கு மைந்தாகேளு
திருவான அமுர்தரச பற்பஞ் சொல்வேன்
அளிந்தினதோர் வல்லாரை தெளிந்து பார்த்து
அப்போதே கொண்டு வந்து அருளை நோக்கி
குளிந்ததொரு பூரமடா பூரச்சுண்ணங்
கொட்டிடுவாய் கீழ்மேலுந் திட்டஞ் செய்து
நெளிந்துமனம் போகாமல் சமாதி வைத்து
நேர்மையுடன் அஞ்சானாள் எடுத்துக் கொள்ளே 6'8

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

எடுத்ததொரு வல்லாரை கல்வத்திட்டு
இடித்துமிகத் தானரைத்து தயிலஞ் சேர்த்து
தொடுத்ததொரு பூரமது நாலில் ஒன்று கூட்டி
துலங்கவதைத் தானரைத்து ரவியில்போடே
அடுத்துமிக ரவிதனிலே அஞ்சுநாள் தான்
அப்பனே காய்ந்தபின்பு எடுத்துக் கொண்டு
நடுத்தரமாய் நின்றதொரு அண்டச் சுன்னம்
நாதாந்த பற்பமது கூட்டிச் சேரே. 659

சேரப்பா இடைசரியாய்ச் சேர்த்துமைந்தா
செம்மையுடன் தானரைக்க மெழுகுமாகும்
காரப்பா மெழுகுதனை மேருக்கேற்றி
கணபதிக்கும் வடுகனுக்கும் பூசைபண்ணி
நேரப்பா பணவிடைதான் எடுத்துக்கொண்டு
நேர்மையுடன் அந்திசந்தி கொண்டாயானால்
ஆரப்பா உனக்குநிகர் சொல்லப்போறேன்
அண்டரண்ட பதங்கடந்த கெவுனமாச்சே. 660

## கடுக்காய்க் கற்பம்

ஆச்சப்பா கெவுனரசம் அமுர்தரசஞ் சொல்வேன்
அமைத்தபடி செங்கடுக்கா யங்கேவாங்கி
பாச்சப்பா கல்வமதில் நொறுக்கிக்கொண்டு
பாலகனே அதற்குநிகர் சருகுசேர்த்து
...ீரப்பா தான்விலகப் பூரஞ்சேர்த்து
வெண்சாரை விட்டுநன்றாய்ப் பிசைந்துலர்த்தி
...ச்சப்பா தான்பிலக்கப் பாண்டத்திட்டு
முத்திபெற குழித்தயிலம் நன்றாய் வாங்கே. 661

...ாங்கியந்த தயிலமதை பதனம் பண்ணி
வரிசையுடன் அந்திசந்தி மைந்தா நீயும்
...கியே திரியாமல் கொண்டாயானால்
...ஈரெட்டு வயதுமதன் போலேயாவாய்
...கமல மாதுசிவ சத்தியாலே
...பூரணமுங் காரணமும் பொருந்தும்பாரு
...குடைய கடுக்காயின் தயிலத்தாலே
...த்தியுடன் ஆதாரஞ் சித்தமாமே. 662



## பவழவைப்பு

சித்தமுடன் ரத்தினமுறை வைப்புக்கேளு
சோதிநவ ரத்தினத்தின் பவழந்தானுஞ்
சித்தமுடன் வைப்புமுறை சொல்வேன்மைந்தா
சிவப்பான கெவுரிசங்கு பலந்தானொன்று
பத்தமுள்ள சாதிலிங்கம் பலந்தான் ரெண்டு
பக்குவமாய் ரெண்டுமொன்றாய் கல்வத்திட்டு
உத்தமொழி சொல்லுகிறேன் கலசப்பாலால்
ஓமென்று வடிமெழுகு போலேயாட்டே. 663

ஆட்டப்பா வடிமெழுகு போலே ஆட்டி
அங்கமுடன் மனதுமெய்க்க மணிபோற்செய்து
நாட்டப்பா அம்மணிக்கித் தமர்கள்போட்டு
நழுகாமல் சலாகைதனிற் கோர்வையிட்டு
வாட்டப்பா ரவிதனிலே மூன்றுநாள் தான்
மைந்தனே காய்ந்தபின்பு வரிசைகேளு
பூட்டப்பா விரால்மச்சம் வயத்துள் வைத்துப்
பேதரவாய்ச் சீலையிலே கிளியாய்க்கட்டே. 664

கட்டநன்றாய்ச் சட்டியிலேநிரம்ப யெண்ணைவிட்டு
கழறாமல் தோலையது போலேகட்டி
சட்டமுடன் அடுப்பேற்றி அனலைமூட்டு
சமைந்தபதம் பாத்திறக்கி ஆறவைத்து
திட்டமுடன் கோர்வையிட்ட மணியைவாங்கி
செம்மையுடன் ரவியிலிட்டுக் கழுவிப்போட்டு
யிஷ்டமுடன் தானெடுத்துப் பார்த்தாயானால்
என்னசொல்வேன் பவழமதுக் கதிகங்காணே. 665

## முத்துவைப்பு

காணவே முத்துமணி சொல்லக்கேளு
கருவான சிப்பியடா முத்துச்சிப்பி
தோணவே கொண்டுவந்து சுத்திசெய்து
சுகமாகத் தானிடித்து தூளேசெய்து
பூணவே இடித்ததூள் ஆறுபங்கு
புத்தியுடன் கெவுரிசங்குத் தூள்தான்மூன்று
பேணவே வெள்வங்கம் இடைதான்நாலு
பிலமான ரசமதுவும் இடைதான் அஞ்சே. 666

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

அஞ்சாமல் வங்கரசம் ஒன்றாய்க் கூட்டி
அருமையுடன் சிப்பிசங்குத் தூளுங்கூட்டி
மிஞ்சாமற் சடலரசிப் பாலைவிட்டு
மெழுகுபதம் போலரைத்து மணியேசெய்து
துஞ்சவே தமரிட்டு நிழலுணர்த்தி
சுகமான இன்னமொரு வரிசைகேளு
தஞ்சமெல அயக்கரண்டி தன்னிலே
சங்கினுட பொடியிட்டுத் தண்ணீர்வாரே. 667

வார்த்துமிக முத்துமணி அதனிற்போட்டு
வணக்கமுடன் கிண்டியதை அடுப்பிலேற்றி
கார்த்துமிக அனல்மூட்டி எரிக்கும்போது
கருவாக நீர்வத்திச் சுண்டிற்றானால்
பார்த்துமிக ரவிதனிலே காயப்போட்டு
பக்குவமாய் முத்துமணி பதிவாய் வாங்கிச்
சேர்த்துமிக கலப்பொடியு முத்துஞ் சேர்த்து
செம்மையுடன் கையதனால் தோய்த்துப்பாரே. 668

பாரப்பா கலசப்பொடியு முத்துங்கூட்டி
பதிவாக கையதனா லுரஞ்சும்போது
நேரப்பா முத்துவெகு ஒளிவு காணும்
நேர்மையுடன் ரசமணியும் மிதுக்கொவ்வாது
கோரப்பா தாவடமாய்ச் செய்துக்கொண்டு
கூர்மையுடன் மந்திரங்கள் செபித்தாயானால்
சாரப்பா சகலமுமே சித்தியாகும்
தாய்பதத்தைப் பூசித்து தன்னைப்பாரே. 669

## பச்சைவைப்பு

பாரப்பா பச்சைமணி சொல்லக்கேளு
பச்சையென்ற வழகிலது பொடிதானெட்டு
காரப்பா சிங்கினுட பொடிதான் ரெண்டு
கல்வமதற் கமலரசந் தன்னாலாட்டி
சோரப்பா மணியதுபோல் உருட்டிக்கொண்டு
திறமாக தமரிட்டு நிழலுலர்த்தி
தேரப்பா பச்சைநிற மண்டுகத்தில்
திறமாக அதன்வயத்துள் வைத்துக்கட்டே. 670



கட்டுவது கிளிபோலே கட்டிமைந்தா
கரண்டிதனில் நல்லெண்ணெய் காற்படி தான்விட்டு
திட்டமுடன் கிளியிட்டுத் தீயெரித்துச்
செம்மையுடன் தானவித்து இறக்கிமைந்தா
சட்டமுடன் கிளியவிழ்த்து மணியெடுத்து
தானுலர ரவிதனிலே காயப்போட்டு
இஷ்டமுடன் கலசப்பொடியு மணியுங்கூட்டி
இருக்குமிக வுரசயிலே மெதுவாங்காணே. 671

## வயிரவைப்பு

காணவே வயிரமுறை சொல்லக்கேளு
கற்பூரசிலாசத்துப் பொடிதான் ரெண்டு
பூணவே படிகக்கல் பொடிதான்ரெண்டு
பொங்குகடல் சங்குரெண்டு இரதமொன்று
தோணவே ஒன்றாகக் கல்வத்திட்டு
சுத்தமுள்ள முதுக்ஷண பால்விட்டு ஆட்டிப்
பேணவே மணிசெய்து தமர்தானிட்டு
பின்மான ரவிதனிலே காயப்போடே. 672

போடப்பா ரவிதனிலே காய்ந்தபின்பு
புத்தியுடன் மணத்தவளை வயத்தில்வைத்து
நாட்டப்பா கிளியதுபோல் நன்றாய்க்கட்டி
நயமாக சட்டியிலே நல்லெண்ணெய்விட்டு
மூட்டப்பா கிளியிட்டு அவித்திறக்கி
முக்கியமுள்ள மணியெடுத்து ரவியில்போட்டு
தேடப்பா சாணைதனில் தீட்டிப்பார்க்க
சிவசிவா சோதியது காந்தியாமே 673

## சிவப்புவைப்பு

ஆமப்பா சிவப்புமணி தன்னைக்கேளு
ஆச்சரியஞ் சிவந்தகல்லுப் பொடிதானாலு
ஓமப்பா சங்குரெண்டு பாரதமொன்று
உத்தமனே கல்வமதில் சீப்பாலிட்டு
தாமப்பா அசைத்துநன்றாய் மணிபோல்செய்து
தமரிட்டு ரவிதனிலே காயப்போட்டு
போமப்பா மணத்தவளை வயத்தில்வைத்து
புத்தியுடன் கிளிபோலே நன்றாய்ச்செய்யே. 674

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

செய்து நன்றாய் சட்டியிலே எண்ணெயிட்டு
செம்மையுடன் கிளியிட்டு அவித்துமைந்தா
செய்ததொரு கிளியெடுத்து மணியை வாங்கிச்
செம்மையுடன் ரவிதனிலே காயப்போட்டு
செய்ததொரு மணியெடுத்து சாணை தன்னில்
தீட்டிமிகப் பார்க்கையிலே சிவப்பென்னசொல்வேன்
செய்தசிகப் பானமணி அதிகவித்தை
செம்மையுடன் செய்துதவந் திரஞ்செய்வாயே. 675

## கஸ்தூரிவைப்பு

திறமான கஸ்தூரி முறையைக் கேளு
தீவுதனில் வாழுமடா சிறுகண் பூனை
உரமான பூனையிலே ஆண்பெண்ணுண்டு
உத்தமனே ஆண்பூனை மஞ்சளாகும்
திறமான பெண்பூனை சிவப்புமைந்தா
நிசமான அதின்மேனி அதிகவாசம்
கரமான கையதனால் பிடிக்கவென்றால்
காந்துமடா மேனியெல்லாங் காந்தும்பாரே. 676

பாரப்பா பிடிக்கும்வகை தன்னைக்கேளு
பால்தனிலே தவணைநெய் பகுந்துவிட்டு
நேரப்பா அதுவாழும் இடத்தில் வைத்தால்
நிச்சயமாய் வந்ததுவு முகந்துபார்க்கும்
சாரப்பா முகந்தவுடன் மயங்குமப்பா
தருணமது தானறிந்து பிடிக்கும்போது
காரப்பா வென்றுமுலைப் பாலுமெண்ணெய்
கலந்துமெய் தனில்பூசிப் பிடித்துப்பாரே. 677

பிடித்துஅதின் சோரையெல்லா மொன்றில்வாங்கி
பேசாத சாதிலிங்கம்இடையே சேர்த்து
டித்தபிஷ்டி சதைகளெல்லாம் அரைத்துசேர்த்து
தனிவீரம் பூரமுடன் சவாதுங்கூட்டி
டித்திடவே சமாதிதனில் வைத்துப்பார்க்க
மகத்தான கஸ்தூரி வாசம்வீசும்
த்ததொரு கஸ்தூரிவாசங் கண்டால்
முக்கியமுடன் தானெடுத்துப் பதனம்பண்ணே. 678



பண்ணப்பா பதனமதாய் வைத்துக்கொண்டு
பக்குவமாய்ப் பணவிடைதான் கொண்டாயானால்
முன்னப்பா தேகமதில் நின்றநோய்கள்
முழுதுமது தீருமடா பழநோயில்லை
பொன்னப்பா பொன்னொளிவு போலேமைந்தா
பூரணமாய் நின்றிலங்கும் பொருளைப்பாரு
கண்ணப்பா தானறிந்துப் பொருளைப்பார்க்க
கர்மவினை தீருமடா கண்ணைப்பாரே. 679

## மவுனமார்க்கம்

பாரப்பா கண்ணறிந்து பார்க்கும்போது
பாழான மாய்கைவெகு தோற்றமாச்சு
மேரப்பா நின்றதொரு தோற்றமெல்லாம்
நிமைமூடி முழிக்குமுன்னே காயமாச்சு
சாரப்பா மாய்கைவெளி கண்ணின்சூக்ஷுஞ்
சார்வறிந்து பார்க்கையிலே தான்பெய்யாச்சு
பேரப்பா கொண்டதெல்லாம் சத்தையாச்சு
பேரான அவஸ்தையெல்லாம் மாய்கைதானே. 680

ஆகையதால் மோக்ஷமில்லை மைந்தாகேளு
ஆதியென்ற னாதமதால் மைந்தாவாழ்க்கை
ஆசையுற்ற வாழ்க்கையிலே இருந்துக்கொண்டு
அடர்ந்தெழுந்த நாதவிந்தை அசையாமல்தான்
ஆசையுடன் நாதவிந்தை அறிந்து கொண்டால்
அருமையுள்ள சுருபமணி அங்கமாக
ஆசையுடன் அஷ்டாங்க யோகம்பார்த்து
அங்கனே நன்மைதின்மை அறிந்துபாரே. 681

## நன்மை தின்மை

அறிந்துபார் நன்மைதனைப் பார்க்கும்போது
அரகரா கண்டதெல்லாந் தின்மையாகும்
விரிந்தமன மொன்றாகி நின்றமார்க்கம்
வேதாந்த புலத்தியனே அதுதான்நன்மை
வருந்திநன்மை யுண்மையிலே மனதைவைத்து
மகத்தான சின்மயமாய் மனக்கண்கூர்ந்தால்
தெரிந்து கொள்ளுஞ் சிவத்தினுட மாயமெல்லாம்
தெளிந்ததுவு மழிந்ததுவும் சத்தந்தானே. 682

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

### பஞ்சமுகம்

தானென்ற சத்துமது சண்முகமானமைந்தா
தாங்கியதோர் பரிசமது பஞ்சமாகுந்
தேனென்ற ரூபமது அகோர மயமாகுஞ்
சிறந்ததொரு ரசமதுதான் ஆன்மாவாகும்
பானென்ற கெந்தமது சொல்லக்கேளு
பதிவான சத்தியோ சாதமாகும்
யேனென்று விளங்கியதோர் நயனமூன்று
யெதிரசதிர் சந்திரனாகயியம்பு வேதம். 683

வேதசட்ட முருப்படுத்தல் சிருட்டியாகும்
விளங்குவதைத் தான்தனத்த லதிதியாகும்
போதமுடன் பொசிப்பதுவும் சங்காரமாகும்
பத்தியுடன் தானடத்த லத்திரோபமாகும்
பாதமுடன் நால்முதலாய் அறிவுசேரப்
பத்தியதோர் வுரக்கமனுக் கிரகமாகும்
வீதமுடன் தானவனாய் இருந்துகொண்டு
நிலையறிந்து நாமுரைத்த முகத்தைப்பாரே. 684

### சொருபமுத்தி பெருமை

முகமதுதான் ஐந்துடனே நயனமூன்று
முத்திபெறச் சொன்னதை நீ சித்தம்வைத்து
அகமதிலே தெளிந்துகொண்டு ஆதிபாரு
ஆதியென்ற பூரணமாய் அருளைநோக்கு
கமதிலே அருளறிந்து நோக்கினாக்கால்
சுத்தசித்த படிகமதாய்ச் சொருபந்தோன்றுஞ்
சகமதிலே நின்றுசெகச் சாலம் பார்த்து
தெளிவான விருதயத்திற் சேரும்பாரே. 685

### தவஞ்செய்த ரிஷிமுனிவர் பெருமை

ரப்பா இருதயத்துக் கமலமீதில்
பதிவாக இருந்துதவஞ் செய்தபேரை
ப்பா தானறிந்து சொல்லக்கேளு
நிலையறிந்த நாரதருந் தூருவாச்சாரி
பா வியாக்கிரமர் வசிஷ்டர்தானுங்
லைக்கோட்டு மகாரிஷியும் காசிபருமைந்தா
ா கௌதமரும் விஸ்வாமித்திரர்
ர்மையுடன் வாசியிலே குவிந்தார்பாரே. 686



பாரப்பா ரிஷிமுனிவர் எட்டுப்பேரும்
பதிவான சிவயோகப் பதவிசேர
நேரப்பா தானிருந்துயாகாதி கிருத்தியம்
நேர்மையுடன் செய்துதவ நிலையில்நின்றார்
மேரப்பா மேருகிரி தீபம்போலே
வெகுகோடி காலவரை தவமேசெய்து
காரப்பா வென்றுசடஞ் சட்டைபோக்கி
கருணையுடன் வெளியொளியாய் கலந்தார்காணே. 687

காணவே வெளியொளியிற் கலந்துநின்று
கருணையுடன் கெந்துருவர் வாசியானார்
பூணவே கெந்துருவர் வாசியாகிப்
பூரணமாய் நிரைந்துபரி பூரணமுமானார்
தோணவே நின்றபரி பூரணமுமாகித்
துலங்கிநின்ற கயிலாசப் பொதிகைதனில் வந்து
பூணவே குருமுனியென் றருளினார்கள்
பூரணமாய் உபசாரம் புகழ்ந்தோம்பாரே. 688

பாராளும் குருமுனியே அண்டரண்டப்
பதங்களெல்லாம் பண்டுதவம் பணிந்துகொண்டு
நேரான தன் மயத்தை கண்டுகொண்டோம்
நிசமான தன்மயங்கொண் டேறுதற்கு
தூணான சின்மயத்தைக் காணவேண்டிச்
சுருதிமுடிபொதிகை வலஞ் சுத்திவந்தோம்
மேறான சின்மயமாம் மவுனசூட்சம்
விள்ளுவது அருமைவெகு அருமைகாணே. 689

### மதுரரச விஞ்சை

காணவே அருமையுடன் காணுதற்கு
கரைபிரள மவுனநிலை காக்ஷியென்ன
தோணவே சொல்லுகிற சுருதிகேளு
சுருதிமுடி வானதொரு நாதவிஞ்சை
பூணவே மதுரரச விஞ்சைதன்னைப்
பூரணமாய்க் கருவறிந்துப் பூசித்தாக்கால்
ஊரவே சின்மயத்தின் உருகிநின்று
உத்தமனே தன்மயங்கொண் டேறும்பாரே. 690

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

பாரப்பா தன்மயங்கொண் டேறும்போது
பருதிமதிச் சுடருடனே பஞ்சகர்த்தாள்
நேரப்பா அண்டமொடு சராசரங்கள்
நேர்ந்துகொண்ட மந்திரங்கள் செபதவங்கள்
வீரப்பா கொண்டதொரு நன்மை தின்மை
வெகுமோக மாகிநின்ற மாய்கையெல்லாஞ்
சேரப்பா சகலருமே விண்மயமாய்நின்று
திவ்வியரச பூரணமாஞ் சின்மயமாம்பாரே. 691

## சின்மயத்தின் பெருமை

சின்மயமாய் நின்றபொருள் கண்டபோதே
தீர்க்கமுடன் பொதிகையிற் சின்மயமானார்கள்
தன்மயமும் விண்மயமும் சின்மயமேஆச்சு
சதாபோகப் பொதிகையுஞ் சின்மயமே யாச்சு
உண்மயமாய் நின்றதெல்லாந் தன்மயமேயாகும்
உறுதியுள்ள கண்மயத்தை தன்மயமாய்க்கண்டு
விண்மயமோ சாக்ஷியதாய்ச் சின்மயமாயென்று
வேதகுரு உபதேசம் போதமயந்தானே. 692

## போதமயம்

[illegible]னான போதமயம் அறியாமற்றான்
தரணிதனில் யோகியென்று பேரெடுத்து
[illegible]ணான மதுமாம்சங்கள் கொண்டு
மெய்மறந்து வாய்புலம்பி விசையங்கெட்டு
[illegible]னானயில் வாழ்க்கை மரவுங்கெட்டு
உழன்று மதிகெட்டு அறிவிழிந்து போனார்
[illegible]னான அமுர்தரச பானங்கொண்டு
தீர்க்கமுடன் இகபரத்தில் தெளிந்துநில்லே. 693

[illegible]ிந்துரசங் காயாதி கற்பங்கொண்டு
[illegible]ீர்க்கமுடன் இல்லத்தோ டிருந்துவாழ்ந்து
[illegible]ிந்துமன தறிவாலே சிவயோகத்தில்
[illegible]ேர்க்கமுடன் நின்றுபரா பரத்திலேகித்
[illegible]ந்த சிதம்பரநடனந் தினமுங்கண்டு
[illegible]ர்க்கமுடன் அண்டபத முடிவிலேகி
[illegible]ந்து மிகத்தன்மயமாய் விண்ணைநோக்கிச்
[illegible]ாயகுரு சின்மயமாந் தன்னைப்[illegible]ரே. 694



பாரப்பா பதியறிந்து பார்க்கும்போது
பஞ்ச சபை யானதொரு மூலங்கண்டேன்
நேரப்பா அம்மூலம் நடுவில்நின்று
நிலையறிந்து சகலகலை வாசியேறி
காரப்பா கண்டமதில் அங்கென்றாணி
காலான ரவிமதியைச் சுழினைக்கேற்றி
சாரப்பா சார்வறிந்து மவுனங்கொண்டால்
சதானந்த பூரணசின் மயமாங்காணே. 695

காணப்பா சின்மயத்தில் நிற்கும்போது
கதிரான வாசியது கால்கொண் டுனில்
பூணப்பா ரேசக பூரகமும்செய்து
பூரணமாய் கும்பகத்தில் நின்றாயானால்
தேனப்பா திவ்வியரச அமுர்தமூறுஞ்
சிவசிவா அந்தரமுர்தந் தினமுங் கொண்டால்
வீணப்பா யென்றதொரு தேகந்தானும்
வேதாந்த அமுர்தரச தேகமாச்சே. 696

ஆச்சப்பா தேகமென்ற சிவாலயத்தை
அந்திசந்தி சுத்திபண்ணி அதிலிருந்து
மூச்சப்பா தானிருத்தி மவுனங்கொண்டு
மூலமுதல் ஆறாதாரம் முடிவிலேகி
பாச்சப்பா வாசிகரந் தொடுத்துப்பாரு
பருதியது தானெரிந்து மதியைப்பாரு
காச்சப்பா கதிர்மதியும் ஒன்றாய்க்கூட்டி
கமலமென்ற சுழினையிலே கலந்துபோச்சே. 697

கலந்துநின்ற முச்சுடரே முப்பாலாச்சு
மலந்துநின்ற மகாரமடா மவுனபீடம்
மகத்தான பஞ்சகர்த்தாள் வணங்கும்பீடம்
வளந்து அண்ட பிண்டமதாய் நின்றபீடம்
மகத்தான சோதிமய மானபீடம்
உளந்தெளித்து இருதயமாம் பீடந்தன்னில்
ஊணி மிகத்தானிருந்து தன்னைப்பாரே. 698

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## இருதயதெரிசனம்

பாரப்பா இருதயமாங் கமலத்தேகி
பதியறிந்து மவுனமதாய்ப் பார்க்கும்போது
நேரப்பா நின்றதொரு நவக்கிரகம்
நிசமான அனுக்கிரகம் நாதவிந்து
சாரப்பா அண்டமொடு புவனபோகஞ்
சதாசிவனும் மயேஸ்வரனும் ருத்திரமூர்த்தி
காரப்பா அயன்மாலுங் கதிர்மதியுங்
கண்ணறிந்துகாண வெளி மயமாச்சே. 699

மாயமென்ற மாயமெல்லாம் கண்ணின் சூக்ஷம்
மகத்தான சூக்ஷமடா மனக்கண்பார்வை
தாயகமாய் நீயிருந்து மனக்கண் கொண்டு
தன்னைமிகத் தானறிந்து தானே நின்றால்
நேயமுடன் காயமது காரணமாய் நின்று
நினைத்தபடி சித்து விளையாடும்பாரு
ஞாயமுடன் நடுவிருந்து நாட்டம்பாரு
ஞானமென்ற அக்கினிதன் வசமாம்பாரே. 700

பாரப்பா அக்கினியே போதமாகும்
பதிவான போதமதே ஞானமாகும்
நேரப்பா ஞானமதே தீபமாகும்
நிசமான தீபமடா மனக்கண்பார்வை
காரப்பா கருணைவிழி மலர்க்கண் தன்னை
காலறிந்து மேலேகு கடைக்கண்கொண்டு
நேரப்பா ஆதார முழுதும் பார்த்து
தெளிந்த மனதறிவாலே ஆதிபாரே. 701

ஆதியென்ற இருதயமே கமலபீடம்
அண்டசரா சரங்களெல்லாம் மகுடபீடம்
நீதியுடன் ரவிமதி சென்றிருக்கும்பீடம்
நேர்மையுடன் செபதவத்துவக்குகந்த பீடம்
தியதோர் மந்திரகலைக் கியானபீடம்
உறுதியுள்ள ரிஷிமுனிவர்க் குகந்தபீடம்
ாதிமணி தேர்ந்தொடுக்க மானபீடஞ்
சுருதிவரை பீடமதைச் சூழ்ந்துபாரே. 702



சூழ்ந்து பார் இருதயமே சொர்க்கவீடு
சோதிமணி நாதமது துலங்கும்வீட்டில்
தாழ்ந்து கொண்டு தன்னறிவே சாக்ஷியாக
தானிருந்து பூரணமாய் தன்னைப் பார்த்தால்
வீழ்ந்து சடம் போகாது வேதந்தூக்கும்
வேதமென்ற சின்மயத்தில் விரும்பி நின்று
வாழ்ந்திருக்கச் சொன்னமடா மவுனவீட்டில்
மனங்குவிந்து சிலம்பொலியை மகிழ்ந்துகாணே. 703

காணடா மனங்குவிந்து கமலவீட்டை
கண்டு மனங்கொண்டு நிதங் கார்த்தாயானால்
வீணடா போகாது வேதாந்தத்தி
மெய்நிறைந்த போதமடா நாதாந்தத்தி
பேணடா தீயரிந்து பிலமாயூது
பிசகாது வாசிசிவம் வசியமாச்சு
பூணடா வாசிசரம் பூண்டு கொண்டால்
பொற்கமலச் சோதிவெகு புனிதமாமே. 704

ஆமப்பா புனிதமுடன் இருந்து கொண்டு
ஆதிமுதல் அந்தம் வரை அறிய வேணும்
தாமப்பா தன்மயத்தை அறிய வேணும்
சதாபோத யோகமதிற் சார வேணும்
காமப்பால் கானற்பால் காணவேணும்
கண்டுநிதம் கொண்டுகரை ஏறவேணும்
நாமப்பா வென்றசடம் பேணாயாகில்
நற்ஜெனன மல்லவடா நாம்தான் பாரே. 705

பாரப்பா பலநினைவை நிறுத்திமைந்தா
புத்தியுடன் ஒருமுகமாய் பலன் கைக்கொண்டால்
நேரப்பா தன்மயமே சாக்ஷியாகும்
நிசமான விண்மயமே சோதியாகும்
காரப்பா விண்மயத்தில் மனக்கண் வைத்து
கருணை வளர்ச்சிவ மயமாய் கடாக்ஷம் பெற்றால்
ஆரப்பா உனக்குநிகர் ஆருமில்லை
அப்பனே ஜக ஜால வித்தைகேளே. 706



Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## வெடியுப்பு ஜெயநீர்

கேளப்பா வித்தையிலே செயநீர் வித்தை
இருபையுடன சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
காலப்பா வெடியுப்பு பலமும்பத்து
கருவானபுளி யெட்டு சாரம் ரெண்டு
வாளப்பா துருசுரெண்டு சூடம்ரெண்டு
வகையுடனே வெண்காரம்ரெண்டும் கூட்டி
ஆளப்பா கல்வமதில் ஒன்றாய்க் கூட்டி
சுத்தமுடன் அமுரியினால் அரைத்துக்கூட்டே. 707

கூட்டி நன்றாய் அரைத்துருட்டி எடுத்துக் கொண்டு
கூர்மையுடன் பீங்கான்தன் தாளிக்குள்ளே
மாட்டி நன்றாய் மதிதனிலே வைத்துப்பாரு
மகத்தான வாருதிபோல் செலந்தான் ஊறும்
தாட்டிகமாய்ச் சலத்தை யொன்றில் வாங்கி
சங்கையுடன் வீரமிட்டுத் தானேபார்த்தால்
தாட்டியதோர் செயநீரை என்ன சொல்வேன்
நாதாந்தனாத நீரென்றும் பேரே. 708

பேரான நாதநீர் பெருமைமெத்தப்
பேசுகிறேன் அதினுடைய பலத்தைக்கேளு
வீரான பாஷாணங் காரசாரம்
விளங்கியதோர உபரசங்கள் இதுவே கட்டும்
நேராக நீயிருந்து செயநீர் பண்ணி
நினைத்தபடி நின்றுவிளை யாடும்மைந்தா
கூரான செயனீரை ஒன்றில் வாங்கி
கூர்மையுடன் நாகமதை உருக்கிச்சாயே. 709

உருக்கி மிகநாலஞ்சு திரமேசாய்த்தால்
உண்மையுள்ள நாகமது கட்டிப் போகும்
பெருக்கமுடன் கட்டினதோர் நாகந்தன்னில்
பெருமையுடன் இடைசரியாய் தங்கஞ்சேர்த்து
திருக்கறவே தானுருக்கி யெடுத்துமைந்தா
செம்பு வெள்ளியிடை சரியாய்ப் பத்துகொன்று
ருக்கமுள்ள நாகமதைக் கொடுத்துப் பார்த்தால்
ஈரெட்டு வயதுடைய தங்கந்தானே. 710



தாவென்ற தங்கரதி மாதுதன்னை
தன்மையுடன் தானறிந்து பூசைசெய்தால்
தேனென்ற அமுர் தரச பானமீவாள்
திருவான வாசியது திறமாய் நிற்கும்
வாவென்ற கேசரியாள் நிர்த்தஞ் செய்வாள்
வரிசையுடன் அஷ்ட சித்தும் வசியமாகும்
ஊவென்ற தேகமதில் உறுதிகொண்டு
உண்மையுடன் நடுவணையை உகந்துபாரே. 711

## திரிகோண பூசை
### வாசல் திறக்க

பார்ப்பதற்கு பொருள் சொல்ல நன்றாய்க் கேளு
பராபரையின் திரிகோணம் பதிவாய்க்கீறி
சேர்ப்பதற்கு நடுமைய்யம் அதனுள்வட்டம்
சிறப்பாகயிட்டு ரீங்காரம் போடு
ஆர்ப்பனமென் றெயிதனை மனதில் வைத்து
அப்பனே மேல்வாசல் திறக்கவேண்டி
நாற்பதுனாள் மானதமாய்ப் பூசை பண்ண
நாடிநின்ற வாசலது திறக்குந்தானே. 712

திறக்கவே அகாரத்தை மதியிற்சேரு
சிவசிவா உகாரத்தை ரவியிற்சேரு
திறக்கவே மகாரத்தை மேலேபோடு
நின்றிலங்குந் தீபஒளி நேர்மையாக
சிறக்கவே இதைனாடு யோகதிக்ஷை
திருநயன சுழினைவட்டஞ் செந்தீக்கண்ணுந்
துறக்கவே இதைத்தேடு மவுனவீடு
சுத்தமுடன் தானறிந்து சோதியாமே. 713

சோதியிரு கண்மணியாய்த் துலங்கி நின்ற
சுந்தரஞ்சேர் புலத்தியனே சொல்லக்கேளு
நீதியென்ற முக்கோண சூக்ஷந்தன்னை
நிலையறியா மூடருக்கு ஈந்தாயானால்
ஆதியென்ற அம்பரத்தில் செந்தீபத்தும்
அண்ட சராசரங்களெல்லா மதிலே வாழும்
வீதியிரு மூன்றுமனை மேலாம் வீட்டில்
மேலிருந்து மவுனரச பூசை செய்யே. 714

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

### நவகோண பூசை

செய்யவே திரிகோண பூசைமார்க்கம்
தீர்க்கமுடன் சொன்னதைநீ தெளிந்து பார்த்து
அய்யனே நவகோண பூசைதன்னை
அங்கமுடன் சொல்லுகிறேன் தங்கத்தாலே
மெய்யெனவே நவகோணத் தகடுசெய்து
வேதாந்த நால்வாசல் கோட்டையிட்டு
துய்யனவே கோட்டைநடு விந்துபோட்டு
சோதியென்ற விந்துநடு சொல்லக் கேளே. 715

கேளப்பா விந்துவென்ற வளையத்துள்ளே
கெணிதமுடன் நவகோணம் நன்றாய்ச் செய்து
வாளப்பா நவகோணம் நடுமுக்கோணம்
மையமென்ற மத்தியிலே ஓங்காரஞ்சாத்தி
ஆளப்பா ஓங்காரமதனுள் மைந்தா
அவையடக்க மானரீங்காரஞ்சாத்தி
நாளப்பா அரிந்து நவகோணபூசை
நன்மையுடன் செய்யுகிற நாட்டங்கேளே. 716

### மானத பூசை

நாட்டமுடன் மானதமாம் பூசைமார்க்கம்
நன்மையுடன் சொல்லுகிறேன் உண்மையாக
தேட்டமென்ற தேகமடா சதிரகிரியாக
திற்கமுடன் சிரசதுதான் பொதிகையாக
வாட்டமில்லா அக்கினிதான மறையோனாக
மகத்தான வாசியது அகத்தீசராக
ஆட்டமென்ற ஆதாரபீடமாக
அருளான முச்சுடரே வாசிமலரென்னே. 717

என்னவே அறிவல்லோ தீபமாக
ஏகாந்த மனக்கண்ணை தீபமாக
விண்ணப்பா நிறைந்தரசம் போதமாக
வேதாந்த பூரணமே சாக்ஷியாக
நண்ணப்பா சகலவுப சாரமாக
நாட்டமுடன் மானதமாய் பூசை செய்து
கண்ணப்பா மனக்கண்ணால் தன்னைப் பார்த்து
கற்பூர தீபமதை கையில் வாங்கே. 718



வாங்கியந்த தீபமதை மைந்தாநீயும்
மனது பரிபூரணமாய் வலமாய்ச் சுத்தி
தாங்கியந்த கற்பூர விபூதி வாங்கி
சந்தோஷமாகவே நீயணிந்துக் கொண்டால்
பூங்கமலை மாதுனது வசமாய் நின்று
போதமுடன் ஞானபதம் புனிதமாக
பாங்குபெறத் தன்வசமாயக் காட்டி வைப்பாள்
பத்தியுடன் சுத்தமாய் பூசை செய்யே. 719

செய்யப்பா சிவபூசை சத்திபூசை
செயமான வாலையுட பூசை செய்து
மெய்யப்பா தவறாமல் பூசை பண்ணி
வேதாந்த பூரணத்தில் விரும்பிநின்னு
மையப்பா மையமென்ற மவுன வீட்டில்
மார்க்கமுடன் தானிருத்தி வாசிபூட்டி
பையப்பா ரேசகபூரகமுஞ் செய்து
பத்தி கொண்டு தன்னகத்தைப் பதிவாய்க்காரே. 720

காரப்பா தன்னகத்தைக் கார்க்கவேணும்
காயாதி கற்பமதைக் கொள்ளவேணும்
நேரப்பா நிலையறிந்து கொள்ள வேணும்
நிலையறிந்து சிவயோகத் திருக்க வேணும்
தேரப்பா சிவயோகத்திருந்து கொண்டு
செகசால மாய்கையெல்லாந் தெளிந்து பார்த்து
மேரப்பா மேருகிரி வாசமாகி 721
மெய்யான சித்துவிளை யாடக்கேளே.

### செம்பு சுத்தி

கேளப்பா சித்துவிளையாடுதற்கு
கிருபையுடன் செம்புசுத்தி சொல்லக் கேளு
வாளப்பா வெடியுப்பு துருசுகூட்டி
மகத்தான கருவங்கமிடையே சேர்த்து
சூளப்பா கமலரசம் விட்டு ஆட்டி
சுகமாகக் கடலைமணி போலேசெய்து
ஆளப்பா வெள்ளிதனை உருக்கிக் கொண்டு 722
அந்திடைக்கு வங்கமணி யதனிற்றாக்கே.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

தாக்கி நன்றா யுருக்கியதை எடுத்துக் கொண்டு
தண்மையுடன் செம்புதனில் நாலுக்கொன்று
தாக்கியே தாவெடுத்து உருக்கி மைந்தா
துப்பறவாய் ஓட்டில் வைத்து ஊதிப் போட்டால்
நோக்கியதோர் தீபவொளி போலேமைந்தா
நுண்மையுள்ள செம்புவது பிரகாசமாகும்
பாக்கியமே படைத்தவர்க்கு எல்லாம் சித்தி
பத்தியுடன் இன்னமொரு பாகங்கேளே. 723

## வேறு

பாகமென்ற சத்தியுடன் துருசுலிங்கம்
பதிவாகத் தானரைத்து மணி போல் செய்து
ஆகமுடன் செம்புருக்கி இடையேதாக்கி
அப்போதே ஓட்டில் வைத்தூதிப் போட்டால்
நாகமுள்ள வாடையது ஓடிப்போகும்
நன்மையுள்ள செம்புநல்ல சத்தியாகும்
மோகமுடன் தானிருந்து இனமாய்ப் பார்த்தால்
எட்டும் ரெண்டும் சுத்தமடா பத்திபாரே. 724

பத்தியுள்ள சித்தண்டச் சத்துவொன்று
பாரையென்ற உப்பு வெடியுப்புங் கூட்டி
சத்தான சீனமுடன் துருசும்பூரம்
சுகமான சத்தியுடன் ஏழுங்கூட்டி
சுத்தமுடன் ஜெயநீரால் அரைத்துருட்டி
செம்மையுடன் புடம்போடச் சுன்னமாகும்
பத்தமுடன் சுன்னமதைப் பதனம் பண்ணி
பாலகனே இன்னமொரு கருவைக் கேளே. 725

கருவான சுன்னமதில் வாய்நீர் விட்டு
கையாலே மத்தித்துக் காசில்பூசி
உருவான கரிசலென்ற சாம்பற்குள்ளே
ஒடுக்கி வைத்துப் புடம்போட ஊறல்போகும்
குருவான பதியறிந்து கருவாய்ச் செய்தால்
குணமாக சகலசித்துங் கைக்குள்ளாகும்
திருவான லட்சுமிதன் செயல் தன்னாலே
தீர்க்கமுடன் இன்னமொரு கருவைக்காணே, 726



## வேறு

காணவே இன்னமொரு கருவைக் கேளு
கண்டருடன் அடிப்பூரங் கருவாய்க் கூட்டி
பேணவே தான் பொடித்து வைத்துக் கொண்டு
பெருமையுடன் செம்புருக்கி மருந்தையீந்து
பூணவே தான் கொடுத்து மைந்தா நீயும்
புத்தியுடன் புத்தோட்டில் ஊதிப்பாரு
தோணவே களிம்பற்று சோதியாகும்
சுத்தியுள்ள சோதியடா தங்கமாமே. 727

## தங்கச் செம்பு

தங்கமென்ற அங்கமதைச் செம்பாய்ச் செய்ய
சாகரத்தில் சொல்லுகிறேன் தங்கந்தன்னை
அங்கமுடன் குகையில் வைத்துருக்கி மைந்தா
அதற்கு நிகர் அரிதாரம் துரிசுகெந்தி
சங்கையுடன் மிருதாரு சிங்கிகூட்டி
தான்பொடித்துத் தங்கமதைக் கொடுத்துபாரு
மங்களமாய் நின்றதங்க மெடுத்துப் பார்த்தால் 728
மாசற்றரவி யினிட மார்க்கமாமே,

மார்க்கமென்ற வெள்ளியிலே பத்துக் கொன்று
மாசற்ற தங்கரவி ஈந்தாயானால்
ஏர்க்கையுள்ள தங்கவயதென்ன சொல்வேன்
ஈரெட்டு வயதுடைய தங்கத்தாயை
சேர்க்கையுடன் அவள்பதமே கெதியென்றெண்ணி
சிவசிவா சிவயோகத் திறத்தில் நில்லு
தீர்க்கமுடன் சிவயோகத் திறத்தில் நின்றால் 729
சிவசிவா தேகம் வச்சிரகாயமாமே.

ஆமப்பா தேகவச்சிர காயமானால்
அஷ்டாங்க யோகமது திட்டமாகும்
காமப்பால் கானல்பால் கருணையாகும்
கருணையுடன் பூரணமே காணலாகும்
தாமப்பா பூரணத்தைத் தானே கண்டு
சதாபோத மவுனரச பானங் கொண்டு
ஓமப்பா வென்ற பிரணவத்தை நாட்டி 730
உண்மையுடன் தானிருந்து உச்சம்பாரே.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

உச்சமென்ற உச்சியடி வாரமான
உண்மையென்ற புருவநடு அடிவாரத்தில்
பக்ஷமுடன் தானிருந்து வாசியேறி
பருதிமதி கலையதனைப் பருவமாக
அச்சமற அக்கினியில் தாக்கிப்பார்க்க
ஆனந்தமான சிவ சோதிசூக்ஷம்
மச்சுவென்ற மாளிகையில் உச்சமீதில்
மகத்தான சோதிசெகச் சோதியாமே 731

சோதியென்ற சோதிசிவ சூக்ஷந்தானும்
சுயஞ் சோதியிருதயமாங் கமலமீதில்
நீதியுடன் தானிருந்து கலையைப் பற்றி
நிலையான முச்சுடரும் ஒன்றாய்க் கண்டு
ஓதியதோர் பிரணவத்தின் சூக்ஷத்தாலே
உண்மையென்ற ஆதியந்தந் தன்னுள் பார்க்க
ஆதியென்ற சின்மயமாய் அங்கே தோணும்
அந்திடமே சொந்தமென அறிந்து நில்லே. 732

…றிந்து கொண்டு நிலையறிந்து நின்றால் மைந்தா
ஆதார சுருபநிலை அங்கே தோணும்
…நந்தி நின்று மலரணையில் மகிழ்ந்து கொண்டால்
வாசியுள்ள யோகியடா தேசவாசி
…ந்துகின்ற ஆகமபுராண சாஸ்திரம்
…வேதாந்தஞ் சித்தாந்தம் மனுவிக்யானம்
…ந்து கொண்டு தெளிவதனால் பார்க்கும்போது
…வசிவா சிவமயமாய் தெளியலாச்சே, 733

…ப்பா தெளிவான சோதி மூலம்
…ருளான பொருள்பெருகு மாதிமூலம்
…பா தானடங்கும் மவுனமூலம்
…தியுள்ள மூலமடா தங்கமூலம்
…ா நிலையாத தங்கமூலம்
…ான மூலமடா தன்னுள் பாரு
…ா பேசாத நாதவிந்து
…மையுள்ள சரக்குவகை பிலத்தைக் கேளே. 734



பிலமான லோகமடா கீழ்லோகத்தில்
பிலத்திருந்த சந்துவகை எல்லாங்கூட்டி
தலமான அத்தலத்தில் மாண்டுபோன
சங்கை தனையாரறிவார் சாற்றக் கேளு
குலமான குலமறிந்து கூட்டிப்பாரு
கூட்டும் வகை சொல்லுகிறேன் குருவதாக
நிலமான ராசியரைப் பொடியும் நேராய்
நிலையறிந்து குகைதனிலே யுருகும்பாரே. 735

பாரப்பா சத்தி சிவமொன்றய்க் கூட்டி
பதிவாக மனங்கனிந்து உருகும்போது
நேரப்பா தங்கமது வெள்ளி சேரு
நிசமாக அதற்குநிகர் நாகஞ்சேரு
காரப்பா மனங்கனிய லிங்கஞ்சேரு
கசடான களிம்பகல வீரஞ்சேரு
பேரப்பா பெற்றதொரு சாரஞ்சேரு
பிசகாமல் சேர்த்துவொரு மணியாய் வாங்கே. 736

வாங்கியந்த மணியதனை மைந்தா கேளு
மகத்தான வெள்ளி செம்பில் நூற்றுக் கொன்று
தாங்கியே தான்கொடுத்து உருக்கிப்பாரு
தாயான தங்கமடா அதிககாந்தி
பூங்கமல காந்திதனை மைந்தா நீயும்
பூரணமாய் அனுதினமும் பூசைபண்ணி
பாங்குபெற சிவயோகத் திருந்து கொண்டால்
பரஞான தேசியென்ற யோகியாமே. 737

ஆமப்பா யோகமதுக் குறுதியான
அருனான களங்கதனை கல்வத்திட்டு
நாமப்பா சொல்லுகிறோம் நன்றாய்க் கேளு
நன்மையுள்ள களங்குநிகர் காரங்கெந்தி
ஓமப்பா சாந்தமுடன் ஒன்றாய்ச் சேர்த்து
உறுதியுடன் தான்பொடித்து குப்பிக் கேத்தி
தாமப்பா தன்னறிவால் மண்சீலை செய்து
தாளியரை சாம்பலிட்டு குப்பிவையே. 738

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

வைத்து குப்பிமூக்களவு சாம்பலிட்டு
மகத்தான சர்க்குருவை மனதிற்கொண்டு
மெய்த் திட்டமாகவே தானடுப்பிலேற்றி
மேன்மைபெற அனல்மூட்டி பதத்தைப்பாரு
கைத்திட்டமாகவேதான் சிலாகை போட்டு
கதிர்முனையில் சிவந்தநிறங் கண்டால்மைந்தா
மைத்திட்டமான பதம் சரிதானென்று
மார்க்கமுடன் தானிறக்கி ஆறவையே. 739

ஆறவே வைத்ததொரு பாண்டத்துள்ளே
அருள்பெருக்கும் குப்பிதனை எடுத்துப்பாரு
தேறவே வைத்துகுப்பிக் குள்ளேமைந்தா
சிவந்திருந்த செந்தூரம் என்னசொல்வேன்
நேரவே நவலோகந் தங்கமாகும்
நீமகனே பணவிடைதான் கொண்டாயானால்
கூறவே நாவேது தேககாந்தி
கோடான கோடிரவி போலாமென்னே. 740

## அயக்களங்கு வேதை

என்னேரமுங் குருவைத்தியா னம்பண்ணி
ஏகாந்த மானரச வாதம்பார்க்க
கண்ணாரக் கண்டபடி சொல்லக்கேளு
கருவான அரப்பொடியை கல்வத்திட்டு
விண்ணான கமலரசந் தன்னாலாட்டி
மேலான நாதரசம் வங்கஞ்சேர்த்து
பொன்னான காரமுடன் கெந்திலிங்கம்
பொருளான தங்கமுடன் வீரஞ்சேரே. 741

சேரப்பா நவமூலம் ஒன்றாய்கூட்டி
தீர்க்கமுடன் வழித்துருட்டி வட்டுபண்ணி
நீரப்பா தான்சுவர ரவியில்போட்டு
நீமகனே காய்ந்தபின்பு ஓட்டில்வைத்து
சாரப்பா மண்சீலை நன்றாய்ச்செய்து
சர்க்குருவைத் தான்பணிந்து புடத்தைப்போடு
தேரப்பா புடமாறி எடுத்துப்பாரு
செந்தூரமானதொரு கட்டியாமே. 742



ஆமப்பா செந்தூரக் கட்டிதன்னை
அளவயடக்கமாகவே நீபதனம் பண்ணி
வாமப்பா பூசையிலே வைத்துப்போற்றி
மகத்தான வெள்ளிசெப்பு தாட்டிலேதான்
தாமப்பா வாய்நீரால் அரைத்துட பூசி
தன்னிலையைத் தானறிந்து புடத்தைப்போட்டால்
பேச்சப்பா வெள்ளிசெம் பென்றே பேச்சு
புதுமையுள்ள தங்கமென்ற பேரேயாச்சே. 743

## குடவன்சுத்தி

ஆச்சப்பா இன்னமொரு சுத்திகேளு
ஆதியென்ற வெடியுப்பு துருசுருடன்
மூச்சப்பா தானிருந்தும் நவச்சாரந்தான்
முத்தியுள்ள காரமுடன் அஞ்சுங்கூட்டி
பாச்சப்பா அதற்குநிகர் சத்திசேர்த்து
பதிவாக ஜெயநீரால் அரைத்துக்கூட்டி
வீச்சப்பா கொண்டதொரு குடவன்தன்னில் 744
மேலாகத்தான்பூசி புடத்தைப்போடே.

போடப்பா புடம்வலுவாய்ப் போட்டெடுத்தால்
புகழான குடவனது சுத்தியாச்சு
ஆடப்பா செம்புதனை எடுத்துமைந்தா
அருளான வெள்ளிதனில் நாலுக்கொன்று
நாட்டப்பா நாட்டினதை உருக்கிப்பாரு
நயமான பொன்னொளியை என்னசொல்வேன் 745
தேடப்பா இவ்வேதை நிமிஷவேதை
தெளிவான மனத்தெளிவாய் இருந்துபாரே.

இருந்துகொண்டு மனத்தெளிவை நன்றாய்ப்பாரு
என்மகனே கதிர்மதியை ஒன்றாய்ச்சேரு
வருந்திமிகக் கதிரதனை ஒன்றாய்ச்சேர்த்து
மகத்தான அக்கினியில் வாசமாகி
அருந்தவமாய் இருந்துநின்று சார்ந்துகொண்டால்
அசடான கல்மிஷங்கள் அகண்டுபோகும்
விரிந்தமனந் தனைநிறுத்தி வேதம்பார்த்து
மேன்மைபெறச் செபதவங்கள் செய்துபாரே. 746

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

வைத்து குப்பிமூக்களவு சாம்பலிட்டு
மகத்தான சர்க்குருவை மனதிற்கொண்டு
மெய்த் திட்டமாகவே தானடுப்பிலேற்றி
மேன்மைபெற அனல்மூட்டி பதத்தைப்பாரு
கைத்திட்டமாகவேதான் சிலாகை போட்டு
கதிர்முனையில் சிவந்தநிறங் கண்டால்மைந்தா
மைத்திட்டமான பதம் சரிதானென்று
மார்க்கமுடன் தானிறக்கி ஆறவையே. 739

ஆறவே வைத்ததொரு பாண்டத்துள்ளே
அருள்பெருக்கும் குப்பிதனை எடுத்துப்பாரு
தேறவே வைத்துகுப்பிக் குள்ளேமைந்தா
சிவந்திருந்த செந்தூரம் என்னசொல்வேன்
நேரவே நவலோகந் தங்கமாகும்
நீமகனே பணவிடைதான் கொண்டாயானால்
கூறவே நாவேது தேககாந்தி
கோடான கோடிரவி போலாமென்னே. 740

## அயக்களங்கு வேதை

என்னேரமுங் குருவைத்தியா னம்பண்ணி
ஏகாந்த மானரச வாதம்பார்க்க
கண்ணாரக் கண்டபடி சொல்லக்கேளு
கருவான அரப்பொடியை கல்வத்திட்டு
விண்ணான கமலரசந் தன்னாலாட்டி
மேலான நாதரசம் வங்கஞ்சேர்த்து
பொன்னான காரமுடன் கெந்திலிங்கம்
பொருளான தங்கமுடன் வீரஞ்சேரே. 741

சேரப்பா நவமூலம் ஒன்றாய்கூட்டி
நீர்க்கமுடன் வழித்துருட்டி வட்டுபண்ணி
நீரப்பா தான்சுவர ரவியில்போட்டு
நீமகனே காய்ந்தபின்பு ஓட்டில்வைத்து
சாரப்பா மண்சீலை நன்றாய்ச்செய்து
சர்க்குருவைத் தான்பணிந்து புடத்தைப்போடு
தேரப்பா புடமாறி எடுத்துப்பாரு
செந்தூரமானதொரு கட்டியாமே. 742



ஆமப்பா செந்தூரக் கட்டிதன்னை
அவையடக்கமாகவே நீபதனம் பண்ணி
வாமப்பா பூசையிலே வைத்துப்போற்றி
மகத்தான வெள்ளிசெப்பு தகட்டிலேதான்
தாமப்பா வாய்நீரால் அரைத்துநடபூசி
தன்னிலையைத் தானறிந்து புடத்தைப்போட்டால்
பேச்சப்பா வெள்ளிசெம் பென்றேபேச்சு
புதுமையுள்ள தங்கமென்ற பேரேயாச்சே. 743

## குடவன் சுத்தி

ஆச்சப்பா இன்னமொரு சுத்திகேளு
ஆதியென்ற வெடியுப்பு துருசுகூடன்
மூச்சப்பா தானிருந்தும் நவச்சாரந்தான்
முத்தியுள்ள காரமுடன் அஞ்சுங்கூட்டி
பாச்சப்பா அதற்குநிகர் சத்திசேர்த்து
பதிவாக ஜெயநீரால் அரைத்துக்கூட்டி
வீச்சப்பா கொண்டதொரு குடவன்தன்னில்
மேலாகத்தான்பூசி புடத்தைப்போடே. 744

போடப்பா புடம்வலுவாய்ப் போட்டெடுத்தால்
புகழான குடவனது சுத்தியாச்சு
ஆடப்பா செம்புதனை எடுத்துமைந்தா
அருளான வெள்ளிதனில் நாலுக்கொன்று
நாட்டப்பா நாட்டினதை உருக்கிப்பாரு
நயமான பொன்னொளியை என்னசொல்வேன்
தேடப்பா இவ்வேதை நிமிஷவேதை
தெளிவான மனத்தெளிவாய் இருந்துபாரே. 745

இருந்துகொண்டு மனத்தெளிவை நன்றாய்ப்பாரு
என்மகனே கதிர்மதியை ஒன்றாய்ச்சேரு
வருந்திமிகக் கதிரதனை ஒன்றாய்ச்சேர்த்து
மகத்தான அக்கினியில் வாசமாகி
அருந்தவமாய் இருந்துநின்று சார்ந்துகொண்டால்
அசடான கல்மிஷங்கள் அகண்டுபோகும்
விரிந்தமனந் தனைநிறுத்தி வேதம்பார்த்து
மேன்மைபெறச் செபதவங்கள் செய்துபாரே. 7

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## செபத்துக்குமணி

பாராய்நீ புலத்தியமா ரிஷியேயப்பா
பதிவாகச் செபதபங்கள் செய்வதற்கு
நேராக அந்தந்த வாரந்தன்னில்
நீசமான மணியெடுத்து செபமேசெய்ய
பேராகச் சொல்லுகிறேன் ஆதிவாரம்
பிலமான ருத்திராக்ஷம் மெத்தநன்று
சீரான வாரமடா சோமவாரம்
சிவசிவா பளிங்குமணி செயமாங்காணே. 747

காணவே மங்களமாம் வாரந்தன்னில்
கருணைதரும் தாமரையின் மணிதான்மைந்தா
பூணவே புதவாரந் தன்னிலேதான்
புத்திதரும் துளசிமணி புகழோமெத்த
பேணவே குருவாரந் தன்னிற்கேளு
பிலமாகுஞ் சங்குமணி பெருமைமெத்த
தோணவே சுக்கிரன்தன் வாரந்தன்னில்
சுகருடா மணியதுதான் சுத்தமாமே. 748

சுத்தமுள்ள சனிவாரந் தன்னில் மைந்தா
சோதிரச மணியதுதான் துகளறுக்கும்
சித்தமுடன் தானிருந்து வாரந்தோறும்
செப்பிய சொல்தப்பாமல் சித்தியாக
முத்திபெறச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
மூதலான மனோன்மணியை மவுனமாக
நித்தியமும் நிலையறிந்து சுத்தமாக
நேமமுடன் மனோன்மணியால் செபமே செய்யே. 749

செய்யப்பா செபமதுதான் தினமுஞ்செய்தால்
சிவசிவா ஆதாரஞ் சித்தியாகும்
மெய்யப்பா கபமதுதான் விலகிப்போகும்
வேதாந்தம் சித்தாந்தம் மெய்யுள்தங்கும்
மையப்பா சுழிதனில் வாசியேறும்
மைந்தனே அஷ்டாங்கம் திட்டமாகும்
பொய்யப்பா போகாது தன்னைப்பாரு
பூரணமுங் காரணமும் பொருந்தும்பாரே. 750



பொருந்து மனங்கொண்டு சிவயோகஞ்செய்ய
போதமயமானசிவ சத்திபாதம்
இருந்துநிதம் தன்மனமே சாக்ஷியாக
ஏகாந்தமாயிருந்து பூசைசெய்தால்
வருந்தி வரும்பிறப்பு மாயமாகும்
மார்க்கமுள்ள செகசாக்ஷி மனதில்தங்கும்
அருந்தவமாய் நின்றதொரு சாக்ஷிதானும்
அரகரா சின்மயமா யாதிதானே. 751

## முச்சுடர் நமக்கண்

ஆமென்ற ஆதியந்தம் மண்விண்ணாச்சு
அதினடுவில் அப்புடனே தீயுங்காலும்
ஓமென்று முச்சுடராய் விளங்குதய்யா
உறுதியுடன் தன்னகத்தில் ஒடுங்கிப்பாரு
தானென்ற யானுவது பருதியாச்சு
சதிரான காலதுதான் மதியுமாச்சு
நாமென்ற தீயதுதான் சுடருமாச்சு
நாட்டமதில் கண்டறிந்து நயனம்பாரே. 752

பாரப்பா நயனமது மனக்கண்ணாச்சு
பதிவான தீபமது மனக்கண்ணாச்சு
நேரப்பா வாசியது மனக்கண்ணாச்சு
நேர்மையுள்ள சிவயோக மனககண்ணாச்சு
சாரப்பா குருமொழியு மனக்கண்ணாச்சு
சகலகலைக் கியானமெல்லா மனக்கண்ணாச்சு
தேரப்பா தெரிசனமு மனக்கண்ணாச்சு
சிவசிவா சின்மயமும் மனக்கண்ணாச்சே. 753

கண்ணான விண்ணறிந்து கால்கொண்டுனி
கருணை வளர்கேசரியில் கருத்தைவைத்து
முன்னான முச்சுடரின் நடுவிலேதான்
மூதலான ஞானசுவ சோதிசூக்ஷம்
ஒண்ணான சூக்ஷமதை ஊணிப்பார்க்க
உண்மையென்ற அதிசயத்தை என்னசொல்வேன்
விண்ணான அதிசயத்தைப் பார்க்கவென்றால்
வேதமுறை தவறாமல் செபமே செய்யே. 754

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## அஷ்டகர்மம்வாற்றிய ருத்திராக்ஷ விவரம்

செய்யப்பா செபமதுதான் செய்யவென்றால்
தீர்க்கமுள்ள ருத்திராக்ஷம் செபத்தைக்கேளு
மையப்பா மையமென்ற சுழினைக்கண்ணாய்
வளர்ந்துமிகப் பொருந்திருத் ராக்ஷமாச்சு
மெய்யப்பா ருத்திரனே குடியாய்நின்று
மேல்கீழாய் ஒன்றானதமர் தானாச்சு
மையப்பா தமர்வாச லறிந்துசேர்ந்து
பத்தியுடன் செபதபப் பிராணாயஞ்செய்யே. 755

செய்யடா பிராணாயம் நன்றாய்ச்செய்ய
சிவதலத்தில் மனதுரிமையாக நின்று
மெய்யடா சொல்லுகிறேன் ஆதிவாரம்
மேன்மையுள்ள வசிகரத்துக் குயிருமாச்சு
மையடா மையமென்ற சோமவாரம்
மகத்தான மோகனங்கள் வரிசையாகும்
கையடா தவறாத செவ்வாய்மைந்தா
கந்தையுள்ள தம்பனத்துக் கடிதானாமே. 756

ஆமென்ற புதனதுதான் மைந்தாமைந்தா
அருமையுள்ள உச்சாடனத்துக் கடிதான்காணும்
தாமென்ற வியாழமதை என்னசொல்வேன்
தன்மையுள்ள கிரிசனங்கள் தானேயாகும்
நாமென்ற வெள்ளியுட மகிமைதானும்
நாடரிய பேதனங்கள் நன்மையாகும்
ஓமென்ற சனிவாரந்தன்னில் மைந்தா
உண்மையென்ற மாரணங்கள் உறுதியாமே. 757

உறுதியுடன் மனதறிவால் தன்னைக்காணே
ஒருமையுடன் மனோன்மணியால் தியாநம்பண்ணு
பருதிமதி சுடரதுபோல் அஷ்டகர்மம்
பாலகனே உன்னிடத்தில் பதிவாய்நிற்கும்
கருதி பொருளானதொரு மவுனங்கொண்டு
சுத்தமுடன் அஷ்டகர்மந் திட்டம்பாரு
குருவசனந்தனை மறவா திருந்துகொண்டு
ஜோடான கோடிவித்தை சூர்ந்துபாரே 758



சூர்ந்து பார்த்தறியவென்றால் மவுனமாலை
குணமறிந்து வணங்குவதற்கு குருவைப்போற்றி
நேர்ந்து கொண்டண்ணாக்கை உண்ணாக்குள்ளே
நேர்மையுடன் ஓங்கார விசையாலேற்று
தேர்ந்து கொண்டு கபாடமென்ற வாசற்குள்ளே
சிவசிவா வென்றுதிரு நடனமாடி
சார்ந்திருந்து சிவயோக சித்தனாகி
தண்மையுள்ள பூதவகை சரக்கைக்கேளே. 759

### பஞ்சபூதசரக்கு

கேளப்பா பூமியது தங்கமாகும்
கிருபையுள்ள காரீயம் அப்புவாகும்
கேளப்பா தேய்வதுவும் செம்புவாகும்
கிருபையுள்ள இரும்பதுவும் வாயுமாச்சு
கேளப்பா வாகாசம் நாகரசமாகும்
கிருபையுடன் பூதவகையறிந்து கொண்டால்
கேளப்பா நவலோகந் தங்கமாகும்
கிருபையுடன் காரசாரத்தைக் கேளே. 760

கேளடா பிரிதிவ்விதான் மைந்தாகேளு
கிருபையுள்ள இந்துப்பு கல்லுப்பாகி
ஆளடா அப்பதுதா னென்னவென்றால்
ஆதியென்ற சாரமுடன் சத்திசாரம்
வேளடா தேய்வதுதான் சொல்லக்கேளு
வெடியுப்பு சவுட்டுப்பு ரெண்டுமாச்சு
காளடா வாய்வதுதான் கருதக்கேளு
கருவான துருசுவெண் காரங்காணே. 761

காணவே ஆகாசம் வழலைபூரம்
கண்டறிந்து பூதவகை கனிவாய்ப்பார்த்து
தோணவே வாதமுறை வைத்தியம்பார்க்க
சுத்தமுடன் சற்குருவைத் தொழுதுபோற்றி
பேணவே பூதவகை காரசாரம்
பேரறிந்து வேதமுறை பிலமாய்ப்பாரு
பூணவே தன்னறிவால் பார்த்துக்கொண்டு
பூதவகைப் பாஷாணம் பொருந்தப்பாரே. 762

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

பாரப்பா பிரிதிவிதான் தொட்டிசிங்கி
பதிவான கார்முகியும் பவழம்பத்து
நேரப்பா அப்பதுவுங் கெவுரிவெள்ளை
நிசமான குதிரைப்பல் சோளிகெந்தி
வீரப்பா தேய்வதுவும் கெந்திசிலை
விசையான அரிதாரங் கண்டுகொள்ளு
ஆரப்பா அறிவார்கள் ஆகாசத்தை
அப்பனே சூதமென அறிந்து தேடே. 763

தேடவே பாஷாணஞ் செயலைச்சொன்னேன்
சிவசிவா உபரசத்தைச் செப்பக்கேளு
நாடவே பூமியது அப்பிரகம்காந்தம்
நலமான சலாசத்து பூநாகந்தான்
கூடவே அப்பதுதான் இளிஞ்சிசங்கு
குருவான அண்டமொடு நத்தைநண்டு
ஆடவே தேய்வதுதான் நிமிளைபூரம்
அஸ்தியொடு வேழமுடன் ஆமைதானே. 764

தாவென்ற வாய்வு அன்னபேதிரோமம்
தருவான கல்மதமும் சாத்திரபேதி
வாவென்ற ஆகாசம் துத்தம் அயக்காந்தம்
மார்க்கமுள்ள ரசிதபாஷாணம் சுக்கான்
கோவென்ற குருவருளால் மைந்தா நீயும்
குறிப்புடனே ஒருவகை சரக்கைப் பார்த்து
தேவென்ற ருசிபோலே வேதைபார்த்தால்
சிவயோக பூரணமாய் வாழலாமே. 765

## புடவரிசை

ஆமப்பா புடந்தனக்கு நிதானங்கேளு
அப்பனே காடையது எருவொன்றாகும்
நாமப்பா கவதாரி எருமூன்றாப்பா
நன்மையுள்ள குக்குடந்தான் எருபத்தாகும்
தாமப்பா வராகபுடம் எருஐம்பதாகும்
தயவான கனபுடந்தான் எருநூறாகும்
ஓமப்பா கெஜபுடந்தான் ஆயிரமுமாகும்
உத்தமனே கைமுறையாய்ப் புடமாய்ப்பாரே. 766



## ஊத்து முறை

பாரப்பா ஊத்துமுறை வகையைக் கேளு
பக்குவமாய் உருக்குமுறை துருத்தியொன்று
சேரப்பா சத்துவகை துருத்தி நாலு
செயமான கைமுறையாய் அறிந்து கொண்டு
காரப்பா கருணையினால் ஆறாதாரம்
கண்டறிந்து காரணமாய் மேலாதாரம்
சேரப்பா வாசியினால் மவுனங்கொண்டு
சிவசிவா கேசரியை தினமும் நோக்கே. 767

நோக்கடா அற்பிசிமுதல் மூன்று மாதம்
நுண்மையுடன் உருக்கினத்துக் காலமாகும்
வாக்கடா தைமுதலாய் மூன்றுமாதம்
மகத்தான ஜெயநீரின் காலமாகும்
தாக்கடா சித்திரைமுதல் மூன்றுமாதம்
சங்கையுடன் குருமுடிக்குங் காலமாகும்
தாக்கடா ஆடி முதல் மூன்று மாதம்
சுத்தமுடன் திராவகம் செந்தூரஞ்செய்யே. 768

செய்யப்பா நீற்றினத்தின் கருவைக் கேளு
சிவசிவா புனுகுடனே வீரம்பூரம்
மெய்யப்பா குருவண்டு சூடன்சூதம்
விதமான கார்முகிலும் சவுக்காரமுரமும்
செய்யப்பா சரக்குவகை ஒன்பதில்தான் மைந்தா
திருவான நவகோலம் நீறிப்போகும்
கையப்பா கைமுறையாய் அறிந்தாயானால்
கசடற்று வேதமுறை காணலாமே. 769

காணவே உருக்கினத்துச் சரக்கைக் கேளு
காரமுடன் சவ்வாது வெடிசாரமுப்பு
வேணவே கண்டரோடு மால்தேவி வெள்ளை
பிலமான ரெங்குடனே ஆமணக்குகுன்றி
தோணவே தேனுடனே புறாவினெச்சம்
தாகுத்தறிந்து கருமானங் கண்டாயானால்
ஊணவே நவலோகம் உருகிப்போகும்
உத்தமனே கண்டறிந்து யோகங்காணே. 770



Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

### செந்தூர வகைச் சரக்கு

காணவே நவலோகம் உபரசங்கள்
கடிதான பாஷாண வகைகளெல்லாம்
பேணவே செந்தூரஞ் செய்ய நல்ல
பிலமான சரக்குவகை சொல்லக் கேளு
தோணவே மனோசிலையுந் தாரங்கெந்தி
சுத்தமுள்ள அப்பிரகம் கெவுரிதுத்தம்
ஊணவே வெடியுப்பு இதுவெல்லாந்தான்
புத்தியுடன் செந்தூரக் குருவாம்பாரே. 771

### வாத வகைச் சரக்கு

பாரப்பா வாதவகை சரக்கைக்கேளு
பரிவான தங்கமொடு நாகம்சூதம்
நேரப்பா நிமிளையொடு உப்பு மைந்தா
நேரரிந்து கைபாக முறையாய்ப் பார்த்தால்
பேரப்பா பெற்றதொரு நவலோகங்கள்
பிலமான வரண்முறைக்கு இதுவேயாகும்
சாரப்பா சற்குருவின் பாதங்கண்டு
சங்கையுடன் சவுமியசாகரத்தைப் பாரே. 772

பாரடா சற்குருவின் கடாக்ஷத்தாலே
பதிவாகக் கட்டியதோர சூதந்தனனில்
நேரடா காரியம் சரியாய்க் கூட்டி
நேர்மையுடன் நாலிலொன்று தங்கஞ்சேர்த்து
சேரடா பொடியாக்கி குப்பிக்கேற்றி
சிவசிவா சீலைமண்ணுந் திறமாய்ச் செய்து
காரடா பாண்டத்தில் சாம்பலிட்டு
கைமுறையாய் வாலுகையின் மேலேயேத்தே. 773

ஏத்தி நன்றாய் தீமூட்டி மைந்தா நீயும்
இன்பமுடன் பதம்பார்த்து செந்தூரித்து
பாத்தியே நவலோலம் நூற்றுக் கொன்று
பூட்டடா பனிரண்டு மாத்துமாகும்
பார்த்திபனே இன்னமொரு சூதந்தானும்
பதிவாகப் பலமெட்டு எடுத்துக் கொண்டு
சாற்றியதோர் தங்கமொரு பலமுங்கூட்டி
சங்கையுடன் தெளிவாக உருக்கிப்பாரே. 774



பாரப்பா உருக்கியதைப் பொடியாய்ச் செய்து
பார்த்திபனே பதினாறு பலந்தான் கெந்தி
நேரப்பா பொடிசெய்து கூடநீயும்
நேர்மையுடன் குப்பியிலே நிசமாய்ச் சேர்த்து
சேரப்பா வாலுகையிலேத்தி மைந்தா
தீர்க்கமுடன் பதம்பார்த்து செந்தூரித்து
போத்தியே நவலோகம் நூற்றுக் கொன்று
பூட்டடா பனிரண்டு மாத்துமாமே. 775

### வாலைசந்திர செந்தூரம்

ஆமப்பா இதின்பேரு வாலைச் சந்திரன்
அரகரா குன்றி யுன்னு இருநேரந்தான
தாமப்பா மண்டலந்தான் கொண்டாயானால்
சந்திரன் போல் தேகமது காந்தியாகும்
ஓமப்பா சட்டையது உரிந்து போகும்
உன்மேனி தங்கம்போல் பிரகாசிக்கும்
போமப்பா தசையிலுள்ள தோஷமெல்லாம்
புத்தியுள்ள தாதுகள்தான் விருத்திகாணே. 776

காணவே நரைதிரைகள் காணாதோடும்
கன்னிகைமேல் கவனமது மெத்தவாகும்
பூணவே தந்தமெல்லாம் இறுகிப் போகும
பூரணமாய் கண்கள் ரெண்டும் ஒளியாய் நிற்கும்
தோணவே உடம்பிறுகி வாலையாகும்
சுத்தமுள்ள கற்பமடா இந்த மார்க்கம்
பேணவே உண்போர்க்கு சோதிகாணும்
பேர் பெரிய வேதாந்தம் சித்தியாமே. 777

சுத்தமுடன் உபரசத்தின் சத்துசொல்வேன்
செயமான நவச்சாரம் விராகன்ரெண்டு
பத்தமுள்ள விரமது விராகன்ரெண்டு
பதிவான மடல்துத்தம் பலமோபத்து
புத்தியுடன் அணடநீர் விட்டு ஆட்டி
பூஷணமாய் குகையிலிட்டு உருக்கச்சத்தாம்
வெற்றியுள்ள சத்துதான நாகம் போலே
வேகமுடன் உருகுமது கண்டுபாரே. 778

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

பாரப்பா துத்தசத்தின் வேதை சொல்வேன்
பரிசமுதற் சந்தான தூபதீபம்
நேரப்பா சத்திடைக்கு சூதம் சேர்த்து
நேர்மையுடன் கூட்டி நன்றாய் உருக்கிப் பாரு
காரப்பா நாலிலொன்று தங்கஞ்சேர்த்து
கருணையுடன் உருக்கியந்த மணியை வாங்கி
சேரப்பா அந்திடைக்கி கெந்தி சேர்த்து
சிவசிவா பொடி செய்து குப்பிக்கேத்தே. 779

ஏத்தி நன்றாய் வாலுகையிலங்கி மூட்டி
எடுத்திடு நீசெந்தூரம் பதமும் பார்த்து
போத்தி நன்றாய் நவலோகம் நூற்றுக் கொன்று
பூட்டினால் பதினாறு மாத்துமாகும்
பார்த்து நன்றாய் வீரமிட்டு செந்தூரத்தில்
மகத்தான சூதமிட்டு அரைத்துக் கொண்டு
தோற்றியதோர் தூசிலிட்டு திரித்துக் கொண்டு
சுத்தமுள்ள நெய்யதனில் துவைத்திடாயே. 780

துவைத்ததொரு திரியெடுத்து தீபமேத்தி
சூழவே கடிதாசி கூடுகட்டி
பலித்ததொரு நவலோகத் தகட்டுக்கே தான்
பத்தியதோர் திரியவித்து தூபஞ்சாடில்
தவித்ததொரு கசடெல்லாங் கறுத்துப் போகும்
தண்மையுடன் தணல்காட்டத் தங்கமாகும்
செவித்ததொரு தாம்பிரமாம் வேதை மார்க்கம்
செம்மையுள்ள மாணாக்கர் கண்டு கொள்ளே. 781

கண்டுபார் காந்தமது பலந்தானொன்று
கட்டியதோர் சாரமது பலந்தானைந்து
விண்டுபார் ஜெயவீரம் பலந்தானைந்து
வெற்றியுள்ள வெண்காரம் காசுபோட்டு
கொண்டதொரு சிப்பிநீர் விட்டுஆட்டி
குறிப்பாகத் தானுருட்டி குகையில் வைத்து
சென்றிடவே சில்லிட்டு உருக்கிப்பாரு
சிவசிவா நாகம்போல் சத்து பாரே. 782



பாரப்பா நாகரசம் போல் காந்தமானால்
பதிவான காயசித்தி யோகசித்தி
நேரப்பா கண்டிடைக்கி ரசமுங்கூட்டி
நிஜமான சத்திடைக்கி தங்கங்கூட்டி
சேரப்பா தானுருக்கி மணியாய் வாங்கி
தீர்க்கமுள்ள கெந்தகமுஞ் சமனாய் சேர்த்து
சாரப்பா பொடிசெய்து குப்பிக்கேத்தி
கருணையுடன் வாலுகையில் தீயைமூட்டே. 738

மூட்டி நன்றாய் செந்தூர பதத்தைப்பாரு
மோசங்கள் வாராமல் சிலாகை போட்டு
நீட்டியதோர் சிலாகைமுனை சரசரப்புகண்டால்
நிலைத்ததொரு செந்தூரம் பதமாச் சென்று
பூட்டியதோர் ஈசானம் பூசைசெய்து
புகழாகக் குளிர்ந்த பின்பு இறக்கிப்பாரு
ஆட்டியதோர் செந்தூர மருணன் போலாம்
அந்திசந்தி தினமிரண்டு குன்றிதிண்ணே. 784

திண்ணடா மண்டலத்தில் காயசித்தி
சிவசிவா அருணணைப் போல் தேகமாகும்
கண்ணடா சோதிவெகு காந்தியாகும்
கலகலத்த தந்தமெல்லா மிறுகிப்போகும்
பெண்ணடா பெண் மேலே யாசைநீக்கு
பேர்பெரிய ரகசியத்தைப் பேணிப்பாரு
பொன்னடா பொன்னதனைக் காணவென்றால்
பூட்டுகிற துரையினுட போக்கைக் கேளே. 785

கேளடா காந்தசத்து நாகமொன்று
கெடியான தங்கமொன்று ரசந்தானொன்று
நாளடா மூன்று மொன்றாயுருகும் போது
நல்லதொரு நாகமது மூன்றுபோடு
காலடா புகையமர்ந்து கட்டிப்போகும்
கருணையுடன் நின்றுருகி மணியுமாகும்
ஆளடா அந்திடைக்கி கெந்தி கூட்டி
அப்பான நாலிலொன்று சிலையுஞ்சேரே. 786

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

சேரப்பா பொடித்தல்லோ குப்பிக்கேத்தி
செம்மையுடன் வாலுகையில் வைத்துமூடி
காரப்பா தீயெரிக்கச் செந்தூரமாகும்
கருணையுடன் பதம்பார்த்து இறக்கிக் கொண்டு
நேரப்பா நவலோகம் நூற்றுக்கொன்று
நீட்டிடவே பனிரண்டு மாத்துமாகும்
தேரப்பா பயங்காதே பொன்னைப் பார்த்து
நீர்க்கமுடன் குளிகையிட்டுப் பார்த்திடாயே. 787

பாரப்பா பூநாகச்சத்து சொல்வேன்
பதிவான பூமிவேர் தன்னை வாங்கி
சேரப்பா உலத்தி நன்றாய்ப் பொடியே செய்து
செயமான சாரமது விராகனைந்து
காரப்பா சல்வீரம் விராகனைந்து
கட்டான வெண்காரம் விராகனைந்து
தேரப்பா இதுவெல்லாம் செயநீர் தன்னால்
செம்மையுடன் அரைத்துருட்டி குகையில்வையே 788

வைத்து நன்றாய் சில்லிட்டு உருக்கிப்பாரு
மார்க்கமுடன் மணிமணியாய் சத்துவீழும்
மைத்ததொரு மணியெல்லாம் உருக்கிப் பார்க்க
மகத்தான வைரம்போல் பளபளக்கும்
கைத்ததொரு பூநாகச்சத்தில் தானும்
கருணையுடன் காசிடை தானுருகும்போது
நைத்தல்லோ நாகமந்திடையே போடு
நல்லகுரு ரெண்டு மொன்றாயுருகும் பாரே. 789

பாரப்பா இப்படியே ஊட்டிப் பார்க்க
பரிவாக நூரிடைதான் நாகங்கூட்டும்
சாரப்பா கட்டியதோர் நாகமொன்று
சங்கையுள்ள சூதமென்று தங்கமொன்று
நேரப்பா உருக்கியதை வாங்கிக் கொண்டு
நேராக கெந்தகமும் கூட்டிமைந்தா
சேரப்பா பொடியாக்கி குப்பிக்கேத்தி
செம்மையுடன் வாலுகையில் வைத்திடாயே. 790



ஏத்தியல்லோ தீயெரித்து செந்தூரித்தால்
என்ன சொல்வேன் நவலோகம் நூற்றுக்கொன்று
சாத்தியல்லோ தானுருக்கிப் பார்த்தால் மைந்தா
சங்கையுடன் பதினாறு மாத்துகாணும்
பாத்திபனே மற்றதெல்லாம் கருக்கியே மைந்தா
பார் மகனே அதிகரசம் நாகரசமாச்சு
போத்தியல்லோ ஆர்யெடுத்துப் பார்த்தாலுந்தான்
புண்ணியர்க்கு ரசவாதம் புகழுண்டாமே. 791

புகழாகப் பூனாக சத்தினோடே
பூட்டடா சமன் தங்கம் உருக்கும்போது
அகலாத செயசூதம் சமனாய்ப் போட்டு
அய்யனே தானுருக்கி நொறுக்கிக் கொண்டு
பகலாக கெந்தியதினிடையே கூட்டு
பத்தியுடன் குப்பியரை வாசிபோட்டு
நிரையாக வாலுகையில் வைத்தால் மைந்தா
நிர்மலம் போல் செந்தூர மாகுந்தானே. 792

தானென்ற செந்தூரந்தன்னை மைந்தா
சமரசமாய் குன்றியிடை தினமும்தின்ன
தானென்ற மண்டலத்தில் காயசித்தி
சங்கையுடன் சட்டை யொன்று தானேபோகும்
வானென்ற குருபதந்தான் ஒளியாய்க் காணும்
மைந்தனே கேசரியில் மகிழ்ந்துபாரு
கோனென்ற பூனாக சத்துமைந்தா
குறியறிந்து நெறியறிந்து கூர்ந்துகேளே. 793

கேளடா அயத்தினிட கற்பங்கேளு
குணமான அரப்பொடியும் பலமும்ரெண்டு
விள்ளடா செயசாரம் பலமுங் கால்தான்
விசையான செயவீரம் பலமுங்கால்தான்
அல்லடா செயநீரை விட்டுஆட்டு
அப்பனே குகையிலிட்டு உருக்கிப்பாரு
வெல்லடா ஈயம்போல் உருகி நிற்கும்
வேதாந்த அயத்தினிட ஈயந்தானே. 794

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

தானான ஈயமது உருகும்போது
தாக்கடா நூறு தொந்தம் தாக்கக்கட்டும்
வானான பச்சைரச பிரதனாகம்
வரிசையுடன் கட்டுமடா நூறுதொந்தம்
கோனான தங்கமிட்டு கெந்தி கூட்டி
குமுறவே செந்தூரம் செய்தாயானால்
தேனான நவலோகம் நூற்றுக் கொன்று
சேர்க்கவே பன்னிரண்டு மாத்துமாமே. 795

ஆமப்பா அயமுடனே தங்கஞ் சேர்த்து
அடங்கி நின்று உருகையிலே ரசத்தைக் கேளு
தாமப்பா அந்திடைக்கிப் போட்டு நீதான்
சங்கையுடன் உருக்கியொரு மணியாய் வாங்கி
ஓமப்பா இந்திடைக்கி கெந்தி கூட்டி
உருக்கமுடன் பொடித்து அதை குப்பிக்கேத்தி
சாமப்பா வாலுகையில் செந்தூரித்து
சாதகமாய் தினம்ரெண்டு குன்றிதின்னே. 796

தின்னவே காயமது இரும்பு போலாம்
திறமாக தாதுவெல்லாம் தீர்க்கமாகும்
உண்ணவே இருபோது அப்பிரகமப்பா
உத்தமனே சித்தியடா மண்டலத்திலாகும்
பொன்னடா உன்தேகம் வைரக்கட்டி
புணர்ச்சி செய்ய சுக்கிலந்தான் மேலேயேறும்
நண்ணடா சற்குருவின் பாதந்தன்னை
நாட்டிநின்ற பூரணத்தில் நயமாய்த் தேறே. 797

தேறவென்றால் காவியத்தை நன்றாய்ப் பாரு
தீர்க்கமுடன் பூரணத்தைத் தேடிப்பாரு
ஏறவென்றால் சகலகலைக் கியானம் பாரு
என் மகனே சவுமிய சாகரத்தைப் பாரு
கூறவென்றால் தத்துவ மாயிரத்தைப்பாரு
கூர்மையுடன் மாந்திரீக குணத்தைப்பாரு
ஆறவென்றா வாயிரமா மநுவிக்யானம்
ஆதிதொடுத் தந்தவரை அன்பாய்ப்பாரே. 798



பாரப்பா பலநூலுந் தேடிப்பாரு
பதிவான சூத்திரங்கள் பற்றிப்பாரு
நேரப்பா நிலையறிந்து பார்ப்பதற்கு
நிலையான சிவயோகம் நேர்மைசேரு
காரப்பா அண்ணாக்கை யுண்ணாக்குள்ளே
கருத்துறவே தானிருத்தி கலையைப்பற்றி
நேரப்பா அண்டபத முடிவிலேதான்
இன்பமுடன் தானிருந்து ஆண்டு கொள்ளே. 799

ஆண்டிருந்து மவுனத்தை சுழினையுள்ளே
அசைவான வாசி சிவயோகம் பார்த்து
பூண்டு கொண்டு மனதையங்கே பூட்டிப் பார்த்தேன்
புருவமைய த்தாள் திறந்து போனேன் மேலே
தாண்டியந்த அறுவரையுந் தானே கண்டேன்
சதாபோத பூரணமாய் தானேநின்று
தாண்டினேன் விளக்கொளியில் சூட்சங் கொண்டு
சொர்க்கபதங் கைக்கொண்டேன் சுகம்பெற்றேனே
800

சுகம்பெற்ற சூட்சமதை என்னசொல்வேன்
சுத்தமுள்ள புலத்தியனே சொல்லக் கேளு
அகம் பெற்ற தேகமா நந்தமாக
அருமையுடன் தர்ஜனியு மத்திமையுங் கூட்டி
முகம்பெற்ற நாவினரு புறஞ்செலுத்தி
மூற்கமுடன் தாலுசத்தி மேலே தள்ளு
செகமுற்ற தமர்வாசல் திரையை நீக்கி
தீர்க்கமுடன் மூச்சுடரைக் கண்டுமேலே. 801

## சத்தி சூட்சம் பத்தாந்தீட்சை

மேலப்பா சத்தியுட சூட்சந்தன்னை
விளம்புகிறேன் ஓங்கென்றும் அங்கென்றுள்ளே
தாவப்பா மாந்தமாய்ப் பூசைபண்ண
தன்ரூபம் கண்ணாடி போலே காணும்
கூவப்பா சிவசத்தி பத்தாந்தீக்ஷை
சொல்லுகிறேன் விழியொளியின் அந்தாத்தே
நாமப்பா மூலமங்கே மங்கென்றோதி
நாக்கை மேல் நோக்கியந்த வழுர்தங்கொள்ளே 802

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

சொன்னடா வமுர்தரச பானந்தன்னை
குருவான சுழிமுனையில் மனதைநாட்டி
நில்லடா வாசியினால் மணிநாவுன்னி
நேர்மையுடன் மணிவாசல் பூட்டுதன்னை
தள்ளடா தமர்வாசல் திரையைநீக்கி
சச்சிதா நந்தமென்று குகையில்சென்று
உள்ளடா மனதுகந்து வொளியைப்பாரு
உத்தமனே மூக்குநுனி சுழியைப்பாரே. 803

மூக்குநுனி சுழினையிலே மனதைமூட்டு
முத்திபெறத் தவறாமல் வாசியூதி
தாக்கினால் அறிவங்கே செல்லும்போது
சதாநந்த விந்துவினால் வாசிதங்கும்
நாக்கிநுனி மேல்னோக்கி சாதகம்செய்ய
நலமான வாதபித்தம் சிரசேறாது
சீக்கிரத்தில் ஒளிகாண சுழிமுனையில் மைந்தா
திருவான நாவிநுனி சேர்த்துப்பாரே. 804

சேரடா சுழினைவழி தமருக்குள்ளே
சிவசிவா ஓமெனவே மவுனம்பூட்டி
காரடா கருணையினால் வசிவசியென்றோதி
கருணைவளர் ஓங்காரக் கம்பமீதில்
ஏறடா அந்தரங்க முடிமேல்சென்று
யிரங்குதுரை வழியறிந்து அமுர்தங்கொண்டு
மேரடா சென்றுவலம் வந்தாயாகில்
மெய்ஞ்ஞான குருதேசி வாசியாச்சே. 805

வாசிவலங் கொண்டுமதி கலையைவாங்கி
மகத்தான சுழிணைவழி மார்க்கஞ்சென்றால்
பேசியசொல் முடிவான மவுநத்தந்தம்
மேரண்டத்துள் மூலத்துச்சி வட்டம்
தேசியென்ற சதுரகிரி வட்டமேறி
சிவசிவா பொதிகை வலஞ்சென்று வந்தால்
நாசிநுனி சுழினைநடுக் கமலந்தன்னில்
நாதாந்தத் திருநடனங் காணலாமே. 806



காணலாந் திருநடனக் காட்சிதன்னை
கருணைவளர் கேசரியாங் கமலமீதில்
பூணலாம் பூண்டுமனங் கொண்டுவந்த
புருவமையம் பூரணசந்திரனைப் பார்த்தால்
தோணலா மதிலிருந்த சூட்சந்தானும்
துலங்குதடா முச்சுடருமொன்றாய் நின்று
பேணலாம் ஏகமென்ற சோதிதன்னை
பிரியமுடன் கண்டிருந்து காலால்தேறே 807

காலறிந்த விசேஷஅஸ்த விசேஷத்தாலே
கருணைவளர் கைபாகம் கடாக்ஷம்பெற்று
மேலறிந்து ஒளியில்நின்று வெளியிலேகி
மெஞ்ஞான அமுர்தரச பானங்கொண்டு
நூலறிந்து நூல்வழியே இறக்கியந்த
நுண்மையுள்ள தமர்வாசப் பால்சென்று
மால்நிறைந்து மனைதனிலே வசமானேன்
மகத்தான போகமெல்லாந் தானானேனே. 808

தானான மவுனமதை சாதித்தோர்கள்
சாஸ்திரமாம் கோடியிலே ஒருவனுண்டு
ஊறான உலகமதில் ஒருவன்றானும்
உத்தமர்கள் தன்னிடத்தில் ஒடுங்கிவாழ்வான்
வாறான கேசரமே வாசமாகி
மாற்கமுடன் அட்டசித்தும் வகையாய்ச்செய்வான்
கோறான ஒருபீட மாகிநிற்பான்
குவிந்தமனப் பூரணமாய் குறிகாண்பானே. 809

## மவுனம்

குரியான நெறிதமற்குள் மவுனம்பூட்டி
குறிப்பறிந்த பெரியோர்கள் குணத்தைக்கேளு
விரிவான உலகமெல்லாம் தானாய்நிற்பான்
மெஞ்ஞான குறிதனக்குப் பித்தாய்நிற்பான்
சிறியான்போல் தானிருந்து மலசலத்தால்
செகமெல்லாம் தங்கமயமாகச்செய்வான்
அரியான முதலெழுத்தின் விசைதன்னாலே
அட்டதிசைக் கரசான மவுனியாமே. 810

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

மவுனகுரு நாதனென்று அதற்குநாமம்
மகத்தான புலத்தியனே சொல்லக்கேளு
தவனமுடன் சத்திசிவ பூசைபண்ணி
தானவனாய் வாலைபதந் தன்னைக்கண்டு
செவுனடமுன் அமுர்தப்பூ ரணமும்பெற்று
சோதி பாதமுதல் தன்னைக்கண்டால்
நவமணியாம் மகுடரத்தின முடிமேற்சென்று
நாதாந்த மவுனகுரு தேசியாச்சே. 811

தேசிபெற தேசிவிசு வாசியாவான்
சிவசிவா மவுன குருநாதனாவான்
வாசிவலம் சாரியிட சாரிசெய்வான்
வணக்கமுடன் செகந்தனிலே வாழ்ந்துகொள்வான்
நாசிமுனை யறிந்துமாரி நாவசைத்து
நாட்டமுடன் வாசிவாளும் மென்றாணி
நேசமுடன் சரிதைவழி நடந்தாயாகில்
நிசமான ஞானமது இழுக்கும்பாரே. 812

## கோமுக ஆசனம்

இழுக்குமடா சரிதையொடு கிரியைரெண்டும்
இதுஅரிது யோகத்துக் கடிதான்மைந்தா
தெளிக்குமடா கோமுக ஆசனத்தைக்கேளு
சிறக்கரெண்டு முழங்காலை ஒன்றாய்ச்சேர்த்து
கலிக்குமடா குதிரையொன்றில் அபானன்கார்க்க
கசடறவே நெருக்கியே மேல்மூலம்பாரு
நெறிக்குமடா நாவின்நுனி சுழினைமேலே
நேர்மையுடன் அங்கென்று நின்றுஊணே. 813

ஊணியே வாசிதனில் ஏறிப்பார்க்க
உத்தமனே ரவிபோலே ஒளிதான்வீசும்
பேணியே சிவயோகம் ஆர்தான் செய்வார்
பெரியோர்கள் சொல்வார்கள் அரிதரிதென்பார்
தோணியே பார்ப்பதற்கு இன்னூல்பாரு
சுகமாக ஈராறு தலமேற்சென்று
ஆணியாய் மூன்றெழுத்தும் ஒன்றாய்நின்ற
அறியார்கள் அசபைமுதல் அறிவாங்காணே. 814



கண்ணறியார் மூக்கறியார் காதுங்கேளார்
கருத்துவைத்து சுழினையிலே மனத்தைதணார்
விண்ணிலிந்த கேசரியைப் பெற்றோரில்லை
வேதாந்தம் வாய்ப்பேச்சால் கைக்குள்ளாமோ
எண்ணறியா மனத்தையங்கே ஊணிக்காண
உத்தமனே மூதண்ட ஒடுக்கஞ்சென்று
தன்னறிவால் நாதவிந்து குளிகைசெய்து
நாதமென்ற வாசிநிலை நாடினேனே. 815

## முச்சுழி

வலஞ்சுழியில் இடஞ்சுழியை வைத்துமேலே
மகத்தான சுடற்சுழியின் மனையிலேகி
தலஞ்சுழியில் சிங்குவங்கு வாசல்தன்னில்
தானிருக்கும் துவாரபாலகர்தான்மைந்தா
நிலஞ்சுழியில் சுழிக்காத்தை திறந்துவிட்டால்
நின்றநிலை அண்ட வெளிக்குள்ளே சென்று
குலம்சுழியின் நவஞ்சுழியாய் வந்ததாலே
கொஞ்சுசிலம் பொலிநடனங் குறிகண்டேனே. 816

குறிகண்டு நெறிதமர்க்குள் செல்லும்போது
கொம்புசுத்தி ஆடுஞ்சுழி காத்துமைந்தா
நெறியறிந்து வலமிடமாய் நின்றதாலே
நிலையறிந்து சதவிருதாள் பூட்டுதன்னை
அறிவறிந்து சுழிமுனையின் சூக்ஷந்தாலே
ஆதியென்ற தாள்திறந்து அண்டஞ்சென்றேன்
பரியறிந்து அண்டமதிற் சென்றுபார்க்க
பரந்தசுழி காத்துவெகு பதிவதாச்சே. 817

ஆச்சப்பா சுழித்து கப்பாலேக
அண்ணாக்கை யுண்ணாக்குள் அளித்துப்பாரு
மூச்சப்பா நிலைத்தசுழி சுழியின்காத்து
முனைமைய மானசுழி முனையில்சென்று
போச்சப்பா பரவெளியே பரமென்றெண்ணி
பூமிமுத லாகாசம் பொருந்திப்பாரு
பேச்சப்பா பிறந்ததுவும் வெளியிலாச்சு
பேச்சிறந்து போனதுவும் வெளியில்காணே. 818

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

### பரமவெளி

வெளியான பரமவெளி யார்தான் காண்பார்
வேதாந்த புலத்தியனே சொல்லக்கேளு
தெளியான சுழிமுனையில் மனதைநாட்டி
நேரான அந்தரங்கத் தமரில்சென்று
முழியான முழிநிறுத்தி முழித்துப்பார்த்தால்
மூதண்ட பரமவெளி என்னசொல்வேன்
சுழியான வழியறிந்து வெளியைக்கார்த்தால்
சுத்தவெளி பலவிதமாய்த் தோணும்பாரே. 819

### சாதனை

பாரப்பா பலவிதமாய்த் தோன்றிநின்ற
பதிவான பரமவெளி அண்டமாச்சு
மேரப்பா அண்டகே சரமேசோதி
வேதாந்த சோதியடா சுழினைக்குள்ளே
சாரப்பா சார்பரிந்து மவுனம்பூட்டி
சந்திரகலை சூரியகலை வாசியேறி
நேரப்பா நிரைந்தகே சரியைக்கண்டு
நெடுவானில் நாவிநுனி நிற்கப்பாரே. 820

பாரடா நாவில்நுனி யுண்ணாமேலே
பதிவாகச் சேர்வதற்கும் பதிவாய்க்கேளு
நேரடா தானிருந்து சரங்களைந்து
நேர்மையுடன் சற்குருவைத் தியானம்பண்ணி
தேறடா தர்ஜனியும் மத்திமையுங்கூட்டி
திருவான நாவடியி லழுத்திமைந்தா
சாரடா நாவினுனி யுண்ணாமேலே
சார்ந்திருக்க நித்தியமும் சாதிப்பாயே. 821

சாதித்து வரும்போது மைந்தாமைந்தா
தருகிநின்ற பீடையெல்லாம் தானேபோகும்
பேதித்த தேகமது பிலமாய்நிற்கும்
பிலமான வாசிசிவ யோகந்தங்கும்
ஆதித்தன் சந்திரனும் சொன்னபடியாகும்
ஆனந்த மதியமுர்த மங்கேபாயும்
சோதித்து அண்டவரைக் குள்ளேமைந்தா
சோதிமணி நாவில்நுனி சொருகிப்பாரே. 822



சொருகி விளையாடுதற்கு மைந்தாகேளு
சோதிதிரு மணிநாவின் அடியிலேதான்
இருகயிரு விரலமுத்தி மேலேயேத்து
இப்படியே தினந்தோறுஞ் சாதித்தாக்கால்
திருகு மணிவாச லுட திரைக்குமேலே
சிவசிவா சுழிமுனைமேல் சேர்ந்துநிற்கும்
பருதிமதி சுடரதிலே சேர்ந்தபோதே
பத்திமுத்தி சித்திவயி ராக்யமாச்சே. 823

ஆச்சப்பா நெஞ்சில்லை ராக்யம்வைத்து
அனுதினமும் மணிநாவை அசைத்துள்ளேற்றி
காச்சப்பா கலையறிந்து கபாடவாசல்
கதவறிந்து தான்திறந்து கால்கொண்டேறி
மூச்சப்பா காலறிந்து முனைகொண்டுனி
முச்சுடரும் ஒன்றாகி முன்பின்தோணும்
நீச்சப்பா நிலையறிந்து மணிநாவுன்னி
நேமமுடன் நித்தியமும் நிலையைப்பற்றே. 824

நிலையறிந்து நாற்பத்து முக்கோணத்தை
நின்றநடு வாசியினாற் கண்டேகொண்டு
தலையறிந்து தலைமலையின் குகையில்சென்று
தானறிந்து மேலான கண்ணைத்தாண்ட
அலையாத வமுர்தரச கெங்கைதானும்
சோதிமண வாசலிலே சொல்லிக்குமைந்தா
கலையறிந்து நிலைஅறிந்து அமுர்தங்கொண்டால்
கைலாய பதவியது கைக்குள்ளாச்சே. 825

### பதவிகாண

ஆச்சப்பா கைமேலாய் பதவிகாண
அந்தரங்கமானதை பாகங்கேளு
பேச்சப்பா பேசாத மவுனமாக
பிலமான கோமுக ஆசனமேல்கொண்டு
பாச்சப்பா தற்ஜனியுமத்திமையுங்கூட்டி
பாலகனே அடிநாவைப் பதிவாய்த்தள்ளு
மூச்சப்பா நிலையறிந்து தள்ளினாக்கால்
மூவுலகுந் தன்வசமாய் முனைகொண்டுனே. 826

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## நாவசையாமவுனம்

ஊனுவது மூலமதில் அங்கொன்றானு
உண்மையுடன் கண்டமதில் உங்கென்றானு
பேணுவது சுழிமுனையில் மங்கென்றாணி
பிலமான மணிநாவி லடிவாரத்தில்
பூணுவது தற்ஜனியும் மத்திமைபுங்கூட்டி
பொருந்த மநக்கனிவதனால் மேலேயேத்து
வானுலகம் கைவசமாம் மைந்தா மைந்தா
மகத்தான அண்டவரை ஆறுதானே. 827

தாளென்ற அண்டவரை தாண்டியேற
சாதகமாய் வாசியினால் மணினாவுன்னி
வாளென்ற சுழிமுனையில் திரையைநீக்கி
மகத்தான தமர்வாசற்குள்ளே சென்றால்
கோனென்ற குருருபமென்ன சொல்வேன்
கூறுதற்கு நாவசையா மவுனமாச்சு
ஊனென்ற மகம்பூண்டு மவுனங்கொண்டால்
ஒருகோடி யூழிவரை யுறுதியாமே. 828

உறுதிகொண்டு கேசரியில் ஒடுங்கிவாழ
உண்மையென்ற மவுனமடா மணிநாவுன்னி
பரிதிமதி கலையறிந்து தமரில்புக்கி
பார்த்தனடா கேசரியில் பாதந்தன்னை
சுருதிமுறை தவறாமல் கார்த்தாயானால்
சொலிக்குமடா அமுர்தரசச் செந்தேன்மைந்தா
கருதிமரக் கனிவதனால் கால்கொண்டுன்னி
கனிந்தமுர்தங் கொண்டுசுழி யொளியைப்பாரே. 829

ஒளிகண்ட போதிலிருளோடிப் போச்சு
உண்மையென்ற மவுனமது ஒடுக்கமாச்சு
விளிகண்ட பின்பலவோ சுழினைக்குள்ளே
வேதாந்த லலாடவிழி ஒளிதன்னாலே
வெளிகண்டோம் வெளியினிட விலாசங்கண்டோம்
வேதமயமான புரணமுங் கண்டோம்
சுழிகண்டோம் சுழியினும் சூக்ஷங்கண்டோம்.
சோதிமணி வாசலுட துரைகண்டோமே.



துரைகண்ட சுழிமுனையின் வாசலுக்குள்
சூக்ஷமிடுகத விருதாள் பூட்டுந்தன்னை
அறைகண்டு அறையறிந்து வாசல்சென்று
வங்குசிங்கு சிங்குவங்கு வாசற்குள்ளே
நிரைகண்டு மணியசைந்து மணிநாவுன்னி
நெருங்குமணி பூட்டதனை நெகிழ்த்துக் கொண்டு
கரைகண்டு கண்டுகரை நீந்தியேறி
கனிந்துவரும் அமுர்தரசச் சுனைகண்டேனே. 831

சுனைகண்ட சூக்ஷமதை சொல்லக்கேளு
சொல்பெரிய சவுமியசா கரந்தானென்பார்
மனைகண்ட சாகரந்தான் மணிநாவென்பார்
மகத்தான சகஸ்திரமா மலரென்பார்கள்
அணிகண்ட மலரான அடினாக்குள்ளே
அடங்கிநின்றே அமுதரசத் தாளியென்பார்
முனைகண்ட முனைநிறுத்தி அமுர்தங்கொள்ள
மூக்கிநுனி யடிநாக்குத் தாளிப்பாரே. 832

தாளியென்ற மதமக்கத் தாளிதன்னை
தள்ளிமலை யேற்று தற்குவகை காணாமல்
தாளியென்ற தாளியடி வாரந்தன்னை
சக்கரமாம் வாளதனாற் நகைத்துமைந்தா
தாளியென்ற தாளியது தலைகீழாகத்
தான்கவிழ்ந்து வாயடைத்து தானங்கெட்டு
தாளியென்ற வாதாரத் தாளியெல்லாம்
தான்கவிழ்ந்து மனந்தளர்ந்து தயங்கலாச்சே. 833

தயங்காமல் தாளியடிக்கி ராமந்தன்னை
தாளியடி முனையண்டத் தமருக்குள்ளே
மயங்காமல் மணிநாவின் அடிநாவுக்குள்
மத்திமையும் தர்ச்சனியும் வகையாய்கூட்டி
தியங்காமல் ஒங்கார விசையால்தள்ளி
திருவான கபாடமென்ற திரையைநீக்கி
ஜெயங்காண பிரம்மரந்திரத் துள்ளேசென்று
திருநடனக்கூத் தறிந்து தெளிவைக்கொள்ளே. 834



Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

கொன்னடா மனதறிவால் குருவின்பாதம்
கொண்டு கரையேறுதற்கு மணிநாவுன்னி
தன்னடா தமரநிந்து திரையைநீக்கி
சக்கரமாய் அகன்றசுழி முனையில் மைந்தா
நில்லடா வாசியினால் தமர்மையத்தில்
நின்று கொண்டு அண்டவரை சென்று பார்த்தால்
உன்னடா ஆதார மூலமெல்லாம்
ஒளிவிளக்காய் தோணுதடா உன்னிப்பாரே. 835

உன்னியந்த ரவிமதியை ஒன்றாய்ச்சேர்த்து
உற்றகலைக் கியானமென்ற சுடரைத்தூண்டி
வன்னியென்ற தமரதிலே மனங்கொண்டேகி
வாசிவாஓம் எனவே வணங்கினாக்கால்
சென்னியென்ற உச்சிநடு துவாரத்துள்ளே
தீர்க்கமுடன் மதியமுர்தம் தெளிவுகாணும்
கண்ணிறைந்த தெளிவுதனைக் கனிவாய்க் கொண்டால்
காயமென்ற ஆதாரம் சகலமாமே. 836

ஆமப்பா கனகமென்ற ஆதாரத்தை
அறிந்து கொண்டு மேலாறுமடுக்கக்கேளு
வாமப்பால் கொண்டசிவ போதத்தாலே
மார்க்கமுடன் சுகாசனமாய் இருந்துக்கொண்டு
தாமப்பா தன்மனமே சாக்ஷியாக
தானிருந்து நாவிநுனி தமரிலேற்று
ஓமப்பா வாசி வாவசி யென்றேற்ற
ஊடு றுவிப்பாயுமடா வாசிபாரே. 837

வாசிவா ஓமெனவே மனக்கண்கொண்டு
மகத்தான கேசரியில் மணிநாவுன்னி
ரேசிவா வென்று அந்தத்தமரில் செல்ல
நின்றிலங்கும் ரவிமதியு மொன்றாய்க்கூட்டி
நாசிவா வென்றுசுழி மேலேநின்று
நாதாந்தக் கண்திறந்து அமுர்தம்பாயும்
வாசிவா வசியென்றே அமுர்தங்கொண்டால்
மகத்தான மவுநசிவ யோகிகாணே. 838



காணவே சிவயோகத் திருந்துகொண்டு
கருணை பெறச் சுழிமுனையில் மணிநாவுன்னி
தோணவே மந்திரங்கள் செபித்தாயாகில்
சொல்நிறைந்த வக்ஷரங்க ளெல்லாம்சித்தி
பேணவே ஆதாரம் பிலமாய்நிற்கும்
பெருகிநின்ற வாசிநிதம் மாளாதப்பா
பூணவே மனம்நிறுத்தி மவுனம்பூட்ட
பொருந்திமனங் கனிந்தமுர்தம் பொழியும்பாரே 839

பாரப்பா கனிந்தமுர்தத் தேனைமைந்தா
பத்தியுடன் மவுனமதாய் இருந்துகொண்டு
சாரப்பா சதாகாலம் பூசித்தாக்கால்
சரமான வாசிதிரு வாசியாகி
நேரப்பா நிரைந்ததிரு வாசியாலே
நின்றிலங்கும் அண்டகே சரியால்தானும்
மேரப்பா மேருகிரி தீபம்போலே
விளங்குமடா சுழினையடி முடிமேல்பாரே. 840

ஏகாக்ஷரம்

பாரப்பா அடிமுடிமேல் பார்க்கும்போது
பதிவானசரம் ஏகாக்ஷரத்தை மைந்தா
நேரப்பா சவுமியமாய் நிலைக்கச்சொல்வேன்
நிஜமான புலத்தியனே நினைவாய்க்கேளு
மேரப்பா வலஞ்சுழித் தடியின்கீழே
மெஞ்ஞான இடஞ்சுழிமேல் சூலஞ்சாத்தி
தேரப்பா சூலமிடை தீயுங்காலும்
தீர்க்கமுடன் நிறுத்திடுமேல் விந்துபோடே. 841

போட்டதொரு இந்துவட்டக் கோட்டைக்குள்ளே
பூரண ஏகாக்ஷரத்தைப் பார்க்கும்போது
நாட்டமென்ற அஞ்செழுத்தும் அங்கேகண்டேன்
நன்மையுள்ள எட்டும்ரெண்டும் அங்கேகண்டேன்
ஆட்டமென்ற முக்கோண மேருகண்டேன்
அதில்நிறைந்த சிதம்பரச் சக்கரமுங்கண்டேன்
தேட்டமென்ற தேட்டமெல்லாம் அங்கேகண்டேன்
சேர்ந்துமிக வொன்றான செயல்கண்டேனே. 842

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

செயலறிந்து நடப்பதற்கு மைந்தாமைந்தா
தீர்க்கமுடன் சற்குருவைத் தியானம்பண்ணி
பயமகல கோமுக ஆசனமேல் கொண்டு
பத்தியுடன் பிராணாயஞ் செய்தாயாகில்
நயவாகப் பிராணாய வாசிதானாய்
தன்னுள்ளே நின்றாடுந் தன்னைப்பார்த்து
நயமாகச் சொல்லுகிறேன் யோகமார்க்கம்
நடுவணையும் அடிமுடியும் நன்றாய்ப்பாரே. 843

### யோகமார் மாக்கத்திரை

பாரப்பா ரேசகந்தான் மாத்திரைதான்நாலு
பதிவான மூலமதில் ஓமென்றுரேசி
காரப்பா பூரகமும் மாத்திரை தான்எட்டு
கனிவாக ருத்திரனில் றீங்கென்றுகூறி
நேரப்பா கும்பகந்தான் மாத்திரை ஈரெட்டு
நினைவாகக் கண்டமதில் அங்கென்றுகும்பி
சாரப்பா சவுபீஜ மாத்திரைநாலெட்டு
சங்கையுடன் ஓம்=றீங்—அங்கென்றேதான். 844

### பிராணாயமைந்து

ஓதுவது ஓம்—றீங்—அங்கென்றேதான்
உத்தமனே சுழிமுனையில் மணிநாவுன்னி
நீதியுடன் உன்னிநடு மனையில்சென்று
நிற்பீஜம் மாத்திரைதான் அறுபத்துநாலு
வீதியென்ற ஆதாரம் மேலாதாரம்
வெளிதனிலே அறுபத்து நாலுமேத்து
நாதியென்ற பிராணாயம் இதுதான் மைந்தா
ஐந்துனிலை தனையறிந்து அடங்கியேற்றி. 845

ஏறுவது மனதடங்கி சுழினைக்கேக
என்மகனே பிராணாய கருவைக்கேளு
நேருவது சுழிமுனையில் ஓமென்றூணி
நிச்சயமாய் நாலுதரம் யோசித்தாக்கால்
பேருபெற மூலவன்னி மேலேஜாடும்
பிரியமுடன் அந்நேரம் ஓம்ரீங்கென்று
சீருபெற இருநான்கு பூரித்தாக்கால்
சிவசிவா அந்தவன்னி தீர்க்கலாமே. 846



தீர்க்கமுடன் நின்றுவன்னி கண்டத்தேறும்
சிவசிவா அந்நேரம் திறமாய்நின்று
மார்க்கமுடன் ஓம்ரீங் அங்கென்றையா
மாத்திரைதான் பதினாறு கும்பித்தாக்கால்
பார்க்குமுன்னே அந்தவன்னி சுழினைக்கேகும்
பக்தியுடன் சவுபீஜ முப்பத்திரண்டும்
ஏர்க்கையுடன் தானறிந்து மவுனம்பூட்டி
என்மகனே நிற்பீஜ மின்பங்கேளே. 847

இன்பமென்ன நிர்ப்பீஜம் மாத்திரை எட்டெட்டும்
ஏகாந்த அண்டவெளி தன்னிலேற்றி
அன்புடனே வாசிவா ஓமென்றோதி
ஆதரவாய் தானிறங்கி அருள்கைக் கொண்டு
தென்புடனே ஆதார மூலத்தேகி
தீர்க்கமுடன் பிராணாயமைந்துந் தீர்ந்தால்
பண்புடைய சிவயோக முத்தனாவாய்
பதிவான சிவயோக வாழ்க்கைபாரே. 848

பாரப்பா சிவயோக வாழ்க்கைபார்க்க
பதிவான மாத்திரையை அறியாமல்தான்
சாரப்பா ரவிமதியை மாறுவோரும்
தன்னுறவாய் வாய்வதனை அடக்குவோரும்
நேரப்பா வென்றுகண்ணை மூடுவோரும்
நிசமாக செவிமூக்கை அடைப்போர்தானும்
வீரப்பா கொண்டுலகில் திரிவார்தானும்
வேதாந்த பிராணாய விதிகாணாரே. 849

விதியான அமைத்தவிதி எழுத்தைப் பற்றி
மெஞ்ஞான சற்குருவைப் பணிந்து கொண்டு
கெதியான பிராணாயம் அறிந்து கொண்டு
கெவுனமென்ற மவுனசிவ யோகியாகி
பதிவான தலமதிலே வாசமாகி
பத்திகொண்டு இகபரத்திற் பதிவாய் நிற்பான்
மதியான காலடக்கி ரவியில் சென்று
மவுனமுற்றுச் சுழினையிற்சென் றமுர்தங் கொள்ளே. 850

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

சொன்னப்பா அமுர்தரச பானந்தன்னை
கொண்டுகரை யேறுதற்கு வகையைக் கேளு
செல்லப்பா சற்குருவின் பதியை நோக்கி
செங்கமலச் சுழினையிலே மனதை நாட்டி
நல்லொப்பாய் தானிருந்து அகாரமான
நன்மையுள்ள காமப்பால் கொண்டு தேர்ந்து
உன்னப்பா நின்றிலங்கு முகாரசத்தி
உண்மையுள்ள நாகமதை உண்டுகாணே. 851

## நாத விந்து

காணவே நாதவிந்து கொண்டு தேர்ந்தால்
கடமான ஜடமதனில் குடிலம் நீங்கும்
பூணவே குடிலமென்ற மாய்கையற்றால்
பொற்கமல மதில் மவுனம் பூட்டாலாகும்
தோணவே சுழினையிலே மவுனம்பூட்டி
சுத்தியிட சாரிவல சாரியானால்
பேணவே அண்டரண்டங் காணலாகும்
பெருகிநின்ற வாசியது பிராணன்பாரே. 852

## பிராண வாயுவின் நிலை

பாரடா பிராணமென்ற பிராணவாயு
பத்தியுடன் தானியங்கும் வகையைக் கேளு
நேரடா லலாடவிழி சுழியில் தோன்றும்
நின்றுசித்திர நாடியிலே சிம்மெனவேயிரங்கி
சாரடா ஓமெனவே மூலாதாரம்
சார்ந்திருந்து நாபியிலே ஆவென்றோடி
காரப்பா கதிர் மதியில் அவ்வெனவே சென்று
கபாலத்தை சுத்திநடு நாசிகாணே. 853

காணுமிடை பின்கலையில் மைந்தாகேளு
கைவிரல்தான் மூன்றுபிர மாணம்வந்து
பேணுவிரல் பிரமாணம் நால்சென்றேகும்
பிலமான எண்விரல்தான் உள்ளேநின்று
தாணுவென நின்றிடத்தில் தானேநிற்கும்
சங்கையுள்ள பிராணநிலை தன்னைக்கண்டு
வாணுலகில் இரவுபகல் அறுபதுக்கும்
மகத்தான சுவாசமதின் வகையைக்கேளே. 854



## சுவாச நிலை

கேளப்பா மூலமதில் சுவாசந்தானும்
கிருபையுடன் தானிருக்கும் அறுநூறப்பா
வாளப்பா பிரிதிவியில் ஆயிரமாம்பாரு
வகையான அப்புவினில் இப்படியே நிற்கும்
ஆளப்பா அக்கினியில் அப்படியே நிற்கும்
அரகரா மயேஸ்வரத்தில் சுவாசமாயிரமாம்
காலப்பா சிவனிடமே சுவாசமாயிரமாம்
கருணைவளர் நாதாந்தந் தன்னில்காணே. 855

காணவே நாதாந்த தெக்ஷணாமூர்த்தி
கனிவான சுவாசமா யிரமாய் நிற்கும்
பேணவே கூட்டியொரு துரையைக் கேளு
பெருகிநின்று மூவேழு மறுநூறாச்சு
தோணவே மூவேழு மறுநூறுதன்னில்
சுழன்று ஏழாயிரமு மிருநூர் போச்சு
ஊணுபதி நாலாயிரத்து நானூறு சுவாசம் 856
உள்ளூறவாய் நின்றதடா வுகந்துபாரே.

## சுவாசம் நிற்க

உகந்து நின்ற சுவாசவெளி பாழ்போகாமல்
உத்தமனே தானிறுத்த வகையைக்கேளு
அகந்தெளிந்து அகமறிந்து பிராணாயந்தான்
ஆதிதொடுத் தந்தவரையைந்தும் பார்த்து
ஜெகந்தெளிந்து மூக்குநுனி புருவமத்தி
திருவான சுழியினிலே மணிநாவுன்னி
முகந்தெளிந்து பிரம்மரந்திரத்தில் சென்று 857
முத்திரையில் சத்தமுடன் பத்தி நில்லே.

நில்லென்று நிலையறிந்து சுழினைமேவி
நிரஞ்சன மாய்சற்குருவை தியானம்பண்ணி
உள்ளென்ற வீடறிந்து மவுனம் பூட்டி
ஓங்கார விசையதனால் உன்னியேறி
செல்லென்று பிரமரந்திரத்தில் புக்கி
சிவாய வசியென்று தாரணையே செய்ய
கல்லென்ற கோட்டைகை வசமாய்ப் போகும் 858
காத்திருந்து ஓமெனவே கருதிலூதே.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## மூலத்தில் சாந்தி

ஊதயிலே துன்பமென்ற வினைகள் நீங்கும்
ஊதுகண்ட நஞ்சதுவும் உட்கொள்ளாது
போதையிலே மூலமதில் காந்தியுண்டாம்
பொருந்தி நின்ற காந்தியிலே கடுப்பு கண்டால்
ஆதரவாய் கற்றாழைச் சோருவாங்கி
அதற்கு நிகர் யேரண்டத் தைலம்விட்டு
சாதகமாய் நடுவிரலில் தோய்த்துக் கொண்டு
தண்மையுடன் மூலமதில் சுழற்றியாட்டே. 859

ஆட்டயிலே துர்மலங்கள் விஷநீரெல்லாம்
அப்பனே கீழ்நோக்கி அகண்டு போகும்
நாட்டயிலே பூரணத்தை நாடிச் செல்லு
நடுக்கமுடன் மயக்கங் கொண்டாலமுரி கொள்ளு
மூட்டையிலே பசிதாகம் கண்டால் மைந்தா
முறையோடே பாலுடனே அமுதுகொள்ளு
தாட்டிகமாய் முன்போலே அமுரிகொள்ளு
தனிமிளகு பொடியமுரி தன்னில் கொள்ளே. 860

கொள்ளயிலே கபநீர்கள் அகண்டு போகும்
கொடிதான சூடுடனே மயக்கங் கண்டால்
அல்லவே சொல்லுகிறேன் மைந்தா கேளு
அப்போதே மூதண்டக் கியாழங் கொள்ளு
சொல்லவே அந்திசந்தி ஆறுவேளை
தீர்க்கமுடன் கொண்டிட்டவே மேகம் போகும்
சொல்லவொண்ணா சூட்டுடனே மேகந்தீர்ந்தால்
கருதியுள்ள வாசியது துலங்கும்பாரே. 861

பாரப்பா சூடுடனே கபங்கள் தீர்ந்தால்
பதிவான வாசியது சுழிமுனைக்கேகும்
தேரப்பா அமுர்தரசம் ஒழுகும் பாரு
சிங்குவங்கு நன்மையினால் தீபங்காணும்
காரப்பா தீபமதை பேதத்தாலே
கருணை வளர்போதமென்ற மவுனத்தாயை
தேரப்பா நிலையறிந்து மவுனம்பெற்று
நேர்மையுடன் சதாநந்தி தன்னைக்காணே. 862



காணவே கேசரத்தின் மேலேநின்று
கதித்தெழுந்த சூடுடனே கபாலநீர்கள்
தோணவே யிந்நீர்கள் கைத்திருக்கும்
சுத்த முடனிறை யறிந்துவழலை தள்ளி
பூணவே பூரணமாய் மவுனம்பூண்டு
புத்தியுடன் கண்டறிந்து அகண்டம்பாரே. 863

பாரடா கண்டமென்றால் கழுத்தின் மேலே
பத்திநின்ற நீரதனால் வருஷமாச்சு
நேரடா இந்நீர்தான் நாள்கள் தோறும்
நின்று கொண்டு கபத்தை மெள்ள அகலப்பண்ணும்
காரடா கபமதுதான் நின்று கொண்டு
கநமான நெஞ்சினுள்ளே கக்கலாகும்
சாரடா சுவாசமதை தரிக்கொடாது
தவறான மூக்குநுனி சுழியைப்பாரே. 864

பாரப்பா சுழிமுனைதிரு வாசலுக்குள்ளே
பதிவான கதவிதுதான் பூட்டுமேலே
நேரப்பா அப்பூட்டுக்கடுக்க மைந்தா
நெருக்கு திட்டிவாசலுண் டதற்குக்கீழே
காரப்பா சுழிமுனைதிட்டி வாசற்குள்ளே
கதித்தெழுந்த வாசியடா சுவாசத்தந்தம்
மேரப்பா கொண்டுநின்ற சுவாசத்தந்தம்
விசையுடனே பரிபட்டுப் பனிரண்டாச்சே. 865

ஆச்சப்பா சூர்யகலை பனிரண்டாச்சு
அக்கலையில் எண்கலைதான் ஜீவாத்மாவாம்
மூச்சப்பா நாலுகலை வெளியாய் நின்று
முத்தி பரமாத்மாவாய் முடிந்ததப்போ
நீச்சப்பா நிலையறிந்து மவுனங்கொண்டு
நிலையறிந்து உள்வெளியு மொன்றாய்க் கண்டால்
பேச்சப்பா அவமிருத்து எங்கே போச்சு
பூரணத்தில் தானொடுங்கி சாக்ஷியாச்சே. 866

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

சாக்ஷியென்ற சாக்ஷியெல்லாம் வாசியாச்சு
கருணைவளர் சிவயோகம் வாசியாச்சு
பேச்சிறந்த மவுனமது வாசியாச்சு
பெருகிநின்ற மவுனரசம் வாசியாச்சு
தாக்ஷி யில்லாவாதமது வாசியாச்சு
சகல கலைபோதமது வாசியாச்சு
மூச்சறிந்து நின்றவிடம் வாசியாச்சு
முதண்ட அண்டவெளி மூலம்பாரே. 867

### நாதவிந்து

பாரப்பா மூலமுதல் ஆறாதாரம்
பதிவான சுழினையடா மேலாதாரம்
காரப்பா ஆதார மூலத்துக்கு
கருணைவளர் போதமடா அமுர்தவிந்து
மேரப்பா மேருகிரி விந்தோடொக்க
மெஞ்ஞான மானதொரு நாதஞ்சேர்க்க
ஆரப்பா அறிவார்கள் ரெண்டுமொன்றாய்
அடங்கியது பூரணமாய் கெங்கையாச்சே. 868

ஆச்சப்பா கெங்கையென்றால் ஆர்தான்காண்பார்
அருளான மதியமுர்த கெங்கையாச்சு
நீச்சப்பா நிலையாத கெங்கைதன்னை
நிலையறிந்து நீந்தினபேர் கோடிக்கொன்று
மூச்சப்பா முன்னிலையாம் மவுனம்பூட்டி
முனையான சுழினைவழிக் குள்ளேசென்றால்
வாச்சப்பா வென்றுதிரு வாசிகொண்டு
மார்க்கமுடன் தானிருத்தி வருந்திநில்லே. 869

வருந்திநின்ற அமுர்தகலை உட்கொண்டேதான்
வாங்கடா மதியமுர்த பானந்தானும்
திருந்தியதோர் திரிசுழியை முனைமையத்தில்
தெளிந்துவரும் அமுர்தரசத்தேனைக் கொண்டால்
இருந்துயுக முடிவுவரை காணவாகும்
ஈராறு வரைகடக்க கெவுனமுண்டாம்
அருந்தவசு பெற்றவர்க்கு இந்தயோகம்
ஆதிபராபரன் அருளால் அறிகுவாரே. 870



அறிவான பூரணமே அமிர்தயோகம்
ஆதிசிவ போதமென்ற அமிர்தம்வாங்கி
குறியான சரக்குவகை பாஷாணங்கள்
குறிகிநின்ற உபரசங்கள் காரசாரம்
சரியாகச் சொன்னவகைச் சரக்கெல்லாந்தான்
க்ஷணத்திலே கட்டுமடா மனதைக்காரு
துரியாதீதந் தனிலே இருந்துகொண்டு
சுத்தமுள்ள சாக்கிரத்தின் கோட்டைகாரே, 871

காரப்பா சாக்கிரத்தின் நடுமையத்தில்
சாகரமாங் கோட்டை நடுவாசற்குள்ளே
சேரப்பா மனம்நிறுத்தி வாசிகொண்டு
சிவசிவா நடனசபைக் குள்ளேசென்று
பாரப்பா பஞ்சசபை ஐந்துந்தானாய்
பக்குவமாய்க் கண்டுநிதம் கொண்டாயானால்
ஆரப்பா உனக்குநிகர் ஆருமில்லை
ஆதிசிவ யோகியென்ற அறிவாம்பாரே. 872

பாரப்பா மவுனரச அமிர்தம்வாங்கி
பத்தியுடன் பீங்கானில் பதனம்பண்ணி
நேரப்பா சாரமுடன் காரங்கூட்டி
நிசமான வங்கபற்பம் அரையேசேர்த்து
நீரப்பா தானடங்கக் கல்வத்திட்டு
வேதாந்த அமிர்தரசம் விட்டு ஆட்டு
தேரப்பா மெழுகதுபோல் நன்றாயாட்டி
தீர்க்கமுடன் தானுருட்டி ரவியில்வையே. 873

### சாரக்கட்டு

வையப்பா ரவிதனிலே நன்றாய்க்காய்ந்தால்
மார்க்கமுடன் மண்சிலை வலுவாய்ச்செய்து
மெய்யப்பா காட்டெருவில் புடமேசெய்ய
வேகமுள்ள சாரமது கட்டுமப்பா
பொய்யப்பா போகாது சாரக்கட்டு
புத்தியுள்ள கண்மணியே நன்றாய்ப்பாரு
செய்யப்பா கைபாகத்தாலே பார்த்தால் 874
தீர்க்கமுள்ள வீரமதின் கட்டுகேளே.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

### வீரக்கட்டு

கட்டான வீரமதின் கட்டைக்கேளு
கருவான வீரமுடன் துரிசுசேர்த்து
மட்டாக வங்கபற்பங் காலேகூட்டி
மார்க்கமுடன் கல்வமதில் வைத்துமைந்தா
மட்டான மதியமுர்தம் தன்னாலாட்டி
மார்க்கமுடன் வழித்துருட்டி ரவியில்போடு
திட்டமுடன் காட்டெருவில் புடத்தைப்போட்டால்
சிவசிவா வீரமது கட்டுங்காணே. 875

### நாகக்கட்டு

காணப்பா சாரமுடன் வீரம்கொண்டு
கைமுறையாய் அமுர்தரசத்தாலேகட்டி
பூணப்பா பாணிதனில் பதனம்பண்ணி
புத்தியுடன் இன்னமொரு கருவைக்கேளு
பேணப்பா நாகமது குகையிலிட்டு
பெருமையுடன் தானுருகும் போதிலேதான்
தோணப்பா சாரமுடன் வீரம்ரெண்டும்
சுத்தமுடன் ஐம்பத்து ஒன்றுசேரே. 876

சேர்த்து நன்றாய்நாகமதை உருக்கிச்சாய்க்க
சிறடங்கிக் கட்டியது வெள்ளிபோலாம்
காத்துநன்றாய் மூன்றுதரம் உருக்கும்போது
கனகமென்ற தங்கமதற் கிடையேசேர்த்து
பார்த்திபனே தானெடுத்துப் பார்த்தாயானால்
பதிவான நாகமடா குருவாய்ப்போச்சு
ஆத்துமத்துக் குயிரான குருவைப்போற்றி
அருள்பெருகும் நாககுருவேதை கேளே. 877

### நாககுருவேதை

கேளப்பா செம்புவெள்ளி ஆறுநாலு
இருபையுள்ள நாககுரு ஒன்றுகூட்டி
காலப்பா வனுவறிந்து உருக்கிப்பாரு
கனகமென்ற தங்கமடா மங்காத்தங்கம்
ஆளப்பா மங்காதத் தங்கத்தாயை
அனுதினமும் உன்மனதாய்ப் பூசைசெய்ய
தானப்பா திறந்தமுர்தந் தானேஈவாள்
தன்மனதே சாக்ஷியதாய் இருந்துவாழே. 878



### இருந்துவாழ்கமவுனம்

இருந்துமிக வாழ்வதற்கு மைந்தாகேளு
இன்பமென்ற மவுனமதை ஆர்தான்காண்பார்
வருந்திநின்ற அண்ணாக்கை உண்ணாக்குள்ளே
வாழ்ந்திருக்கத் தானிருந்து வாசியூது
அருந்தவமாய் நின்றநிரு வாசியூத
அருள்பெருகிப் பூரணமாய் அண்டத்தேறும்
பொருந்தி அண்டத்தமரதிலே ஏறும்போது
பூரணமும் காரணமும் பொருந்தும்பாரே. 879

பாரப்பா மனதறிவால் பொருந்தும்போது
பதிவான கேசரியில் மனதுகூர்ந்து
நேரப்பா நின்றவளும் அமுர்தமீவாள்
நிசமான ரவிமதியும் வசமாய்நிற்கும்
தேறப்பா தேறுமன தறிவால்நின்று
சிங்குவங்கு தானறிந்து நடுவிலேறி
சாரப்பா சராசரமே தான்தானாக
தன்மையுடன் பூரணமாய் தன்னைப்பாரே. 880

தன்னைத்தான் தானறிந்து விண்ணைநோக்கி
தமரான அண்டவெளிக் குள்ளேசென்று
உன்னைத்தானறிந்துசிவ ஓமென்றூணி
உறுதியுடன் மனமிருத்தி ஏறினாக்கால்
விண்ணைத்தான் அறிந்து வலம்சுற்றுதற்கு
வேகமுடன் கெவுனமதில் மேவலாகும்
தன்னைத்தான் அறிந்துமனக் கண்ணைக்கொண்டு 881
கயிலாச முடிவரையும் காணலாமே.

### நாகரசவங்க செந்தூரம்

காணவே இன்னமொரு சூக்ஷங்கேளு
கருவான நாகரச வங்கங்கூட்டி
பேணவே இதுக்குநிகர் கெந்திசேர்ந்து
பிலமான அமுர்தரச விந்தினாலே
பூணவே கல்வமதில் நன்றாயாட்டி
புத்தியுடன் வழித்துருட்டி ரவியில்போட்டு
தோணவே ரவியனலில் காய்ந்துதானால்
தோணவே ரவியனலில் காய்ந்துதானால்
சுத்தமுடன் சருகெருவில் புடத்தைப்போடே. 882

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

புடம்போடும் வகையதுதான் சொல்லக்கேளு
போதமுடன் சருகெருவில் பொடிமேல்வைத்து
நிடமாக மேலுமந்த சருகைப்போட்டு
நிற்கமுடன் இன்னமொரு சருவைக்கேளு
அடவாக அதின்மேலும் எருவடுக்கி
அற்புதமாய்ப் புடம்போட்டு எடுத்துப்பாரு
குடம்போன்ற மாதுதிரு மகிலமையாலே
குவிந்தமலர் செந்தூரம் ஆகும்பாரே. 883

பாரப்பா செந்தூரம் அதிககாந்தி
பத்தியுடன் தானெடுத்துப் பதனம்பண்ணி
நேரப்பா நிலையறிந்து குருவைப்போற்றி
நித்தியமும் அந்திசந்தி கொண்டாயானால்
ஆரப்பா உனக்கிடு சொல்லப்போறேன்
ஆனந்தமதியமுர்தம் அருவிப்பாயும்
காரப்பா அந்தமுர்தங் கொண்டுசேர்த்து
கைமுறையாய் வாதமுறை கருவைப்பாரே. 884

கருவான நாகரச செந்தூரத்தை
கருணையுடன் வெள்ளிச்செம்பில் கடாக்ஷிந்தாக்கால்
குருவான தங்கமதை யென்னசொல்வேன்
கோடிரவி காந்தியடா கூறப்போமோ
திருவான செங்கமல சோதித்தாயை
சிவசிவா மவுனமென்ற வாசிபூட்டி
தருவான அமுர்தமென்ற வாசல்சென்று
தன்மயமும் விண்மயமும் ஒன்றாய்ப்பாரே. 885

## தாம்பூரசுத்திக்கு அறுவகைச்சுன்னம்

பாரப்பா பூரமென்ற தாம்பூரத்தில்
பத்திநின்ற பாசமது கழறவேண்டி
காரப்பா கல்லுப்பு வெடியுப்புச்சீனம்
கருவான பூரமுடன் துருசுகாரம்
நேரப்பா சரியிடையாய் கல்வத்திட்டு
நீமகனே மவுனரசந் தன்னாலாட்டி
சாரப்பா ஆட்டியதை வட்டுபண்ணி
சங்கையுடன் காயவைத்து புடத்தைப்போடே. 886



போட்டபுடம் ஆறவிட்டு எடுத்துப்பாரு
புண்ணியனே ஆறுசரக்கும் ஒன்றாய்க்கட்டி
நாட்டமுடன் நீறியது சுன்னமாகும்
நல்லபிறை யோகமடா சுன்னத்தாட்டு
தேட்டமுடன் சுன்னமதை பதனம்பண்ணி
தீர்க்கமுடன் தாம்பூரத் தகடுசெய்து
வாட்டமில்லா சுன்னமதை அமுர்தந்தன்னால்
வணக்கமுடன் தானரைத்துத் தகட்டில்பூசே. 887

பூசியே காயவைத்து மைந்தாகேளு
புத்தியுடன் சருகெருவின் சாம்பல்தன்னால்
நேசமுடன் கீழ்மேலும் நன்றாயிட்டு
நேமமுடன் தானிருந்து புடத்தைப்போடு
வாசமுடன் வாசிதனை சுழினைக்கேத்தி
மைந்தனே புடமாறி யெடுத்துப்பாரு
ஆசுவென நின்றதாம்பூரந் தானும்
அங்கமுடன் ஊறலற்று தங்கமாச்சே. 888

## தாம்பூரச்சுத்தி

தங்கமென்ற செம்புதனில் தங்கம்சேர்க்க
தங்கவய தென்ன சொல்வேன் மங்காத்தங்கம்
அங்கமுள்ள வாதமுறைக் குருதியான
அருமையுள்ள செம்புசத்தி அதிகவேதை
சங்கமுடன் இன்னமொரு சுத்திகேளு
தாம்பூரம் குகையில்நின்று உருகும்போது
பங்கமில்லாக் கருனாகம் ரசிதமொன்றாய்
பாச்சியதை தானெடுத்து ஓட்டிஊதே. 889

ஊதடா கசடறவே ஓட்டிஊதி
உத்தமனே தானெடுத்து உருக்கிப்பாரு
சூதடா யிருந்த முறை கருவாய் பாரு
சுத்தமென்ற சுத்தியடா மெத்தநன்று
வாதடா செய்துவரும் வாசிதன்னை
வகையுடனே சுத்தியடா வரிசைகேளு
கோதறவே சுத்திமுறை சொன்னானானால்
குருபுத்திர னாகுமென்று குணமாய் போச்சே. 890

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## குடவன்சுத்தி

குணமாக இன்னமொரு மார்க்கங்கேளு
குடவனென்ற பித்தளையை குணமாய்த்தட்டி
கனமான சாரமுடன் வெடியுஞ்சினம்
கண்டருடன் காரமுடன் பூரஞ்சேர்த்து
மனமான சத்தியரை வாசிகூட்டி
மனமான மதியமுர்தந் தன்னாலாட்டி
மார்க்கமுடன் குடவனிலே பிசறிமைந்தா
தனமான குடவனிலே பிசறிமைந்தா
தன்மையுடன் ஓட்டில்வைத்துப் புடத்தைப்
போடே. 891

போட்டபுடம் ஆறவிட்டு எடுத்துப்பாரு
புத்தியுடன் மூன்றுதிரம் புடமேசெய்து
நாட்டமுடன் தானெடுத்துப் பார்த்தாயானால்
நாத்தமுள்ள குடவனடா நன்மையாகும்
தேட்டமென்ற குடவன்செம்பை எடுத்துமைந்தா
செம்மையுடன் வெள்ளிதனில் நாலுக்கொன்று
ஆட்டமுடன் தான்கொடுத்து உருக்கிப்பார்த்தால்
ஆறுவய தானசிறு மாத்துதானே. 892

## லிங்கக்கட்டு

தானான லிங்கமடா சாதிலிங்கம்
தன்மையுடன் கட்டுமுறை திட்டங்கேளு
வானானகாசி யுடகுப்பி வாங்கி
மார்க்கமுடன் கல்வமதில் பொடித்துக்கொண்டு
கோனான வெடியுடனே சீனிக்காரம்
குவிந்த அண்டத்தோடுடனே காரங்கூட்டி
ஊனான மதியமுர்தந் தன்னாலாட்டி
உண்மையுடன் லிங்கமதில் கவசஞ்செய்யே. 893

செய்யடா கவசமது வலுவாய்ச் செய்து
தீர்க்கமுடன் மண்சிலை திறமாய்ச் சுற்றி
வையடா ரவிமுகத்தில் நன்றாய்க்காய்ந்தால்
மார்க்கமுடன் உமிப்புடத்தில் வலுத்துப்போகும்
கையடா தவறாமல் மெய்யாய்பாரு
கனகமென்ற பாக்கியங்கள் கைமேலாகும்
பொய்யடா போகாது தன்னைப்பாரு
பூரணமாய் மவுனமது பொருந்திநில்லே. 894



பொருந்தி மனம்நின்று சிவயோகஞ்செய்ய
பூரணமா யின்னமொரு கட்டுச்சொல்வேன்
திருந்தியதோர் அயக்காந்தங் கல்வத்திட்டு
தீர்க்கமுடன் பழச்சாற்றால் நன்றாயாட்டி
வருந்திமிக ஆட்டயிலே மைந்தாகேளு
மால்தேவி மனோசிலையும் கெந்திகூட்டி
அருந்தவமாய் அமுர் தரச விந்தாலாட்டி 895
அடக்கமுடன் லிங்கமதற் கங்கிபூட்டே.

பூட்டிமிக ரவிதனிலே காய்ந்தபின்பு
புத்தியுடன் மண்சிலை பொருந்தச் செய்து
நாட்டமுடன் கிழ்மேலும் உமியைக்கொட்டி
நாதாந்த சர்க்குருவைத் தியானம் பண்ணி
தாஷ்டிகமாய் புடம்போட்டு எடுத்துப் பார்த்தால்
தண்மையுள்ள லிங்கமது கட்டிப்போகும்
தேட்டமுடன் கட்டினதோர் லிங்கந்தன்னை 896
திருவான தங்கமதில் சேர்த்துப்பாரே.

## லிங்கவேதை

பாரப்பா தங்கமுடன் லிங்கஞ்சேர்த்து
புத்தியுடன் தானுருக்க மணிபோலாகும்
நேரப்பா லிங்கதங்க மணியைவாங்கி
நிச்சயமாய் வெள்ளிதனில் பத்துக்கொன்று
சாரப்பா தான் கொடுத்து உருக்கிப்பாரு
தன்மையுடன் வெள்ளியது தங்கமாகும்
ஆரப்பா அறிவார்கள் லிங்கவேதை 897
அடங்காத வேதையடா ஆதியாமே.

ஆதியென்ற பிர்மதலம் மணிநாவாச்சு
அண்ணாக்கை யுண்ணாக்குள் அடக்கிமைந்தா
சோதியென்ற சுழினையிலே துலங்கப்பண்ணி
துருவமென்ற தமரதிலே சொக்கிநின்று
நீதியுடன் அண்டவெளி தன்னைப்பார்த்து
நிறைந்தபரி பூரணமாய் நின்றாயானால்
சாதியென்ற சமரசமும் ஒன்றாய்ப்போகும் 898
தனிந்திருந்து மவுனமதில் சார்ந்துநில்லே.



Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

நில்லடா நிலையறிந்து வாசிகொண்டு
நீ மகனே உன்னி விளையாடும்போது
உள்ளடா சுழினையிலே மனதைவைத்து
உத்தமனே ஓங்காரக் கம்பம்நாட்டி
சொல்லடா சிவயவசி என்றுமைந்தா
சுகமாகப் பிராணாயஞ் செய்தாயாகில்
அல்லடா சொல்லுகிறேன் ஒளிதான்காணும்
ஆதியொளி தனையறிந்து அண்டம்பாரே. 899

### அண்டபிண்டமறிய

பாரப்பா அண்டபிண்ட மார்தான் காண்பார்
பதியறிந்து காணபதற்கு வகையைக்கேளு
நேரப்பா பிண்டமென்றால் அண்ணாக்காச்சு
நிசமான அண்டமென்றால் சுழினையாச்சு
காரப்பா அண்ணாக்கை சுழினைக்குள்ளே
கைமுறையாய் உண்ணிநடு மனையில்சென்று
மேரப்பா சுத்திவலம் வந்தாயாகில்
மெஞ்ஞான மானசிவ சோதிதானே. 900

### அயச்செம்பு வேதை

சோதியென்ற ஆதியடா தங்கத்தாயை
சத்தமுடன் கண்டுமனம் முத்தியாக
நீதியென்ற அயமுடனே வன்னிகூட்டி
அந்தயிடை மதிசேர்த்து உருக்கும்போது
நீதியுடன் அரிதாரக் கட்டைமைந்தா
நிசமாக அந்திமடைக்இச் சமனாய்சேர்த்து
சாதியென்ற தங்கரவிநாலுக் கொன்று
சங்கையுடன் தான்கொடுத்து உருக்கிப்பாரே. 901

பாரடா மனதுருக உருக்கிப்பார்த்தால்
பசுமையுள்ள தங்கரவி களங்கமாச்சு
காரடா களங்கமில்லா களங்குதன்னை
கருணையுடன் செம்புவெள்ளி பத்துக்கொன்று
சேரடா தெளிவறிந்து சேர்க்கும்போது
திருவான லட்சுமிதன் விடமேநிற்பாள்
ரடா உனக்கீடு ஆருமில்லை
அருமையுள்ள மவுனரச ஆண்மைதானே. 902



தானேதான் நின்றுவிளை யாடுதற்கு
தன்மையுடன் இன்னமொரு சூட்சங்கேளு
பூணேநீ அயமுடனே வன்னிகூட்டி
புத்தியுடன் கல்வமதில் பழச்சார்விட்டு
வீணேதான் திரியாமல் நன்றாயாட்டி
விபரமுடன் ஆட்டயிலே வீரலிங்கம்
மானேகேள் தாரமுடன் காரங்கூட்டி
மடியநன்றாய்த் தானரைத்து வட்டுப்பண்ணே. 903

பண்ணியதோர் வட்டுதனை ரவியில் போட்டு
பாலகனே தானெடுத்து ஓடழுத்தி
உண்ணியது போகாமல் கவசஞ் செய்து
உத்தமனே நிதானமதாய்ப் புடத்தைப் போட்டு
புண்ணியனே அறுசரக்கும் ஒன்றாய்க்கட்டி
பூரணமாய் நிற்குமடா புதுமையாக
தன்னிமையாய்க் கட்டினதை தங்கந்தன்னில்
தாக்கஅந்த தங்கமது குருவாங்காணே. 904

குருவான தங்கமதை எடுத்து மைந்தா
குணமாக மதிதனிலே பத்துக்கொன்று
சருவாகத் தான்குடுத்து உருக்கிப்பாரு
சனகமென்ற தங்கமதை என்ன சொல்வேன்
திருவான லட்சுமிதன் பாதம்கண்டால்
சிவயோக மானசிவஞ் சித்தியாகும்
தருவான கற்பகமுஞ் சித்தியாகும்
தன்மையுடன் மவுனமதில் சார்ந்து நில்லே. 905

சார்ந்து அந்தநிலையறிந்து மவுனங்கொண்டு
சச்சிதானந்த மென்றசுழினை மீதில்
கூர்ந்து மனங் குறியறிந்து வாசிபூட்டி
குருவான பிர்ம்மதல மறிந்து கொண்டு
தேர்ந்து அந்ததலமறிந்து வாசமானால்
சிவசிவா கயிலாச தேகமாகும்
நேர்ந்து கொண்டு நிலையறிந்து வாசிபூட்டி
நின்றதினால் சிவயோகம் நிசமதாமே. 906

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

நிசமான சுழினையிலே வாசிபூட்டி
நீ மகனே அண்டபதம் கொண்டாயானால்
நிசமான தீக்ஷையடா மவுனதீக்ஷை
சித்திமுத்தி யாகுமடா திருவை நோக்கு
வசமான பூரணமுந் தானேயாவாய்
வாசிசிவ யோகியென்ற மவுனியாவாய்
கசகாமல் காலறிந்து வாசிகொண்டு
கண்மூக்கு மத்தியென்ற கருத்திலொன்றே. 907

ஒன்றான சிவதீக்ஷை தன்னைமைந்தா
உரிமையுடன் மவுனசாதக மாய்ச்சொல்வேன்
கண்ணான தீக்ஷைசிவ தீக்ஷைதானும்
கருணைவளர் அகாரமடா விந்துவிந்து
முன்னான விந்ததுவும் தண்ணீர் தண்ணீர்
முறையறிந்து அன்னீரை ஒன்றில் வாங்கி
விண்ணான வால்மிளகு பொடிதான் செய்து
விபரமுடன் பணவிடைதான் நீரில் போடே. 908

போட்டவுடன் தான்விரவி மைந்தா மைந்தா
புத்தியுடன் சிவயவசி யென்றுநீயும்
நாட்டமுடன் கொண்டுவிடு உதயகாலம்
நன்மையுடன் சதாகாலம் சாதித்தாக்கால்
வாட்டமென்ற வல்பிணியும் விஷரோகங்கள்
மார்க்கமுடன் தான்விலகி மகிழ்ச்சியாகும்
ஆட்டமென்ற சக்கரமும் சாராதையா
ஆதியென்ற வாசியதை அழுத்திபூதே. 909

அழுத்தியே முனையறிந்து அடக்கஞ்சென்று
ஆதியென்ற அகாரமதை அறிந்துக் கொண்டு
மூழ்த்துநிலை தலையழுத்தி உகாரசத்தி
முற்கமுள்ள சத்தியை நீ மார்க்கமாக
வழுத்தியதோர் அஞ்செழுத்தால் மவுனங்கொண்டு
வரிசையுடன் உங்கெனவே வாசிபூட்டி
செழித்த புத்தியரிவாலே கபாடவாசல்
திரையகத்தி அரைபுகுந்து திருவைனோக்கே. 910



னோக்கிமன தரிவாலே மவுனங்கொண்டு
னுண்மையுடன் சத்திசிவ பூசை செய்தால்
தாக்கிமனம் னோக்குமுன்னே அண்டத்தேகும்
சந்திரனும் சூரியனும் தானேதானாய்
வாக்குமன மொன்றாகி சுழிமையத்தில்
மகிழ்ந்திருக்க வாசிசரம் ஒன்றாய் நின்று
நாக்குமுனை யுண்ணாக்கை அண்ணாக்குள்ளே
னாதாந்த சுளினைவழி கண்ணைனோக்கே. 911

கண்ணான மவுனமதில் தீக்ஷைதன்னை
கருணையுடன் சொல்லுகிறேன் கருவாய்க்கேளு
முன்னான மூலமதில் உகாரம் போட்டு
முதலான கண்டமதில் அகாரம் போட்டு
விண்ணான புருவமதில் மகாரம் போட்டு
வேகமுடன் னாவினுனி சுழினைக்குள்ளே
ஒண்ணான சுழிமுனையில் சோதிகாணும்
ஒருகோடி சூரியன் போலுதையமாமே. 912

உதையமென்ற சுழினையிலே மைந்தா நீயும்
உன்னிமிக னாவினுனி உள்ளே சென்றால்
யிதையமென்ற யிருதயத்தில் சோதிதானும்
இன்பரச அமுர்தமது தானே ஊரும்
அதையறிந்து அந்தரசங் கொண்டால் மைந்தா
ஆயிரமாம் வருஷமது அசையாதில்லம்
பதையாமல் மனம்நிருத்தி மவுனமுண்ணு
பரமகை லாசமென்ற தேகமாமே. 913

ஆமப்பா தேகமென்ற பஞ்சபூதம்
அடங்கி ஒன்றாய் நின்றயிடம் ஆர்தான் காண்பார்
நாமப்பா சொல்லுகிறோம் மைந்தாகேளு
னாட்டமென்ற பூதமைந்தும் னாவென்றெண்ணி
தாமப்பா தன்னிலையாம் தமருக்குள்ளே
தன்னறிவே பூரணமாய் தானேசென்று
ஓமப்பா வென்றுமன துன்னியாட
ஊடுருவிப் பாய்ந்துமனம் மொடுங்குங்காணே. 914

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

காணாத அந்தரங்கச் சுழினைவீடு
கண்ணான மணிவீடு கமலவீடு
தோணாது தோணுகிற சோதிவீடு
சோதிமய மானசிவ கயிலாசவீடு
வானான தேவர்களும் ரிஷிகள் சித்தர்
வரிசையுடன் தான்வணங்கி மகிழ்ந்தவீடு
கோனான குருபீட மானவீட்டை
குறிப்பறிந்து வணங்குதற்கு சொன்னேன்பாரே. 915

பாரப்பா மனமேது தியானமேது
பதிவான சரிதையொடு ஞானமேது
னேரப்பா விழிமடவார் மயக்கமேது
ளிசமான மக்களொடு சுற்றமேது
காரப்பா உபதேச குருத்தானேது
கருவேது கைபாக முறைதானேது
சாரப்பா உடலேது உயிர்தானேது
தகமையில்லா பெருவெளியில் சாருந்தானே. 916

தானென்ற ஓங்காரக் கம்பமாச்சு
சங்கையுடன் அகாரம் அங்கே பிரந்ததாச்சு
வானென்ற வழியரியார்க் கொன்றுமில்லை
மகத்தான பூரணத்தை மகிழ்ந்து கொள்ளு
ஊனென்ற உடலுயிரும் நாதவிந்து
ஒடுங்கிநின்ற சுழினையடா அண்டமேரு
கோனென்ற குருபீட மானபேரில்
குறியறிந்து னெரிதமற்குள் குணமாய் நில்லே. 917

குணமான மந்திரத்தைச் சொல்லக்கேளு
குருவான அகாரமொடு உகாரத்தோடு
வினமான மகாரமொடு மூன்றுஞ் சேர்ந்தால்
யிருத்துமடா சிவயோகம் யின்பமாக
கனமான உச்சிவெளி சுழினைமூலம்
கண்ணரிந்து விண்ணதனைக் கருவாய்ப்பாரு
மனமான பஞ்சஅரை வாசல்கான
மவுனமுடன் ஓம்சிவயவசி யென்றானே. 918



ஊணுவது சுழிமுனையில் வங்சிங்கென்று
உண்மையுடன் அண்டவெளிக் குள்ளேசென்று
காணுவது ரேசகபூரகமாய் நின்று
கலையரிந்து கும்பத்திற் கனிந்துகொண்டால்
தோணுவது யென்னென்று சொல்வேனப்பா
தூண்டாத மணிவிளக்கின் சோதிதன்னை
பேணுவதாற் கயிலாச தேகமாச்சு 919
பேரண்டத் துச்சிவெளி மகாரமாச்சே.

ஆச்சப்பா கிரிகைவெளி தல்லக்கேளு
அப்பனே சரிதையிலே அடங்கிநின்று
மூச்சப்பா ஆறுதலந் தன்னைக்கண்டு
முனையரிந்து யிடையொடுபின் கலையாய்ப்பாரு
பேச்சென்ற உடலுயிரை நன்றாய்ப்பேணு
பேரண்டச் சுழிமுனையில் மனக்கண்ணாட்டு
நீச்சென்ற அக்கினி பஞ்சாக்ஷரத்தை மைந்தா 920
நிலைநிருத்தி பூறணமாய் நின்றுபாரே.

பாரடா அண்டமெனுந் தொண்டைக்குள்ளே
புத்தியுடன் அங்கென்று வாசிகொண்டு
னேரடா அந்கரங்கச் சுழினைமேவ
நிலையரிந்து தமர்வாசத் குள்ளே சென்றால்
தூரடா அடிமுடியும் ஒன்றாய்க் காணும்
சுகசிவப் பிராணகலை துலங்கும்பாரு
யேறடா வாசிகொண்டு முனைமையத்தில் 921
யிருத்தடா அமுர்தமது யிரங்குந்தானே.

தானான பிர்மநிலை அண்டத்துச்சி
தமரான அந்தரத்தில் தானேநின்று
வீணான சத்தாதி விஷயம்போக்கி
மெஞ்ஞான பூரணமாய்த் தன்னைப்பார்த்தால்
ஊனான ஜீவாத்துமா பரமாத்துமாவில்
உண்மையுடன் நின்றகாரணந்தான் மைந்தா
கோனான குருவினுப தேசங்கண்டால் 92
குறியரிந்து அக்குறியில் குணமாவாரே.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

வாரான அசபை யெனுஞ் சிவாத்துமாலை
வணக்கமுடன் பராபரத்தில் மகிழ்ந்துகூட
கூரான ஓங்கார மூலவட்டம்
குண்டலியாம் பிரணவத்தின் குணாதிதந்தான்
ளோரான சிங்குவங்கு ரந்திரவாய்லல
நீங்காமல் யேகமதாய் நிருத்திக்கொண்டு
பாரான அக்ஷரசாதனை முந்தள்ளி
பாமகயிலாசமென்றபதியில் நில்லே. 923

நில்லடா நிலையான அண்டத்துள்ளே
நின்றுவினை யாடுதற்கு நிசமாய்மைந்தா
சொல்லடா அந்தரங்கச் சுழினைமீதில்
திருகுமணி வாசலுட திரையைநீக்கி
வுள்ளடா தானிருந்து வாசிகொண்டு
ஊதடா அண்டவெளி உச்சிமட்டும்
தள்ளடா வாசியென்ற சர்ப்பமேறி
சகலகலை போதமென்ற அறிவைப்பாரே. 924

## அவயோகி

பாரப்பா பிராணாய யோகஞ்செய்ய
பதிவான தசதீனஷக் குள்ளேநின்று
னேரப்பா சமாதியிலே மனதுபூண்டு
நின்றாக்கால் காயசித்தி யோகமெய்தும்
ஊரப்பா வி நக்கிரவன் பிராணாயமென்று
உருசெவிப்பான் மணியெடுத்து மூக்கைத் தொட்டு
பேரப்பா யிதினாலே ஒன்றுமில்லை
பூமியிலே பிரந்தவர்கள் கோடிதானே, 925

கோடியடா உலகத்தில் பிறாணாயஞ் செய்ய
குரையாம லொருபோது பிச்சைக் கொண்டு
வாடியல்லோ உடம்பெல்லாம் வெளுத்துசோம்பி
மகத்தான சற்குருவை காணவென்று
தேடியல்லோ மலைதோறுஞ் சென்றுபுக்கி
தசதீக்ஷை யரியாமல் செனித்தோர்கோடி
தாடியல்லோ குருவரிந்து தசதீக்ஷைபெற்றால்
தன்மையுட னிருந்து அஷ்டசித்திபாரே. 926



பாரப்பா தன்மயத்தை யரியாமல்தான்
பத்தியுடன் அடையோகஞ் செய்வான்பாவி
வீறப்பா மூச்சடக்கி செவிவாய்மூடி
வேகமுடன் பூரிக்கில் மேனிதன்னில்
சாரப்பா மூலமதில் சொருகிக்கொண்டு
தலைவலித்து காதடைத்து முகமுங்கோணி
நேரப்பா கண்தெரித்து மதிகலங்கும்
நேர்மைகெட்ட அடயோகந் தன்னுதன்னே. 927

## பரியங்கயோகம்

தள்ளடா பரியங்க யோகந்தானும்
சாதகமாய் சலந்தனிலே தானேசென்று
மெள்ளடா தானிருந்து அபானத்தாலே
விரும்பியே பூரித்து நேசிப்பான்பாா
உள்ளடா மூலமென்ற ஆகாரத்தில்
ஓதுங்கிநீர் தங்கியது குன்மமாகும்
அல்லடா யிதினாலே ஒன்றுமில்லை 928
ஆதியென்ற மவுனாதி யோகம்பாரே.

## மவுனாதியோகம்

பாரப்பா மவுனாதி யோகஞ்செய்ய
பாழான தத்துவத்தை அடக்கிமைந்தா
னேரப்பா குருபதத்தில் நின்றாயானால்
நிசமான லயயோக மென்றும்பேறு
சாரப்பா தத்துவ லயயோகத்தாலே
சங்கையுடன் தானவனாய் தன்னைக்கண்டு
சாரப்பா சற்குருவின் கடாக்ஷத்தாலே 929
கருணையுடன் மந்திராதி யோகங்கேளே.

## மந்திராதியோகம்

கேளடா வங்கென்று மூலத்தில்பூரி
கெணிதமுடன் சிங்கென்று மேலேரேசி
ஆளடா மங்கென்று சுழினைக்கெட்டி
அண்டவழி தனையரிந்து வாசியேத்து
ஊளடா துருவநிலை கண்டும்தற
சுத்தமுடன் சிங்குவங்கு தன்னைக்காரு
மேரடா தனையரிந்து காந்தாயானால் 930
விசையாதி மந்திரமாயோக மாச்சே.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## நாசாங்கயோகம்

ஆச்சப்பா யிதுமேலே நாசாங்கயோகம்
ஆதியென்ற யோகமடா மவுனயோகம்
மூச்சப்பா தானிரைந்த மவுனயோகம்
முறையறிந்து கைபாகம் முத்திபெற்றால்
நீச்சப்பா அண்டவெளி சாகரத்தில்
நின்றுநிலை யறிந்து பிராணாயவழியேசெய்து
பாச்சப்பா வாசிசரம் சுழினைக்கேறில்
பளிரென வேகண்ட தெல்லாம் வெளியாய்ப்
போச்சே. 931

வெளியான வெளியறிய ஒளியைத் தூண்டி
வேதஒளி தன்னாலே வெளியைக்கண்டு
ஒளியான வாசிசரம் உசரயேத்த
ஓமென்ற பிரணவைத்தா லுறுதி கொண்டு
வழியான துரையறிந்து மணினாவுன்னி
மகத்தான அண்டவெளிக் குள்ளேசென்று
அழியாத பேரின்ப வீட்டில்சென்றால்
அமுர்த ரசபோதமா னந்தமாமே. 932

ஆமப்பா ஆனந்த போதமான
அகாரமுட னுகாரம் துமகாரம்கூட்டி
நாமப்பா யென்றமொழி தனையகத்தி
னடுவான சுழினையிலே னாட்டங்கண்டால்
சோமப்பால் கசிந்துவெகு பூரணமாய்காணும்
துலங்குதிரு வாசியென்ற குகையைக் காரு
காமப்பால் கசிந்தொழுகுங் குகையைக் கார்க்க
கருணைவளர் சற்குருவை யடுத்துக்காரே. 933

அடுத்துமிகப் பொருளீய்ந்து தொண்டுபண்ணி
அனுசரித்து கேட்டாக்கால் அருளிச்செய்வார்
தொடுத்துமிகச் கேட்டுடனே சொல்லவில்லையென்று
சுகமரியாக் குறங்கதுபோல் கெட்டோர்கோடி
கடுத்துமிக அலையாதே மோக்ஷம்வேண்டி
காத்திருந்து குருபதத்தில் கனிவாய்க்கேளு
தடுத்தடுமை கொண்டவரும் திசைதீக்ஷவைப்பார்
சதாயோக பூரணத்தில் தாக்கிநீயே. 934



நீயென்றும் நானென்றும் பேதமில்லை
நிர்மலமாம் வெளிதனிலே நின்றபோதம்
தாயென்றும் சேயென்றும் பேதமில்லை
சராசரங்கள் ரெண்டுமொன்றாய் நிரைந்துதப்பா
காயென்றுங் கனியென்றும் பேதமில்லை
கருவான முக்கனியை கண்டபோது
ஓயென்றும் அமுர்தமென்றும் பேதமில்லை
தெளிந்தோர்க்கு வாசியென்ற குதிரைதானே. 935

குதிரையென்ற வாசியினால் தீக்ஷைவிடு
குருகாமல் சுழிமுனையில் குரியாய்ப்போடு
குதிரையின்மே லேரியல்லோ சக்கறங்களெல்லாம்
கூர்மையுடன் கடையறிந்து குணமாய்நின்று
குதிரையின்மே லேரியல்லோ ராஜவீதி
குருபதமாம் புருவமையத் தூட்டபோகும்
குதிரையின்மே லேரியல்லோ அண்டபதஞ்சுத்தி
குதிரைமுனை அங்கையடா கட்டுகட்டே. 936

கட்டினால் வாசியது மூச்சாடாது
கருவறிந்து குருசொல்ல கட்டவேணும்
யெட்டினால் பிராணாயம் வாசியோகம்
இயங்காமல் ஊதினால் ஒன்றுமில்லை
முட்டினால் வாசியது தட்டாதய்யா
மூதண்ட குளிகைக்கு பலமோயில்லை
ஒட்டினா லாவதென்ன அன்னத்தைவிட்டு
உ தமனே தீக்ஷவிட்டால் ஒக்கப்பாமே. 937

பாழான முப்பாழை அரியவேணும்
பரமபதத் தெல்லையிலே பதிவாய்நின்று
மேலான நிற்குணப்பாழ் கண்டுதேறி
மெஞ்ஞான கேசரியில் வாசிபூட்டி
காலான அடிமுடியு மொன்றாய்நின்று
கருணைவளர் ஓங்காரக் கம்பத்தேறி
நூலான சாகறமே போதமென்று
னோக்கு மனங்கொண்டு அந்தப்போக்கைகாணே.
938

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

போக்கோடே பூரணத்தை நன்றாய்ப்பார்த்து
போதமென்ற புருவமையம் தசமாம்திசை
வாக்கோடே யெறுதற்கு அமுர்தமுண்டால்
மகத்தான அமுர்தமடா வழலைப்பாம்பு
தாக்கோடே வழலைகடி பட்டுதென்றால்
சகலசறக் கந்தனையும் சாந்தமாகும்
னாக்கோடே மேல்வாசற்குள்ளே சென்று
நலமான மதியமுர்தம் வழலைவாங்கே. 939

## அமுர்தரசத்தால் துருசுன்னம்

வாங்கியந்த வழலையிலே வீறஞ்சேர்த்து
மகத்தான சுக்குலமும் கூடவிட்டு
பாங்குபெற அமுரியுங் கூடச்சேர்த்து
பரையான போதம்விட்டு பரிவாய்நீயும்
சாங்கமுடன் கற்பூரஞ் சினம்சேர்த்து
சாத்தடா துரிசதுதான் சுன்னமாகும்
வாங்கியே கெந்திரசம் பாஷாணந்தான்
யென்னசொல்வேன் கட்டுமடா திட்டந்தானே.
940

திட்டமென்ற பிரம்மதிட்டி வாசல்தன்னில்
சிங்குவங்கு காலரிந்து அங்கென்றாதி
கெட்டிமன தாயிருந்து வட்டமேவி
கீழ்மேலாய் நின்றிலங்கும் வாசிதன்னை
யிஷ்டமுடன் சுழினையடா தமருக்குள்ளே
யியங்குகின்ற வாசிசர மேறினாக்கால்
வட்டமதில் மதியமுர்தந் திட்டமாக
வாசிசரந் தன்னுடனே வடியுந்தானே. 941

## அமுர்தரசவேதை

வடிந்தொழுகும் அமுர்தரச வழலைதன்னில்
மகத்தான வேதைமுறை வழுத்தக்கேளு
சொடித்தரசந் தன்னுடனே னாகங்கெந்தி
சுத்தமுள்ள தங்கமுடன் கல்வத்திட்டு
வடிந்துவந்த வழலைதன்னால் அரைத்துமைந்தா
பரமகுரு தன்னருளால் புடத்தைப்போடு
மடிந்தபுடந் தனையெடுத்துப் பார்த்தாயானால்
மகத்தான யேமமென்ற குருவாம்பாரே. 942



பாரப்பா யேமமென்ற குருவைமைந்தா
பத்தியுடன் தானெடுத்து வைத்துக்கொண்டு
னேரப்பா வெள்ளிசெம்பில் பத்துக்கொன்று
னேர்மையுடன் தான்கொடுத்து உருக்கிப்பாரு
சாரப்பா உருக்கிநின்ற சத்தைப்பார்த்தால்
தன்மயமாய் நின்றபரஞ் சோதியாகும்
சாரப்பா கருணைவளர் சோதித்தாயை
கண்மூக்கு மத்தியிலேகண்டு பாரே. 943

கண்டுகொண்டு யோகமதி லிருக்கவேணும்
கருணைவளர் பூரணத்தைக் காணவேணும்
நின்றுகொண்டு வாசியிலே நிலைக்கவேணும்
னேரறிந்து நிலைசெலுத்திக் கொள்ளவேணும்
பண்டுடைய வேதமொடு சாஸ்திரங்கள்
பலவான சாஸ்திரங்கள் பார்க்கவேணும்
அண்டகே சரமதிலே மனக்கண்சாத்தி
அருள்போகத் தன்மயங் கொண்டறிவாய்நில்லே.
944

## துருசுச்சுன்னம் ஜயநீர்

நில்லென்ற நிலைதனிலே வாசியூதி
நீமகனே அமுர்தரச வழலைவாங்கி
சுள்ளென்ற வீரமுடன் பூரஞ்சேர்த்து
துடியான லவணமொடு காரச்சுன்னம்
கல்லென்ற கல்வமதி லாட்டிமைந்தா
கணக்காகநாலி லொன்று சாரஞ்சேர்த்து
கொல்லென்ற துருசுகன கங்கிபூட்டி
கூர்மையுள்ள புடத்தில் வெகுசுன்னமாமே. 945

ஆமப்பா சுன்னமதில் னாலுக்கொன்று
அடங்கிநின்ற நவச்சாரங் கூடச்சேர்த்து
னாமப்பா சொல்லுகிறோம் பணியில்வைக்க
னாதாந்த மானதொரு செயநீராகும்
காமப்பா லான செயநீர்தன்னை
காசியென்ற குப்பியிலே பதனம்பண்ணி
தாமப்பா தன்னிலையைத் தானேகண்டு 946
சங்கையுள்ள வேதமுறை சாற்றக்கேளே.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

சேனடா அமுடனே வெள்ளிச்செம்பு
    இருமையுள்ள னாகமொடு தங்கமஞ்சும்
ஆனடா அஞ்சையுமே கணக்காய்ச்சேர்த்து
    அப்பனே அதற்குநிகர் ரசத்தைவார்த்து
வானடா கல்வமதில் யிட்டுக்கொண்டு
    வழலையென்ற அமுர்தரசச் செயநீர்தன்னால்
காலடா தானதிந்து விசைகொண்டாட்டி
    கைமுறையாய்த் தானுருட்டி காயப்போடே. 947

போடப்பா காய்ந்தபின்பு யெடுத்துக்கொண்டு
    புதுமையுடன் செம்புருக்கி அதினில்தாக்கில்
ஊடப்பா செம்பதுவுங் கட்டிப்போகும்
    தன்மையுள்ள செம்பெடுத்து மைந்தாகேளு
வீடப்பா பிழைப்பதற்கு வெள்ளிதன்னில்
    வேகமுள்ள செம்பதனை பத்துக்கொன்று
ஓடப்பா குகைதனிலே யுருக்கிப்பாரு
    சுத்தமுள்ள வெள்ளியந் தங்கமாமே. 948

தங்கமயமான தொரு அங்கந்தன்னை
    தானரிந்து வாசியினால் அண்டமேவி
சங்கையுடன் தானிருந்து மனாநாவுண்ணி
    தன்மயமும் விண்மயமுந்தானே கண்டு
அங்கமுடன் அனுக்கிரக வழியேசென்று
    ஆதியென்ற கேசரியை அன்பாய்ப்போற்றி
மங்களமாய் மனதொருமை யாகநின்றால்
    மகத்தான சிவயோகவழி சொல்வாமே. 949

## குடன்சுத்தி

வழியான கருவியொடு விபரங்கேளு
    மகத்தான வெடியுப்பு சீனிக்காரம்
வழியான நவச்சாரம் துருசுவீரம்
    பாலகனே ஒரிடையாய் வாங்கிக்கொண்டு
தெளியாமல் யிதுக்கு நிகர்கரிசலுப்பு
    நேர்மையுடன் கல்வமதில் நன்றாயாட்டி
புளியான குடவனிலே பூசிமைந்தா
    புடம்போட்டுத் தானெடுக்க செம்பாய்ப்போச்சே.
950



போச்சப்பா குடவனது செம்பாய்ப்போச்சு
    பூரணமாய் வெள்ளியது தங்கமாச்சு
காச்சப்பா கசடற்ற தங்கத்தாலை
    கனியமனை முருகவேதான் பூசித்தாக்கால்
மூச்சப்பா யூடாது முனைமேல்நிற்கும்
    முனையான சுழிமுனையிற் குள்ளேசென்று
பாச்சப்பா வாசிசரம் அண்டத்துள்ளே
    பத்தியுடன் தன்மயமாய் பதிவாய்நில்லே. 951

பதிவான பதியதுதான் அண்டத்துச்சி
    பரம கைலாச மென்ற சொர்க்கவீடு
மதியான வீடதிலே மனக்கண்சாத்தி
    மார்க்கமுடன் சுழினையிலே மணிநாவுண்ணி
விதியான யெழுத்தரிந்து சுமலத்தேதி
    வேதாந்த அமுர்தரசங் கொண்டால்மைந்தா
கெதியான மோக்ஷமடா சொல்லப்போமா
    கேசரத்தில் பூரணமாய் கெதிமொண்டேறே. 952

யேறுவதற் கின்னமொரு குக்ஷங்கேளு
    யேகாந்த மாகவேநீ யிருந்துகொண்டு
தேறுவது ஓங்கார செயல்தன்னாலே
    திருகுசுழி கபாடமதின திரையைநீக்கி
மாறுவிதந்தனை யரிந்து வாசியேத்த
    மணிமந் திரனாகஒளி தேங்கேழ்க்கும்
சாருவது மணினாக ஓசைநீக்கி
    தன்மயங் கொண்டண்ட மதில்சார்ந்து கொள்ளே.
953

கொள்ளடா அண்டமதில் சார்ந்துகொண்டு
    கூர்மையுடன் தன்மயங்கொண் டிருந்தாயாகில்
உள்ளடா சோதிபிர காசமாகி
    உண்மையென்ற ஆதியந்தந் தான்தானாகி
சொல்லடா சொல்லிறந்த மவுனமாகி
    சுகசிவ பிறாணகலை சுத்தனாகி
அல்லடா தமையங்கொண் டிருந்தாயாகில்
    அரகரா சின்மயமா யாகுந்தானே. 954

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

தானென்ற குருவினுபதேசத்தாலே
சார்ந்துநின்ற அவத்தையெல்லாம் தானேபோகும்
வானென்ற வடிவுசிவ ரூபமானால்
மவுனாதி யோகமதில் வாழ்க்கையெய்தும்
தானென்ற பிரபஞ்ச மாய்கைக்கையா
னாசமென்ற அக்கினியாம் நன்றாய்க்காணும்
தேனென்ற வேதாந்த முடியைப் பார்த்து
தெளிவான யோகமதில் நிர்க்கும்பாரே. 955

பாரப்பா பிர்மநிலை யார்தான் காண்பார்
பதமில்லை யாதினிலும் பதிவுமில்லை
காரப்பா எந்தவித மானாலுந்தான்
காணரிதாஞ் சிவயோகம் கண்ணில்காரை
ஊரப்பா கால அபிமானந் தாலேகி
உண்மையென்ற காரணமாம் உர்ப்பத்திக்கி
பேரப்பா நன்மைதுன்மை ரெண்டில்தானும்
பொருந்து மனமில்லாத சாக்ஷிதானே. 956

தானென்ற சாக்ஷியடா குணாநீதமாகி
சகலபொருள் தானாகிதானே தானாய்
வானென்ற ஆகாச முடிவுமாகி
வகத்தான சோதிஜெகச் சோதியாகி
கோனென்ற குருவாகி யெங்குந்தானாய்
குவி தெழுந்த வாசிசிவ யோகந்தானாய்
தேனென்ற அமுர்தரச யோகந்தன்னை
சிவாயகுரு தெளிவாகி சொன்னார்காணே. 957

சொன்னதினால் தெரியாது மைந்தாமைந்தா
தொடுகுறி போலங்கணையே துலங்கினாக்கால்
கண்ணெதிரே தோன்றிநின்ற காக்ஷிபோலே
கருணைவளர் சாஸ்திரத்தின் கருக்களெல்லாம்
விண்ணல்லோ தங்கிநின்ற ஒளிபோல்காணும்
விளங்கிசுழி தனையறிய வெளியுங்காணும்
எண்ணதிலே கண்ட ஒளிவெளியின்சூக்ஷம்
ஓமுடிந்த சூக்ஷமடா சுழினையாமே. 958



சுழியான காத்துவெகு சுழிகாத்தய்யா
சுழித்தசுழி நடுவறிந்து யேறமாட்டார்
வழியான வரையறிந்து யேறுதற்கு
வங்குசிங்கு வாசலிட மார்க்கங்கேளு
தெளிவான ஓங்காரக் கம்பந்தன்னை
சிவயவசி சிவயவசி யென்றுநாட்டி
வழியான மனவிழியால் தன்னைப்பார்த்து
விடான பேரின்ப வீட்டில்நில்லே. 959

நில்லென்ற வீடுபேரின்ப வீட்டில்
நீமகனே போதநெறியாக நின்றால்
வில்லென்ற விசைபோலே வாசிநின்று
விளங்குமடா திருகுசுழி முழிமையத்தில்
சுள்ளென்ற சுவாலையடா சுவாசத்தந்தம்
துலங்குதடா கதிர்மதிபோல் துருவமீதில்
உள்ளென்ற சுழினையிலே மவுனம்பூட்டி
ஊடுருவ அக்ஷரத்தை உசரயேத்தே. 960

யேத்தடா வாசிவலங் கொண்டுமைந்தா
யிருத்தடா முனையறிந்து தமருக்குள்ளே
காத்தடா அசையாமல் திரையைப்போட்டு
கண்ணரிந்து விண்ணான கதவைமைந்தா
சாத்தடா குகையறிந்து மெய்யால்நீயும்
சரந்தொடுத்து அட்சரத்தால் தன்னைப்பார்த்து
யேத்தடா மவுனமென்ற வாசியாலே
பொருந்திமனம் தரிந்தமுர்தம் பூசைபண்ணே. 961

பூசையென்ன தமரரிந்து வாசியேத்தி
பொருந்தி நின்ற அஞ்சுநிலை பூண்டுபார்த்தால்
பூசையென்ற சிவசத்தி பூசைத்தானும்
பூரணமாய் கோடிசெய்த பலத்துக்கொக்கும்
ஆசையுடன் அந்தரங்க வாசல்கண்டு
அதிலிருந்து அங்கனவே பார்த்தால்மைந்தா
ஓசையென்ற மணிமேருள் சுழினைலிங்கம்
ஒருகோடி சூரியன்போல் காணலாமே. 962

செ—18

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

காணவே செகச்சால வார்த்தைமார்க்கம்
கைமுறையாய்ச் சொல்லுகிறேன் கருவாய்க்கேளு
தோணவே சொல்லுகிறேன் சரக்கின்மார்க்கம்
சுத்தமுள்ள பாஷாணம் அறுபத்தினாலும்
பேணவே லவண மென்ற காரசாரம்
பெருமையுள்ள யிவ்வகைதா னிருபத்தஞ்சே
பூணவே உபசரங்கள் நூற்றிரண்டுபத்தும்
புதுமையுடன் கண்டறிந்து வாதம்பாரே. 963

### சரக்குவகை சத்துருமித்துரு

பாரப்பா வாதமுறை பார்ப்பதற்கு
பதிவான உபரசங்கள் காரசாரம்
சாரப்பா பாஷாணவகைக் கெல்லாந்தான்
சத்துருவு மித்துருவும் தானேசொல்வோம்
னேரப்பா தானிருந்து சத்துருவு மித்துருவும்
னேர்மையுடன் கண்டறிந்து நிலையைப்பார்த்தால்
வீறப்பா கொண்டு நின்றதவலோகங்கள்
வேதாந்த குருவருளால் தங்கமாமே. 964

### துருசுசத்துருமித்துரு

ஆமப்பா துருசுசத் துருவைக்கேளு
அடங்காத யிணங்கனொடு சீனம்கூடன்
தாமப்பா அப்பிரகம் கல்லுப்புனாகம்
சங்கையுள்ள யிந்துப்பு வங்கலிங்கம்
நாட்டமுடன் கண்டறிந்து நன்மையாக
நாமப்பா சொன்னவகை சத்துருவேயாகும்
ஓமப்பா சத்துருவால் துரிசைக்கொண்டு
உத்தமனே மித்துருவை உரைக்கக்கேளே. 965

கேளப்பா துரிசிசத்துருவைச் சொன்னேன்
கெணிதமுடன் மித்துருவை நன்றாய்க்கேளு
ஆளப்பா சாரமொடு வீரமரிதாரம்
அழகான வெண்காரம் கெந்திருதம்
காலப்பா பூரமொடுமனோசிலையும் லிங்கம்
கருவான மித்துருவென் றரிந்துகொண்டு
வானப்பா மித்துருவால் செயமேசெய்து
மார்க்கமுடன் வேதமுறை மகிழ்ந்துபாரே. 966



பாரப்பா சத்துருவால் துருசைக்கொன்று
பரிவான மித்துருவால் கன்னமாக்கி
சாரப்பா யிவ்விதமாய் வேதைப்பார்த்தால்
சங்கையுடன் காணுமடா அங்கமாக
நேரப்பா தானிருந்து அங்கம்பார்த்து
நீமகனே பூரணமாய் நின்றாயாகில்
நேரப்பா பெத்தசிவ யோகியாவாய்
பேரண்டம் சித்தண்டம் ரெண்டுங்காணே. 967

### சாரசத்துமித்துரு

காணவே சார சத்துருவைக்கேளு
கல்லுப்பு யிந்துப்பு வளலுப்பு
பூணவே வங்கமொடு காரீயந்தான்
பொருளான அண்டமொடு மடிந்தசுக்கான்
பேணவே அப்பிரகம் யிதுவெல்லாந்தான்
பேருகின்ற சாரசத்துருவே யாகும்
தோணவே யிச்சறக்கால் சாரந்தன்னை
துடியடங்க கட்டினபின் மித்துருவைக்கேளே. 968

கேளடா சாரசத்துருவை சொல்வேன்
கெந்தி மனோசிலைதாரம் வீரம்லிங்கம்
ஆளடா காரம்வெடி காரீயந்தான்
அப்பனே கெவுரியொடு னாகங்கூட்டி
வாளடா அமிர்தமதால் கவசஞ்செய்து
மைந்தனே புடம்போட்டு பார்த்தாயானால்
காலடா வலுவாகி சாரங்கட்டி
கனகமென்ற குருவாகும் கண்டுபாரே. 969

### வெடியுப்பு சத்துரு மித்துரு

பாரப்பா வெடியுப்பு சத்துருவைக் கேளு
பகையான காரீயம் துருசு கூடன்
நேரப்பா வெள்ளி செம்பு யிரும்புகெந்தி
நிசமான அண்டமொடு சத்துருவேயாகும்
சாரப்பா சத்துருவா லுப்பைக்கட்டி
தன்மையுடன் வேதைமுகம் தானேகண்டால்
ஆரப்பா உனக்கீடு ஆருமில்லை
ஆதியென்ற லவணமதை பரிந்துகாணே. 970

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

காணவே சத்துருவா லுப்பைக்கொன்று
கருணைபெற மித்துருவைக் கருதக்கேளு
பூணவே லிங்கமுடன் காரங்கல்லுப்பு
புகழான யிந்துப்பு வீரம்காரம்
தோணவே னாகமொடு றோமம்வெள்ளை
சுத்தமுள்ள சீனமொடு மித்துருவேயாகும்
பேணவே சத்துருவா லுப்பைக்கட்டி
பிரியமுடன் மித்துருவால் சுன்னஞ்சேரே. 971

## கல்லுப்பு சத்துரு மித்துரு

செய்யடா கல்லுப்பு சத்துருவைக் கேளு
செயமான வீரமொடு சிங்கிமனோசிலையும்
மெய்யடா பழம்புளியோ டிவையெலாந்தான்
மேன்மையுள்ள கல்லுப்பு சத்துருவேயாகும்
கையடா தவறாமல் மைந்தா நீயும்
கல்லுப்பை சத்துருவால் கசிவுபோக்கி
பொய்யப்பா போகாமல் செயமே செய்து
புத்தியுடன் மித்துருவை புகழ்ந்துகாணே 972

காணவே மித்துருவை சொல்லக்கேளு
கருவான லிங்கவங்கம் னாகம்செம்பு
பூணவே பூரம்அரி தாரங்காரம்
புத்தியுடன் மித்துருவென் றறிந்துகொண்டு
பேணவே மதியமுர்த வழலைதன்னால்
பிலமான சரக்குகளை அரைத்துக் கொண்டு
தோணவே சரக்குகளுக் கங்கிபூட்டி
சுத்தமுடன் புடம்போட்டு வேதைபாரே. 973

## கார சத்துரு மித்துரு

பாரடா காரத்தின் சத்துருவைக் கேளு
பதிவான சலாசத்து அண்டஞ்சூடன்
னேரடா சரக்குவகை தானேகண்டு
நிசமான அமுர்தரச வழலைதன்னால்
காரடா கல்வமதில் நன்றாயாட்டி
கருணையுடன் காரமதுக் கங்கிபூட்டி
சேரடா புடமதிலே வைத்துப் பார்த்தால்
சிவசிவா காரமது கட்டுங்காணே. 974



காணவே சத்துருவால் காரங்கட்டி
கருணையுடன் மித்துருவை கருதக்கேளு
ணணவே உபரசங்கள் பாஷாணங்கள்
உண்மையுள்ள நவலோகந் தனக்கு மைந்தா
பேணவே காரமது காலனாகும்
பெருமையுடன் சத்துருமித் துருவைப்பார்த்து
பூணவே கண்டுமனம் கொண்டாயானால்
புத்தியுடன் வாதமது வசியமாமே. 975

## தங்கத்தின் சத்துருமித்துரு

ஆமப்பா தங்கமென்ற அபரஞ்சிக்கி
அப்பனே சத்துருவைச் சொல்லக் கேளு
னாமப்பா சொல்லுகிறோம் துருசுலிங்கம்
நன்றான யிணங்கனொடு னாகம்வெள்ளை
தாகப்பா தாளகமும் சூதங்கெந்தி
தண்மையுடன் மனோசிலையும் அண்டங்கூட்டி
சோமப்பால் தன்னலே ஆட்டிமைந்தா
சுத்தமுள்ள தங்கமதுக் கங்கிபூட்டே. 976

பூட்டியே புடமதிலே வைத்துப்பாரு
போதமுள்ள தங்கமது குருவாய் நிற்கும்
னாட்டியே தங்கமது குருவாய் நின்றால்
னாலான காரியமும் நன்மையாகும்
தாஷ்டிகமாய் சர்க்குருவியின் பாதம்போத்தி
சங்கையுடன் மவுனரசந் தானே கொண்டு
நீட்டியதோர் வாசியினால் னெற்றிக்கண்ணை 977
நினைவாக நித்தியமும் கண்டுதேறே.

கண்டுசிவ ஜோதியென்ற தங்கத்தாய்க்கு
கருணைவளர் மித்துருவை கருதக்கேளு
விண்டுசொல்வேன் நவலோகந் தனக்குமைந்தா
மேன்மையுள்ள உயிராகும் தங்கத்தாய்தான்
அண்ட கேசரியான தங்கத்தாயை
அனுதினமும் பூசைபண்ணி பதிவாய் நில்லு
வண்ட னென்ற சத்துருவை புறத்தே தள்ளி 978
மைந்தனெல்லா மித்துருவென் றறிந்துநில்லே.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

### ரசத்துக்கு சத்துரு மித்துரு

அரிவான ரசத்துக்கு சத்துருவைக் கேளு
அப்பனே நாகமொடு காரீயம்வங்கம்
குரியான கெந்தகமும் மனோசிலையும் வீரம்
குரியான தாரமொடு வெள்ளிச் செம்பு
னெரியான வெண்காரம் துரிசிசாரம்
னேர்மையுடன் சத்துரு வென்றரிந்து கொண்டு
வரிவான மனைதமென்ன வசமே பண்ணி
மேன்மையுள்ள மித்துருவை விளங்கக்கேளே. 979

கேளடா மித்துருவைச் சொல்வேன்மைந்தா
கேள்வியென்ன யிரும்புவெடி சூடன்காந்தம்
ஆளடா மித்துருவென் றரிந்துகொண்டு
அருளான வேதமுறை அறிந்து பார்த்தால்
கோளடா ஒன்றுமில்லை குருவேயாகும்
குருவான அமுர்தரச வழலைகண்டால்
காலடா வலுவாகி வாசியேறும்
கண்மூக்கு மத்தியென்ற சுழியைப்பாரே. 980

### அயத்தின் சத்துருமித்துரு

பாரப்பா யிரும்புக்கு சத்துருவைக் கேளு
பகையான அபிறகம் வெண்கார அண்டம்
நேரப்பா வங்கமொடு கெந்தி நவச்சாரம்
நிசமான வீரமொடு கெவுரிசலாசத்து
சாரப்பா யிரும்புக்கு சத்துருவேயாகும்
கண்டறிந்து விண்டபடி கருவாய் பார்த்தால்
வீறப்பா கொண்டஅயச் சத்துருவால்மைந்தா
விசையடங்கும் மித்துருவை விளங்கக் காணே. 981

காணவே யிரும்புக்கு மித்துருவைக்கேளு
கருவான வெள்ளி செம்புனாகந் தங்கம்
பூணவே காந்தமொடு கெந்தி சூடன்
பொருந்தி நின்றமித்துருவென் றறிந்துகொண்டு
பேணவே தானிருந்து வேதைபாரு
பிலமாக வாசிசரம் சுழினைக் கேத்து
ஊணவே தானிருந்து மவுனங்கொண்டால்
உற்றசிவ யோகியென்ற உண்மையாமே. 982



### நாகத்தின் சத்துரு மித்துரு

உண்மையுடன் சொல்லுகிறேன் னாகத்துக்கு
உத்தமனே சத்துருவை உரைக்கக் கேளு
தண்மையுள்ள தங்கமொடு வெள்ளி வங்கம்
தயவான வெடியுப்பு சீனங்கல் இது
வெண்மையுள்ள வெண்கலமும் வளவிரம்
விசையான னாகசத்துருவே யாகும்
நன்மையுடன் சத்துரு மித்துருவைக் கண்டு
னாட்டமுடன் பூரணத்தில் நயந்து நில்லே. 983

நில்லென்ற நாகமதின் மித்துருவைக் கேளு
நிசமான அபிரகம் யிரும்பு காந்தம்
உள்ளென்ற சலாசத்து செம்புசூதம்
உருதியுள்ள காரீயம் சாரங்கெந்தி
சொல்லென்ற விசைபோலே னாகத்துக்கு
சுகமான மித்துருவால் சுத்தம்பண்ணி
வில்லென்ற விசைபோலே வாதம்பாரு
வேதாந்த சின்மயத்தில் விரும்பித்தேறே. 984

### காரீய சத்துரு மித்துரு

தேறவே காரீயந் தனக்கு மைந்தா
சிவசிவா சத்துருவை சொல்லக்கேளு
சூரவே காந்தம் அயம் கிளிஞ்சி அண்டம்
குருவான கெவுரியொடு கெந்தி சேர்த்து
யீரவே அமுர்தமதால் நன்றாயாட்டி
மேன்மையுள்ள காரீயந் தனக்கு மைந்தா
மாரவே கவசமது நன்றாய்ச் செய்து
மார்க்கமுடன் புடம்போடக் கட்டும்பாரே. 985

பாரப்பா காரீய சத்துருவைச் சொன்னேன்
பதிவான மித்துருவை பகரக்கேளு
சேரப்பா செம்புவெள்ளி வங்கம்சூதம்
திரமான னாகமதால் குருவாய் நிற்கும்
னேரப்பா குருவரிந்து மகிழ்ச்சிகாண
நிசமான சத்துருமித்துருவை பார்த்து
காரப்பா கருவரிந்து செய்தாயாகில்
கனகமென்ற பாக்கியங்கள் கைக்குள்ளாமே. 986

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

ஆமப்பா கைவசமாய் பொருளைக்காண
அருள் பெருகும் பூரணத்திலமுந்திமைந்தா
தாமப்பா தன்னிலையில் மனைதனாட்டி
சங்கையுடன் சத்துரு மித்துருவை கண்டு
ஊமப்பா சொல்லுகிறோம் பாஷாணந்தான்
நலமான உபரசங்கள் காரசாரம்
சாமப்பா சத்துருவால் செயமே செய்து
சங்கையுள்ள மித்துருவால் வேதைகாணே. 987

வேதையென்ற வாதமது போதமாக
மெஞ்ஞான சற்குருவின் கடாக்ஷம்பெற்று
போதையென்ற சோதிபிர காசங்கண்டு
பூரணமாய் அவனிதனில் புகழ்ந்துவாழு
வாதையென்ற சூழ்வினைகள் தீர்வதற்கு
மகத்தான அமுர்தரச இறுதந்தன்னை
கோதையென்ற மனோன்மணியின் கடாக்ஷத்தாலே
கூறினேன் சவுமிய சாகரத்தைப்பாரே. 988

பாரப்பா புலத்தியனே சொல்லக்கேளு
பதிவான மேகமென்ற வகைகட்கெல்லாம்
வீரப்பா தானொடுங்கித் தீர்வதற்கு
விபரமுள்ள கிருதவகை யொன்றுகேளு
னேரப்பா பசுவின் நெய்படியொன்றுக்கு
னேர்மையுள்ள சாறுவகை சொல்லக்கேளு
சேரப்பா சலஸ்தம்பம் மூலச்சாரம்
திருவான வோரிதழ்த் தாமரையின்சாறே. 989

சாரான அவரையின்னுல் இலையின்சாறுந்
தன்மையுள்ள விடத்திலைச் சாறைந்தும்மைந்தா
னேராக வகைக்கிக்கால் படியாய்வாங்கி
நெய்யுடனே தான்கலந்து ரவியில்வைத்து
பேராக அதில்சேர்க்குஞ் சரக்கைக்கேளு
பெருமையுள்ள சீரகமும் பலந்தானொன்று
கூரான அதிமதுரம் பலந்தானொன்று
குக்கிலது பலங்காலாய்க் கூடச்சேரே. 990



சேரப்பா சாதிக்காய் விராகன் ஒன்று
திரமான கிராம்பதுவும் விராகன் ஒன்று
வீரப்பா சாதிபத்திரி விராகன் ஒன்று
விபரமுடன் யேலமது பலமுங்கால்தான்
பேரப்பா வால்மிளகு விராகன் ஒன்று
சன்னலென்ற லவுங்கமது விராகனொன்று
சாரப்பா விலாமிச்சு விராகன்ரெண்டு
பெருகுவெள்ளைக் குங்லியம் ஒன்னரையாம்
பலமே. 991

பலமான பலமரிந்து விளைவாய்வாங்கி
பசுவின்பால் தன்னாலே பதிவாயாட்டி
குலமான நெய்யுடனே கலந்துமைந்தா
குருவான சற்குருவின் பாதம்போற்றி
பிலமான அடுப்பேத்தி அனலைதாக்கி
பிரியமுடன் மெழுகுபதம் தனிலிறக்கி
நலமான நாற்பதுனாள் கொள்ளும்போது
நாடிநின்ற மேகமெல்லாம் னாசமாமே. 992

ஆமப்பா மேகமென்ற தெல்லாந்தீரும்
அதிலெழுந்த கிரந்திமுதல் விறணந்தீரும்
போமப்பா வாதபித்த சிலேஷ்டம்வாய்வு
பொல்லாத கிறாணியுடன் மூலரோகம்
சாமப்பா காசமொடு அஸ்திவெட்டை
தணியுமடா கிருதவகை தயவாய்க்கொண்டால்
சோமப்பால் தான்சொலித்து சோதிகாணும்
துன்பமற்று யென்னாளும் வாழ்வாய்காணே. 993

## பூரணலேகியம்

காணவே பூரணலேகி யத்தைக்கேளு
காயான ஜாதிக்காய் ஜாதிபத்திரி
பூணவே கிராம்புடனே யேலம்நாலும்
புத்தியுடன் வகைக்கிக்கால் பலமேவாங்கி
பேணவே திரிகடுகு பலமொன்றாக
பெருமை யுள்ளசரக்கேழுஞ் சூரணமேசெய்து
தோணவே யிதில்ரெட்டி மைந்தாகேளு 994
சுத்தமுள்ள ஆனந்த மூலிவாங்கே.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

வாங்கியந்த மூலிகையை சூரணமேசெய்து
மைந்தனே யிருவகையும் மொன்றாய்க்கூட்டி
பாங்குபெற தேனதிலே சக்கரையும்வெல்லம்
பனைவெல்லம் மூன்றுமதில் கரைத்துக்கொண்டு
சாங்கமாய் முன்செய்த சூரணத்தைமைந்தா
தன்மையுள்ள பாகதிலே சேர்த்துக்கின்டு
திங்கில்லா பசுவெண்ணை செருகவிட்டு
சேர்த்துமிகத் தான்பிசைந்து ரவியில்வையே. 995

வையடா ரவிதனிலே நவனாள்வைத்து
மார்க்கமுடன் தானெடுத்து பதனம்பண்ணி
மெய்யடா சற்குருவின் பாதம்போத்தி
மெஞ்ஞான அருள்பெருக மைந்தாகேளு
கையடா மெய்யுடைய வனுவரிந்து
கருணைவளர் பூரணலேகியத்தில் மைந்தா
பையடா பார்வைவழி சுழினைக்கேத்தி
பாலகனே பணவிடைதான் கொண்டுதேறே. 996

தேறப்பா பணவிடைதான் கொண்டுமைந்தா
தீர்க்கமுடன் தானிருந்து வாசியேத்தி
காரப்பா கேசரியில் மனங்கண்ணோட்டி
கண்ணான விண்ணைநிந்து உன்னினாக்கால்
னேரப்பா விரைந்துவரும் அமுர்தபானம்
னிசமான பானமதை கொண்டுதேர்ந்தால்
மேரப்பா கிரிதீபம் போலேமைந்தா
மெஞ்ஞான கேசரியில் தோணும்பாரே. 997

தோணுமடா கேசரியில் சுழினைமூலம்
சோதியென்ற ஆதாரக் கமலபீடம்
காணுமடா ரவிமதியு மொன்றாய்கூட்டி
கால்திருத்தி பிடரிவழி கண்ணைப்பார்த்து
பூணுமடா வாசியது பொருந்தும்போது
பூரணமும் காரணமும் பொருந்தியொன்றாய்
வானுலகில் சாக்ஷியென விளங்குதய்யா
மைந்தனே ரவிமதியை வணங்கிப்பாரே. 998



வணங்குவது பெரியோரை வணங்கவேணும்
மகத்தான சாஸ்திரங்கள் பார்க்கவேணும்
இணங்குவது வாசியிலே யிணங்கவேணும்
யேகாந்த மானசிவ யோகம்வேணும்
மணங்குவிந்து தானிருந்து மனிணாவுன்னி
மகத்தான ஓங்கார வழியேசென்று
குணங்குவிந்த அமுர்தரசங் கொண்டால்மைந்தா
கூர்மையுடன் ஒளிவெளியில் கூடும்பாரே. 999

பாரப்பா அறிவான ஒளிவின்கண்ணு
பதிவான வெளியதுதான் அண்டத்துச்சி
னேரப்பா அண்டமென்று உச்சிமீதில்
நிசமான அறிவின்கண் ணேரேபாய்ந்தால்
பேரப்பா பெற்றதொரு ஜிவாத்துமாவும்
பேசாத மவுனமென்ற பரமாத்துமாவும்
தேரப்பா ரெண்டுமொன்றாய்ச் சேர்ந்துமைந்தா
சிவசிவா வெளிவொளியாய்ச் சேருந்தானே. 1000

தானேதான் ஒளிவெளியிற் சேர்ந்தபோது
சங்கையுள்ள பிரிதிவிதான பிரிதிவியில்சேரும்
னானேதானென்ற அப்புசிலத்தில் சேரும்
நடுவான அக்கினியும் வாயுவுங்கூடி
வீனேதான் ஆகாசம் சாக்ஷியாக
விளங்கிநின்ற சூக்ஷமதை யறியாரைய்யா
கோனே தானாகித்தா னவனுமானால்
குறியில்லா நிற்மலத்தின் கெதியைப்பாரே. 1001

கெதியான மோக்ஷகதி வீட்டைக்காண
கிருபையுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
பதியான மூலமடா புருவமத்தி
பரமகை லாசமென்ற சுழினை வீட்டில்
மதியான மதிரவியும் ஒன்றாய்ச் சேர்த்து
மவுனமென்ற பீடமதில் வாசமானால்
விதியான கெதிமோக்ஷம் வீடுந்தோணும்
விளங்குமணி வீடதிலே விரும்பிநில்லே. 1002

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

விரும்பிவந்த சுழினையிலே மனத்தைதனாட்டி
வீடான பேரின்ப வீட்டில்சென்று
வரும்பிறவி தனையகற்ற வகையைக்கேளு
வாங்குசிங்கு வாசலிலே மணினாவுன்வி
திரும்பிமன மசையாமல் சிவயவசியென்று
தீர்க்கமுடன் பதினாரு உருவைச் செய்தால்
அரும்பிரவி யில்லையடா மைந்தாமைந்தா
அண்ணாக்கை யுண்ணாக்கு ளடக்கிப்பாரே. 1003

பாரப்பா அண்ணாக்கை உண்ணாக்குள்ளே
பக்தியுடன் தானடக்கி பதிவாய் மைந்தா
சாரப்பா ஓமெனவே தமரில் புக்கி
சரமரிந்துத் தானொடுங்கி தானே நின்றால்
பேரப்பா பெற்றசிவ யோகந்தங்கும்
பேரண்டத் தமுர் தரசங் கொள்ளலாகும்
மேரப்பா சுத்திவர கெவுனமுண்டாம்
வேதாந்த கேசரியின் விஞ்சைதானே, 1004

## ஆறுமுக களங்க வேதை

தானான விஞ்சையென்ற சத்திமாது
சமரசமாய் தான்விளங்கும் தங்கமாது
வானான கேசரியாம் தங்கமாதை
மார்க்கமுடன் கண்டரிந்து மகிழ்ச்சியாக
கோனான குருவருளால் சொல்லக்கேளு
குருவான அயமுடனே பூரஞ்சேர்ந்து
ஆனான காரமிட்டு உருக்கமைந்தா
பொருந்திரெண்டு முறவாகி பொருந்துங்
காணே. 1005

காணவே காணுருகிப் பொருந்தும்போது
கனிவான னாகமுடன் லிங்கம்தாரம்
பேணவே ரசமுடனே நாருஞ்சேர்த்து
பிரியமுடன் தான்குடுக்க வாங்கிக் கொள்ளும்
தோணவே அதற்குக்கால் தங்கஞ் சேர்த்து
சுத்தமுடன் தானுருக்கி வைத்துக் கொண்டு
பூணவே வெள்ளிசெம்பில் பத்துக்கொன்று
பூரணமாங் களங்குதனில் ஒன்றுபோடே. 1006



போட்டுமிகத் தானுருக்கி யெடுத்துப் பார்த்தால்
பொன்னான தங்கமதை யென்னசொல்வேன்
பூட்டரிந்து பொர்க்குரியைக் கண்டால் மைந்தா
பொன்னுல கெல்லாமுனது வசமாய்நிற்கும்
தாஷ்டிகமாய் பொன்னுலகில் தானே தானாய்
தானிருந்து சிவயோகத் தலைவனாகி
பாட்டரிந்து பதியரிந்து பதியில்நிற்க
பத்தியுடன் நின்னமொரு பாகங்கேளே. 1007

## பஞ்சமுகக் களங்கு

கேளப்பா யின்னமொரு கூஷங்கேளு
கிருபையுள்ள புலத்தியனே நன்றாய்க்கேளு
ஆளப்பா அயமுடனே வெள்ளி செம்பு
அருள்பெருக குகையில் நின்று உருகும்போது
காலப்பா யெமரசம் னாகங்கூட்டி
கசியமன முருகவே தானுருக்கிப் பார்க்க
கேளப்பா யில்லாத களங்காய் நிற்கும்
குருவான களங்கினுட வேதைகாணே. 1008

காணவே வேதையுட வகையைக் கேளு
கருவான செம்புவெள்ளி கருவாய்க்கேளு
தோணவே அஞ்சுமிக களங்கைமைந்தா
சுத்தமுடன் பத்துக்கு வொன்றுதாக்கு
பேணவே வாலைவய தென்ன சொல்வேன்
பேர்பெரிய புலத்தியனே யீரெட்டாகும்
பூணவே யிந்தமுரை பெற்றுக் கொண்டு
பூலோக வசமதாய் தவசுபண்ணே. 1009

## செம்பயம்

பண்ணப்பா யின்னமொரு பாகங்கேளு
பாரான அயமுடனே செம்பு சேர்த்து
கண்ணப்பா தான் துலங்க வுருகும்போது
கனிவான தாரமுடன் வீரம்லிங்கம்
நண்ணப்பா மனோசிலையும் கெவுரிகூட்டி
னாட்டமுடன் தான்குடுக்க சத்தையுண்ணும்
உண்ணப்பா நிறைந்த சத்தை யுன்றுநின்ற
முறுதியுள்ள செம்பயத்தை யெடுத்துப்பாரே. 1010

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

வெடுத்ததொரு செம்பயந்துக் கிடைதான்மைந்தா
யேகாந்த மானகுரு தங்சஞ்சேர்த்து
நடுத்திறமாய்த் தானிருந்து உருக்கிப்பாரு
நன்மையுள்ள களங்கு வெகுவுஸ்மையாகும்
தொடுத்ததொரு களங்கதனை யெடுத்துக்கொண்டு
சுத்தமுள்ள வெள்ளியிலே பத்துக்கொன்று
கொடுத்துமிகத் தானுருக்கிப் பார்த்தாயானால்
குருவான தங்கமது காந்தியாமே. 1011

### அரிதாரக்கட்டு

ஆமப்பா காந்தியென்ற அரிதாரத்தை
அப்பனே கட்டுகிற வகையைக் கேளு
னாமப்பா சொல்லுகிறோம் செங்குவெடிசீனம்
நலமான காரமுடன் தாரஞ்சேர்த்து
தாமப்பா தண்ணீரில் அரைத்துருட்டி
தங்கமென்ற தாரமதுக் கங்கிபூட்டி
ஓமப்பா மண்சிலை வலுவாய்ச் செய்து
உத்தமனே காடையென்ற புடத்தைப் போடே. 1012

### செம்புக் குடவன்

போடப்பா நிதானமதாய்ப் புடத்தைப்போடு
பொன்னான தாரமதை யெடுத்துப் பார்த்தால்
னாமப்பா நிலைக்கவே தான் கட்டிப்போகும்
நல்லகட்டுத் தாரமதை யெடுத்துமைந்தா
கூடப்பா தாம்பூரந் தன்னிலேதான்
சுத்தமுடன் அரைவாசி தாரஞ் சேர்த்து
கூடப்பா குகைதனிலே யுருக்கிப்பாரு
குருவான தாம்பூரம் குடவனாமே. 1013

ஆமடா குடவனென்ற தாம்பூரத்தால்
அரைவாசி தங்கமிட்டு உருக்கிக் கொண்டு
ஓமடா வெள்ளிதனில் பத்துக் கொன்று
உருக்கமுடன் தான்குடுத்து உருக்கிப் பார்த்தால்
னாமடா சொல்லுகிறோம் வெள்ளி மைந்தா
நல்லதங்கச் சோதியடா கண் கொள்ளாது
தாமடா தன்னிலையில் வாசி பூட்டி
சங்கையுள்ள மவுனாதி யோகங்காணே. 1014



### வெள்வங்க குரு

காணவே யின்னமொரு வெள்ளிவித்தை
கருவாகச் சொல்லுகிறேன் கண்டுபாரு
பூணவே வெள்வங்கந் தன்னை வாங்கி
புத்தியுடன் அதற்கு நிகர்ரசத்தைச் சேர்த்து
பேணவே அதற்குநிகர் வெள்ளைகூட்டி
பேரின்ப அமுர்தரசந் தன்னாலாட்டி
தோணவே றவிதனிலே காயப்போட்டு
சுத்தமுடன் தானிருந்து யின்னங்கேளே. 1015

கேளடா வெள்ளிதனை யுருக்கி மைந்தா
கிருபையுள்ள வங்கமதைச் சரியாய்தாக்கி
காலடா வலுவறிந்து உருக்கிப்பாரு
கைலாச வெள்ளியது குருவாய் நிற்கும்
வாளடா வெள்ளியென்ற குருவைமைந்தா
மார்க்கமுடன் கெம்பினிலே பத்துக்கொன்று
சூளடா தான்கொடுத்து உருக்கிப் பார்க்க
சுத்தமென்ற செம்பதுவும் வெள்ளியாமே. 1016

ஆமப்பா இன்னமொரு கருமானங்கேள்
அடங்கிநின்ற வெள்ளைப் பாஷாணந்தன்னில்
ஓமப்பா யிடைசரியாய் ரசத்தை வார்த்து
உண்மையென்ற மவுனரசந் தன்னாலாட்டி
நாமப்பா வெள்வங்கத் தகட்டில் பூசி
நன்மையுடன் ஓட்டில்வைத்து மண்ணுஞ் செய்து
தாமப்பா நிலையறிந்து புடத்தைப் போட்டால்
தண்மையுள்ள வங்கமது வெட்டைகாணே. 1017

காணவே வெட்டையென்ற வங்கந்தன்னை
காரமிட்டு குகைதனிலே உருக்கிப் பார்த்தால்
பேணவே தங்கமது உருக்கிநல்ல
பேற்பெரிய வெள்ளிவய தாகும்பாரு
பூணவே பொற்கமலந் தன்னில் நின்று
புத்தியுடன் அண்டவெளிக் குள்ளேசென்று
உண்ணவே உள்வெளியும் மென்றாய் நின்று
உண்மையென்ற மவுனமது உருதியாமே. 1018

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## தெரிசனம் பதினாறு

உருதியுள்ள மவுனமடா உரைக்கக்கேளு
உண்மையென்றசுழினையடா நந்திவீடு
பருதிமதி யொன்றாகி பாய்ந்தவீடு
பரமகைலாச மென்ற பரமவீடு
சுருதிபொரு ளானதொருபரம வீட்டில்
சோதிமணி னாவினுனி சுழற்றினாக்கால்
கருதியதோர் கபடமதுக் குள்ளேசென்று
கருணைவளர் தெரிசனத்தை கண்டுபற்றே. 1019

பத்தியுள்ள புலத்தியனே சொல்லக்கேளு
பதிவான தெரிசனங்கள் பதினார்தன்னை
முத்தியுள்ள ஆதாரதெரிசனந்தா னொன்று
மூலமென்ற ஆத்துமாவின் தெரிசனந்தானொன்று
சித்தியுள்ள அரிவானதெரிசனந் தானொன்று
சிவசிவாமவுன மென்றதெரிசனந் தானொன்று
புத்தியுடன் மனமடங்கு தெரிசனந்தானொன்று
புகழான உள்ளமென்ற தெரிசினந்தானொன்றே. 1020

ஒன்றான பூரணமாந் தெரிசினந்தானொன்று
உருதியுள்ள னாசினுனி தெரிசினந்தானொன்று
பன்றான புருவமய்யந் தெரிசினந்தானொன்று
பார்மகனே வெளியான தெரிசினந்தானொன்று
நன்றாக நின்றஒளி தெரிசினந்தானொன்று
நாடிமனங் கொண்டவிந்து தெரிசினந்தானொன்று
குன்றாத னாதமென்ற தெரிசினந்தானொன்று
குணமான உருவமென்ற தெரிசினந்தான்காணே. 1021

காணவே அருபமென்ற தெரிசினந்தானொன்று
கைலாச சாயுட்ச தெரிசினந்தானொன்று
தோணவே தெரிசினங்கள் பதினாருதன்னை
சுத்தமுடன் சற்குருவின் கிடாக்ஷத்தாலே
ஊணவே அந்தநிலை ஊணிப்பார்த்து
உண்மையுடன் தன்னிலையாய்த் தன்னைக்கண்டு
பூணவே யிகபரசாதனத்துக் கெல்லாம்
பொருந்தி மனம்பூரணமாய் வாழ்வாய்ப்பாரே. 1022



## ஆதார தெரிசினை

பாரப்பா தெரிசினங்கள் பதினாறுதன்னை
பத்தியுடன் தன்னகமாய் பதிவாய்க் கண்டு
னேரப்பா சொல்லுகிறேன் மூலாதாரம்
னேர்மையுடன் தான் அரிவாய் நிலையைக்காண
சாரப்பா ஆதார மேலாதாரம்
சகலகலை வாசமடா மூலாதாரம்
காரப்பா அடிமூலமூலா தாரந்தன்னை
கருணையுடன் ஓமென்று யிங்கென்றானே. 1023

ஊணவே வாசிதனை மூலந்தன்னில்
ஓமென்று தானிறுத்தி உருதிகொண்டு
பேணவே யிங்கென்று மவுனம்பூட்டி
பெருமையுள்ள ஓங் அங்சிவய நமவென்று
தோணவே தினம்நூரு உருவேசெய்தால்
சுத்தமுள்ள சுழினையிலே நந்திகாணும்
பூணவே நந்தியுட பிரகாசங் கண்டால்
பொருந்தி நின்ற ஆசாரஞ் சித்தியாமே. 1024

ஆமப்பா அதாரஞ்சித்தியானால்
ஆதார தேவதைகள் அப்போகாணும்
ஓமப்பா வென்றபிரண வத்தினாலே
ஒளி விளக்காய் நின்றதொரு சோதிகாணும்
வாமப்பால் நிறைந்த பூரணத்திலேதான்
மகத்தான சோதிபஞ்ச வரணமாக
தாமப்பா தன்னிலையில் தானேகாணும்
தன்மையுடன் கண்டதெல்லாம் சித்தியாமே. 1025

## அறிவு தெரிசனம்

சித்தியுள்ள ஆதாரதெரிசனமுஞ் சொன்னேன்
சிவசிவா ஆத்துமாவின் தெரிசினத்தைக் கேளு
பத்தியுடன் கண்டமதில் அங்கென்றூணி
பூரணமாய்வாசி தனைநிருத்திக் கொண்டு
பத்தியுடன் சுழிமுனையில் வாசியேற
பாலகனே உங்கென்று மவுனம்பூட்டி
சுத்தமுடன் உங்கிலிநம் சிங்கென்று
சுருதிபெற தினம்னூரு உருவே செய்யே. 1026



Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

செய்யப்பா உருதிகொண்டு உருவே செய்ய
செயமான திருவுருவாம் ஆதாரத்தில்
மெய்யப்பா கழிமுனையின் பிரகாசத்தாலே
மெஞ்ஞான மூலவன்னி பிரகாசிக்கும்
மையப்பா மூலவன்னி பிரகாசத்தாலே
மந்திரகலை ஆத்துமா வென்றறிந்து கொண்டு
கையப்பா குவிந்துனிதம் பணிந்து கொண்டால்
கருணைவளர் சிவாத்துமா கனியுந்தானே. 1027

## அறிவு தெரிசனம்

தானென்ற ஆத்துமாவின் தெரிசினத்தைச் சொன்னேன்
சங்கையுடன் அறிவான தெரிசனத்தைக் கேளு
வானென்ற மூலமதில் உங்கென்றாணி
மவுனமென்ற பீடமதில் அங்கென்றிருத்தி
கோனென்ற விழியோகம் கொண்டு நல்ல
குரியரிய ஓம்நம சிவயவென்று
தேனென்ற ரசம்போலே உருவே செய்தால்
தேவாதி தேவனென்ற பிர்ம்மமாச்சே. 1028

ஆச்சப்பா பிர்மமென்ற தார்தான்சொல்வார்
ஆதியென்ற சுழினையிலே அக்கினியே தோன்றும்
பேச்சப்பா யிம்மூல வன்னிதன்னால்
பேரண்டம் சுத்திவர கெவுனமுண்டாம்
நீச்சப்பா வெகுநீச்சு மூச்செயந்தம்
நிசமான அந்தமடா நெத்திக்கண்ணு
பாச்சப்பாக் கண்ணறிந்து வாசி கொண்டால்
பதிவான மவுனசித்து பலிக்குங்காணே. 1029

## மனோ தெரிசனம்

காவென்ற அரிவான தெரிசனந்தான் சொன்னேன்
கலங்காத மனமென்ற தெரிசினத்தைக் கேளு
வாவென்ற பூரகத்தில் சிங்கென்றூதி
மகத்தான சுழினையிலே வாசிபூட்டி
பூவென்ற ஓம் அரி நம வென்றேதான்
புத்தியுடன் தினம்நூரு உருவே செய்தால்
வாவென்ற தேகம்வெகு குளிர்ச்சியாகும்
மகத்தான ஆனந்த மயமாந்தானே. 1030



தானென்ற ஆனந்தம் தானே தானாய்
தன்மையுடன் நின்றநிலை தானே கண்டு
வானென்றயு கேசரியில் மவுனம் பூட்டி
வரிசையுடன் அண்டகேசரத்தில் சென்றால்
யேனென்ற மனோன்மணி தான் முன்னே நின்று
யின்பரச அமுர்தமது யீவாள் மைந்தா
வீனென்று யோகமதை விட்டாயானால்
வேந்தாந்த மவுனமதுக் குறிதி போச்சே. 1031

உறுதியுள்ள மனமடங்குந் தெரிசினமுஞ் சொன்னேன்
உகந்துமன மடங்கினதோர் தெரிசனத்தை கேளு
பரிதிமதி சுடரறிந்து மவுனம்பூட்டி
பத்தியுடன் ருத்திரனில் வங்கென்றாணி
திருகுசுழி முனையதிலே சிங்கென்றோட்டி
தீர்க்கமுடன் தானிருந்து குருவைப் போற்றி
உருதியுடன் சிங்குசிவா வசியென்றோத
உண்மையுள்ள ருத்திரனார் தெரிசனமுமாமே 1032

ஆமப்பா தெரிசனத்தை யென்னசொல்வேன்
ஆதியென்ற தேகமதில் அக்கினிகொண்டேறும்
காமப்பால் கானப்பால் கனிந்தமூர்தமூறும்
கண்ணறிந்து மவுனமதாய் கனிவாய் நின்று
வாமப்பா இருதியினால் வரைகள் தாண்டி
மகத்தான சுழினைவழி வாசல்சென்று
தாமப்பா தன்னறிவே சாக்ஷியாக
தன்மயமும் விண்மயமும் தானாய்நில்லே. 1033

## உள்ளமென்ற தெரிசனம்

நில்லென்று மனதடங்கும் தெரிசனமும் சொன்னேன்
நிசமான புலத்தியனே யின்னங்கேளு
ஊனென்ற உள்ளமதின் தெரிசனத்தைச் சொல்வேன்
உத்தமனே சற்குருவைத் தியானம் பண்ணி
சொல்லென்று வாசிதனை வங்கென்றெழுப்பி
தீர்க்கமுடன் உங்கென்று மவுனம்பூட்டி
செல்லென்று அங்கிலிவசி வசியென்றோத
துலங்குமடா மகேஸ்பரத்தின் தெரிசனந்தான்
காணே. 1034

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

காணவே மயேசுரத்தின் தெரிசனந்தான் மைந்தா
கருணையுடன் காணவே அரிதாம்பாரு
பூணவே புருவமப்பா சுழினைக்குள்ளே
பொருந்தி நின்று வந்ததொரு வாசிதானும்
தோணவே துலங்கிநின்று அசவையாகி
சொல்நிறைந்த மந்திரமு மதுவேயாக
ஊணவே மவுனமது குருதியாகி
உள்வெளியாய் நின்றுதடா உகந்துபாரே. 1035

## பூரண தெரிசனம்

பாரப்பா உள்ளமென்ற தெரிசனந்தான் சொன்னேன்
பதிவான பூரணமாந் தெரிசனத்தைக் கேளு
னேரப்பா அங்கென்று வாசிதனையெழுப்பி
நிலையான சுழினையிலே அங்கென்றிருத்தி
காரப்பா ஓம்றீங் இலிமங்கென்று
கருத்துரவே னூற்றெட்டு உருவேசெய்தால்
தேரப்பா அண்டமெனும் சுழினைக்குள்ளே
தீர்க்கமுடன் சதாசிவனார் தெரிசனையாங்காணே. 1036

காணவே அரிதாகும் தெரிசனந்தான் மைந்தா
கற்பூர தீபமதின் காந்திதன்னை
பேணவே மனம்பூண்டு காந்திதன்னால்
பேசாத மவுனரச பானமுண்டால்
தோணவே மவுனரச பானங்கொண்டால்
துலங்குமடா சிவயோகம் சுத்தமாக
ஊணவே தானிருந்து மவுனம்பூட்டி
ஓடிநின்ற வாசியது ஒடுக்கமாச்சே. 1037

## நாசினுனி தெரிசனம்

ஒடுக்கமுடன் பூரணமாம் தெரிசனத்தைச் சொன்னேன்
உண்மையென்ற னாசினுனி தெரிசனத்தைக் கேளு
அடுக்கநடு மனைதனிலே வங்கென்றிருத்தி
ஆதியென்ற சுழிமுனையில் சிங்கென்றாதி
தொடுத்துமிக சிவயவசி அம் மங்கென்று
சுத்தமுடன் னூற்றெட்டு உருவே செய்தால்
நடுத்தமரில் னாகாந்த சோதிதோன்றி
னாலான காரியமும் நன்மையாமே. 1038



நன்மையுடன் னாசினுனி னாட்டம்பாரு
நாதாந்த பூரணமாய் சுழினைக்கேத்தி
உண்மையென்ற வாசியிலே உகந்துநில்லு
உருதியுடன் வாசிசிவ யோகம்பாரு
தன்மையுடன் உலகமதில் தானேநின்று
சகலஉயிர் தாபரமும் தானேதானாய்
சின்மயமாய்த் தானிருந்து தெளிந்து கொண்டால்
சிவசிவா மவுனமது தீர்க்கமாமே. 1039

## புருவமய்ய தெரிசனம்

பாரப்பா னாசினுனி தெரிசினமுஞ் சொன்னேன்
பரிவான புருவமய்யத் தெரிசனத்தைக் கேளு
னேரப்பா மனம்நிறுத்தி மவுனம்பூட்டி
னேர்மையுடன் சுழினையிலே மனக்கண்சாற்றி
காரப்பா கனிந்துமனங் கொண்டு மைந்தா
கருணையுடன் நின்றுதவம் செய்தாயாகில்
மேரப்பா சதுரகிரி முடிவிலேதான்
மெஞ்ஞான சோதிசிவ சோதியாமே. 1040

சோதியென்ற ஆதியடா சுழினைக்கம்பம்
சுயஞ்சோதி யானசிவ ஞானதீபம்
ஆதியென்ற தீபமடா ஆத்துமாவாகும்
அருள்நிறைந்த வாசியடா மூலவன்னி
நீதியென்ற வன்னியடா சிவனாச்சு
நிலையான தீபமடா பரமாய் நிற்கும்
சாதியென்ற வன்னியடா ஆவிதன்னை
தனையறிந்து சோதியாம் தன்னில் சேரே. 1041

சேரப்பா மூலவன்னி தன்னில் மைந்தா
திருவான சோதிபரஞ் சோதிதன்னில்
சாரப்பா ஒன்றிரண்டு மொன்றாய்ச் சேர்ந்தால்
தன்னகமும் விண்ணகமும் ஒன்றாய்ப்போகும்
னேரப்பா ஒன்றான காக்ஷிபார்த்தால்
நிறைந்த பரிபூரணமாய் நிசமாய்க்கண்டோம்
ஆரப்பா அறிவார்கள் ஆதியந்தம்
அடங்கிநின்ற பரசுரூபம் வெளிதானாச்சே. 1042

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## பிரமவெளி தெரிசனம்

ஆச்சப்பா புருவநடு தெரிசினமும் சொன்னேன்
அரகரா பிரமவெளி தெரிசினத்தைக் கேளு
பேச்சப்பா பெருகிநின்ற மூலந்தன்னில்
பிரணவத்தால் வாசிதனை மேலே நோக்கி
பாச்சப்பா மவுனமதில் ரீங்கென்றிருத்தி
பதிவான சுழிமுனையை பத்திப்பார்க்கில்
மூச்சப்பா நிறைந்ததிரு ஆராதாரம்
முகிவில்லா பரமவெளி காந்தியாச்சே.

காந்தியென்ற பரமவெளி காந்திதன்னை
கனிவான கண்ணரிந்து ஆர்தான் காண்பார் 104
பாந்தியமாய் பரவெளியை பதிவாய்ப் பார்த்தால்
பஞ்சவர்ன அஞ்சுநிலை தானேதோணும்
சாந்தமுடன் அஞ்சுநிலை தன்னைப் பார்த்தால்
தன்மயமும் விண்மயமும் அதுவாய்ப் போச்சு
னேர்ந்துமிக பூரணமாய் மவுனங்கொண்டால்
நிசமான மவுனகுரு னாதனாச்சே. 1044

## ஒளி தெரிசனம்

ஆச்சப்பா பரமவெளி தெரிசனமுஞ் சொன்னேன்
அருள் நிறைந்த ஒளியிருட தெரிசனத்தைக் கேளு
காச்சப்பா அங்கென்று கண்டமதில் யிருத்தி
கருணைவளர உச்சியிலே சிம்பென்றுரேசி
பாச்சப்பா யிப்படியே பிராணாயஞ் செய்தால்
பரமவெளி தன்னிலொளி பளீரெனவே தோணும்
மூச்சப்பா நின்றநிலை ஆரறியப் போறார்
முத்திகொண்ட சுழினையடா சந்தியந்தான்
பாரே. 1045

## விந்து தெரிசனம்

பாரப்பா ஒளியினிட தெரிசனமும் சொன்னேன்
பதிவான விந்தினிட தெரிசனத்தைக் கேளு
சாரப்பா கேசரியில் மனதைனாட்டி
தமரான அனுவாசல் தன்னில் நின்று
னேரப்பா கண்ணடங்க மவுனம்பூட்டி
னேர்மையுடன் தானிருந்து வங்றீங்கென்று
காறப்பா வாசியை நீமேலேனோக்கி
கருணையுடன் சுழினையிலே நிசமென்றுநில்லே 1046



நில்லடாசிம் மெனவே வாசிகொண்டு
நிலையான தமரதிலே வாசியேத்து
வில்லடா விசைபோலே வாசியேத்து
விபறமுடன் யிரங்குதுரை அறிந்து கொண்டு
செல்லடா தமரதிலே நின்றுபார்த்தால்
சிவசிவா பூரணசந் திரனேகாணும்
உள்ளடா பூரணசந் திறனைக் கண்டால்
உருதியுடன் சிருஷ்டிதிதி சங்காரமாமே. 1047

## நாத தெரிசனம்

ஆமப்பா விந்தினிட தெரிசனமுஞ் சொன்னேன்
அருள் பெருகுநாதமதின் தெரிசனத்தைக் கேளு
தாமப்பா தன்னிலையை தானேகண்டு
சங்கையுடன் விபூதி தூளிதமே செய்து
சோமப்பால் கொண்டுபரி பூரணமாய் நின்றால்
சொல் நிறைந்த ஸ்வாசமது பாழ்போகாமல்
னாமப்பா சொல்லுகிறோம் மவுனம்பூட்டி
நாதாந்தத் தமர்வாசல் திரையை நீக்கே. 1048

நீக்கியந்த கேசரியில் மனத்தை நாட்டி
நிலையறிந்து ஓம்வசியென்று மைந்தா
தாக்கி நன்றாய் ரேசகபூரண மாய்நிற்க
தன்மையுடன் வாசியது உண்மையாகும்
போக்குவரத் தாகிநின்ற வாசிமைந்தா
பொருந்தி நின்றதமறதிலே யடங்கினாக்கால்
வாக்குமன தொன்றாகி மனதுகூர்ந்து
மகத்தான கேசரியில் சோதியாமே. 1049

## உருவ தெரிசனம்

யோதியென்ற னாதாந்த தெரிசனமுஞ் சொன்னேன்
சுருபமென்ற உருவமதின் தெரிசினத்தைக் கேளு
ஆதியென்ற கோமுக ஆசான மேல்க் கொண்டு
அப்பனே விபூதி தூளிதமே செய்து
நீதியென்ற வாமமதால் மவுனம்பூட்டி
நின்றநிலை தமர்வாசல் திரையை நீக்கி
ஓதியதோர் பிரணவத்தால் உள்ளே சென்றால்
ஒளிவெளியும் வெளியொளியும் மொனறாய்ப்
போமே. 1050

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

ஒன்றாகி நின்றபொருள் தானேதானாய்
உத்தமனே அஷ்டசித்துந் தானேயாகும்
நன்றான ரவிமதியுஞ் சொன்னபடி கேழ்க்கும்
நாட்டமுடன் யிகபரமும் நன்மையாகும்
நின்றாடும் வாசியினால் மவுனங் கொண்டு
நெறியான தமரதிலே வாசமாகி
னேராத மவுனரசங் கொண்டாயானால்
குருவான தேசியடா வாசியாமே. 1051

## அருவ தெரிசனம்

வாசியென்ற உருவதுவே பொருளென்றெண்ணி
மனதுபரி பூரணமாய் பூசை செய்து
தேசியென்ற அருவமதின் தெருசனத்தைக் கேளு
திருகுமணி வாசலிலே மவுனம்பூட்டி
னாசினுனி சுழினை வழிதமருக்குள்ளே
னாவினுனி ஊடுருவ நாட்டங்கொண்டு
ரேசிவாசிம் மெனவே வாசியூது
நின்னகமும் விண்ணகமும் ஒன்றாங்காணேன். 1052

ஒன்றான காக்ஷியடா அருபமாச்சு
உத்தமனே அருபமென்ற காக்ஷி தன்னை
அண்டகேசரி யெனவே அமர்ந்து கொண்டு
அனுதினமும் பிறாணதாரகமாய் நின்றால்
குன்றாத சமாதியடா சோதியாச்சு
குருவான சோதியிலே கூர்ந்து கொண்டால்
நன்றான பதவியாட சாயுச்சிய பதவி
நாதாந்த பதவியென்ற அருபமாச்சே. 1053

## சாயுச்சிய தெரிசனம்

அருபமென்ற தெரிசனங்கள் பதினாறுக்கும்
ஆதியென்ற தெரிசனந் தான்மவுனபீடம்
சுருபமென்ற சோதியிலே மனக்கண்சாத்தி
சுத்தமுடன் அந்தரத்தில் மணினாவுன்னி
அருபமென்ற தெரிசனங்கள் யீரெட்டுந்தான்
அங்கனையே தோணுமடா அமர்ந்துபாரு
ரூபமென்ற சோதியிலே அமர்ந்து பார்த்தால்
துலங்குமடா நினைத்தவண்ணஞ் சோதிதானே.
1054



தானான சோதியடா உச்சிமூலம்
தனையறிந்து வாசியடா மவுனபீடம்
கோனான சுழினையடா நந்திக்கம்பம்
குருவான மூலமடா ஓங்காரந்தான்
வானான வட்டமடா கபாடவாசல்
வரையறிந்து திரையகத்தி மவுனங்கொண்டால்
தேனான அமுர்தரசந் தெளிவுகாணும்
தெளிவான ஒளிவரிந்து வெளியைக்காணே. 1055

காணவே சொல்லுகிறேன் கமலந்தன்னை
கண்மூக்கு மத்தியிலே கருத்தைவைத்து
தோணவே காணுமடா கணேசன்மூலம்
துகளறுத்து சுழிமுனையி லொளியைக்கண்டால்
பூணவே காணுமா சுவாதிஷ்டானம்
புத்தியுடன் அச்சபையிலே பூண்டுபாரு
ஊணவே சுழினையிலே மணினாவுன்னி
ஓடாது வாசிசரம் னாதம்தானே. 1056

தானான மவுனமயடா பூரகந்தான்
தன்னிலை யிற்றானரிந்து ஒளியைப் பாரு
ஊனான அனாகதம்பின் கடைக்கண்ணாலே
உருமையுடன் ருத்திரன்றன் ஒளியைப்பாரு
வானான ஆக்கினையிற் சதானந்தி
மணிமேவும் சதாசிவந்தன் ஒளியைப்பாரு
கோணாமல் குருமுறையாய் பார்த்தபின்பு
குண்டலியாம் ஆதாரம் மூலம் னோக்கே. 1057

னோக்குவதுக் கொருபோது அமுதுகொள்ளு
னுண்மையுடன் பின்கலையில் மவுனமுனி
னாக்குனுனி சுவையாக மரிந்துகொள்ளு
னலமான உமினீறு மதுவேயாகும்
மூக்குனுனி சுழினையிலே வாசியேற்ற
முத்திபெற யிப்படியே புத்திசொன்னேன்
பாக்குடனே வெத்திலையும் அகலதள்ளு 1058
படுக்குமிடக் கறத்தில் தலையைத்தாங்கே.

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

தாங்குவதுக் கனுபோகம் சூரியனிலக்கூடுஞ்
சைபோக மானதென்ன சிவயோகமைய்யா
தூங்குவது மவுனமதாய் தூங்கவேணும்
தூங்கையிலே சோதிப்பிரகாசம்பாரு
ஓங்குவதுக் கோங்காரக் கம்பம்நாட்டி
உத்தமனே மேல்வாசற் குள்ளேதாக்கு
வாங்குவதுக் கிடமரிந்து சாத்தைவாங்கி
வளமான ரேசகந்தான் மேலேதாக்கே. 1059

தாக்கடா மேல்வாசற் குள்ளேசென்று
சாக்கிரத்தின் கண்மூடி சதாநித்தம்பாரு
னோக்கடா னோய்களெல்லாம் அகன்றுபோகும்
னுண்மையுடன் பாத்துவரக் கண்மூடாமல்
வாக்கடா பேசாதே மவுனம்பூட்டு
மகத்தான சமாதியடா விளங்கும்பாரு
போக்கடா ஐம்பொரியை அடித்துத்தள்ளு
பூரணமாய் மதியமுர்தம் விளங்கும்பாரே. 1060

விளங்குமடா குருபாதம் நடுலலாடத்தில்
மெஞ்ஞான விழிரெண்டும் மேவுங்காலம்
தளங்கொண்ட புரியஷ்டம் பூரணமும்மேலாய்
தன்மையுடன் ஒருவழியாய்ச் சார்ந்துநிற்கும்
குளங்கொண்ட சமாதியடா மவுனமார்க்கம்
குருமுறையாய் சமாதியிலே கூர்ந்துபார்க்கில்
நலங்கொண்ட மவுனமடா அண்டமேரு
னாதாந்த வேதமடா சுழினைதானே. 1061

தானென்ற தியானமடா அஞ்சுஞ்சொன்னேன்
தன்மையுள்ள ஆதார நலமுஞ்சொன்னேன்
கோனென்ற குருவருளால் ஒளியைக்காண
குருவான தியானமதின் குருவுஞ்சொன்னேன்
தேனென்ற பஞ்சசத்தி திகைஷசொன்னேன்
சிவபீஜா க்ஷரத்தினுட திறமுஞ்சொன்னேன்
வானென்ற சடாதார யோகத்துக்கு
வரிசையுடன் தானிருந்து வாசியூதே. 1062



## வாசிதாரணை

வாசி யென்ற விடகலையில் பூரணந்தான் ரெண்டு
வரிசையுள்ள சுழினையிலே கும்பகந்தானாது
தேசியென்ற பின்கலையில் ரேசகந்தாநொன்று
செம்மையுடன் பவரணையை யொட்டுச்சந்திரன்
வேசியென்ற முறை அம்மாவாசி தொட்டு
நிசமாக வளர்பிரையிற்றாக்கிப்பாரு
மாசியென்ற பித்தநீர் பாயாவண்ணம்
மதிபாத்துக் கண்ணாலே னோக்குவாயே. 1063

னோக்கடா ஆதாரம் பனிரெண்டும்பார்த்து
உண்மையுடன் தமர்வாசற் குள்ளேவாசி
தாக்கடா ரேசகமாய் கண்டம்பாயும்
சக்தியிடை பாயாமற் பின்கலைக்கேரேசி
வாக்கடா மேல்வாசல் பூட்டிவிட்டால்
மகத்தான பொரியதுவும் பூதாதய்யா
னாக்கடா வாசிதா ரணையுமாச்சு
நலமான சுழிமுனையில் நாடிநில்லே. 1064

நில்லடா அக்கினி தாரணையுமாச்சி
நிசமான விந்துவுடன் னாதங்கூட்ட
செல்லடா திசைனாதம் இளம்புமப்பா
திடமான பூரணமாம் மதியினுள்ளே
அல்லடா அமுர்தமது கக்கலாகும்
அடவான அமுர்த தாரணையுமாச்சு
கல்லடா ஆதாரங் காலன்மாண்டான்
காலனென்ற விடகலையை றவிதானுண்டே 1065

உண்டதொரு ரவியாலே மதியமுர்தமாச்சு
ஊதியனல் தான்கொளுத்த வேற்வையாச்சு
கண்டதொரு அப்புதாரணைதான் மைந்தா
கல்தேகமானதினால் தாரணையாம் பூமி
கொண்டதொரு மேல்வாசல் திறந்தபோது
குருவான தாரணையாம் வெளிச்சமாச்சு
அண்டபிண்டம் ரெண்டுமடா ஒன்றாய்நின்று
ஆகமுடன் னிருவினையும் அமந்தமாதே. 1066

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

ஆமிந்த வாசிரவி யூடேசென்று
அடங்கினது பிராணாயம் அய்யாசொன்னேன்
ஓமிந்த திருவாசி மேலேயேறி
உரைத்திட்டால் பிரத்தியா காரமாச்சு
தாமிந்த இப்படியேதான் பிர்மமாகி
தன்மையுடன் பூரணத்தில் சொக்கிப்பாரே
போமிந்த னேமமுடன் யெமந்தானும்
பூரணத்தில் சேர்ந்தவன் போலிருக்கப்பூணே. 1067

பூணாக மனத்தோர்க்கு தியானமேது
புத்தியறிவில்லார்க்கு ஞானமேது
வீணான வீணர்க்கு வாதமேது
விண்ணதனை யரியார்க்கு யோகமேது
ஊணாத மனத்தோர்கரு மவுனமேது
உறுதிமன மில்லார்க்கு கெவுனமேது
பேணாத மடையர்க்கு உயிர்தானேது
பிறாணநிலை யறிந்து நடுக்கங்காணே 1068

ஓடுக்கமென்ற நிலையதுதானுண்ணாக்குள்ளே
ஓசந்த திட்டுக்கடுக்க ஒருகுகை தானுண்டு
அடக்கமென்ற குகையதனை கா ணவென்றால்
அரிதரிது வெடிகடினம் அரியப்போமோ
திடக்கருந்து பஞ்சகனை தீக்ஷைபெற்று
தூண்டாத மணிவிளக்கை தூண்டினாக்கால்
நடக்கும்வழி துலக்கமதாய் அங்கே காணும்
னாதாந்த அண்டவெளி தொண்டைதானே. 1069

தானென்ற தொண்டையடா விந்துவட்டம்
தமரதிலே கொண்டெழுந்த வாசிதன்னால்
கோனென்ற முக்கோண மவுனபீடம்
குருவான பீடமடா மவுனமூலம்
வானென்ற மூலமதில் மணினாவுன்னி
மார்க்கமென்ற அனுக்கிறக வாசல்சென்று
பூனென்று மனம்நிறுத்தி மவுனங் கொண்டால்
பூரணமாய் மதியமூர்தம் பொங்கும்பாரே. 1070



## ஒடுக்கம் தோற்றம்

பாரப்பா அண்டபகி ரண்டமெல்லாம்
பாங்கான பூரணத்தில் செனித்தவாறு
னேரப்பா மேகசிலம் உவரைவீக்கி
னேர்மையுடன் குன்றுசெடி தாபரங்கள்
வீரப்பா தழைத்தாப்போ லந்தமேகம்
விபரமுடன் சூரியனில் வொடுங்கும் பாரு
சாரப்பா அகாரத்தில் உகாரந்தோன்றி
தண்மையுள்ள ஆகாரமுடன் விந்தினாலே. 1071

னாலான விந்துவதிலநந்தம் சோமன்
நயந்து பார்நெறியோடு நாதாந்தந்தான்
மேலான உகாரமதிற் சத்திதானும்
வியற்பிணியும் சாமளைமுந் துண்மனைதானப்பா
னாலான கருணைதரும் ஓமரூபி
நன்மையுடன் அனந்த முதலானாதையோடு
மாலான ஆனாகிருதை யிதுநானுந்தான்
மார்க்கமுடன் சிவகலையாய் மகிழ்ந்துகாணே. 1072

காணவே சோடமாங் கலைதானாகி
கமலமதை னோக்குதற்கு காலாய்நின்று
பேணவே அகாரந்தான் சோதியாகி
பிரளாமன் மூலமதிற் பிலமாய் நிற்கும்
பூணவே அகாரத்தான் அண்டத்துள்ளே
பொருந்திநின்ற அக்கினிபோல் போதமாகும்
தோணவே மகாரந்தான் கண்டந்தன்னில்
துலங்கிநின்ற ஆதித்தன் காந்தியாமே. 1073

## மேலாதார தெரிசனம்

காந்தியென்ற விந்துவது மீன்போல் தோன்றி
கண்டமதில் அங்குலம்னால் கடந்துநிற்கும்
சாந்தியென்ற புருவமதில் சாந்தமானால்
சந்திரன்போல் ஒளிவீசும் தன்மையாகும்
பாந்தியமாய் தினந்தோறும் பழக்கமானால்
பாலகனே கற்ப்பூர தேகமாகும்
சேர்ந்துபார் அங்குலமேல் மூன்றேயானால்
சிவசிவா சோடசமாம் கலைதான்பாரே. 1074

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

பாரப்பா புகைபோலே யாகுந்தேகம்
பதிவாக அதினூடே சேர்ந்தால் மைந்தா
னேரப்பா கந்திருடு மேலேபோகும்
நீமகனே அங்குலம் மூன்றப்பால் சென்றால்
பேரப்பா னாதகலை மாணிக்கம் போல்
பிரளாமல் வொளிவீசும் பேணிப்பாரு
சாரப்பா னாகாந்த உச்சிமீதில்
சார்ந்திடுவாய் மின்கோடி ஒளிபோலாமே. 1075

ஒளியான மாத்திரைதான் அரைக்கால் வைத்து
உற்றுப்பா ரந்தநிலை மாயாமாயம்
தெளிவான பேரின்ப மோக்ஷவீடு
திரைகடந்து அங்குலனால் சென்றபோது
அழியாது சந்திகலை ரவிபோல் தோன்றி
அரைவாகாணி மாத்திரைதா னங்கேஒத
விழியான சுடாதாபா லுந் தன்மேகம்
விளங்குமடா சித்திமுத்தி மேவிக்காணே. 1076

காணவே அங்குலம்னால் கடந்துமைந்தா
கயிலாச வியாபினியாய் கலைதானின்று
ஊணவே ஆதித்தன் ஒளிபோல்காணும்
உண்மையுடன் மாத்திரைமா காணிவைத்து
பேணவே தியானித் தாலுந்தன்தேகம்
பேர் பெரிய றவிபோல சாந்திகாணும்
பூணவே தோத்திரஞ் செய்மவுனத்தாலே
புத்தியுடன் சித்திமுத்தி வருகுந்தானே. 1077

தானான உச்சிவெளிக் கப்பால் மைந்தா
சமனாக நின்றநிலை ஒளிபோற் காணும்
தானான மாத்திரைதான் அரைமாகாணி
தன்மனதின் கண்ணாலே தாண்டிப்பாரு
தானான தேகமப்பா ஒளிபோல்வீசும்
தன்மையுடன் னுன்மனையைத் தாண்டிப்பாரு
தானானவெளி யொளிபோல் காந்தி தோன்றும்
சங்கையுடன் மாத்திரைதான் அரைக்காலோதே.
1078



ஒதினால் வெளியொளி போலுந்தன் தேகம்
ஒளிவிளக்காய் நின்றதடா பிடிகொண்ணாது
சோதிபிர அண்டபகிரண்ட மெல்லாம்
சுத்தமுடன் சித்துவிளை யாடலாகும்
நீதியுடன் ஆதாரமாதில் நின்றால்
நின்தேகம் பரசுருபம் நிசங்காண் மைந்தா
ஆதியாய் நின்றதிரு வாசிமூலம்
அறிந்து தலந்தனில் நிருத்த மவுனஞ்சித்தே. 1079

## சித்தி மூலம்

சித்திதரும் மூலம் ஒன்று செப்பக்கேளு
சிவ்வுடனே அவ்வோடே கிலியுங்கூட்டி
பத்தியுள்ள பாதையென்று னாயன்சொன்னார்
பரமான சுழிமுனையில் பதிவாய்க் கண்டேன்
சத்திக்கி சவ்வுண்டு சித்தியானால்
சதாசிவனும் மனோன்மணியும் தானேதானாய்
புத்திக்குள் ளிதைப்பாரு ஒன்றாய்க் காணும்
பூறணத்தால் அஞ்செழுத்தை போற்றுவாயே. 1080

போற்றியதோர் மூன்றெழுத்தை பூண்டுபாரு
புத்தியுடன் யெட்டெழுத்தை வாலைதானாம்
ஆற்றியதோர் அரியெழுத்து அழுத்திப்பாரு
ஆதியென்ற சுயம்புலிங்கம் அதுதான் மைந்தா
சாற்றியதோர் யெழுத்தரிந்து பிடித்துவாங்கு
சங்கையுடன் னோரெழுத்து தன்னைப்பாரு
யேற்றியதோர் ஒரெழுத்தை அரியச் சொன்னேன்
யிதுவரைக்கும் ஆரரிவார் தன்னைக்காணே. 1081

காணரிதாய் நின்றதொரு மூலசூக்ஷம்
கண்டவர்கள் சிவயோகி சிவன்முத்தன்
பூணரிதாயுலகத்தில் மாண்பர் தானும்
புத்தியுடன் யேறுகிற வழியைக் காணார்
தோணரிது விழிமயக்க மைந்தா மைந்தா
சுழிதிறக்க மேலாகும் சுத்தமாகும்
பேணரிது பேணரிது மனப்பேய் மைந்தா
பிலத்த புத்தி அறிவாலே குருவைக்காரே. 1082

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

காரப்பா வாசியினால் சாகரத்தினுள்ளே
கலந்தாக்கால் சிவயோகம் கைக்குள்ளாகும்
யேறப்பா வாசிகொண்டு கனவைத்தாண்டி
யேகாந்த நிராதாரங் கடந்தாப்பாலே
சாரப்பா சுழியில்நின்று விட்டனானை
சார்ந்து கொண்டு நீயரிந்து பதத்தைப்பாரு
னேரப்பா நின்றுமனம் நின்றோடாது
நிலையரிந்து காதவனே யோகியாமே.

ஆமப்பா சிவயமென்று மயவசியென்றும் 1083
அப்பனே வசியமென்றும் மூன்றுதிரம்பாரு
ஓமப்பா பிறாணாயம் மொன்றதாச்சு
உத்தமனே ரெண்டுதிரம் ஓதினாக்கால்
தாமப்பா சுடரொளி போல்தேகமாகும்
சாந்தமாய் சட்டையொன்று வெளுப்பாய்போகும்
காமப்பா பிராணாயம் யேமனேமம்
கண்மூக்கு மத்தியிலே கண்டுகூடே.

கூடப்பா யோகத்திலே குரிகண்ணாட்டி 1084
குமுருகின்ற னாகமதில் கூடியேறி
னாட்டப்பா அங்உங் ஓமென்றூணி
நன்மையுடன் சிங்வங் மங்கென்றேதான்
ஆடப்பா அஷ்டசத்தி தானாய் நின்பாள்
அஞ்செழுத்தில் மூன்றெழுத்தை அணைத்துமாறு
தேடப்பா அஷ்டாங்கம் நிலைநின்றாடும்
சிந்தைதனில் நினைத்தவண்ணம் தெளிவாய்
கேளே. 1085

தெளிவான பராபரையை சிவமென்றேத்த
சிவசிவா அஷ்டசித்துந் தெளிவாயாடும்
வழியான வாதசித்த காயசித்தி
மகத்தான ஞானமொடு யோகசித்தி
அழியாத ரீங்காரஞ் சுழியிற்சேரு
ஆதியென்ற ரீங்காரஞ் சுழியிற்சேரு
னெளியாமல் பராபரையாள் யெழுத்தை மைந்தா
நிலையான சுழினைதனிலே நிலைத்துத்தேறே 1086



தேறப்பா சாயுச்சிய பதவிகாட்டும்
சிவஞான ஞாவிதுபோல் செப்பதய்யா
னேரப்பா ஆயிரமாம் யிதழுக்குள்ளே
நின்றிலங்கும் அமுர்தமதை நினவாய்க் கொள்ளு
கூரப்பா கூருதற்கு னாவங்கேது
குரியறிந்து வாசியடா ஒளிபோல் காணும்
தேறப்பா வென்றுசொல்லி வைத்தேன் குகும்
சிவசிவா பூரணத்தில் சென்று பாரே.

பார்ப்பதற்கு வகையேது மைந்தா கேளு 1087
பதிவாக யிடையிலே வங்கென்றாது
சேர்ப்பதற்கு பின்னலையில் சிங்கென்றாணு
தீர்க்கமுடன் சிம்மென்று தெளிவாய்ப்பாரு
கார்ப்பதற்கு சுழினையிலே மங்கென்றாணு
கருணையுடன் மவுனமதால் கால்கொண்டேறு
யேரப்பா தற்குயோகமப்பா வாசியோகம்
யென்மகனே சுழினையில் சென்றிருந்துபாரே. 1088

பாரடா மூலமதில் விந்துவினால்தோணும்
பதிவான மூலமது நிர்மலமாய்க்காணும்
சீரடா சந்திரனில் னின்றவாசி
சிவசிவா சுழினையிலே சேர்ந்துநிற்கும்
கூரடா அகாரத்தில் உகாரஞ்சேர்ந்து
குருவான மகாரத்தில் குணமாயூது
யேறடா பிரமரந்திரத்தில் சென்று
யேகமென்ற சாலறிந்து யிருந்துஊதே. 1089

ஊதியதோர் வாசியதை அறிந்தோன்யோகி
உயிரிருந்த நிலையறிந்தோன் அவனேஆசான்
நீதியுடன் மனம்நிறுத்தி மவுனம்பூட்டி
நிலையறிந்து நின்றவனே கெவுனியாகும்
ஓதியதோர் வேதநிலைபிரம்ம மாகும்
உச்சியென்ற மூலமடா யூங்காரந்தான்
வீதியென்ற ஆதாரங் கடந்துமேலே
விளங்கும் ஒளிதனையறிய அகத்துள்நில்லே. 1090

நில்லடா நிலையறிந்து மனிணாவுண்ணி
நீமகனே பூரணத்தில் நின்றாயானால்
உள்ளடா ஆதார மூலமெல்லாம்
ஒளிவிளக்காய்த் தோணுமடா வணிப்பாரு
கொல்லடா கருவிகரணாதியெல்லாம்
குடிலமதைத் தாணகத்தி குருவைப்போற்றி
செல்லடா ஞானகேசரியாள் பாதம்
சிந்தைமனந் தொன்றாக தெளிவிற்காணே. 1091

காணுகிற கருவேது உருவமேது
கருணைவளர் பூரணமாம் வாசியேது
ஊணுகிற வாசியுட நிலையங்கேது
உற்றறிவ சத்திய மாய்கையேது
பூணுகிற பொருளேது அருளங்கேது
பொருந்தி மனங்கொண்ட அண்டபிண்டமேது
தோணுகிற மாய்கையெல்லாஞ் சுழிமுனையாட்டம்
சுழிமுனைவழி தனையறிந்து சுகத்தைப்பாரு. 1092

பாத்தனடா சுத்தவெளி பரத்தின்வீடு
பதிவான நடுவீடு அண்டத்துச்சி
காத்தனடா சுழிமுனைவழி னந்திசேர்வை
கண்ணறிந்து விண்ணதிலே கால்கொண்டேறி
சேந்தனடா ரவிமதியை சுழிமுனைக்குள்ளே
தீர்க்கமுடன் கால்நிறுத்தி பார்க்கபார்க்க
கூத்தனடா காலறிந்து மாத்திரைவைத்தேன்
ஓமுருகின்ற சிலம்பொலியிற் றேனேனே. 1093

தேறவே சவுமிய சாகரத்தைப்பார்த்து
தெளிந்துகொண்டே விருவினையின் செயலைக் கண்டு
மாரவே யெழுத்துவகை முன்னேசொன்னேன்
மகத்தான சித்தரெல்லாம் மறைத்துவைத்தார்
தேறவே ஓரெழுத்தை தியானித்தப்பா
சிவபஞ்சா க்ஷரத்தைதமைந்தா செவித்துக்கொண்டு
வீரவே மவுனமதை வெளியிற்சொன்னால்
வேகுமடா உன்சிரசு வெடிக்குந்தானே. 1094



தானேதான் விட்டகுறை மார்க்கந்தோர்கள்
சகலகலை நாம்பார்த்து நுணுக்கங்கண்டு
வானேதா னாகிநின்ற மவுனங்கொண்டு
மவுனமென்ற கெவுனமதின் தியானந்தாலே
கோனென்ற குருபாதம் தியானமாகும்
குரியறிந்து கருபதித்தி கொண்டுநின்று
தேனென்ற அமுர்தரச பானங்கொண்டு
சின்மயங் கொண்டென்னாளுந் தெளிவாய் நில்லே. 1095

தெளிவான குருமுறையைத் தவறாமல் தான்
தீர்க்கமுள்ள மனதாலே மவுனங்கொண்டு
சுழியான நிலையறிந்து ஆசுங்கொண்டு
துலங்குமணி வாசலுட திரையை நீக்கி
வழியான அனுக்கிரக வாசற்குள்ளே
மனங்குவிந்து சிவயோக வரிசைபெற்றால்
கனியாது காயமது கனகமாகு
கனகமென்ற கற்பூர தேகந்தானே. 1096

தானென்றும் சுழிமுனையென்றும் ஊமையென்றும்
சகலகலையாய் நிறைந்த அகரமென்றும்
வானென்ற வகாரமென்றும் யோகமென்றும்
மணிகெவுன குளிகையென்றும் வாசியென்றும்
தேனென்ற அமுர்தரச தெளிவேயென்றும்
தெளிவான பூரணமாம் தேசியென்றும்
கோனென்ற குருபீட மானதென்றும்
குருவிருந்த மணிமகுட பதிதான்காணே. 1097

பதியென்றும் பசுவென்றும் பாசமென்றும்
பரமகை லாசமென்றும் மேருவென்றும்
கெதியென்றும் சதுரகிரி மேருவென்றும்
கெவுன ரசமணிமகுடப் பொதிகையென்றும்
விதியென்றும் னாதாந்த வேதமென்றும்
விஞ்சையென்ற மந்திரமாம் யோகமென்றும்
மதியென்றும் ரவியென்றும் சுழிமுனையென்றும்
மகத்தான சோதியென்றும் உண்மைதானே. 1098

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

## பூரண சமாதி

தானென்ற பூரணத்தின் சமாதிகேளு
தரணிதனி லறியார்கள் வெளியாய்ச்சொல்வேன்
கோனென்ற அகாரமுடன் உகாரந்தொட்டு
குருவான மகாரமொடு மூன்றுங்கூட்டி
வானென்ற சஞ்சார சமாதிபண்ணு
வகையுடனே சிவதலத்தில் வணங்கிநில்லு
ஊனென்ற அறிவுகொண்டு யோகம்பாரு
உண்மையுள்ள மெஞ்ஞான உறுதியாமே. 1099

ஆமப்பா நிசைஷதிச நிசைஷயாகும்
அடங்கிநின்ற மந்திரமு மதுவேயாகும்
னாமப்பா சொல்லுகிறோம் மவுனமார்க்கம்
னாதாந்த அண்டவெளி சுழினைக்குள்ளே
தாமப்பா தன்னறிவா யுன்னியாடு
தன்மையுள்ள ஓங்காரக் கம்பம்னாட்டி
வாமப்பா லானதொரு மவுனமார்க்கம்
அகந்தான மார்க்கமடா மவுனந்தானே. 1100

தானான மவுனமதுக் குறுதியான
தன்மையுள்ள கற்பமொன்று சொல்லக்கேளு
தேனான கத்தாழஞ் சோறெடுத்து
தீர்க்கமுடன் தான்கழுவி செம்மையாக
ஊனான திரிகடுகு பொடித்துமைந்தா
உத்தமனே தானெடுத்து வைத்துக்கொண்டு
கோனான சற்குருவை தியானம் பண்ணி
குருவான கற்பகமென்று குவிந்துபொற்றே. 1101

போற்றி மனம்பூரணமாய் மைந்தாநீயும்
புகழான குமரிதிரி கடுகுமொன்றாய்
பாத்திபனே பீங்கான்தான் தாளிசேர்த்து
பத்தியுடன் தேனதிலே பதிவாய்விட்டு
சேத்துநன்றாய்த் தான்கிளரி ரவியில்மைந்தா
தீர்க்கமுடன் நவனாள்தான் வைத்தெடுத்து
ஆத்துமத்தின் செயலறிந்து அந்திசந்தி
அரகராமண்டலமாய்க் கொண்டுதேறே. 1102



## குமரி கற்பம்

தேறப்பா மண்டலமாக கொண்டு தேர்ந்தால்
சிவசிவா தேகமது திரமாய் நிற்கும்
வீரப்பா கொண்டகபம் மடிந்துபோகும்
வேதாந்த சுழினையுட வெளியுந்தோணும்
சாரப்பா சுழினையுட வெளியுந்தோணும்
சார்ந்திருந்து வாசிவலந் தானே கொண்டால்
ஆரப்பா உனக்கு நிகர் சொல்லப் போறேன்
ஆதியந்த சுழினையிலே அமர்ந்து நில்லே. 1103

அமந்துநிலை தனையறிந்து சுழினைக்குள்ளே
அருள்பெருகும் வாசிசரம் அழுத்திப் பார்க்க
அமந்துநின்ற பஞ்ச அரை அங்கேதோணும்
அதையறிந்து கிருகுமணிப் பூட்டைமைந்தா
அமந்து அந்த கிருகுமணிப் பூட்டு தன்னை
ஆடிநின்ற சக்கரத்தா லழுத்தும்போது
அமந்துநின்ற திரையகண்டு அமுர்தமூறும்
அந்தமுர்தம் பூரணமா யறிவாயுண்ணே. 1104

அறிவான கர்ப்பமடா குமரிகர்ப்பம்
அதையறிந்து கொண்டதினால் மைந்தாகேளு
குறியான சுழினையிலே வாசியேறி
கோடிரவி காந்தியென போதமுண்டாம்
திருவான போதமதால் தெவுனமுண்டாம்
தேகமென்ற ஆகமமே சிவசொரூபம்
உருவான சிவசொயூபந் தனையறிந்து
உண்மையுடன் வாசியென்ற மலரைச் சாற்றே 1105

சாற்றடா மலரறிந்து மனக்கண் கொண்டு
சரந்தொடுத்து சுழினைவரு தானே கண்டால்
காத்தடா அசையாது சுழியின்காத்து
காலறிந்து நிலைநிருத்தி கடைக்கண்ணாலே
பாத்தடா பதியமனம் பதிவாய் தூண்டி
பரஞான கேசரியில் வாசமானால்
கூத்தடா திருநடன சபையில் காணும்
குருவான கனகசபை சுழினைதன்னை. 1106

கரிசாலை நெய்

தானென்ற சுழினைவழி கண்டுதேற
சாதகமா யின்னமொரு பாகங்கேளு
வீனென்ற கபமகல மைந்தாமைந்தா
விபரமுடன் கரிசாலை சாறுவாங்கி
கோனென்ற குருவருளா லாவின்நெய்யை
கூற்மையுடன் இடைசரியாய் கலந்துகாச்சி
னானென்ற ஆனுவத்தை அகலத்தள்ளி
நன்மையுடன் னெய்யதனை வடித்துக் கொள்ளே. 1107

வடித்ததொரு நெய்யதனை மைந்தாகேளு
மார்க்கமுடன் தர்ச்சனையுடம் மத்திமையுங்கூட்டி
கடுத்ததொரு நெய்யதனை தொட்டு நீயும்
கண்டமதிற் சுற்றிவிடு கபநீரெல்லாம்
பிடித்தகபம் கட்டறுத்து ஆறாதாரம்
பெரிதான ஸ்தூலமது சூக்ஷமாகும்
அடுத்ததொரு மேல்வாச லடைப்புநீங்கும்
அரகரா அதின்சூக்ஷ மரியலாச்சே. 1108

ஆச்சப்பா சூக்ஷமதா யிருந்து கொண்டு
அப்பனே கரிசாலை னெய்யில்மைந்தா
பாச்சப்பா பெருவிரலை தோய்த்துஅந்த
பதிவான அண்ணாக்கை பதிவாய் சுத்தி
காச்சப்பா யிப்படியே பத்துவிசை சுற்று
கபாடமதில் நின்றகபம் கழன்றுபோகும்
மூச்சப்பா ஓடுகின்ற அண்டவாசல்
மூடிநின்ற திரையகண்டு வழிசொல்லாமே. 1109

வழியான சுழினைவடி கபாடவாசல்
வங்குசிங்கு சுழினைவழி வாசற்குள்ளே
னெளியாமல் வாசிசர மதிலேபாய
நிசமான புலத்தியனே சொல்லக் கேளு
சலியாமல் சுகாசனமா யிருந்து கொண்டு
தர்ச்சனையும் மத்திமையுந் தானேசேர்ந்து
அழியாத பேரின்ப வீட்டைப்பற்றி
அண்ணாக்கை யுண்ணாக்குள் ளடக்கும் பண்ணே. 1110



பண்ணப்பா அண்ணாக்கை யுண்ணாக்குள்ளே
பயபத்தியா யடக்கம் பதிவாய்ச் செய்து
விண்ணப்பா தோன்றிநின்ற சந்தாதி விடையம்
விபரமுடன் தான்கண்டு மெஞ்ஞானதீபம்
கண்ணப்பா தான்துலங்கி கமலமீதில்
காணுதடா பூரணமாய் கனிவாய்ப் பாரு
யெண்ணப்பா வென்றிதனை மறந்திடாதே
யிகபரமாய் நின்றுவிளை யாடலாமே. 1111

ஆமப்பா அகண்டவெளி கண்டுயேறு
அரிதரிது வெகுகடின்ம் அரியப்போமே
னாமப்பா வென்றசத்த மரிந்தானாகில்
னாடுமுன்னே அண்டவெளி நயமாய்க் காணும்
காமப்பால் கானல்ப்பால் கருவாய்க்கொண்டு
கருணையுடன் கேசரியில் கலந்துகொண்டால்
சோமப்பால் சொலிக்குகின்ற அண்டமேரு
சுத்தமுடன் தோணுமடா னித்தம்பாரே. 1112

நித்தமும்நீ தப்பாமல் சுத்தமாகி
நீ மகனே வாசிசரம் சுழினைக் கேத்து
சுத்தமுடன் தானிருந்து சுழினைக்குள்ளே
சுகமான அங்குஷ்டம் சொருகி மைந்தா
சித்தமுடன் மனதரிவாய் சுற்றும்போது
சிவாயகுரு சொருபமது தீபம்போலே
பத்தமுடன் காணுமடா பதிவாய்ப்பாரு
பதிவான ஜீவகலை ஒளிதான்பாரே 1113

ஒளியறிந்து மவுனியேற வகையைக் கேளு
ஓமென்ற பிரணவத்தால் உன்னிமைந்தா
வழியறிந்து நடராஜ நந்தி வாய்வை
மார்க்கமுடன் யேகமதாய் வணக்கமானால்
வெளியறிந்து பரமவெளி யுச்சிமூலம்
வேதாந்த மூலமடா நாதாந்தத்தில்
மூழியறிந்து மூழிநிறுத்திக் கொண்டால் மைந்தா
முத்தியுள்ள மவுனமடா சுத்தமாமே. 1114

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

சுத்தமுடன் நின்றுவினை யாடுதற்கு
தொடு குறிபோல் யின்னமொரு சூக்ஷஞ் சொல்வேன்
பத்தமுடன் யோகந்த சித்தமாகி
பரமகை லாசகுரு பாதம்போற்றி
புத்தியுடன் ஸின்றுதிரு வாசியேரி
பூரணமாய் சுழினையிலே மனக்கண் சாற்றி
சுத்தமுடன் ஓங்கார விசையினாலே
வரிதையிலே நின்றுமனந் தாங்கி நில்லே. 1115

நில்லடா சரிதையிலே நின்றுதேறி
நிசமான கிரிகையிலே நேர்ந்துகொண்டு
உள்ளடா உடலறிந்து யோகம் பண்ணு
உண்மையென்ற யோகமதில் உறுதியானால்
செல்லடா ஞானமென்ற நிலையில் நின்று
திருவான பூரணத்தைக் கண்டுகொண்டு
சொல்லடா சொல்நிறைந்த மவுனத்தேகி
சுகமறிந்த சூட்சநிலை கண்டு கொள்ளே. 1116

கண்டதொரு னாலுக்கும் பகையேதென்றால்
கசடான காமியமாம் சித்தத்தாலே
விண்டதொரு பிறாரத்துவ கர்மத்தாலே
விளங்கிநின்ற நாலுக்கும் விக்கினங்களாச்சு
கொண்டதொரு னாலுதனை சொல்லக்கேளு
கொடிதான வறுமையொடு சிலேசம் துக்கம்
சென்றதொரு பெண்ணாசை மண்பொன்னாசை
ஜகத்திலுள்ளோர் தான்மயங்கி தியங்குவாரே 1117

தியங்கினால் வாசியது மயங்கிப்போகும்
திறமறியா மானிடர்கள் செகத்தினுள்ளே
மயங்கினார் மாய்கையிலே மகிழ்ந்துகொண்டு
மாசற்ற சோதியிலே மனஞ்செல்லாமல்
தயங்கினார் காமவலைக் குள்ளேசென்றுத்
தன்னிலையைத் தானறிய மாட்டாமல்தான்
மயங்கியதோர் மயக்கத்தால் ஞானம்போச்சு
மகத்தான அறிவதுவும் மாண்டுபோச்சே. 1118



மாண்டுசடம் போகாமல் தெளிவதெப்போ
மகத்தான அறிவதிலே வாழ்வதெப்போ
பூண்டு கொண்ட ஆசையது ஒழிவதெப்போ
பொல்லாத மாய்கைவிட்டு நிற்பதெப்போ
ஆண்டு கொண்ட காமவலை அறுப்பதெப்போ
அலைச்சலற்று நிற்பதெப்போ அய்யா அய்யா
தாண்டியந்த கேசரியில் மனதைநாட்டி
சதானந்த போதமதாய் மூலம்பாரே. 1119

பாரப்பா ஆறுதலங் கண்டுதேறி
பதிவான மேலாறில் சென்றுபுக்கி
காரப்பா சுழிமுனையில் கலந்து கூடி
கருணையுள்ள மனோன்மணியை கண்டுபோற்றி
னேரப்பா மவுனமென்ற கேசரியில்சென்று
நீமகனே பராபரத்தில் நேர்ந்துகொண்டால்
சாரப்பா பிறப்பு பிறப்புந் தவிர்ந்துபோகும்
சதாபோத பிரணவ ஓங்காரங்காணே. 1120

காணப்பா பிரணவங் கொண்டிருந்தமூலம்
கருணையுள்ள பஞ்சகர்த்தா யிருந்தவீடு
பூணப்பா அவ்வீட்டில் மனக்கண்கொண்டால்
பொருளான அகாரமுதல் உகாரங்காணும்
ஊணப்பா மகார மொடுவிந்துனாதம்
உண்மையுடன் தானிருக்கும் அறிவானந்தம்
பேணப்பா அறிவான மவுனதேகில்
பிலமான போதமது பிலக்கும்பாரே. 1121

பிலமான ஓங்காரம் மண்ணையுண்ணும்
பெருகிநின்ற மண்ணதுவும் சிலத்தையுண்ணும்
சிலமான சிலமதுதான் தீயையுண்ணும்
கொடிதான தீச்சென்று வாய்வையுண்ணும்
சணமான வாய்வதுதான் விண்ணையுண்ணும்
சங்கையுள்ள செடமதுதான் தானேபோச்சு
தலமான தலமறிந்து தன்னைக்கண்டு
சந்திரகலை அமுர்தமமை கொண்டுகாணே. 1122

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

காணவே அகாரமது உகாரந்தைக்கொள்ளும்
கருவான உகாரமது மகாரந்தைக்கொள்ளும்
பூணவே மகாரமது விந்துவைத்தான்கொள்ளும்
பொருந்தி நின்றவிந்துவது னாதந்தைக்கொள்ளும்
தோணவே நாதமது சத்தியைத்தான்கொள்ளும்
சிகமான சத்தியல்லோ சிவத்தைக்கொள்ளும்
பேணவே சிவந்தன்னை பரந்தான்கொள்ளும்
பெரிதான பரஞ்சென்ற விடத்தைப்பாரே. 1123

பாரப்பா மூலமுத வாறும்பாரு
பதிவான சுழிமுனையை அரிந்துகொண்டு
சாரப்பா சாம்பவியைத் தானேகண்டு
தண்மையுடன் தானிருந்து தானேநின்றால்
சாரப்பா வாழ்வுசிவ யோகம்வாழ்க்கை
கதிர்மதியு மற்றவிட யோகமாச்சு
னேரப்பா நின்றஇடங் கண்டால்யோகி
நிசமான கேசரியைக் கண்டுபாரே. 1124

கண்டுபார் லகிரியுண்ண மேலேயேறும்
காணாம லகிரிவிட்டால் கீழேபாயும்
வுண்டுபார் குளிகையிட்டால் க்ஷணத்துக்குள்ளே
ஊடுருவக் கடந்தேறி லொளியுங்காணும்
அண்டமொரு புவனமதை கண்டாயானால்
ஆதிவஸ்தும் அனாதிவஸ்தும் வொன்றாய்காணும்
நின்றுபார் நிர்க்குணத்தில் அமூர்தமள்ளி
னிசமான ஞானசத்தி யூட்டுவனே. 1125

ஊட்டினதோர் தாயைவிட்டா லுரவுமுண்டோ
உலகத்தில் பூரணியைத் தூஷிப்பார்கள்
ஆட்டினதோர் திரோதாயி தானேநின்று
ஆகாதமாய் கையிலே அமுத்திக்கொண்டு
மாட்டினதோர் ஞானமெல்லாம் மக்கித்தள்ளி
மகத்தான காமமெனும் வலையைப்போட்டாள்
நீட்டினதோர் போதமதால் ஞானமாச்சு
திலையரிந்து கொண்டவர்கள் வாசிபாரே. 1126



வாசியென்று மவுனமென்றும் ரெண்டுமொன்று
மகத்தான கேசரியும் சாம்பவியுமொன்று
தேசியென்றால் யோகத்துக் காதிவித்தை
திரமான மவுனமென்றால் ஞானவித்தை
மாசியென்ற மயக்கமுற்றால் ரெண்டுமாக
மகத்தான அரிவுவந்தால் ரெண்டுமாகும்
னாசியென்ற வெளியல்லோ அகண்டவீதி
னாதாந்த பூரணத்தில் னாடியேறே. 1127

யேரடா ஆதார மூலங்கொண்டு
யென்மகனே சத்தாதி விடயம்போக்கி
னேரடா குருபதியில் மனதைவைத்து
னேர்மையுடன் பூரணமாய் மவுனம்பூட்டி
சாரடா அகண்டவெளி யுச்சிவீதில்
சந்திரனை சூரியனில் தாக்கிக்கொண்டு
காரடா கற்பூர தீபந்தன்னை
கண்ணாக்கு மூக்குநிலை கண்டுபாரே. 1128

பாரப்பா உலகத்தில் மனுக்கள்கோடி
பாழான மாய்கையிலே மனதுபூண்டு
னேரப்பா கெஜதுரக ரதங்களேறி
னேசமுடன் பூஷணங்கள் தரித்துக்கொண்டு
பேறப்பா கொண்டவர்க ளாருமில்லை
பேறான சிவயோக வாழ்க்கைவந்தால்
மேரப்பா மேருகிரி தீபம்போலே
மெஞ்ஞான பூரணத்தில் கூடிவாழே. 1129

வாழ்வதற்கு ஆதியடா மவுனயோகம்
மகத்தான யோகமடா திசமாந்தீட்சை
ஆள்வதற்கு அதிகமடா திசமாந்தீட்சை
ஆதியென்ற மூலமடா ஓங்காரத்தில்
தாழ்வதில்லை யுயர்வதில்லை மூலவன்னி
தண்மையுடன் தானரிந்து வாசியேரி
சூழ்வதற்கு அண்டவெளி சுழினைமேவி
சுத்தமுடன் தானிருந்து நித்தம்பாரே. 1130

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

பராப்பா குண்டலிக்குள் மூலமொன்று
பதிவான கேசரியின் மூலமொன்று
னேரப்பா சாக்கரத்தில் மூலமொன்று
நிசமான விந்துவென்ற மூலமொன்று
சாரப்பா சத்தியென்ற மூலமொன்று
சகலகுரு பராபரமா மூலமொன்று
சேரப்பா இதையறிந்து ஆதிமூலம்
செயலறிந்து கொண்டவனே சித்தனாமே. 1131

சித்தமுடன் தானிருந்து யோகமூலம்
திருவான மூலமடா சுழினைமய்யம்
சுத்தமுடன் சுழினையிலே மணிநாவுன்னி
சோதிதிரு மணிவாசற் குள்ளேசென்று
சத்தமுடன் சேர்ந்தவரே அகலத்தள்ளி
தன்மனமே சாக்ஷியதாய் தானத்தேகி
பத்தமுடன் குருபதியில் நின்றாயாகில்
பரஞான கேசரியில் வாழ்வாய்காணே. 1132

கண்ணேது காதேது முகங்களேது
கருணையுடன் கண்டதெல்லா மழிந்துபோச்சு
வொண்ணேது வொண்ணுமற்று நின்றதேது
வுற்றுப்பார் வெட்டவெளி யொன்றுமில்லை
விண்ணேது வெளியேது வொளியங்கேது
வேதாந்த கேசரியில் நின்றுபாரு
யெண்ணேது யெழுத்தேது யெகமேது
யேகநிறா மயமான யிடத்தைக் காணே. 1133

காணவே கேசரியில் மனதைவைத்து
கருணையுடன் பூரணத்தில் கலந்துகொண்டு
பூணவே புருவமய்யத் தமருக்குள்ளே
புத்தியுடன் சித்தமதாய் வாசிபூட்டி
பேணவே கேசரியில் வாழ்ந்துகொண்டால்
பேசாத மவுனமது கைக்குள்ளாச்சு
தோணவே மவுனமது கைக்குள்ளானால்
சுகசிவ பிராணகலை சுத்தமாமே. 1134



சுத்தமுள்ள சவுமியசா கரத்தைமைந்தா
சுகமறியா மாவிடர்க்கு யீந்தாயானால்
பத்தமுள்ள தேகமதை காணமாட்டாய்
பரமகைலாச மதில் சேரமாட்டாய்
கற்றதொரு மந்திரங்கள் வுதவாதய்யா
காலான வாசியது நிலையாதய்யா
முத்தமிழ்சேர் புலத்தியனே பதனம் பண்ணி
மோனமுடன் தானிருந்து தன்னைப்பாரே. 1135

தன்னைப்பார்த் தறிவதற்கு மைந்தா மைந்தா
சாகரமும் பூரணமுந் தானே பார்த்து
விண்ணைப்பார்த் தந்தநிலை சோதிகாண
வேதாந்த காவியத்தை விரும்பிப்பாரு
கண்ணைப்பார் சகலகலை கியானம்பாரு
கருத்துவைத்து தத்துவமா யிரத்தைப்பாரு
மண்ணைப் பாத்தமர்ந்துநிலை கூடுதற்கும்
மகத்தான பூரணகே சரியைக்காணே. 1136

காணப்பா பூரணகேசரியை மைந்தா
கருணைவளர் ஆயிரமாய்க் கருவாய்ச் சொன்னேன்
பேணப்பா சொன்னகரு விந்திரசாலம்
பெரிதான ஜாலமதை பேணிப்பாரு
பூணப்பா மந்திரகலை மாந்திரீகம்
புத்தியுடன் ஆயிரத்தை பூண்டுபாரு
தோணப்பா சகலமுமே தொடுத்துப் பார்க்க
சொல்ல ஒண்ணா மவுனத்தின் தீக்ஷைபாரே. 1137

பாரப்பா திசதீக்ஷை யார்தான்காண்பார்
பதிவான மவுனமென்ற திசதீக்ஷைபெற்றால்
னேரப்பா திசதீக்ஷை நிலைகாணலாகும்
நிசமான மந்திரங்க ளெல்லாஞ்சித்தி
காரப்பா மவுனதிச தீக்ஷைதன்னை
கருத்துவைத்து பாராட்டால் கண்ணைக்குத்து
சாரப்பா கண்ணறிந்து தன்னைப்பார்த்தால்
தன்மயமும் சின்மயமாய்த் தானாவாயே. 1138

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

தானென்ற ஆனுவத்தை தன்னமாட்டார்
சங்கையுடன பூரணத்தைச் சாரமாட்டார்
ஊனென்ற சுகயோகம் ஒளிக்கமாட்டார்
உருதியுடன் சிவதலத்தி லொடுங்கமாட்டார்
வானென்ற மதியமுர்தம் கொள்ளமாட்டார்
பதிவான மவுனத்தை காணமாட்டார்
வானென்ற பொருளறிய எளிதோமக்காள்
மகத்தான வாசியைநீ சுழினைக்கேத்தே. 1139

ஏத்தமுள்ள செகஜால வித்தைசொல்வேன்
யென்மகனே அதினாலே ஒன்றுமில்லை
னாத்தமுள்ள கெந்தகமும் சாதிலிங்கம்
நன்மையுள்ள வீரமுடன் கெவுரிகூட்டி
காத்துநன்றாய் யோரிடையாய் வாங்கிமைந்தா
கைமுறையாய்த் தான்பொடித்து கரண்டிசேர்த்து
பாத்துநன்றா யடுப்பேத்தி தீயைமூட்டி
பத்தியுடன் அஞ்சுமொன்றாய் யினகும்பாரே. 1140

பாரப்பா யினகின்ற குளம்புக்குள்ளே
பாச்சடா னாகரசம் மொன்றாய்ச் சேர்த்து
னேரப்பா னாகரசம் பொடித்துச்சேர்த்து
னேர்மையுடன் தானெடுத்து பார்க்கும்போது
சாரப்பா சார்ந்துஒன்றாய் யினகிப்போகும்
சங்கையுடன் கால்வாசி தங்கங்கூட்டி
காரப்பா கமலரச அமுர்தம்தன்னால்
கல்வமதில் தானரைக்க மெழுகுமாமே. 1141

ஆமப்பா மெழுகெடுத்து பதனம்பண்ணி
அப்பனே வெள்ளிசெம்பு சரியாய்ச்சேர்த்து
னாமப்பா சொல்லுகிறோம் உருக்கிநன்றாய்
னாதாந்த மெழுகெடுத்து பத்துக்கொன்று
ஓமப்பா வென்றபிரண வத்தினாலே
உண்மையுடன் தான்குடுத்து உருக்கிப்பார்த்தால்
வாமப்பால் கொண்டகெதி தன்னால்மைந்தா
மகத்தான தங்கம்வெகு சோதியாச்சே. 1142



சோதியென்ற ஆதியடா சுழினைமூலம்
சுயஞ்சோதி யானதிரு வாசியாலே
ஆதியென்ற அந்தமடா அண்ணாக்கய்யா
அருள்பெருகும் அண்ணாக்கை உண்ணாக்குள்ளே
ஓதியதோர் பிரணவத்தால் ஒசறயேத்தி
ஓதமசிவாய வென்றுஉருதி கொண்டால்
நீதியுடன் கேசரியில் பஞ்சகர்த்தான்
னின்று விளையாடு வதைகாணலாமே. 1143

ஆமப்பா சங்கென்று மூலசத்தி
அப்பனே ஆவள்வாயில் ஓங்காரந்தான்
ஆமப்பா பரிந்தேரிமணி னாககுள் நிற்கும்
அரகரா சிங்கென்று உற்றுபார்க்க
ஆமப்பா தெருவாகும் வெளியாய்க்காணும்
அங்கமுடன் வங்கென்று வாங்கிக்கும்பி
ஆமப்பா மாணிக்க ஒளிபோல்காணும்
ஆதியந்த மிதுவாச்சு அங்கங்காணே. 1144

காணவே ஒளியில்நின்று உற்றுப்பாரு
கண்கொள்ளா சோதிவெகு சோதிகாணும்
பூணவே சோதிதனை கண்டாயானால்
புனிதமுள்ள காயசித்தி யோகந்தங்கும்
தோணவே மவுனமதாய் பூசை பண்ணி
சுத்தமுடன் வேதாந்த மதுவையுண்டு
ஊணவே சுழிதிறந்து பாருபாரு
உத்தமனே கண்கொள்ளா சோதியாமே. 1145

ஆமப்பா தானென்ற பூமியெல்லாம்
அருள்பெருகி நின்றதொரு அக்கினியேயாச்சு
வாமப்பா வானென்ற வெளியெல்லாந்தான்
மார்க்கமுடன் வார்த்திட்ட னெய்யுமாச்சு
காமப்பால் காலென்ற ஒளியேதானு
கருணையுடன் கலந்தெங்கும் தோற்றினாப்போல்
ஓமப்பா வென்றதொரு மூலநந்தி
உருதியுள்ள சோதிவெகு கண்கொள்ளாதே. 1146

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

கொள்ளப்பா வயனஒளி பார்வைதன்னால்
சுழியான சுழினையிலே மனதைவைத்து
நில்லப்பா நிலையறிந்து மனக்கண்கொண்டு
நிலையான கேசரியை பூசைபண்ணி
சொல்லப்பா சகலகலை வாசியேரி
சுழிதிறந்து மேல்வாசல் துருவமீதில்
நல்லொப்பாய் நல்மனதாய னாதாந்தத்தில்
நாட்டிநின்ற மூலமதை நயந்து கேளே. 1147

கேளடா மூலமென்ற ஆராதாரம்
கெடியான அண்டமது போலேநிற்கும்
கேளடா யிதில்னாலு யிதழுமுண்டு
விபரமுடன் கண்டறிந்து விண்ணைநோக்கி
வாளடா யிவ்வுடனே வவ்வுங்கூட்டி
வணக்கமுடன் ரேசகபூரகமே பண்ணி
காலடா கண்டறிந்து மேலேநின்று
கருணைவளர் முச்சுடரை கண்டுபாரே. 1148

பாரப்பா சுடரான மூன்றுக்குள்ளே
பத்தியுடன் அதன்விபரம் பகரக்கேளு
நேரப்பா நிசமான அகாரமொன்றில்
நிலையான கணபதியும் நிற்பார்பாரு
காரப்பா கருணைவளர் உகாரந்தன்னில்
கைலாச வல்லபையாள் காலாய்நிற்பாள்
கூரப்பா குறியறிந்து குணமாய்க்கேளு
குண்டலியில் நின்ற தொருகதலிப்பூவே. 1149

பூவான மலரதுவும் முகம்கிழாக
புத்திலவளர் பெண்பாம்பு போலேசீற
பூவான வாலதுவும் சுருட்டிக்கொண்டு
பூரணமாய் சுழிமுனையில் பொருந்திநிற்கும்
பூவான பூரணமாம் அவள்வாய்க்குள்ளே
பொருந்தி மனதுறுதியினால் னந்திநிர்பான்
பூவான மலரதுபோல் னந்திகாணும்
புத்தியுடன் காணுவது சிகாரத்தியே. 1150



சிகாரமென்ற அக்கினியை மூட்டிக்கொண்டு
சிவசிவாசுழி முனையில் வாசியேத்தி
வகாரமென்ற வாசிதனை நிரவாள்சத்தி
வரிசையுடன் சத்தியெட்டும் மவுனமாவாள்
மகாரமென்ற மவுனியவள் ஓங்காரத்துள்
வகையறிந்து ரவிமதியும் வாசமாகி
அகாரமென்ற மனோன்மணியை பூசைபண்ணி
அனுதினமும் சுழிமுனையை அறிந்துனோக்கே. 1151

னோக்குவது சுழிமுனைக்குள் மனதைவைத்து
நுண்மையுடன் அண்ணாக்கை உண்ணாக்குக்குள்ளே
தாக்குவது ரவிமதியை ஒன்றாய்க்கூட்டி
தமறான அணுவாசல் தமரிலேதான்
வாக்குமன தொன்றாகி மனதுகூர்ந்து
வரிசையுடன் ரேசகமும் பூரகமும்பண்ணி
னாக்குனுணி அமுர்தமது னாவில்க்கொண்டு
நன்மையுடன் கும்பகத்தில் நாட்டநில்லே. 1152

நில்லென்ற நிலையான மூலசத்தி
நிசமான ஓங்காரந்தனனில் மைந்தா
சொல்லென்ற சுழினைவழி தன்னிலேறி
சுகமாக மேலாறும் சுற்றிப்பார்த்து
உள்ளென்ற சிகாரமதால் வுற்றுப்பாரு
உற்றுமெள்ளப் பார்க்கையிலே நந்திகாணும்
செல்லென்ற யகாரமதால் தீயுங்காணும்
சோத்து மிகஒன்றாகி ஒளிபோலாமே. 1153

ஒளியான ஒளியறிந்து வுற்றுப்பாரு
உற்றுமெள்ளப் பார்க்கையிலே நந்திகாணும்
விழியான தெளிவறிந்து கண்டாயானால்
வேதாந்த மூலமதில் கனலேமீறும்
'சுழியான கண்ணறிந்து வழியேசென்றால்
சோதிதிரு வானகேசரியாள் பாதம்
வழியானதுரை யறிந்து சண்டாயானால்
மகத்தான ரவிமதியின் காலைத்தேடே. 1154



Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

தேடிமனங் கொண்டதொரு சித்தர்பார்த்து
தெளிவான காலறிந்து தெளிந்துகொண்டு
னாடிமனங் கொண்டுமிக சிம்சிம்மென்று
னாதாந்த பூரணத்தில் னாட்டினார்கள்
வாடிமனம் போகாமல் மவுனம்பூட்டி
மகத்தான சுழினையிலே வாசமாகி
ஆதியந்தத் திருநடனங் கண்டால்மைந்தா
அங்கமுடன் பூரணமா யிருந்தார்தானே. 1155

இருந்தாப்ர சுழினைவழி ஆகுந்தன்னை
யேகாந்த மானதொரு யெழுத்தைப்போற்றி
யிருந்தாரே அந்தரங்க மனையில்சென்று
யென்னசொல்வேன் தன்னகத்தைத் தரித்துக்
கொண்டு
யிருந்து அந்தபூரணியைப் பூசைபண்ணி
யேகாந்த வடிவதனை யிருந்துபார்த்து
யிருந்தாரே சிவயவசி யென்றுமைந்தா
யோகாந்த மானதிரு வாசிபாரே. 1156

பாரப்பா வாசிவா யென்றுஉள்ளே
பத்தியுடன் தானிருந்து மணினாவுண்ணி
நேரப்பா ரேசிவாயென்று மென்ன
நேர்மையுடன் ரேசகபூரகமும் பண்ணி
காரப்பா னாசிவாய் செவிகண்மூக்கு
கருணையுடல் னாலுமடா நடுநின்றாடும்
சேரப்பா ஓமெனவே வாசியுன்ன
திருவாசி பூரணமாயாடும் பாரே. 1157

ஆடுமப்பா அண்டபதம் தன்னில்சென்று
ஆதார மானதொரு மூலத்தோடி
ஓடுமப்பா வாசியது ஊால்பாலம்போலே
உண்ணாக்கு அண்ணாக்கு மூக்கினோடே
நாடுமப்பா லிங்கமதின் நடுவேநின்று
னாதாந்த நடுவணையை பிடித்துணது
வாடுமப்பா கருவியஞ்சும் மவுனத்தாலே
மவுனமுடன் வாசியைநீ யிருக்கிப்பாரே. 1158



இருக்கியந்த தானுனைநீ யிருக்கிப்பார்க்க
யேகாந்த சபைதனிலே யிருந்தாயானால்
சுருக்கிநின்ற அஞ்சுபஞ்ச பூதமெல்லாம்
சொன்னபடி யாடுமடா துருவம்பாரு
நிருக்கறலே பூரணமாய் துருவம்பார்த்து
செங்கமல சுழினையிலே நின்றால்மைந்தா
நெருக்கிநின்ற சுழினையிலே அமுர தஞ்சித்தும்
நேமமுடன் நீயிருந்து பூசைபண்ணே. 1159

பூசைமுறை தனையறிந்து சுழினையில்நின்றால்
பூரணமா யிதழ்கனிந்து அமுர்தம்பாயும்
நேசமுடன் அமுர்தமதைக் கொண்டால்மைந்தா
நேர்மையுடன் வாசியது நிலையில்நிற்கும்
பாசமுடன் நிலையறிந்து வாசிஊட்டி
பத்தியுடன் கேசரியை பணிந்துநின்றால்
ஆசையென்ற சததாதி விடயமெல்லாம்
அதையகத்திப் பூரணமாய் அறிவில்நில்லே. 1160

நில்லடா சுழியறிந்து லிங்கத்தோரம்
னேர்மையுள்ள தமர்வாசல் தன்னிலேதான்
உள்ளடா மதியமுர்தம் கசிந்துபாயும்
உண்மையதாய் மவுனமுடன் வுள்ளேகொண்டால்
அல்லடா உன்தேகம் தங்கம்போலே
அங்கனையே தோணுமடா ஆதிசோதி
செல்லடா சோதியிலே மனதைவைத்து
திருகுசுழி முனையதிலே சிந்தைவையே. 1161

சிந்தையது பூரணமாய் கொண்டாயானால்
சிரப்பான முப்பாழும் திறமாய்காணும்
சந்தேக மில்லாமல் முப்பாழ்தன்னில்
தானிருந்து பூரணமாய் சுழியைப்பாரு
சொந்தமுள்ள சுழிதனிலே மனதைவைத்து
சுகமான வாசியைநீ சுடருக்கேத்தி
அந்தமுடன் தானிருந்து தன்னைப்பாரு
ஆனந்த மானசிவ சோதிபாரே. 1162

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

சோதியென்ற ஞானமடா மவுனஞானம்
சுயஞ்சோதி யானதொரு சுழினைமூலம்
ஆதியென்ற மூலமடா அண்டத்துச்சி
அருள்நிரைந்த பூரணமாம் யோகவஸ்து
நீதியுடன் வஸ்துவைநீ பூசைபண்ணி
நிசமுனக்கு யில்லையடா நிலையைப்பத்தி
ஓதியதோர் மந்திரகலை வாசியேறி
உண்மையுள்ள ஞானநிலை யுகந்துகேளே. 1163

கேளப்பா ஞானமதுக் கேரும்மார்க்கம்
கெடியான மண்டலங்க ளாருஞ்சொல்வேன்
வேளப்பா தணலுருவா மண்டலந்தானொன்று
மேலான ரவியிருக்கும் மண்டலந்தானொன்று
சூழப்பா மதியிருக்கும் மண்டலந்தானொன்று
சூழ்ந்திருக்கும் அமுர்தநிலை மண்டலந்தானொன்று
சாரப்பா யிவ்வளவும் யோகசித்தி
சாத்துகிறேன் ஞானாந்தம் சார்ந்துகேளே. 1164

சார்ந்திருந்த குருபதந்தான் ஆயிரதெட்டிதழாய்
சபையாரும் சத்தியுட மண்டலந்தானொன்று
ஆய்ந்திருந்த ஆதிசிவ மண்டலந்தானொன்று
அப்பனே அஞ்சுதெரி சினமுமானால்
போந்திருந்த நிரம்பலமாம் மண்டலத்தில்
போச்சுதப்பா பிரவியென்ற சஞ்சிதங்கள்
சார்ந்திருந்து நிற்மலமாய் நிரைந்தபோது
சங்கையுள்ள முத்தரென்று சாற்றுவாரே. 1165

சாற்றுகிறேன் புருவமய்யந் தானந்தன்னில்
சற்குருவாம் நிர்மலத்தை போத்தி செய்து
சாற்றுகிறேன் கிழரையில் வாலையைத்தான்
சலியாமல் பூசைபண்ணி தியானஞ்செய்து
சாற்றுகிறேன் பூசைமுறை தன்னைக்கேளு
சாதகமாய் முதலெழுத்துஞ் சிகாரங்கூட்டி
சாற்றுகிறேன் நிர்மலத்தை தியானம்பண்ணி
சலியாதே வாலைசந் தானங்கேளே. 1166



சந்தான மவ்வோடு சிகாரந்தானும்
சாதகமாய் வகாரமொடு மூன்றுமாறி
சிந்தாமல் திருனாமம் மூன்றுங்கூட்டி
திட்டமுடன் மவுனத்தை தியானம்பண்ணி
சொந்தமுடன் பூசையைத்தான் நன்றாய்ப்பண்ணு
சுத்தமுடன் பண்ணையிலே நிர்த்தஞ் செய்வான்
தந்திரமாய் சிவசத்தி தீக்ஷைசொன்னால்
தன்மையுடன் பூரணமாய் நின்றுபாரே. 1167

பாரப்பா வெளிபார்க்க வழியைக்கேளு
பதிவான குரியொன்று சொல்வேனப்பா
நேரப்பா கண்மூடி விரலாலாட்டில்
நேர்மையுடன் ரவிவளையம் போலேகாணும்
காரப்பா ரவிவளையம் கண்ணிலேதான்
கருத்துடனே வாசியைநீ கனுவாயூட்டி
தேரப்பா மவுனமதில் இருந்துகொண்டால்
திறமான பூரணமும் தோன்றும்பாரே. 1168

பாரப்பா தோன்றுகிற வளையம்சுத்தி
பதிவான நக்ஷத்திரம் போலேகாணும்
னேரப்பா நிலையரிந்து மவுனம்கொண்டு
நிசமான கேசரியில் வாசியூட்டி
காரப்பா கண்ணாக்கு மூக்குக்குளளே
கபாடமென்ற வாசலிலே கனிவாய் நின்று
யேரப்பா ஓங்கார மூலங்கொண்டு
இன்பறச அமுர்தமதை கொண்டுதேறே. 1169

தேறப்பா யின்னமொரு கருமானங்கேள்
திருவான பூரணத்தை திறமாய் வாங்கி
காரப்பா பூங்கானில் பதனம் பண்ணி
கருணையுடன் அமுர்தரச பழச்சார்விட்டு
னேரப்பா ரவிபீஜங் கூடச்சேர்த்து
நிசமாகத் தான்பிசைந்து ரவியில்போடு
சாரப்பா ரவிதனிலே காய்ந்தபின்பு
சங்கையுடன் பத்துமுறை தயவாய் செய்யே. 1170

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

செய்யப்பா பத்துவிசை நிகைசெய்தால்
சிவசிவா பூரணமும் திரமாய்நிற்கும்
மெய்யப்பா கட்டிநின்ற பூரணத்தைமைந்தா
மேன்மைபெற பீங்கானில் பதனம்பண்ணி
கையப்பா தவறாமல் மைந்தா நீயும்
கருவான கற்பத்தை கொள்ளும்போது
மையப்பா மெய்நிறைந்து பூரணத்தில்
மார்க்கமுடன் பணவிடை தான் கொண்டு
காணே 1172

காணவே பூரணத்தை கொண்டால் மைந்தா
கருணையுள்ள வாசியது கடக்காதையா
பேணவே சுழினையிலே வாசியேறும்
பேரண்டம் சுற்றிவர கெவனமுண்டாம்
பூணவே கெவுனமென்ற மவுனயோகம்
பூரணமாய் வாசியிலே பூண்டு கொள்ளும்
ஊணவே பூண்டுகொண்டு நின்றால் மைந்தா
உன்தேகம் விளக்கொளிபோ லுண்மையாமே. 1172

## லிங்க மெழுகு

உண்மையுட னின்னமொரு கருவைக்கேளு
உருதியுடன் லிங்கம்அரி தாரம்வீரம்
நன்மையுடன் காரமுடன் கெவுரிகூட்டி
நாதாந்த அமுர்த பூரணத்தினாலே
தன்மையுடன் கல்வமதில் நன்றாயாட்டி
தயங்காமல் யீராறு சாமமாட்டி
சின்மயமாய் தான்வழித்துப் பதனம் பண்ணி
தேவியெனும் பூரணியை தியானஞ் செய்யே. 1.73

செய்ததொரு மெழுகெடுத்து மைந்தா நீயும்
செம்புவெள்ளி தகடடித்து மேலேபூசி
கொய்து மிகஒட்டில் வைத்து ஓடுமூடி
குரியுடனே மண்சீலை வலுவாய்ச் செய்து
மெய்த்தவறா பூரணமாய் குருவைப்போத்தி
மேன்மைபெற வெருவடுக்கி புடத்தைப் போடு
கைத்தவறா மனதாக யெடுத்துப்பாரு
கனகமென்ற தங்கமடா கண்கொள்ளாதே. 1174



கண்ணான கமலக்கண் மனக்கண்ணாகும்
கருணைவளர் பூரணமே அறிவானந்தம்
ஒண்ணான அறிவல்லோ பிரமமாச்சு
உண்மையென்ற வாசியடா அமுர்தபானம்
வெண்ணான அமுர்தமதை அரிந்து கொண்டால்
யேகநிரா மயமான சோதியாச்சு
விண்ணான சோதிதனை கண்டபோது
மேலான பிரமமென்று மெய்யில் கொள்ளே. 1175

மெய்யான சவுமியசாகரத்தை மைந்தா
விரும்பிநின்று ஆதியந்தம் நன்றாய்ப்பார்த்தால்
பொய்யான மாய்கையெல்லாம் விட்டகண்டு
போதமய மானசிவ யோகந்தங்கும்
மையான சுழினையிலே மனக்கண்சாத்தி
மகத்தான சாகரத்தை பூசைபண்ணி
கையப்பா கையிநெல்லிக் கனிபோல் மைந்தா
கருணைபெற மவுனமதைக் காருகாரே. 1176

காரப்பா மவுனமதை கார்க்க வேண்டி
கருணையுடன் சத்திசிவ பூசைபண்ணு
னேரப்பா வாலைதனை பூசைபண்ண
நிசமான பூரணத்தைக் கண்டு கொள்ளு
தேரப்பா நல்லபதம் தேர்ந்து கொண்டால்
சிவசிவா மவுனமதுக் குறுதியாகும்
வீரப்பா கொண்டுமதி கெட்டுப்போனால்
வேதமென்ன னாதமென்ன வீண்தான்பாரே. 1177

பாரடா வேதமொடு னாதாந்தந்தான்
பதிவான ஆதியந்தம் மென்றும்பாரு
நேரமடா ஆதியந்தம் மண்விண்ணப்பா
நிசமான மண்ணும் விண்ணும் னாதவிந்து
கூரடா னாதவிந்து சத்திசிவமாச்சு
குரியான சத்திசிவ மேதென்றாக்கால்
காரடா சத்தியென்றால் தேகமாச்சு
கருணைவளர் சிவமென்றால் வெளிதான்
காணே. 1178

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

காணவே புலத்தியனே சொல்லக்கேளு
கருணைவளர் சவுமியசா கரத்தில்மைந்தா
தோணவே வேதாந்தம் சித்தாந்தம் ரெண்டும்
சொல்முறைகள் தவறாமல் சமரசமாய்
சொன்னோம்
பேணவேஜாலம் மீராறு னூரில்
பிலமான மோடியங்கம் வினோதஞ் சொன்னோம்
பூணவே சகலகலைக்கியான மெல்லாம்
புத்தியுடன் நன்றாகப் பூண்டுபாரே. 1179

பாரப்பா பூரண மீராறு னூரில்
பத்தியுடன் சகலகலைதிகைஷ சொன்னோம்
நேரப்பா காவியத்தில் அடக்கமெல்லாம்
நிசமாகச் சொல்லி வைத்தோம் நிதானம் பாரு
சாரப்பா வைத்தியமா யிரத்தன் னூாத்தில்
சகலதுரை கட்டுமுறை கயிலஞ் சொன்னோம்
சாரப்பா செந்தூரம் வைப்புமார்க்கம்
சமரசமாய் சொல்லி வைத்தோம் தானேகாணே. 1180

காணவே கர்மமது நிவர்த்தியாக
காண்ட மென்றமுன்னூரு கனிவாய் சொன்னோம்
ஊணவே மற்பமது யிருநூத்தஞ்சில்
உத்தமனே சொல்லி வைத்தேன் வுற்றுப்பாரு
தோணவே மாந்திரீக மாயிரத்தில்
சொல்ல வொண்ணாவதிசயங்கள் தோணச்
சொன்னோம்
பேணவே தீகைஷவிதி பூசைவிதி ரெண்டும்
பெருமையுடன் சொல்லி வைத்தேன் பேணிக்
காணே. 1181

காணப்பா தத்துவமாயிரத்தில் மைந்தா
கருணையுடன் சடாதார கோர்வை தோணும்
பூணப்பா மனம்பூண்டு மனுவிக்ஞானம்
புத்தியுடன் ஆயிரமாம் சொன்னனூலில்
தோணவே யிகபரத்தின் சூக்ஷந்தோணும்
சுந்தரம்போல் பூரணத்தில் சொக்கிநின்று
பேணவே ரெண்டுலெக்ஷம் காப்புச் சொன்னோம்
பெருமையுடன் சூஸ்திரங்கள் அனேகந்தாலே 1182



தானேதான் தானாகபூரணத்தில் நின்று
சகலஉயிர்த் தாமாக தானேயென்னி
ஊனேதா னுள்ளுணர்வாய் கண்டுகொண்டால்
உற்றசிவ யோகியென்ன உரைக்கலாகும்
பேணவே சிவயோகி யானால்மைந்தா
பேசாதே மவுனமதில் கௌனஞ் சொல்வான்
பூணவே யுத்தனைக்கும் வருவதென்ன
புத்தியுடன் விட்டகுரை வேளைப்பாரே. 1183

வேளையிலே விட்டகுரை அமைப்பேயானால்
வேதாந்த நந்திகுரு கண்ணில் தோணும்
சானைய மாய்போகாது தன்னைகாட்டி
சச்சிதா நந்தபூரண முங்காட்டி
கோணை யெல்லாம் கக்கிவைக்கும் தமரைக் காட்டி
குரிப்பாகத் தொடுகுரியாம் சுழினைகாட்டி
தானைநின் வாய்த்திறந்து அமுர்தமூட்டி
சாதிக்கும் யோகத்தில் ஸ்தலஞ் சொல்வாயே. 1184

சொல்லடா ஓங்கார சூக்ஷந்தன்னை
சூரியன்போல் வட்டமதா யிருக்குதென்று
சொல்லடா மவுனமிது வாதமிதுவென்று
சுழினையென்றும் ஓங்கார சூக்ஷந்தன்னை
சொல்லடா வதனவட்டம் வுள்சூக்ஷந்தான்
தொடுகுரிபோல் சண்முகமாம் அறுகோணத்தில்
சொல்லடா யிதினுள்ளே முக்கோணத்தில்
சோதியெனுங் கண்டனுணி சொற்கந்தானே. 1185

சொற்கபத மதில்நின்ற ஒளியை மைந்தா
தூண்டி வித்தகுருவதனை சூக்ஷஞ்செய்து
சொர்க்கபதம் தனைபார்த்து வாசியோகம்
சூடப்பா குளிகையொடு லகிரி கொண்டு
சொர்க்கபதந் தெரிசனையா யாடுங்கூத்தை
தொடுகுரிபோல் நடனமிட்ட கூத்துக்காணும்
சொற்கபதம் குருவினுட பாதங் கண்டால்
தூலம்போல் காயமதில் வாசிசாத்தே 1186

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

சாத்துகிறேன் வாசியுட கருவைக் கேளு
தற்பரமாம் சுழினையிலே சாந்தை யூவி
னேத்திரமே பிரியாமல் னோக்கிப் பார்க்கில்
நிலையற்ற புரியஷ்ட மூன்னாய் நிற்கும்
ஆத்தினோர் பூரணந்தா னாத்தும்மைந்தா
அப்பனே வெளியோடி யுள்ளேபாயும்
மாத்திரேன் பூரணத்தில் மவுனந்தாக்க
மகத்தான சிவயோகம் வரிசைபாரே. 1187

**யோகத்தினால் சூடு கொண்டால் சாந்தி**

பாருநீ யிப்படியே வாசியோகம்
பார்க்கையிலே மவுனமது பிலக்கும்சித்தி
காருநீ சூடுகொண்டால் உள்ளங்காலில்
கலசப்பால் பூரணமும் கலந்துஆசி
சேருநீ புனியாரை கொடுப்பைவேந்து
சிரப்பாக மினகுசாற் தினமுங் கொள்ளு
சாருநீ தலைமுழுக வகையைக் கேளு
தனிமினகு அமுரிதனி லரைத்துக்காணே. 1188

காணவே அமுரிதனில் மிளகரைத்து
கருணையுடன் தான்குழைத்து தலையிற்றேய்த்து
பேணவே வென்னீரில் முழுகுமைந்தா
பெரிதான கபாலமதின் தோஷந்தீரும்
பூணவே கண்ணெரிவு கபாலகுத்து
புத்தியுடன் தீருமடா புனிதமாக
தோணவே கண்மூடி கண்ணைப்பாரு
சுத்தமுடன் இருகண்ணுஞ் சோதிகேளே. 1189

கேளப்பா விரலாலே விழியைத் தூண்டி
கேசரியில் மந்தோட்டி யாட்டிப்பாரு
நாளப்பா அக்கினி போலங்கு தோணும்
நயநத்திற் காணுமடா சொர்க்கமோக்ஷம்
வாளப்பா விதுவல்லோ மோக்ஷவீடு
வாச்சுதடா வுந்தனுக்கு மைந்தாகேளு
கோளப்பா கோபமென்ற முனையைப்போக்கு
குறியான மோக்ஷகெதி பரகெதிதான்பாரே. 1190



கெதியென்ற பரகெதிதா னிதுதான் மைந்தா
கேசரத்தில் கண்ணொளி போல் காணுமப்பா
பதியென்ற கெதியொன்று சொல்லக் கேளு
பகவன் தானுநிக்கு முன்னே சரீரசுத்தி
விதியென்ற விபரவிதி லலாடத்தை நோக்கு
விளங்கவே சூரியனைக் கண்ணால் பார்த்து
துதியென்ற சுழிமுனையில் முதுகண்ணாட்டம்
தொடுகுறிபோ லலாடத்தில் மனக்கண்ணாலே
1191

ஞானியே கரந்தனிலே பூதிவாங்கி
ஓகோகோ பூசையிலே ரவிபோற்காந்தி
தோணவே சொர்னமது போலேகாணும்
சொர்க்கபத முண்டாச்சு சுகமுமுண்டாச்சு
நானியே செய்பாவ மெல்லாம் போச்சு
நானென்ற ஆணுவம்போய் யோகமாச்சு
வாணியே நின்றுகவி கயங்கள் பாடும்
வார்த்தை சொல்வாள் சுழினையிலே வாழென்
பானே. 1192

வாழப்பா சித்தரொடு ரிஷிகளெல்லாம்
மகத்தான கற்பூர தீபம்போலே
ஆளப்பா காயத்தை யொளி போலாக்கி
ஆநந்த மதியமுர்த மனுவாய்க் கொண்டு
தாளப்பா தான்திறந்து நின்றுபாரு
சந்திரனுஞ் சூரியனுந் தானே தானாம்
நீளப்பா சுழினையிலே அங்சிங்கென்று
நேர்முகமாய் நின்றசர மோடும்பாரே. 1193

ஓடுகின்ற வேளைகண்டு ராக்காலத்தில்
உத்தமனே கற்பூரச்சோதி தன்னை
நாடுகிற வொளிகாட்டி ஒளியைப்பாரு
நாலிரண்டு திங்களிலே தேகமெல்லாம்
சூடுகிற செம்பருத்தம் பூப்போலாகும்
சுகமான விளக்கொளியில் சாய்கையில்லை
சாடுகிற அண்டமதைப் பார்க்கும்போது
தன் வயத்திற் புடைத்தெழுந்த வொளிகண்டோமே
1194

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

ஒளிகண்டோம் சதாகால மைந்தாகேளு
உற்பனமாய்க் கடிகையொன்று நிபம்பார்த்து
வெளிகண்ட பின்பல்லோ சுழினைமேலே
வேதாந்தலலாட விழியொளி கண்ணாட்டம்
விழிகண்டோம் பராபரத்தில் விசாலங் கண்டோம்
மெய்க்குள்ளே தத்துவங்களெல்லாம் கண்டோம்
சுழிகண்டோம் பூரணத்தின் சோதியாலே
சொர்க்கபத மானதொரு சுடர்கண்டோமே. 1195

சுடர்காட்டிச் சுழியினுட வொளியுங்காட்டி
சொர்க்கபத மானதொரு ரவியுங்காட்டி
பிடர்காட்டிப் பிடரியென்ற சுழினைகாட்டி
பேரொளியாய் நின்றதொரு பிறப்பைக்காட்டி
படர்காட்டி மதியினிட பாதங்காட்டி
பருகபெற்ற ஆதியந்த நடுவுங்காட்டி
இடர்காட்டிக் கால்தலையாய் சிவயோகத்தை
இருகதிரி னொளியாலே பாவம் போச்சே. 1196

போச்சப்பா குறிகாட்ட வாசியோகம்
பூட்டுவதால் சிவயோக முத்தானாச்சு
ஆச்சப்பா இன்னூல்சா கரமேயாகும்
அறிவான சாகரத்தை யார்தான் சொல்வார்
வாச்சப்பா புலத்தியனே வாசிமார்க்கம்
மகத்தான நந்தியொளி கண்கொள்ளாது
பேச்சப்பா பின்கலையில் ஒங்கிங்கென்று
பிலமான ரவிமுகமா யிருந்து பாரே. 1197

பாரப்பா இருவிழியால் மேலேபார்த்து
பதிவான பத்துநாள் பார்க்கும்போது
காரப்பா மண்டல மூன்றங்கே காணும்
கதிர்மதியுஞ் சுழினையுட கண்ணே காணும்
நேரப்பா நின்றபூ ரணமுங்காணும்
நிசமான பிரமபதம் நேரே காணும்
சாரப்பா சராசரமுந் தானேதானாய்
தன்னுள்ளே காணுமடா தன்னைக்காணே. 1198

வாத சௌமியம்—1200
முற்றுப் பெற்றது.



# அகஸ்தியர் ஞானம்-9

## எண்சீர் விருத்தம்

சத்தியே பராபரமே ஒன்றே தெய்வம்
சகலவுயிர் சிவனுக்கு மதுதா னாச்சு;
புத்தியினா லறிந்தவர்கள் புண்ணி யோர்கள்
பூதலத்தில் கோடியிலே யொருவ ருண்டு;
பத்தியினால் மனமடங்கி நிலையில் நிற்பார்
பாழிலே மனத்தைவிடார்; பரம ஞானி;
சுத்தியே யலைவதில்லைச் சூட்சஞ் சூட்சம்
சுழியிலே நிலையறிந்தால் மோட்சந்தானே. 1

மோட்சமது பெறுவதற்குச் சூட்சஞ் சொன்னேன்;
மோகமுடன் பொய்களவு கொலைசெய் யாதே;
காய்ச்சலுடன் கோவத்தைத் தள்ளிப் போடு;
காசியினிற் புண்ணியத்தைக் கருதிக்கொள்ளு;
பாய்ச்சலது பாயாதே; பாழபோ காதே;
பலவேத சாத்திரமும் பாரு பாரு;
ஏச்சலில்லா தவர்பிழைக்கச் செய்த மார்க்கம்
என்மக்கா ளெண்ணியெண்ணிப் பாரீர் நீரே. 2

பாரப்பா நால்வேதம் நாலு பாரு!
பற்றாசை வைப்பதற்கோ பிணையோ கோடி;
வீரப்பா ஒன்றோன்றுக் கொன்றைமாறி
வீணிலே யவர்பிழைக்கச் செய்த மார்க்கம்;
தேரப்பா தெருத்தெருவே புலம்பு வார்கள்
தெய்வநிலை ஒருவருமே காணார் காணார்;
ஆரப்பா நிலைநிற்கப் போறா ரையோ!
ஆச்சரியங் கோடியிலே யொருவன் தானே. 3

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

ஒருவனென்றே தெய்வத்தை வணங்க வேணும்,
உத்தமனாய் பூமிதனி லிருக்க வேணும்;
பருவமதிற் சேறுபயிர் செய்ய வேணும்;
பாழிலே மனத்தைவிடான் பரம ஞானி;
திரிவார்கள் திருடரப்பா கோடா கோடி;
தேசத்திற் கள்ளரப்பா கோடா கோடி;
வருவார்க ளப்பனே அனேகங் கோடி
வார்த்தையினால் பசப்புவார் திருடர் தானே. 4

தானென்ற தானேதா னொன்றே தெய்வம்;
தகப்பனுந் தாயுமங்கே புணரும்போது
தானென்று கருப்பிடித்துக் கொண்டு வந்த
தாதனைநீ எந்நாளும் வணங்கி நில்லு;
கோனென்ற திருடனுக்குத் தெரியு மப்பா
கோடானு கோடியிலே யொருவ னுண்டு;
ஏனென்றே மனத்தாலே யறிய வேணும்
என்மக்காள் நிலைநிற்க மோட்சந் தானே. 5

மோட்சமது பெறுவதற்குச் சூட்சங் கேளு;
முன்செய்த பேர்களுடன் குறியைக் கேளு;
ஏச்சலது குருக்களது குலங்கள் கேளு;
எல்லாருங் கூடழிந்த தெங்கே கேளு;
பேச்சலது மாய்கையப்பா வொன்று மில்லை;
பிதற்றுவா ரவரவரும் நிலையுங் காணார்;
கூச்சலது பாளையந்தான் போகும்போது
கூட்டோடே போச்சுதப்பா மூச்சுத் தானே. 6

மூச்சொடுங்கிப் போனவிடம் ஆருங் காணார்;
மோட்சத்தின் நரகாதி யிருப்புங் காணார்;
வாச்சென்றே வந்தவழி யேற்றங் காணார்;
வளிமாறி நிற்குமணி வழியுங் காணார்;
வீச்சப்பா வெட்டவெளி நன்றாய்ப் பாரு;
வேதங்கள் சாத்திரங்கள் வெளியாய்ப் போச்சே;
ஆச்சப்பா கருவுதனில் அமைத்தாற் போலாம்;
அவனுக்கே தெரியுமல்லா லறிவாய்ப் பாரே. 7



பாரப்பா வுலகுதனிற் பிறவி கோடி;
படைப்புகளோ பலவிதமாய்க் கோடா கோடி;
வீரப்பா அண்டத்திற் பிறவி கோடி;
வெளியிலே யாடுதப்பா வுற்றுப் பாரு;
ஆரப்பா அணுவெளியி னுள்ள நீதான்
ஆச்சரியம் புழுக்கூடு வலைமோ தப்பா
காரப்பா அண்டத்திற் பிண்ட மாகும்
குணவியவா னானக்காற் சத்திய மாமே. 8

சத்தியமே வேணுமடா மனித னானால்;
சண்டாளஞ் செய்யாதே தவறி டாதே;
நித்தியகர்மம் விடாதே நேமம் விட்டு
நிட்டையுடன் சமாதிவிட்டு நிலைபே ராதே;
புத்திகெட்டுத் திரியாதே; பொய்சொல் லாதே;
புண்ணியத்தை மறவாதே; பூசல் கொண்டு
சத்தியதோர் சன்னிட்டுத் தாக்கி யாதே
கர்மியென்று நடவாதே கதிர்தான் முற்றே. 9

## ஞானம்-5

### அறுசீர் விருத்தம்

மனமது செம்மையானால் மந்திரஞ் செபிக்க வேண்டாம்;
மனமது செம்மை யானால் வாயுவை வுயர்த்த வேண்டாம்;
மனமது செம்மை யானால் வாசியை நிறுத்த வேண்டாம்;
மனமது செம்மை யானால் மந்திரஞ் செம்மையாமே. 1

### உயர் ஞானம்

உண்ணும்போ துயிரெழுத்தை வுயர வாங்கி
உறங்குகின்ற போதெல்லா மதுவே யாகும்;
பெண்ணின்பா லிந்திரியம் விடும்போ தெல்லாம்
பேணிவலம் மேல்நோக்கி அவத்தில் நில்லு;
தின்னுங்கா யிலைமருந்து மதுவே யாகும்;
தினந்தோறும் அப்படியே செலுத்த வல்லார்
மண்ணூழி காலமட்டும் வாழ்வார் பாரு;
மறலிகையில் அகப்படவு மாட்டார் தாமே. 2

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

ஒண்ணான உச்சிவெளி தாண்டி நின்று
உமையவளுங் கணபதியு முந்தி யாகி
விண்ணொளியாம் அம்பரம்ஓம் அவ்வும் உவ்வும்
விதித்தபரம் ஒருவருக்கு மெட்டா தப்பா!
பண்ணான உன்னுயிர்தான் சிவம தாச்சு;
பாற்கடலில் பள்ளிகொண்டோன் விண்டு வாச்சு;
கண்ணான கணபதியைக் கண்ணில் கண்டால்
கலந்துருகி யாடுமடா ஞானம் முற்றே 3

## தனி ஞானம் - 2

விந்துநிலை தனியறிந்து விந்தைக் கண்டால்
விதமான நாதமது குருவாய்ப் போகும்;
அந்தமுள்ள நாதமது குருவாய்ப் போனால்
ஆதியந்த மானகுரு நீயே யாவாய்;
சந்தேக மில்லையடா புலத்தி யன்னே!
சகலகலை ஞானமெல்லா மிதற்கொவ் வாவே;
முந்தாநாள் இருவருமே கூடிச் சேர்ந்த
மூலமதை யறியாட்டால் மூலம் பாரே. 4

மூலமதை யறிந்தக்கால் யோக மாச்சு;
முறைமையுடன் கண்டக்கால் வாத மாச்சு;
சாலமுடன் கண்டவர்முன் வசமாய் நிற்பார்;
சாத்திரத்தைச் சுட்டெறிந்தா லவனே சித்தன்;
சீலமுள்ள புலத்தியனே! பரம யோகி
செப்புமொழி தவறாமல் உப்பைக் கண்டால்
ஞாலமுள்ள எந்திரமாஞ் சோதி தன்னை
நாட்டினால் சகலசித்தும் நல்கும் முற்றே. 5

*

சேது. புகழேந்தி
ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவன
புத்தக விற்பனை நிலையம்
மலைக்கோவில் - பழனி

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)

[illegible] 65

[illegible] 310

Babu. S
S/o S. Sundaram
door no I Narasimma Naidu Street lane
Thottakkara St
Therady palani
pin 624601

[illegible] 67

[illegible] 185

[illegible]

[illegible] 31
11 [illegible] 100

[illegible] } 147

[illegible] 67

200×25 = 5000 + 35000 = 40000

35000
354100 = 3500 — 190 — 50 = 160

[illegible] — 224
[illegible] 229
[illegible] 189
[illegible] 62
[illegible] 103
[illegible] 150
அகரம் [illegible] 184 [illegible] 65
[illegible] 45
[illegible] 66 18 [illegible]
[illegible] குட்டம் 380
[illegible] 115
[illegible] 308 [illegible]
[illegible] - 78

Print to PDF without this message by purchasing novaPDF (http://www.novapdf.com/)